**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**110, Anna Salai,**
**Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.**

வெளியீடு : 26-04-2017 Issued: 26-04-2017

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு
# (பதினைந்தாவது பேரவை)

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT
# (FIFTEENTH ASSEMBLY)

**திங்கட்கிழமை, ஜனவரி 30, 2017—தொகுதி 18—எண் 1**

**Monday, the 30th January 2017—Volume 18—No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009.**

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

**30–1–2017**

**உள்ளடக்கம்**


பக்கங்கள்

ஆளுநரும் அமைச்சரவையும் v-x

Governor and Council of Ministers xi-xv

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் xvii-xx

பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) xxi-xxxi

**1. இரங்கற்குறிப்பு—**

ஜம்மு–காஷ்மீர் மாநிலம், குரேஷ் பகுதியில் ஏற்பட்ட பனிச் சரிவில் இந்திய இராணுவ வீரர்கள் மறைவு 1-2

**2. வினாக்கள்–விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 2-27

**3. அறிவிப்பு—**

தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி நிகழ்ச்சியில் பங்கேற்க பேரவையை ஒத்திவைத்தல் 28

**4. தகவல் கோரல்—**

(அ) சென்னை மாநகரில் ஜல்லிக்கட்டு போராட்டத்தைத் தொடர்ந்து நடைபெற்ற சட்டம்–ஒழுங்குப் பிரச்சினை குறித்து தொலைக்காட்சியில் மயிலாப்பூர் துணை ஆணையர் பேட்டி 28-32

திரு. மு.க. ஸ்டாலின் 28-30,31

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் 31-32

| | பக்கங்கள் |
|---|---|
| **4. தகவல் கோரல்**—தொடர்ச்சி | |
| (ஆ) வேலூர் மாவட்டம், குடியாத்தத்தில் பறவைக் காய்ச்சலால் ஏற்பட்டுள்ள பாதிப்பு | 32-35, 126-130 |
| திரு. துரைமுருகன் | 32,34, 129-130 |
| மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர் | 33-34, 126-129 |
| மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி | 35 |
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 35 |
| **5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)**— | |
| (அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2017 | 35-37 |
| மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி | 36,37 |
| திரு. அர. சக்கரபாணி | 36 |
| திரு. கரி. இராமசாமி | 36 |
| *திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் | 36 |
| (ஆ) தமிழ்நாடு நகராட்சிய சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2017 | 37-39 |
| மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி | 37-39 |
| திரு. எஸ்.ஆர். இராஜா | 38 |
| திருமதி எஸ். விஜயதரணி | 38 |
| *திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் | 38 |





| | பக்கங்கள் |
|---|---|
| **5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)**—தொடர்ச்சி | |
| (இ) சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2017 | 39-40 |
| மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி | 39-40 |
| திரு. மா. சுப்பிரமணியன் | 39 |
| (ஈ) தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2017 | 40-41 |
| *மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் | 40-41 |
| (உ) தமிழ்நாடு பாரம்பரிய ஆணைய (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2017 | 41 |
| *மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன் | 41 |
| **6. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்**—தொடர்ச்சி | 42-125, 130-166 |
| திரு. என்.டி. வெங்கடாச்சலம் | 42-52 |
| மாண்புமிகு திரு. பி. தங்கமணி | 52-54, 132-133 |
| மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு | 54-55, 72-73 |
| திரு. பி. மூர்த்தி | 55-58, 60,63-70 |
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 58-65,166 |
| திரு. மு.க. ஸ்டாலின் | 61-62,130 |
| *மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் | 63-64 |
| *மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி | 70,87-88, 91-92,97, 111-113, 118-121 |

பக்கங்கள்

**6. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்**—தொடர்ச்சி

| | |
|---|---|
| மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி | 70-71, 92 93, 131-132, 143-146 |
| *மாண்புமிகு திரு செல்லூர் கா. ராஜு | 71-72 |
| *திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன் | 68-69,73-84 |
| திரு. எச். வசந்தகுமார் | 85-91,93-97 |
| *மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன் | 86,146-147 |
| மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர் | 95,137 |
| மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர் | 98,148-149 |
| *டாக்டர் V.P.B. பரமசிவம் | 98-107 |
| திரு. ஏ.பி. நந்தகுமார் | 107-125, 133-134 |
| *மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன் | 113 |
| மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத் | 122-125,134 |
| *திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் | 135-143 |
| மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன் | 147 |
| *மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில் | 148 |
| *திரு. சே. கருணாஸ் | 149-154 |
| திரு. உ. தனியரசு | 154-159 |
| *திரு. எம். தமிமுன் அன்சாரி | 160-166 |

**7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 167-168

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. சிஎச். வித்யாசாகர் ராவ்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 1. | முதலமைச்சர் | .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்**: *பொது, இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப் பணி, பொது நிருவாகம், மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல், உள் துறை, நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை, தேர்தல்கள் மற்றும் கடவுச் சீட்டுகள், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம் (பயிற்சி)* |
| 2. | வனத் துறை அமைச்சர் | .. **மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** *வனம்* |
| 3. | பொதுப் பணி, நெடுஞ் சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் | .. **மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம், செயற்திட்டப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்* |
| 4. | கூட்டுறவுத் துறை அமைச்சர் | .. **மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்* |

5. **மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி. தங்கமணி:**
*மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு மற்றும் இலஞ்ச ஒழிப்பு சட்டம்*

6. **நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:**
*நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல், சிறப்புத் திட்டங்கள் செயலாக்கம்*

7. **மீன் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**
*மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்*

8. **சட்டம், நீதி மன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**
*சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள்*

9. **உயர் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:**
*தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்*



10. **சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா:**
*மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி, இரவலர் காப்பு இல்லங்கள், மாற்றுத் திறனாளிகள் நலன் மற்றும் சமூக சீர்திருத்தம் மற்றும் சத்துணவுத் திட்டம்*

11. **தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:**
*தொழில்கள், எஃகுக் கட்டுப்பாடு, சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் மற்றும் சிறப்பு முயற்சிகள்*

12. **சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்:**
*சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு*

13. **உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:**
*உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு*

14. **கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:**
*கைத்தறி மற்றும் துணிநூல்*

15. **வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்:**
*வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்*

| | | |
|---|---|---|
| **16.** | **மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்** | **.. மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன் |
| **17.** | **வேளாண்மைத் துறை அமைச்சர்** | **.. மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு |
| **18.** | **செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்** | **.. மாண்புமிகு திரு. கடம்பூர் ராஜு:** செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் அரசு அச்சகம் |
| **19.** | **வருவாய்த் துறை அமைச்சர்** | **.. மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** வருவாய், மாவட்ட வருவாய் நிருவாகம், துணை ஆட்சியர்கள், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்கள் பதிவு. |
| **20.** | **சுற்றுலாத் துறை அமைச்சர்** | **.. மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்:** சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் |
| **21.** | **வணிக வரித் துறை அமைச்சர்** | **.. மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** வணிக வரிகள், பதிவு மற்றும் முத்திரைத்தாள் சட்டம் |



| | | |
|---|---|---|
| **22.** | **பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்** | **.. மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** பள்ளிக்கல்வி, தொல்பொருளியல், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை |
| **23.** | **பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்** | **.. மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி |
| **24.** | **ஊரகத் தொழில் துறை அமைச்சர்** | **.. மாண்புமிகு திரு. பா. பெஞ்சமின்:** குடிசைத் தொழில் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் |
| **25.** | **தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** | **.. மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:** தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு மற்றும் வக்ஃபு வாரியம் |
| **26.** | **போக்குவரத்துத் துறை அமைச்சர்** | **.. மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம் |
| **27.** | **தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்** | **.. மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன்:** தகவல் தொழில்நுட்பம் |

| | | |
|---|---|---|
| 28. | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் | .. **மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி:** *ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்* |
| 29. | கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர் | .. **மாண்புமிகு திரு. க. பாஸ்கரன்:** *கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்* |
| 30. | இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் | .. **மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்:** *இந்து சமய மற்றும் அறநிலையங்கள் மற்றும் தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு* |
| 31. | பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் | .. **மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி:** *பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள் மற்றும் சிறுபான்மையினர் நலன்* |
| 32. | கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் | .. **மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி:** *கால்நடை பராமரிப்பு* |



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – THIRU Ch. VIDYASAGAR RAO

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. | **Chief Minister** | .. **The Hon. Thiru O. Panneerselvam:** Public, Indian Administrative Service, Indian Police Service, Indian Forest Service, General Administration, District Revenue Officers, Police, Home, Finance, Planning, Legislative Assembly, Elections and Passports, Personnel and Administrative Reforms, Personnel and Administrative Reforms (Training) |
| 2. | **Minister for Forests** | .. **The Hon. Thiru Dindigul C. Sreenivasan:** Forests |
| 3. | **Minister for Public Works, Highways and Minor Ports** | .. **The Hon. Thiru Edappadi K. Palaniswami:** Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Highways and Minor Ports |
| 4. | **Minister for Co-operation** | .. **The Hon. Thiru Sellur K. Raju:** Co-operation, Statistics and Ex-Servicemen Welfare |
| 5. | **Minister for Electricity, Prohibition & Excise** | .. **The Hon. Thiru P. Thangamani:** Electricity, Non-Conventional Energy Development, Prohibition and Excise, Molasses and Prevention of Corruption Act |

| | | | |
|---|---|---|---|
| **6.** | **Minister for Municipal Administration & Rural Development, Implementation of Special Programme** | ¨ | **The Hon. Thiru S.P. Velumani:** Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply, Implementation of Special Programme |
| **7.** | **Minister for Fisheries** | ¨ | **The Hon. Thiru D. Jayakumar:** Fisheries and Fisheries Development Corporation |
| **8.** | **Minister for Law, Courts & Prisons** | ¨ | **The Hon. Thiru C.Ve. Shanmugam:** Law, Courts and Prisons |
| **9.** | **Minister for Higher Education** | ¨ | **The Hon. Thiru K.P. Anbalagan:** Higher Education including Technical Education, Electronics, Science and Technology |
| **10.** | **Minister for Social Welfare & Nutritious Noon Meal Programme** | ¨ | **The Hon. Dr. V. Saroja:** Social Welfare including Women's and Children's Welfare, Orphanages and Correctional Administration, Integrated Child Development, Beggar Homes, Welfare of the Differently Abled and Social Reforms & Nutritious Noon Meal Programme |
| **11.** | **Minister for Industries** | ¨ | **The Hon. Thiru M.C. Sampath:** Industries, Steel Control, Mines & Minerals and Special Initiatives |
| **12.** | **Minister for Environment** | ¨ | **The Hon. Thiru K.C. Karuppannan:** Environment and Pollution Control |



| | | | |
|---|---|---|---|
| **13.** | **Minister for Food & Civil Supplies** | ¨ | **The Hon. Thiru R. Kamaraj:** Food, Civil Supplies, Consumer Protection and Price Control |
| **14.** | **Minister for Handlooms & Textiles** | ¨ | **The Hon. Thiru O.S. Manian:** Handlooms & Textiles |
| **15.** | **Minister for Housing & Urban Development** | | **The Hon. Thiru Udumalai K. Radhakrishnan:** Housing, Rural Housing and Housing Development, Slum Clearance Board and Accommodation Control, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority |
| **16.** | **Minister for Health & Family Welfare** | | **The Hon. Dr. C. Vijaya Baskar:** Health, Medical Education and Family Welfare |
| **17.** | **Minister for Agriculture** | ¨ | **The Hon. Thiru R. Doraikkannu:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Waste Land Development |
| **18.** | **Minister for Information & Publicity** | ¨ | **The Hon. Thiru Kadambur Raju:** Information & Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing and Government Press |

| | | | |
|---|---|---|---|
| **19.** | **Minister for Revenue** | : | **The Hon. Thiru R.B. Udhayakumar:** Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Weights and Measures, Debt Relief including legislation on Money lending, Chits, Registration of Companies |
| **20.** | **Minister for Tourism** | | **The Hon. Thiru Vellamandi N. Natarajan:** Tourism, Tourism Development Corporation |
| **21.** | **Minister for Commercial Taxes** | : | **The Hon. Thiru K.C. Veeramani:** Commercial Taxes, Registration and Stamp Act |
| **22.** | **Minister for School Education & Sports and Youth Welfare** | : | **The Hon. Thiru K. Pandiarajan:** School Education, Archaeology, Youth Welfare and Sports Development Department |
| **23.** | **Minister for Milk & Dairy Development** | : | **The Hon. Thiru K.T. Rajenthra Bhalaji:** Milk and Dairy Development |
| **24.** | **Minister for Rural Industries** | : | **The Hon. Thiru P. Benjamin:** Rural Industries including Cottage Industries, Small Industries |
| **25.** | **Minister for Labour** | : | **The Hon. Dr. (Tmt) Nilofer Kafeel:** Labour, Population, Employment and Training, Newsprint Control, Census, Urban and Rural Employment and Wakf Board |
| **26.** | **Minister for Transport** | : | **The Hon. Thiru M.R. Vijayabhaskar:** Transport, Nationalised Transport and Motor Vehicles Act |



| | | | |
|---|---|---|---|
| **27.** | **Minister for Information Technology** | : | **The Hon. Dr. M. Manikandan:** Information Technology |
| **28.** | **Minister for Adi Dravidar & Tribal Welfare** | : | **The Hon. Tmt V.M. Rajalakshmi:** Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour |
| **29.** | **Minister for Khadi & Village Industries Board** | : | **The Hon. Thiru G. Baskaran:** Khadi and Village Industries Board, Bhoodan and Gramadhan |
| **30.** | **Minister for Hindu Religious & Charitable Endowments** | : | **The Hon. Thiru Sevvoor S. Ramachandran:** Hindu Religious & Charitable Endowments and Tamil Official Language & Tamil Culture |
| **31.** | **Minister for Backward Classes & Minorities Welfare** | : | **The Hon. Tmt S. Valarmathi:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Overseas Indians, Refugees & Evacuees and Minorities Welfare |
| **32.** | **Minister for Animal Husbandry** | : | **The Hon. Thiru P. Balakrishna Reddy:** Animal Husbandry |

## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

*மாண்புமிகு திரு. ப. தனபால்*

### பேரவைத் துணைத் தலைவர்

*மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்*

### மாற்றுத் தலைவர்கள்#

*திரு. ஓ.கே. சின்னராஜ்*

*திரு. பி.எம். நரசிம்மன்*

*திரு. வி.வி. இராஜன் செல்லப்பா*

*திரு. S. செம்மலை*

*திரு. தங்க. தமிழ்ச்செல்வன்*

*திரு. P. வெற்றிவேல்*

### செயலாளர்

*திரு. அ.மு.பி. ஜமாலுதீன்*

---

\# *27-1-2016 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.*

திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். .. கூடுதல் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. க. பூபதி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.எல். .. கூடுதல் செயலாளர்

திரு. ம.ச. சந்திரமௌலி, எம்.ஏ., பி.காம்., பி.ஜி.எல். .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. கி. சீனிவாசன், எம்.ஏ., பி.ஜி.எல். .. பேரவைத் தலைவரின் சிறப்பு தனிச் செயலர்

திருமதி லி.சு. வசந்திமலர், எம்.ஏ., பி.ஜி.எல்., எம்.ஏ .. இணைச் செயலாளர்

திரு. து. கணேசன், எம்.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. இரா. சந்திரசேகரன், பி.காம்., பி.ஜி.எல்., டி.சி.பி. .. பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர்

திரு. ந. இரவிசந்திரன், பி.எஸ்சி., பி.எல். .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திருமதி ச. ஆண்டாள், பி.எஸ்சி., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. பா. சுப்பிரமணியம், பி.காம்., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

திருமதி இரா. சாந்தி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

திரு. ச. ஜெயகணேசன், பி.எஸ்சி., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. அ. அய்யன்பெருமாள், எம்.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

திரு. செ. பாண்டியன், எம்.ஏ., எம்.ஃபில்., எம்.எல். .. துணைச் செயலாளர்



திரு. மு. ஆதிசேஷன், எம்.காம்., பி.எட்., எல்.எல்.பி. .. துணைச் செயலாளர்

திரு. ப. பத்மகுமார், எம்.எஸ்சி., பி.எட்., பி.எல். .. துணைச் செயலாளர்

திரு. மு. கருணாநிதி, பி.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

திரு. ப. சிவராமன், எம்.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. கி. சூரியநாராயணன், எம்.ஏ., பி.ஜி.எல்., டி.டி.எல்., டி.எல்.எல். .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திருமதி பி. தேன்மொழி, எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்., பி.எல். .. துணைச் செயலாளர்

திருமதி டி.வி. ஜெயஸ்ரீ, பி.ஏ., பி.ஜி.எல். .. துணைச் செயலாளர்

திரு. வ. பூபாலன், பி.காம்., பி.ஜி.எல். .. தலைமை நிருபர்

திருமதி ஸ்ரீ. ஸ்ரீவித்யா, பி.எஸ்சி., பி.ஜி.எல். .. தலைமை நிருபர்

திருமதி சி. சாந்தா, எம்.காம்., பி.ஜி.எல். .. தலைமை நிருபர்

திரு. மு. கருணாகரன், எம்.காம்., பி.எல். .. சார்புச் செயலாளர்

திருமதி பா. ரேவதி, பி.எஸ்சி., பி.எட்., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. கே. ரமேஷ், பி.எஸ்சி., பி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. க.லோ. சிவகுமரன், பி.எஸ்சி., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

| | | |
|---|---|---|
| திரு. ஜி. பாண்டுரங்கன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி பெர்லின் ரூப்குமார், எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. ஜி. கணேஷ், பி.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. சு. பாலகிருஷ்ணன், பி.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. உஷா, பி.காம். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி வெ. சகுந்தலா, பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. த. ரகுபதி, எம்.காம்., பி.ஜி.எல். | .. | தலைமை நிருபர் |
| திரு. சி. ஸ்ரீதரன், **எம்.காம்., பி.எட்.** | .. | தலைமை நிருபர் |



**பேரவை உறுப்பினர்கள்**

**(அகர வரிசைப்படி)**

**பெயர்களும் தொகுதிகளும்**

| | | | |
|---|---|---|---|
| 1. | அம்பேத்குமார், திரு. எஸ். | .. | வந்தவாசி (செ.வ.) |
| 2. | அம்மன் கே. அர்ச்சுணன், திரு. | .. | கோயம்புத்தூர் தெற்கு |
| 3. | அரசு, டாக்டர் ஆர்.டி. | .. | செய்யூர் (செ.வ.) |
| 4. | அரவிந்த் ரமேஷ், திரு. எஸ். | .. | சோழிங்கநல்லூர் |
| 5. | அருண்குமார், திரு. பி.ஆர்.ஜி. | .. | கோயம்புத்தூர் வடக்கு |
| 6. | அலெக்சாண்டர், திரு. வீ. | .. | அம்பத்தூர் |
| 7. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. | திருச்செந்தூர் |
| 8. | அன்பரசன், திரு. தா.மோ. | .. | ஆலந்தூர் |
| 9. | அன்பழகன், திரு. க. | .. | கும்பகோணம் |
| 10. | அன்பழகன், திரு. கே.பி. | .. | பாலக்கோடு |
| 11. | அன்பழகன், திரு. ஜெ. | .. | சேப்பாக்கம்— திருவல்லிக்கேணி |
| 12. | அன்பில் மகேஷ் பொய்யாமொழி, திரு. | .. | திருவெறும்பூர் |
| 13. | ஆடலரசன், திரு. ப. | .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 14. | ஆண்டி அம்பலம், திரு. மெ.ஆ. | .. | நத்தம் |
| 15. | ஆறுக்குட்டி, திரு. வி.சி. | .. | கவுண்டம்பாளையம் |
| 16. | ஆறுமுகம், திரு. பா. | .. | கந்தர்வகோட்டை (செ.வ.) |

17. ஆஸ்டின், திரு. எஸ். .. கன்னியாகுமரி

18. இரத்தினசபாபதி, திரு. ஏ. .. அறந்தாங்கி

19. இரவிச்சந்திரன், திரு. கே.எஸ். .. எழும்பூர் (செ.வ.)

20. இராதாமணி, திரு. கு. .. விக்கிரவாண்டி

21. இராமசாமி, திரு. கரி. .. காரைக்குடி

22. இராமச்சந்திரன், திரு. ஆர்.டி. .. குன்னம்

23. இராமச்சந்திரன், திரு. எம். .. ஒரத்தநாடு

24. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். .. அருப்புக்கோட்டை

25. இராமலிங்கம், திரு. கே.வி. .. ஈரோடு மேற்கு

26. இராஜன் செல்லப்பா, திரு. வி.வி. .. மதுரை வடக்கு

27. இராஜா, திரு. எஸ்.ஆர். .. தாம்பரம்

28. இராஜேந்திரன், திரு. இரா. .. சேலம் வடக்கு

29. இராஜேந்திரன், திரு. சி.வி. .. பர்கூர்

30. இன்பசேகரன், திரு. பி.என்.பி. .. பெண்ணாகரம்

31. இன்பதுரை, திரு. ஐ.எஸ். .. ராதாபுரம்

32. ஈஸ்வரப்பன், திரு. ஜே.எல். .. ஆற்காடு

33. ஈஸ்வரன், திரு. எஸ். .. பவானிசாகர் (செ.வ.)

34. உடுமலை K. ராதாகிருஷ்ணன், திரு. .. உடுமலைப்பேட்டை

35. உதயகுமார், திரு. ஆர்.பி. .. திருமங்கலம்

36. உதயசூரியன், திரு. தா. .. சங்கராபுரம்

37. உமா மகேஸ்வரி, திருமதி கு. .. விளாத்திகுளம்



38. எடப்பாடி கே. பழனிசாமி திரு. .. எடப்பாடி

39. எழிலரசன், திரு. சி.வி.எம்.பி. .. காஞ்சிபுரம்

40. ஏழுமலை, திரு. டி.எ. .. பூந்தமல்லி (செ.வ.)

41. கடம்பூர் ராஜு, திரு. .. கோவில்பட்டி

42. கணேசன், திரு. வெ. .. திட்டக்குடி (செ.வ.)

43. கணேஷ், திரு. ஆர். .. உதகமண்டலம்

44. கதிர்காமு, டாக்டர் கா. .. பெரியகுளம் (செ.வ.)

45. கருணாநிதி, கலைஞர் மு. .. திருவாரூர்

46. கருணாநிதி, திரு. இ. .. பல்லாவரம்

47. கருணாஸ், திரு. சே. .. திருவாடனை

48. கருப்பணன், திரு. கே.சி. .. பவானி

49. கலைச்செல்வன், திரு. V.T. .. விருத்தாசலம்

50. கனகராஜ், திரு. ஆர். .. சூலூர்

51. கஸ்தூரி வாசு, திருமதி வி. .. வால்பாறை (செ.வ.)

52. காந்தி, திரு. ஆர். .. ராணிப்பேட்டை

53. காமராஜ், திரு. இரா. .. நன்னிலம்

54. கார்த்திகேயன், திரு. க. .. ரிஷிவந்தியம்

55. கார்த்திகேயன், திரு. ப. .. வேலூர்

56. கார்த்திக், திரு. நா. .. சிங்காநல்லூர்

57. காளிமுத்து, திரு. வி.எஸ். .. தாராபுரம் (செ.வ.)

58. கிரி, திரு. மு.பெ. .. செங்கம் (செ.வ.)

59. கீதா, திருமதி, ம. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)

60. கீதா ஜீவன், திருமதி பி. .. தூத்துக்குடி

| | | | |
|---|---|---|---|
| 61. | குணசேகரன், திரு. சு. | .. | திருப்பூர் தெற்கு |
| 62. | குமரகுரு, திரு. இரா. | .. | உளுந்தூர்பேட்டை |
| 63. | கோதண்டபாணி, திரு. மு. | .. | திருப்போரூர் |
| 64. | கோவிந்தராசு, திரு. மா. | .. | பேராவூரணி |
| 65. | சக்கரபாணி, திரு. அர. | .. | ஒட்டன்சத்திரம் |
| 66. | சக்திவேல், திரு. எ.பி. | .. | சேலம் தெற்கு |
| 67. | சக்ரபாணி, திரு. மு. | .. | வானூர் (செ.வ.) |
| 68. | சண்முகநாதன், திரு. எஸ்.பி. | .. | ஸ்ரீவைகுண்டம் |
| 69. | சண்முகம், திரு. அ. | .. | கிணத்துக்கடவு |
| 70. | சண்முகம், திரு. சி.வி. | .. | விழுப்புரம் |
| 71. | சத்திய நாராயணன், திரு. ப. | .. | தியாகராய நகர் |
| 72. | சத்யா, திருமதி ப. | .. | பண்ருட்டி |
| 73. | சந்திரசேகரன், திரு. சி. | .. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 74. | சந்திரசேகரன், திரு. துரை. | .. | திருவையாறு |
| 75. | சந்திரசேகர், திரு. இரா. | .. | மணப்பாறை |
| 76. | சந்திரபிரபா, திருமதி மு. | .. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.) |
| 77. | சம்பத், திரு. எம்.சி. | .. | கடலூர் |
| 78. | சரவணன், திரு. எஸ்.எஸ். | .. | மதுரை தெற்கு |
| 79. | சரஸ்வதி, திருமதி பொன். | .. | திருச்செங்கோடு |
| 80. | சரோஜா, டாக்டர் வி. | .. | ராசிபுரம் (செ.வ.) |
| 81. | சாமி, திரு. கே.பி.பி. | .. | திருவொற்றியூர் |
| 82. | சித்ரா, திருமதி கு. | .. | ஏற்காடு (ஆ.வா.) |
| 83. | சிவகுமார் என்கிற தாயகம் கவி, திரு. ப. | .. | திரு.வி.க. நகர் (செ.வ.) |



| | | | |
|---|---|---|---|
| 84. | சிவசுப்பிரமணி, திரு. வே.பொ. | .. | மொடக்குறிச்சி |
| 85. | சின்னதம்பி, திரு. ஆர்.எம். | .. | ஆத்தூர் (செ.வ.) |
| 86. | சின்னராஜ், திரு. ஓ.கே. | .. | மேட்டுப்பாளையம் |
| 87. | சீத்தாபதி, திருமதி பெ. | .. | திண்டிவனம் (செ.வ.) |
| 88. | சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். | .. | விருதுநகர் |
| 89. | சுதர்சனம், திரு. எஸ். | .. | மாதவரம் |
| 90. | சுந்தரராஜ், திரு. ஆர். | .. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 91. | சுந்தர், திரு. க. | .. | உத்திரமேரூர் |
| 92. | சுப்பிரமணியன், திரு. எஸ்.ஜி. | .. | சாத்தூர் |
| 93. | சுப்பிரமணியன், திரு. மா. | .. | சைதாப்பேட்டை |
| 94. | சுப்ரமணி, திரு. பெ. | .. | தருமபுரி |
| 95. | சுரேஷ் ராஜன், திரு. என். | .. | நாகர்கோவில் |
| 96. | செங்குட்டுவன், திரு. டி. | .. | கிருஷ்ணகிரி |
| 97. | செங்கோட்டையன், திரு. கே.ஏ. | .. | கோபிச்செட்டிபாளையம் |
| 98. | செந்தில்குமார், திரு. ஐ.பி. | .. | பழனி |
| 99. | செந்தில்பாலாஜி, திரு. V. | .. | அரவக்குறிச்சி |
| 100. | செம்மலை, திரு. S. | .. | மேட்டூர் |
| 101. | செல்லூர் கா. ராஜு, திரு. | .. | மதுரை மேற்கு |
| 102. | செல்வமோகன்தாஸ் பாண்டியன், திரு. எஸ். | .. | தென்காசி |
| 103. | செல்வம், திரு. கு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 104. | செல்வராசு, திரு. எம். | .. | முசிறி |

| | | |
|---|---|---|
| 105. | செழியன், முனைவர் கோவி. | .. திருவிடைமருதூர் (செ.வ.) |
| 106. | சேகரன், திரு. கே.வி. | .. போளூர் |
| 107. | சேகர், திரு. C.V. | .. பட்டுக்கோட்டை |
| 108. | சேகர்பாபு, திரு. பி.கே. | .. துறைமுகம் |
| 109. | சேவூர் எஸ். ராமச்சந்திரன், திரு. | .. ஆரணி |
| 110. | சௌந்தரபாண்டியன், திரு. அ. | .. லால்குடி |
| 111. | தங்கதுரை, திரு. ஆர். | .. நிலக்கோட்டை (செ.வ.) |
| 112. | தங்கப்பாண்டியன், திரு. சௌ. | .. ராஜபாளையம் |
| 113. | தங்கமணி, திரு. பி. | .. குமாரபாளையம் |
| 114. | தங்கம் தென்னரசு, திரு. | .. திருச்சுழி |
| 115. | தமிமுன் அன்சாரி, திரு. எம். | .. நாகப்பட்டினம் |
| 116. | தமிழ்ச்செல்வன், திரு. தங்க. | .. ஆண்டிப்பட்டி |
| 117. | தமிழ்ச்செல்வன், திரு. ரா. | .. பெரம்பலூர் (செ.வ.) |
| 118. | தனபால், திரு. ப. | .. அவினாசி (செ.வ.) |
| 119. | தனியரசு, திரு. உ. | .. காங்கேயம் |
| 120. | திண்டுக்கல் சி. சீனிவாசன், திரு. | .. திண்டுக்கல் |
| 121. | திராவிடமணி, திரு. மு. | .. கூடலூர் (செ.வ.) |
| 122. | துரை. கி. சரவணன், திரு. | .. புவனகிரி |
| 123. | துரைக்கண்ணு, திரு. இரா. | .. பாபநாசம் |
| 124. | துரைமுருகன், திரு. | .. காட்பாடி |
| 125. | தூசி கே. மோகன், திரு. | .. செய்யாறு |
| 126. | தென்னரசு, திரு. கே.எஸ். | .. ஈரோடு கிழக்கு |



| | | |
|---|---|---|
| 127. | நடராஜன், திரு. அ. | .. பல்லடம் |
| 128. | நடராஜ், திரு. ஆர். | .. மயிலாப்பூர் |
| 129. | நந்தகுமார், திரு. ஏ.பி. | .. அணைக்கட்டு |
| 130. | நரசிம்மன், திரு. பி.எம். | .. திருத்தணி |
| 131. | நல்லதம்பி, திரு. அ. | .. திருப்பத்தூர் |
| 132. | நிலோபர் கபில், டாக்டர் (திருமதி) | .. வாணியம்பாடி |
| 133. | நீதிபதி, திரு. பா. | .. உசிலம்பட்டி |
| 134. | நேரு, திரு. கே.என். | .. திருச்சிராப்பள்ளி மேற்கு |
| 135. | பரமசிவம், டாக்டர் V.P.B. | .. வேடசந்தூர் |
| 136. | பரமேஸ்வரி, திருமதி மு. | .. மணச்சநல்லூர் |
| 137. | பலராமன், திரு. ப. | .. பொன்னேரி (செ.வ.) |
| 138. | பவுன்ராஜ், திரு. எஸ். | .. பூம்புகார் |
| 139. | பழனி, திரு. கே. | .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 140. | பழனியப்பன், திரு. பெ. | .. பாப்பிரெட்டிப்பட்டி |
| 141. | பழனிவேல் தியாக ராஜன், திரு. | .. மதுரை மத்தி |
| 142. | பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. | .. குறிஞ்சிப்பாடி |
| 143. | பன்னீர்செல்வம், திரு. ஓ. | .. போடிநாயக்கனூர் |
| 144. | பன்னீர்செல்வம், திரு. வி. | .. கலசப்பாக்கம் |
| 145. | பாண்டி, திரு. ச. | .. முதுகுளத்தூர் |
| 146. | பாண்டியராஜன், திரு. க. | .. ஆவடி |
| 147. | பாண்டியன், திரு. கே.ஏ. | .. சிதம்பரம் |

| | | |
|---|---|---|
| 148. | பாரதி, திரு. பி.வி. | .. சீர்காழி (செ.வ.) |
| 149. | பார்த்திபன், திரு. என்.ஜி. | .. சோளிங்கர் |
| 150. | பாலகிருஷ்ணா ரெட்டி, திரு. பா. | .. ஓசூர் |
| 151. | பாலசுப்பிரமணி, திரு. ஆர். | .. ஆம்பூர் |
| 152. | பாஸ்கரன், திரு. க. | .. சிவகங்கை |
| 153. | பாஸ்கர், திரு. கே.பி.பி. | .. நாமக்கல் |
| 154. | பிச்சாண்டி, திரு. கு. | .. கீழ்பெண்ணாத்தூர் |
| 155. | பிரகாஷ், திரு. ஒய். | .. தளி |
| 156. | பிரபு, திரு. அ. | .. கள்ளக்குறிச்சி (செ.வ.) |
| 157. | பிரின்ஸ், திரு. ஜே.ஜி. | .. குளச்சல் |
| 158. | புகழேந்தி, திரு. சு. | .. மதுராந்தகம் (செ.வ.) |
| 159. | பூங்கோதை, டாக்டர் (திருமதி) | .. ஆலங்குளம் |
| 160. | பெரியகருப்பன், திரு. கே.ஆர். | .. திருப்பத்தூர் |
| 161. | பெரியசாமி, திரு. இ. | .. ஆத்தூர் |
| 162. | பெரியண்ணன் அரசு, திரு. | .. புதுக்கோட்டை |
| 163. | பெரியபுள்ளான் என்கிற செல்வம் திரு. பெ. | .. மேலூர் |
| 164. | பென்ஜமின், திரு. பா. | .. மதுரவாயல் |
| 165. | பொள்ளாச்சி V. ஜெயராமன், முனைவர் | .. பொள்ளாச்சி |
| 166. | பொன்முடி, முனைவர் க. | .. திருக்கோவிலூர் |
| 167. | போஸ், திரு. ஏ.கே. | .. திருப்பரங்குன்றம் |



| | | |
|---|---|---|
| 168. | மணிகண்டன், டாக்டர் எம். | .. இராமநாதபுரம் |
| 169. | மணியன், திரு. ஓ.எஸ். | .. வேதாரண்யம் |
| 170. | மதிவாணன், திரு. உ. | .. கீழ்வேளூர் (செ.வ.) |
| 171. | மருதமுத்து, திரு. அ. | .. கெங்கவல்லி (செ.வ.) |
| 172. | மனோகரன், திரு. அ. | .. வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 173. | மனோ தங்கராஜ், திரு. த. | .. பத்மநாபபுரம் |
| 174. | மனோரஞ்சிதம், திருமதி நா. | .. ஊத்தங்கரை (செ.வ.) |
| 175. | மனோன்மணி, திருமதி ப. | .. வீரபாண்டி |
| 176. | மஸ்தான், திரு. கே.எஸ். | .. செஞ்சி |
| 177. | மாசிலாமணி, டாக்டர் இரா. | .. மயிலம் |
| 178. | மாணிக்கம், திரு. கி. | .. சோழவந்தான் (செ.வ.) |
| 179. | மாரியப்பன் கென்னடி, திரு. சோ. | .. மானாமதுரை (செ.வ.) |
| 180. | முத்தையா, திரு. எஸ். | .. பரமக்குடி (செ.வ.) |
| 181. | முருகன், திரு. ஆர். | .. அரூர் (செ.வ.) |
| 182. | முருகன், திரு. பி. | .. வேப்பனஹள்ளி |
| 183. | முருகுமாறன், திரு. என். | .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 184. | முருகையா பாண்டியன், திரு. ஆர். | .. அம்பாசமுத்திரம் |
| 185. | முஹம்மது அபூபக்கர், திரு. கே.ஏ.எம். | .. கடையநல்லூர் |
| 186. | மூர்த்தி, திரு. கே.எஸ். | .. பரமத்தி—வேலூர் |
| 187. | மூர்த்தி, திரு. பி. | .. மதுரை கிழக்கு |

188. மெய்யநாதன், திரு. சிவ.வீ. .. ஆலங்குடி

189. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை

190. மோகன், திரு. எம்.கே. .. அண்ணா நகர்

191. ரகுபதி, திரு. எஸ். .. திருமயம்

192. ரங்கநாதன், திரு. ப. .. வில்லிவாக்கம்

193. ரவி, திரு. சு. .. அரக்கோணம் (செ.வ.)

194. ராசேந்திரன், திரு. சபா. .. நெய்வேலி

195. ராதாகிருஷ்ணன், திரு. வி. .. மயிலாடுதுறை

196. ராமர், திரு. எ. .. குளித்தலை

197. ராமஜெயலிங்கம், திரு. ஜெ.கே.என். .. ஜெயங்கொண்டம்

198. ராமு, திரு. அ. .. குன்னூர்

199. ராஜலெட்சுமி, திருமதி வி.எம். .. சங்கரன்கோவில் (செ.வ.)

200. ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன், திரு. ஈ.எம்.ஆர். .. அந்தியூர்

201. ராஜா, திரு. சி. .. சங்கரி

202. ராஜா, திரு. டி.ஆர்.பி. .. மன்னார்குடி

203. ராஜேந்திர பாலாஜி, திரு. கே.டி. .. சிவகாசி

204. ராஜேந்திரன், திரு. சு. .. அரியலூர்

205. ராஜேந்திரன், திரு. வி.ஜி. .. திருவள்ளூர்

206. ராஜேஷ் குமார், திரு. செ. .. கிள்ளியூர்

207. ரெங்கசாமி, திரு. எம். .. தஞ்சாவூர்



208. லெட்சுமணன், திரு. ஏ.எல்.எஸ். .. திருநெல்வேலி

209. லோகநாதன், திரு. கோ. .. கீழ்வைத்தினான்குப்பம் (செ.வ.)

210. வசந்தகுமார், திரு. எச். .. நாங்குநேரி

211. வரலட்சுமி, திருமதி ம. .. செங்கல்பட்டு

212. வளர்மதி, திருமதி சீ. .. ஸ்ரீரங்கம்

213. வாகை சந்திரசேகர், திரு. .. வேளச்சேரி

214. விருகை V.N. ரவி, திரு. .. விருகம்பாக்கம்

215. விஜயகுமார், திரு. க.நா. .. திருப்பூர் வடக்கு

216. விஜயதரணி, திருமதி எஸ். .. விளவங்கோடு

217. விஜய பாஸ்கர், டாக்டர் சி. .. விராலிமலை

218. விஜயபாஸ்கர், திரு. எம்.ஆர். .. கரூர்

219. விஜியகுமார், திரு. கே.எஸ். .. கும்மிடிப்பூண்டி

220. வீரமணி, திரு. கே.சி. .. ஜோலார்பேட்டை

221. வெங்கடாச்சலம், திரு. என்.டி. .. பெருந்துறை

222. வெங்கடாஜலம், திரு. கோ. .. சேலம் மேற்கு

223. வெல்லமண்டி ந. நடராஜன், திரு. .. திருச்சிராப்பள்ளி கிழக்கு

224. வெற்றிவேல், திரு. ச. .. ஓமலூர்

225. வெற்றிவேல், திரு. P. .. பெரம்பூர்

226. வேலு, திரு. எ.வ. .. திருவண்ணாமலை

227. வேலுமணி, திரு. எஸ்.பி. .. தொண்டாமுத்தூர்

228. ஜக்கையன், திரு. எஸ்.டி.கே. .. கம்பம்

229. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்

| | | |
|---|---|---|
| 230. | ஜெயந்தி பத்மநாபன், திருமதி சி. | .. குடியாத்தம் (செ.வ.) |
| 231. | ஜெயராமகிருஷ்ணன், திரு. இரா. | .. மடத்துக்குளம் |
| 232. | ஸ்டாலின் குமார், திரு. செ. | .. துறையூர் (செ.வ.) |
| 233. | ஸ்டாலின், திரு. மு.க. | .. கொளத்தூர் |
| 234. | நான்சி ஆன் சிந்தியா பிரான்சிஸ், டாக்டர் (திருமதி) | நியமனம் |
| 235. | வெற்றிடம் | .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | |
|---|---|
| திரு. ஆர். முத்துக்குமாரசாமி | .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர் |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## துன்முகி, தை 17, திருவள்ளுவர் ஆண்டு–2048

## 2017 ஜனவரி 30, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

> "அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
> இவ்வுலகம் இல்லாகி யாங்கு."

பொருள் இல்லாதவர்களுக்கு இவ்வுலகத்து இன்ப வாழ்க்கை இல்லை. அதேபோல் உயிர்களிடத்தில் அருள் இல்லாதவர்களுக்கு அவ்வுலக வாழ்க்கை இல்லை.

## 1. இரங்கற்குறிப்பு

### ஜம்மு–காஷ்மீர் மாநிலம், குரேஷ் பகுதியில் ஏற்பட்ட பனிச் சரிவில் இந்திய இராணுவ வீரர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *26–1–2017 அன்று ஜம்மு–காஷ்மீர் மாநிலம், குரேஷ் பகுதியில் ஏற்பட்ட பனிச் சரிவில் இந்திய நாட்டின் எல்லையைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டிருந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த இராணுவ வீரர்கள், சிப்பாய் B. இளவரசன் மற்றும் சிப்பாய் சுந்தரபாண்டி உட்பட, 15 இந்திய இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர் என்ற துயர செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. இந்தத் துயரச் சம்பவத்தால் தங்களது இன்னுயிரை இழந்திட்ட இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கு இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.*

[பேரவைத் தலைவர்] [2017 ஜனவரி 30

இத்துயரச் சம்பவத்தில் உயிர்நீத்த தமிழகத்தைச் சேர்ந்த இவ்விரு இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கு மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் உயர்த்தப்பட்ட கருணைத் தொகையான, தலா 20 இலட்சம் ரூபாய் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இத்துயரச் சம்பவத்தில் தங்களது இன்னுயிரை இழந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)*

## 2. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன், மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**11—**

### இருவழிச் சாலை

*__8168—திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்:__

மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதியிலுள்ள ஆனைமலை–பூலாங்கிணறு சாலையை இருவழிச் சாலையாக மாற்றியமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2017 ஜனவரி 30]

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மடத்துக்குளம் தொகுதி, ஆனைமலை–பூலாங்கிணறு சாலையினை இருவழிச் சாலையாக மாற்றியமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலை N.H. 209–லிருந்து தொடங்கி ஆனைமலை சென்றடைகின்றது. இந்தச் சாலை அந்தப் பகுதியில் இருக்கிற மக்களுக்கு மட்டுமல்லாமல், சுற்றுலாத்தலமாக விளங்கும் ஆழியாறு, வால்பாறை மற்றும் Top–slip போன்ற பகுதிகளுக்கும் செல்கின்ற சாலையாகும். அது இப்பொழுது இடைநிலைச் சாலையாக 5½ மீட்டர் அளவு கொண்டதாக இருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், விசேஷ காலங்களில் கேரளாவுக்கு திருச்சூர் மார்க்கமாகச் செல்கின்ற வண்டிகள் அனைத்தும் அந்தச் சாலையின் வழியாகச் சென்றுதான் பொள்ளாச்சியின் போக்குவரத்து நெரிசலைத் தவிர்த்து வருகின்றது. அந்த வகையில், இந்தச் சாலை மிகவும் சிறப்பாக அமைக்கப்பட வேண்டிய சாலை. அதுமட்டுமல்லாமல், 4 மேல்நிலைப் பள்ளிகள், தனியார் மற்றும் அரசுப் பள்ளிகள், அதேபோல் 2 கலைக் கல்லூரிகள் அமைந்துள்ள பகுதியாகும். சுற்றுலா வண்டிகள் அனைத்தும், இச்சாலை வழியாகத்தான் செல்கின்றன. மேலும், மார்கழி, தை, மாசி மாதங்களில் சபரிமலைக்குச் செல்லும் பக்தர்கள் அனைவருமே அந்த வழியாகத்தான் சென்று வருகின்றார்கள் என்பதையும் கவனத்தில் கொண்டு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உங்களுக்கு இன்னும் ஒரு துணைக் கேள்வி இருக்கிறது. சுருக்கமாகக் கேட்டு சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பணியை கண்டிப்பாகச் செய்து கொடுக்க வேண்டுமாய்த் தங்கள்மூலமாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

[2017 ஜனவரி 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆனைமலை–பூலாங்கிணறு சாலையானது 16.400 கிலோ மீட்டர் நீளமுடைய மாவட்ட முக்கியச் சாலையாகும். இச்சாலையில் 15.600 கிலோ மீட்டர் நீளமுடைய பகுதி, தற்போது 5.5 மீட்டர் அகலம் கொண்ட இடைவெளிச் சாலையாகும். மீதமுள்ள 800 மீட்டர் நீளமுள்ள சாலைப் பகுதி 7 மீட்டர் அகலம் கொண்ட இரு வழிச் சாலையாக அமைந்துள்ளது. தற்போது போக்குவரத்துச் செரிவுக்கு ஏற்றவாறு சாலை அகலமாக உள்ளதால், இதை தற்போது அகலப்படுத்த வேண்டிய அவசியம் எழவில்லை என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலை நேரடியாக அந்தப் பகுதியிலுள்ள சுற்றுலாத்தலங்களுக்குச் செல்லும் சாலையாக இருக்கும் நிலையில், இச்சாலையின் பல்வேறு இடங்கள் குறுகலாக இருக்கின்றன. குறிப்பாக, 24/400 பகுதியில் ஆபத்தான ஒரு வளைவும் உள்ளது. அதையாவது முதற்கட்டமாக விபத்துத் தடுப்பு நிதியிலிருந்து செய்து கொடுக்க வேண்டும். வரும் நிதியாண்டில் இல்லையென்றாலும்கூட, அடுத்த நிதியாண்டிலாவது அந்தச் சாலையை முழுமையாக அகலப்படுத்துகின்றவிதமாக, 7 மீட்டர் அல்லது 10 மீட்டர் சாலையாக அமைத்துத் தர வேண்டுமாய் தங்கள்மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்



2017 ஜனவரி 30]

குறிப்பிடுகின்ற அந்தப் பகுதியிலுள்ள சாலையின் இரு பக்கங்களிலும் கட்டடங்கள் அதிகமாக இருக்கின்றன. அந்தக் கட்டடங்களையெல்லாம் அப்புறப்படுத்திவிட்டு, நிலம் ஆர்ஜிதம் செய்த பிறகுதான் சாலையை விரிவுபடுத்த வேண்டிய நிலை இருக்கின்றது. அங்கு போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருப்பதால், அந்தச் சாலையை அகலப்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்றார்கள். அதை ஆய்வு செய்து, அங்கு போக்குவரத்து செரிவிற்கேற்ப சாலையை அகலப்படுத்திட, நிதிநிலைக்கேற்ப அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள்.

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “இருந்தாலும் மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும்; இவர் போல யார் என்று ஊர் சொல்ல வேண்டும்” என்பதற்கேற்பவும், “மக்களால் நான்; மக்களுக்காகவே நான்” என்று வாழ்ந்து மறைந்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பாதத்திலே எனது வணக்கத்தைக் காணிக்கையாக்குகிறேன். கழகத்தினுடைய பொதுச் செயலாளர், தியாகத் தலைவி மாண்புமிகு சின்னம்மா அவர்களை வணங்குகிறேன்.

ஈரோடு மாநகரம், ஈரோடு புறவழிச்சாலையின் மூன்று கட்டப் பணிகள் முடியும் தருவாயில் இருக்கின்றன. நான்காவது கட்டப் பணிக்கு இந்த நிதியாண்டில் நிதி ஒதுக்கப்படுமா? அப்படி அந்த நிதி ஒதுக்கப்பட்டால்—இரண்டு சாலைகள் வழியாக முடிவதாக இருக்கின்றன. ஒன்று, சத்தி ரோடு, இன்னொன்று பவானி ரோடு. பவானி ரோடு வழியாக முடிகிறதா, சத்தி ரோடு வழியாக முடிகிறதா? விரைவாகப் பணியைத் துவங்குவதற்கு மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

[2017 ஜனவரி 30

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாநகர புறவழிச்சாலையின் நான்காம் கட்டப் பணி துவங்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். ஏற்கெனவே மூன்று கட்டப் பணிகள் முடிவுற்று, பயன்பாட்டிற்கு வர இருக்கின்றது. நான்காம் கட்டப் பணி TNRSP திட்டத்தின்மூலமாக ஆய்விலே இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, ஈரோடு–சத்தி ரோடு, ஈரோடு–பவானி ரோடு ஆகிய இரண்டு பகுதிகளையும் இணைக்கின்ற அந்தப் புறவழிச்சாலையானது தற்போது அரசினுடைய ஆய்வில் இருக்கின்றது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்லிலிருந்து மைசூர் செல்கின்ற தேசிய நெடுஞ்சாலை 209–ஐ, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் நான்கு வழிச்சாலையாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்து, இன்றைக்குத் தனியார் ஏஜென்சி 'Menard' என்ற நிறுவனத்தால் சுமார், 2,500 கோடி ரூபாய் அளவுக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, டில்லிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலமாக ஏற்கெனவே திண்டுக்கல்லிலே ஒரு மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் கோயம்புத்தூரிலே ஒரு மாவட்ட வருவாய் அலுவலர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டுள்ள நிலையில், இன்னும் திண்டுக்கல்லில் 3 வட்டாட்சியர்களையும், அதேபோல, கோயம்புத்தூரில் 4 வட்டாட்சியர்களையும், அவர்களோடு சேர்ந்து பணியாற்றக்கூடிய அலுவலர்களையும் நியமிக்க வேண்டுமென்று நெடுஞ்சாலைத் துறைக்கு கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் அந்த 7 வட்டாட்சியர் பணியிடங்களையும், அதற்கு வேண்டிய அலுவலர்களையும் உடனடியாக நியமித்தால், அந்த நிலம் எடுக்கின்ற பணி விரைவாக முடிவதற்கு வாய்ப்பு ஏற்படும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பணியிடங்களை விரைவாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.



2017 ஜனவரி 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின்மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பகுதியிலே சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதற்கு நிலம் ஆர்ஜிதம் செய்வதற்காக வட்டாட்சியர்களை நியமிக்க வேண்டுமென்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, அதை ஆய்வு செய்து, அந்த ஆய்வின் அடிப்படையிலே, இப்போது எத்தனை அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்; இன்னும் எவ்வளவு அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டுமென்பதையெல்லாம் பரிசீலித்து, நிலம் ஆர்ஜிதம் செய்வதற்குத் தேவையான அதிகாரிகளை நியமிப்பதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.எ. ஏழுமலை அவர்கள்.

முற்பகல் 10–10

**திரு. டி.எ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வாழ்ந்து மறைந்த ஒரு மனித தெய்வம்; அடித்தட்டிலே பிறந்த எங்களைப் போன்றவர்களையெல்லாம் ஒன்று திரட்டி, தேர்தலிலே போட்டியிடவைத்து, இம்மாமன்றத்தில் அமரவைத்து, எங்களை எல்லாம் வாழவைத்து, அழகுபார்த்து, வழிநடத்திக்கொண்டிருக்கிற அம்மா அவர்களை மீண்டும் ஒருமுறை வணங்குகிறேன்.

பூந்தமல்லி நகரத்தில், நெடுஞ்சாலையில் கிருஷ்ணகிரி, கோயம்புத்தூர், பெங்களூரு வழியாக வருகின்ற சாலையும், ஆவடி–கரையாஞ்சாவடி போகின்ற சாலையும் மிக முக்கியமான சாலையாகும். அங்குள்ள சர்வீஸ் சாலை உடைந்துபோயிருக்கிறது. அங்கே கிட்டத்தட்ட 3, 4 கல்லூரிகள் இருக்கின்றன. அந்தப் பகுதியிலுள்ள சாலைகள் எல்லாம் உடைந்து போயிருக்கின்றன. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அங்கே இரண்டு பிள்ளைகள்கூட இறந்துபோய்விட்டார்கள். அந்த அளவிற்கு அந்தச் சாலை மிகவும் மோசமாக இருக்கிறது. அந்த சர்வீஸ்

[2017 ஜனவரி 30

சாலையை சரிசெய்து தரவேண்டும். அந்தப் பாலத்திற்குக் கீழே போகும்போது கீழே விழுவது போல் இருக்கிறது. அதை சரிசெய்துதர அரசு முன்வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, பூந்தமல்லி நெடுஞ்சாலையிலிருந்து உள்ளே நகரத்திற்குப் போகின்ற சாலை. அந்தச் சாலையை அகலப்படுத்த வேண்டுமென்று ஏற்கெனவே நான் கோரிக்கை வைத்திருக்கிறேன். அந்தச் சாலையை அகலப்படுத்துவதற்கு, சாலையின் ஒரு பக்கம் 15 அடியும், இன்னொரு பக்கம் 15 அடியும் வேண்டுமென்று, அந்த நகரத்தில் உள்ள எல்லா கட்டட உரிமையாளர்களையும் சங்கத்தின் மூலமாகக் கேட்டிருக்கிறேன். "நாங்கள் தருகிறோம்" என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இரண்டு சாலைகளையும் அகலப்படுத்தினால், அங்கு நெருக்கடியைக் குறைக்கலாம். அதற்கு இடம் கொடுப்பதற்கு மக்கள் தயாராக இருக்கிறார்கள். அதற்கு அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூந்தமல்லி நகராட்சிச் சாலையை விரிவுபடுத்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுள்ளார்கள். ஏற்கெனவே ஒரு பகுதி அகலப்படுத்தப்பட்டிருக்கிறது. மேலும் அகலப்படுத்தவேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்திருக்கிறார். போக்குவரத்து நெரிசலுக்கேற்ப ஆய்வு செய்து, அந்த ஆய்விலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல அதிகமான போக்குவரத்து நெரிசல் இருந்தால், அந்தச் சாலையை விரிவுபடுத்த, நிதிநிலைக்கேற்ப அரசு பரிசீலிக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே சர்வீஸ் சாலையைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அது இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின்கீழ் வருகின்ற சாலை. இதுசம்பந்தமாக கடிதம் மூலமாக மத்திய தரைவழிப் போக்குவரத்து அமைச்சகத்தினை, அம்மாவினுடைய அரசு, இந்த சர்வீஸ் சாலையை சரிசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ளது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2017 ஜனவரி 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**12—**

## பகுதிநேர நியாய விலைக் கடை

***4661—திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி தொகுதி, கீழப்பாவூர் ஒன்றியம், ரகுமானியபுரத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அச்சம் என்ற ஒரு சொல்லை அறியாத சிம்மமாக; உச்சரிக்கும்போதே உமிழ்நீரும் இனிக்கின்ற அரும் தவமாக; அண்டியோர்க்கெல்லாம் ஆல்போல் நிலம் தந்த அவயமாக; வாழ்கிற காலமெல்லாம் வளர் தமிழ் பூமியை வாழவைத்த தெய்வமாக; உலகத் தமிழ் இனத்திற்கு கொடையாக; ஒன்றரைகோடி சிப்பாய் படைக்கு இமையாக; சந்தனமாய் கரைந்து; சரித்திரமாய் நிலைத்திட்ட எங்கள் குலதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களை என் மனக்கண் முன் நிறுத்தி, என் கண்ணீரால் நன்றி மலர்களை என் தாய்க்குக் காணிக்கையாக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் அம்மாவின் மறைவால் விலாசத்தைத் தொலைத்துவிட்டு, விக்கித்து நின்ற எங்களுக்கு, விசுவாசத்தின் அடையாளமாக அம்மா விட்டுச்சென்றிருக்கும் அருட்கொடைதான் எங்கள் சின்னம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) வங்கத்தில் உறங்குகின்ற எங்கள் தாய்க்கு வரமாகக் கிடைத்தவர்; வலக்கரமாக உழைத்தவர். தோழியாய், சகோதரியாய்; செவிலித் தாயாய் இருந்து எங்கள் தாயைக் காத்த தாயே! காவியத் தாயின் கனவுகளை இலட்சியமாய்க் கொண்டவரே! கடல் அளவான கழகத்தை oxygen ஆக

[2017 ஜனவரி 30

சுவாசிப்பவரே! சீர் இளமை இயக்கத்தைப் பெரு உவகை வெற்றிகளால், ஒன்றரை கோடி தொண்டர்களைக் கொண்ட கூட்டத்தினை வழிநடத்தக் காத்திருக்கும் எங்கள் அம்மாவின் உருவில் காணும் எங்கள் வீரமங்கை சின்னம்மா அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த வணக்கங்களையும், நன்றிகளையும் சமர்ப்பிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? (குறுக்கீடுகள்) இதிலொன்றும் விஷயமில்லை. (குறுக்கீடுகள்) அவர் கேள்விக்குத்தானே பதில் சொல்கிறார்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** (அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி சட்டமன்றத் தொகுதியில் (குறுக்கீடுகள்) சிவனாடானூர் ஊராட்சிக்கு உட்பட்ட பகுதியில். . .

முற்பகல் 10–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருங்கள். (குறுக்கீடுகள்). மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர், ஒரு நிமிடம் இருங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர், என்ன? (குறுக்கீடு) அவர் கேள்விக்குத்தானே பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார்? (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** அவர் பேசுவதைப்பற்றி நான் எதுவும் சொல்லவில்லை. ஒன்றைக் கேட்கிறேன்; இதுவரையில் இதற்கு முன்பு இருந்த முதலமைச்சரைப் பற்றிச் சொன்னார்கள். இப்பொழுது வேறு ஒருவரைப்பற்றிச் சொல்கிறார். நான் திரும்ப உங்களிடம் கேட்கிறேன்; இதேபோன்று காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் திரு. ராகுல் காந்தியைப் பற்றிப் பேசலாம்; நாங்களும் பேசலாம், இன்னொருவரும் பேசலாம் என்று அர்த்தமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைப்போன்று பேசியிருக்கிறார்கள்.



2017 ஜனவரி 30]

**திரு. துரைமுருகன்:** ஏன் சார், இது என்ன, ** ஒரு கண்ணியம் வேண்டாமா? (குறுக்கீடு) ஒரு கண்ணியம் வேண்டாமா என்று கேட்கிறேன். இது சட்டமன்றம்; கண்ணியமாக நடத்துங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது வேண்டாம். ஏற்கெனவே எதிர்க்கட்சித் துணைத் தலைவரான நீங்கள் இதுகுறித்து கேள்வி எழுப்பியதற்கு என்னுடைய. . . (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** உங்கள் கட்சியினுடைய வரலாற்றைப் பற்றிப் பேசுவதற்கல்ல இந்த மன்றம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. ஏற்கெனவே நான் உங்களுக்குத் தெளிவாக ruling கொடுத்துவிட்டேன்.

**திரு. துரைமுருகன்:** என்ன ruling கொடுக்கிறீர்கள் நீங்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவரவர்கள் அவர்களுடைய கட்சியினுடைய தலைவரைப்பற்றி தாராளமாகப் பேசலாம். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்களும் பேசுங்கள். நான் அதற்கு அனுமதி மறுக்கவில்லை. அவர்கள் கட்சியினுடைய பொதுச் செயலாளர் சின்னம்மா அவர்களைப்பற்றிக் குறிப்பிடுகிறார்கள். (குறுக்கீடுகள்) அவர்கள் அப்படிக் குறிப்பிடுவதிலே எந்தத் தவறும் இல்லை; தாராளமாகக் குறிப்பிடலாம். நீங்கள் அதற்கெல்லாம் ஆட்சேபம் தெரிவிக்க முடியாது. நீங்கள் இதுமாதிரி கேட்பதே தவறு. (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன், உங்கள் கட்சித் தலைவரைப்பற்றி நீங்கள் பேசுங்கள். அவர்கள் கட்சித் தலைவர்களைப்பற்றி அவர்கள் பேசுகிறார்கள். நீங்கள் பேசுகிறபோது உங்கள் கட்சித் தலைவரைப் பாராட்டிப் பேசுவதில் யாருக்கும் ஆட்சேபணை இல்லை. அது தவறில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) அதுவெல்லாம் தவறில்லை; உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அமைச்சர் அவர்கள் தன்னுடைய துறைசார்ந்த கேள்விக்கான பதிலைச் சொல்கிறபோது, பதிலைச் சொல்வதற்கு முன்பே சில வார்த்தைகளைச் சொல்லிய காரணத்தால், எங்களுடைய துணைத் தலைவர் அவர்கள் “இது முறைதானா” என்று உங்களிடத்திலே கேட்டார்கள். “அதில் தவறில்லை; அவர்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2017 ஜனவரி 30

பதில்தான் சொல்லிக் கொண்டிருக்கிறார்” என்று நீங்கள் சொல்கிறீர்கள். இதுதான் பதிலா? என்னைப் பொறுத்தவரையில், நான் தெரிவிக்க விரும்புவது, ஏதோ ஆளுங்கட்சியினர் சொல்வதைப்போன்று எதிர்க்கட்சியினரும் சொல்லலாம் என்கிற நிலையிலே நீங்கள் ஒரு கருத்தைச் சொல்கிறீர்கள். நான் நிச்சயமாகச் சொல்கிறேன்; அது மரபின்படி தவறு. ஆளுங்கட்சியைப் பொறுத்தவரையில், அந்தத் தவறைச் செய்வதற்கு நீங்கள் அனுமதிப்பதை நாங்கள் எவ்விதத்திலும் ஆட்சேபிக்கவில்லை. ஆனால், எந்தக் காரணத்தைக் கொண்டும், எக்காலத்திலும், நாங்கள் அதுபோன்ற தவறை நிச்சயமாக இந்த அவையில் பதிவு செய்யமாட்டோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தில், அவருடைய துறைசார்ந்த வினாவிற்குரிய பதிலைச் சொல்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் கடமை இருக்கிறது. கேள்வி நேரத்தில் குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளைக் கூறக்கூடாது என்றுதான் விதி இருக்கிறது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் அவர்களின் பெயரை விளித்துக் கூறுவதில் எந்தத் தவறும் இல்லையென்று (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) ஏற்கெனவே சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் ruling கொடுத்திருக்கிறார்கள். நீங்கள் பேசுவதென்றால், பேசுங்கள். பேசவில்லையென்றால் விடுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே இதுபோன்ற நடைமுறைகள் இருக்கின்றன. நம்முடைய மன்றத்திலே, பேசுகின்ற உறுப்பினர்கள் அவரவர்களுடைய கட்சியினுடைய தலைவர்களை வாழ்த்திப் பேசுவது, பாராட்டிப் பேசுவது நடைமுறையிலே இருக்கிறது. அந்த நடைமுறைதான் இப்பொழுதும் பின்பற்றப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அமைச்சர் அவர்கள், அவர்களுடைய கட்சியினுடைய பொதுச் செயலாளர், சின்னம்மா அவர்களைப்பற்றிக் குறிப்பிடுகிறார்கள். அவர்கள் தாராளமாக அதைக் குறிப்பிடலாம். அதிலே மாற்றுக் கருத்து இல்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுகிறபோது, உங்களுடைய கட்சித் தலைவர்களைப்பற்றி தாராளமாகப் பேசுங்கள்; காங்கிரஸ்



2017 ஜனவரி 30]

கட்சியினரும் பேசலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தயவுகூர்ந்து மாண்புமிகு தி.மு.க. உறுப்பினர்கள் தாங்கள் முன்பு பேசியவற்றை சற்று நினைவுகூர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது, எங்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் அவர்களைப்பற்றி விளித்துக் கூறினார்கள். ஆனால், நீங்கள் பேசுகின்றபோது, தி.மு.க. கட்சியில் எந்தப் பதவியிலும் இல்லாதவர்களைப்பற்றிக்கூட இந்த அவையிலே பேசியிருக்கிறீர்கள்; அது பதிவாகியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ஆகவே, குற்றச்சாட்டு சொல்லாமல், அவரவர்களுக்கு விருப்பப்பட்ட பெயர்களை, தாய் தகப்பன் பெயர்களைக் குறிப்பிட்டுப் பேசலாம். தாய் தகப்பனைப் பற்றியும் பேசியிருக்கிறோம்; மற்ற நண்பர்களைப்பற்றியும் பேசியிருக்கிறோம். ஆகவே, இங்கே அப்படிப் பேசுவது தவறு ஆகாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 10–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், “நீங்கள் பேசியது போன்றுதான் நாங்களும் பேசுகிறோம்” என்று ஒரு விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். ‘நீங்களும் பேசியிருக்கிறீர்கள்; அதனால் தவறில்லை’ என்று சொல்கிறீர்கள். நான் கேட்க விரும்புவது, ஒருவேளை, நாங்களே தவறு செய்திருந்தாலும், அதே தவறை இந்த அவையில் மீண்டும் தொடர வேண்டுமா என்பதுதான் என்னுடைய கேள்வி. (குறுக்கீடுகள்) எனவே, தயவுகூர்ந்து நான் கேட்டுக்கொள்கிறேன், அவையினுடைய மரபை, மாண்பைக் காப்பாற்றக்கூடியவகையில் நீங்கள் இந்தச்

[2017 ஜனவரி 30

சபையை நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இல்லை; இதுபோன்றுதான் இந்த அவை நடக்கும் என்று நீங்கள் சொன்னால், மக்கள் அவையின் நடவடிக்கைகளை நன்றாக கவனித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருங்கள். (குறுக்கீடுகள்) இந்த அவைக்கு நான் மீண்டும், மீண்டும் ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே இந்தப் பிரச்சினை குறித்து எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அன்றைக்குக் கேட்டபோது, என்னுடைய ruling–ஐ தெளிவாகச் சொல்லிவிட்டேன். இன்றைக்கு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் மீண்டும் அந்தப் பிரச்சினையைக் கிளப்புகிறார். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இதுகுறித்துப் பேசுகிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அதற்கு பதில் சொல்லியிருக்கிறார். இந்தப் பிரச்சினை குறித்து என்னுடைய இறுதித் தீர்ப்பாகச் சொல்கிறேன். அவரவர்களுடைய கட்சித் தலைவர்களைப் பாராட்டிப் பேசுவது என்பது மரபாக இருக்கிறது. ஏற்கெனவே அது நடைமுறையில் இருக்கிறது; அதைத் தொடரலாம். ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அவர்களுடைய கட்சியினுடைய பொதுச் செயலாளர் சின்னம்மா அவர்களைப் பற்றிப் பேசுவதில் எந்தத் தவறும் இல்லை; தாராளமாகப் பேசலாம். (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சியிலுள்ள நீங்களும் விரும்பினால், உங்களுடைய கட்சியினுடைய தலைவரை வாழ்த்திப் பேசுங்கள். இதற்குமேல் இப்பிரச்சினையில் விவாதம் இல்லை. (குறுக்கீடுகள்) விவாதம் இல்லை. ஆகவே, என்னுடைய இறுதி ruling இதுதான். இதற்கு மேலும் இந்தப் பிரச்சினை குறித்து விவாதிக்க எவ்வித அனுமதியும் இல்லை. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், தென்காசி சட்டமன்றத் தொகுதி. . .



2017 ஜனவரி 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், அந்தப் பிரச்சினையை விடுங்கள்; மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசட்டும். (குறுக்கீடுகள்) அந்தப் பிரச்சினை முடிந்துவிட்டது. இன்னொரு சந்தர்ப்பத்தில் உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், பின்னர் வாய்ப்புத் தருகிறேன். எதிர்க்கட்சித் தலைவருக்குப் பேச வாய்ப்பு கொடுத்துவிட்டேன். (குறுக்கீடுகள்) உங்களுக்கு இன்னொரு சந்தர்ப்பத்தில் பேச வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நேரமில்லை. (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள். நேரமில்லை; பின்னர் வாய்ப்பு தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இன்னொரு சந்தர்ப்பத்தில் பேச வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) நான் பதில்தான் சொல்கிறேன். திருநெல்வேலி தொகுதி, தென்காசி சட்டமன்றத் தொகுதி, சிவனாடானூர் ஊராட்சிக்கு உட்பட்ட பகுதியில் திப்பணம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் செயல்பட்டு வருகிறது. இச்சங்கத்தால் நடத்தப்படும் நாடாக்கண்ணுப்பட்டி முழுநேர நியாய விலைக் கடைமூலம் ரகுமானியபுரத்தைச் சேர்ந்த 230 குடும்ப அட்டைதாரர்களுடன் சேர்த்து, 1,293 குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதன் முதல் பகுதிநேர நியாய விலைக் கடை 2004 ஆம் ஆண்டு திரவியநகரில் துவக்கப்பட்டு, தற்போது 280 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. கிராமப்புறத்தைப் பொறுத்தவரையில், ஒரு முழுநேர நியாயவிலைக் கடையில் அதிகபட்சம் 800 குடும்ப அட்டைகள் இருந்தால் போதும் என்பதால், நாடாக்கண்ணுப்பட்டி நியாய விலைக் கடையைப் பிரித்து, புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைப்பது குறித்து துறைரீதியாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன் அவர்கள்.

[2017 ஜனவரி 30

**திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்மையெல்லாம் விட்டுப் பிரிந்து சென்றாலும், ஏழரை கோடி தமிழ் மக்களின் இதயங்களில் இதய சிம்மாசனத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் இதய தெய்வம் முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தெய்வீக ஆசிகளுடன், எங்களையெல்லாம் வழிநடத்திச் செல்லும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர், மரியாதைக்குரிய சின்னம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தென்காசி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, கீழப்பாவூர் ஒன்றியம், அரியபுரம் ஊராட்சி, ரகுமானியபுரத்தில் சுமார் 290 குடும்பங்கள் உள்ளன. அவர்கள் அனைவரும் சிறுபான்மைப் பிரிவைச் சார்ந்த முஸ்லிம் மக்கள் ஆவர். அவர்கள் சுமார் 1 கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று நாடாக்கண்ணுப்பட்டியிலுள்ள நம்முடைய கூட்டுறவுத் துறையின் நியாய விலைக் கடையில் பொருட்களை வாங்கி வருகிறார்கள். சிறுபான்மைப் பிரிவைச் சார்ந்த முஸ்லிம் பெண்களெல்லாம் இவ்வளவு தூரம் நடந்து சென்று, இந்தப் பொருட்களையெல்லாம் வாங்கி வருவதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆதலால், தயவுகூர்ந்து ரகுமானியபுரத்தில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடையைத் துவங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்யவேண்டுமென்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை விரைவாகப் பரிசீலித்து உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு நியாய விலைக் கடையிலிருந்து ஒன்றுக்கும் மேற்பட்ட கடைகளைப் பிரித்துக் கொடுப்பதனால், மேற்படி கடைகளை வாரத்திற்கு 1 நாள் அல்லது 2 நாட்கள்தான் திறக்க இயலும். எனவே, துறைரீதியாக ஆய்வு மேற்கொண்டு பகுதிநேர நியாய விலைக் கடை திறப்பது குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு விரைவாகத் தெரிவிக்கப்படும். உறுதியாக, விரைவிலே அந்தக் கடையைத் திறப்பதற்கு மாண்புமிகு அம்மா



2017 ஜனவரி 30]

அவர்களுடைய அரசால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன் அவர்கள்.

**திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடனடியாக பகுதி நேர கடை திறக்கப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தென்காசி ஒன்றியம், மத்தளம்பாறை கிராமத்தில் விவேகானந்தர் காலனி என்ற ஒரு பகுதி உள்ளது. அங்கு சுமார் 200 குடும்பங்களைச் சார்ந்த ஆதி திராவிட மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்கள் State Highways–40–ல், சுமார் 4 கிலோ மீட்டர் தூரம் சென்று, தென்காசி, அம்பாசமுத்திரத்திலுள்ள கூட்டுறவு நியாய விலைக் கடையில் பொருட்களை வாங்கி வருகின்றார்கள். அவர்களுடைய பாதுகாப்பைக் கருதியும், ஆதி திராவிட மக்களுடைய இன்னல்களைக் களையும் விதமாகவும், மத்தளம்பாறை கிராமத்தில் உள்ள விவேகானந்தர் காலனியில் ஒரு பகுதி நேரக் கடையை உருவாக்கித் தர வேண்டும் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதோடு, அது அமையுமா என்பதையும் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு புதிய பகுதி நேரக் கடையை அமைக்க வேண்டுமானால், தாய்க் கடையிலிருந்து உத்தேசிக்கப்பட்டுள்ள பகுதி நேரக் கடை, ஒன்றரை கிலோ மீட்டர் தூரத்தில் இருக்க வேண்டும். மலைப் பகுதியாக இருந்தால், ஒரு கிலோ மீட்டர் தூரம் போதுமானது. மலைப் பகுதியில் 100 குடும்ப அட்டைகளும், கிராமப் பகுதியாக இருந்தாலும், நகரப் பகுதியாக இருந்தாலும் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகளும் இருக்க வேண்டும். கடையைப் பிரித்ததற்குப்பிறகு, நகர்ப்புறத்தில் 800 குடும்ப

[2017 ஜனவரி 30

அட்டைகள் இருக்க வேண்டும்; கிராமப் பகுதியில் 500 குடும்ப அட்டைகளும் இருக்க வேண்டும்; மலைப் பகுதியைப் பொறுத்தவரையில், 400 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். அதே நேரத்தில், பகுதி நேரக் கடையைத் திறந்ததற்குப் பின்னர், வாரத்தில் குறைந்தது 3 நாட்களாவது, தாய்க் கடையிலிருந்து விற்பனையாளர் பகுதி நேரக் கடைக்கு வந்து கவனித்துக்கொள்ள வேண்டும். தேவைப்பட்டால், இரண்டாவது பகுதி நேரக் கடையை, கூட்டுறவுச் சங்கங்களுக்கு எந்தவிதமான நிதிச் சுமையுமின்றி திறக்கலாம். இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், தமிழகத்தில்தான் பொது விநியோகத் திட்டத்தை ஒரு முன்னோடித் திட்டமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு செயல்படுத்தி வருகிறது. தமிழகக் கூட்டுறவுத் துறை இதிலே பெரும் பங்கை ஆற்றி வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு இந்தியாவில் இருக்கிற மாநிலங்களில் தமிழகம்தான் அனைவருக்கும் உணவுப் பாதுகாப்புத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தியிருக்கிறது. இதற்கு கூட்டுறவுத் துறை மிகச் சிறப்பாகப் பணியாற்றி இருக்கிறது என்பதை இந்த அவைக்குப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், பொது விநியோகத் திட்டத்தின்கீழ், இன்றைக்கு முழு நேரக் கடைகளாக, கூட்டுறவுத் துறையால் மட்டும் நடத்தப்படுகின்ற கடைகள் 23,674, பகுதி நேரக் கடைகள் 9,007. மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் திறக்கப்பட்டு இன்றைக்கு மொத்தம் 32,681 கடைகள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் செயல்பட்டு வருகின்றன. கடந்த கால அம்மா அவர்களுடைய அரசு 2011–ல் பொறுப்பேற்றதற்குப்பிறகு, எளிதில் அணுக இயலாத குக்கிராமங்களில் வாழ்கிற மக்களுக்கும், மலைக் கிராமங்களில் வாழ்கிற மக்களுக்கும், இந்த பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் பொருட்கள் சென்று அடைய வேண்டும்; அவர்களுடைய இல்லத்திற்கு அருகிலேயே அவை கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இன்றைக்கு 37 நகரும் நியாய விலைக் கடைகளைத் தொடங்கி, சிறப்பாக நடத்தி வருகிறது. அந்த வகையில், ஏறத்தாழ 271 கிராமங்களில், சென்னையில் 52 தெருக்களில் 2 கடைகள் என ஆக மொத்தம் 26,352 குடும்ப அட்டைதாரர்களுக்கு அவர்களுடைய இல்லங்களுக்கு அருகிலேயே அத்தியாவசியப் பொருட்களை வழங்கி வருகின்றன. நகர்ப்புற மற்றும்



2017 ஜனவரி 30]

கிராமங்களில் வசிக்கும் பொதுமக்களுக்கு, அத்தியாவசியப் பொருட்களைப் பெறுவதில் எவ்வித சிரமமும் ஏற்படக் கூடாது என்பதன் அடிப்படையில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கடந்த 2011 முதல் 2016 வரை 627 முழு நேரக் கடைகளையும், 1,549 பகுதி நேரக் கடைகளையும் திறந்து, இந்த ஐந்தரை ஆண்டுகளில் 2,176 புதிய நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டு, மக்களுக்கு சிறப்பாகப் பணியாற்றி வருகிறது என்பதை இங்கே பெருமையோடு சுட்டிக்காட்ட ஆசைப்படுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் இன்னும் இங்கே இருக்கின்ற உறுப்பினர்களுக்கும் தெளிவாக ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முற்பகல் 10–30

திருச்சி மாவட்டம், பச்சைமலைப் பகுதியில் ஏறத்தாழ 46 குடும்பங்களைச் சார்ந்த மலைவாழ் மக்கள் மட்டுமே இருக்கின்றனர். மாண்புமிகு அம்மா அவர்களது அரசு, மாதத்திற்கு 3 முறை அங்கு சென்று, அந்த 46 குடும்பங்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்கி வருகிறது. அதேபோல், திருப்பூர் மாவட்டத்திலுள்ள மாவடைப்பு, குழிஞ்சிப்பட்டி மலைக் கிராமங்களுக்கு 58 கி.மீ. தரைவழியாகவும், ஏறத்தாழ 8 கி.மீ. முதல் 9 கி.மீ. தூரம் வரை மலைப் பகுதிக்குள்ளும் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அந்த மலைப் பகுதிக்குள் புலி, சிங்கம், கரடி போன்ற மிருகங்கள் இருப்பதனால், மக்கள் பொருட்களை எளிதில் வாங்க முடியாத சூழ்நிலை இருக்கின்றது. மாண்புமிகு அம்மா அவர்களது அரசு, அதற்கும் நடவடிக்கை மேற்கொண்டு, பொது விநியோகத் திட்டத்தினைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கின்ற அந்தக் கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, உரிய முறையில் பரிசீலித்து துறைரீதியாக நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இங்கு இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இன்னொன்றையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு, இந்தக் கடைகளை நடத்துவது, கூட்டுறவுச் சங்கங்கள். அவை மிகுந்த நிதிநிலையுடன் இந்தக் கடைகளை நடத்தவில்லை; குறைந்த நிதியினைக் கொண்டுதான்

[2017 ஜனவரி 30

இக்கடைகள் நடத்தப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அதற்குத் தகுந்தாற்போல் கேள்விகளைக் கேட்குமாறு கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி அவர்கள்.

**திரு. கே.எஸ். மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான பரமத்திவேலூர் தொகுதிக்குட்பட்ட இறைச்சிப்பாளையம் ஒன்றியத்தில் உள்ள அகரம் நியாய விலைக் கடையைப் பிரித்து, ஓலப்பாளையத்தில் ஒரு தனி பகுதி நேரக் கடையையும்; கபிலர்மலை ஒன்றியத்தில் உள்ள கொத்தமங்கலம் நியாய விலைக் கடையைப் பிரித்து, அரசம்பாளையம் காலனியில் ஒரு பகுதி நேரக் கடையையும்; பரமத்தி ஒன்றியம், வில்லிப்பாளையத்தில் உள்ள நியாய விலைக் கடையைப் பிரித்து, பிள்ளைக்களத்தூரிலே ஒரு பகுதி நேரக் கடையையும்; மோகனூர் ஒன்றியம், மணப்பள்ளியிலே இருக்கின்ற நியாய விலைக் கடையைப் பிரித்து, உன்னிப்பாளையத்தில் ஒரு பகுதி நேரக் கடையையும்; பரமத்தி ஒன்றியத்தில் உள்ள உன்னமலைக் கடையைப் பிரித்து, இரும்புப்பாளத்தில் ஒரு பகுதி நேரக் கடையையும் அமைத்துக்கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்ற அனைத்துக் கட்டுப்பாடுகளும் பொருந்துவதால், மேற்குறிப்பிட்ட ஐந்து கடைகளையும் பிரித்துக்கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல், அவை விதிமுறைகளுக்குட்பட்டு இருக்குமேயானால், அந்தச் சங்கங்களின் நிதிநிலையைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்களது அரசு, துறைரீதியாக ஆய்வு மேற்கொண்டு, மாண்புமிகு உறுப்பினரது கோரிக்கையை உறுதியாக பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்கள்.



2017 ஜனவரி 30]

**திரு. சபா. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஒன்றியம், மேல்காட்டுப்பாளையம் பகுதி, கடந்த ஆண்டில் பெய்த கனமழையால் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதியாகும். அந்த ஊருக்குச் செல்கின்ற தரைப்பாலம் மழையில் அடித்துச் செல்லப்பட்டு, இன்னமும் சரிசெய்யப்படாமல் இருக்கிறது. அந்தப் பகுதியில் வாழ்கின்ற குடும்ப அட்டைதாரர்கள் 69 மட்டுமே. இருந்தாலும், அந்த ஊர், அரசின் மற்றொரு நிபந்தனையான தாய்க் கடையிலிருந்து 1½ கி.மீ. தூரத்திற்குப் பதிலாக, 2 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. அந்த மேல்காட்டுப்பாளையத்திலிருந்து அவர்கள் பொருட்களை வாங்கிக்கொண்டிருந்த நிலையில், நடுக்காட்டுப்பாளையத்தைச் சார்ந்த ஊர் பொது மக்களோடு அவர்களுக்கு ஏற்பட்ட பிரச்சினையால், கடந்த ஒரு வருட காலமாக அவர்கள் பொருட்களை வாங்காமலேயே இருந்து வருகிறார்கள். மாவட்ட வழங்கல் அலுவலர், வட்டார வழங்கல் அலுவலர் ஆகியோருடன் தொடர்ந்து இந்தக் கோரிக்கை மனுவினைக் கொடுத்து நான் பேசிக்கொண்டே இருக்கிறேன்; நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லிக் கொண்டேயிருக்கிறார்கள். ஆனால் நடவடிக்கை இல்லை. கடந்த ஒரு வருட காலமாக அந்த பொது மக்கள் பொருட்களை வாங்காமல் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உரிய பரிகாரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார். இடிந்திருக்கின்ற அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கான நடவடிக்கை எடுத்து கட்டிக் கொடுக்கின்றபட்சத்தில், அந்தக் கடையிலிருந்து பொருட்களைக் கொடுக்கலாம். தற்போது அந்தப் பகுதி மக்களுக்கு எந்தச் சங்கத்திலிருந்து, எந்தக் கடையின்மூலமாக எளிதாகப் பொருட்களை வழங்க முடியும் என்று குறிப்பிட்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவாரேயானால், துறைரீதியாக ஆய்வு செய்து, அந்தக் கடையின்மூலமாக பொருட்களை வழங்குவதற்கான வாய்ப்பினை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு உருவாக்கிக்

[2017 ஜனவரி 30

கொடுக்கும். மாண்புமிகு உறுப்பினர் கூறிய அந்தச் சங்கத்திலிருந்து தற்காலிகமாக தற்போது பொருட்களைக் கொண்டுவருவதற்கு சிரமங்கள் ஏற்படும். அனைவருக்குமான உணவுப் பாதுகாப்புத் திட்டத்தினை, மாண்புமிகு அம்மா அவர்களது அரசுதான் செயல்படுத்திவருகிறது. இந்தியாவில் வேறு எந்த ஒரு மாநிலத்திலும் இதுபோன்று பொது விநியோகத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும், தமிழகத்தின் தாய், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திட்டத்தைப் பாராட்ட வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–35

அதுமட்டுமல்ல; 46 குடும்ப அட்டைகள் இருக்கிற மலைப் பகுதிகளுக்கே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பொது விநியோகத் திட்டத்தின் வாயிலாக பொருட்களைக் கொண்டு போய் வினியோகம் செய்கிறது. நீங்கள் அந்தப் பகுதியில் 69 குடும்பங்கள் இருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். இந்த 69 குடும்பங்களையும் பக்கத்தில், அந்தப் பாலத்தின் வட பகுதியிலோ அல்லது தென் பகுதியிலோ இருக்கிற ஏதாவது ஒரு ரேஷன் கடையில் சேர்த்தால் சரியாக இருக்கும்; அந்தச் சங்கத்தின்மூலமாகப் பொருட்களை வழங்குங்கள் என்று நீங்கள் கோரிக்கை வைப்பீர்கள் என்றால், அந்தக் கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாகப் பரிசீலித்து, உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.

**திரு. ஐ.எஸ். இன்பதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தயாளத்தையும், தருமத்தையும் பெயரளவில் மட்டுமே பார்த்துக் கொண்டிருக்கிற தமிழகத்திலே, தயாளத்தையும், தருமத்தையும் ஒருங்கே கொண்டவர்தான் எங்கள் இயக்கத்தினுடைய பொதுச் செயலாளர், தமிழகத்தினுடைய புதிய புரட்சித் தலைவி, புரட்சிப் பூங்குயில் சின்னம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நல்ல நேரத்தில் இந்தக் கழகத்தினுடைய ஓர் உறுப்பினர் என்ற வகையில் பொதுச் செயலாளர் அவர்களுக்கு என்னுடைய மரியாதையைச் செலுத்துகிறேன்.



2017 ஜனவரி 30]

என்னுடைய ராதாபுரம் சட்டமன்றத் தொகுதி, திசையன்விளையிலே மன்னராஜா கோவில் தெருவிலே இருக்கிற ஒன்றாம் நம்பர் ரேஷன் கடை கிட்டத்தட்ட 1,500 குடும்ப அட்டைதாரர்களைக் கொண்டதாக இருக்கிறது. அங்கே பொது மக்கள் மாதம் முழுக்க, இரவெல்லாம் காத்துக் கிடந்து ரேஷன் பொருட்களை வாங்க வேண்டிய நிலைமை இருக்கிறது. அந்த ரேஷன் கடையை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று அந்தப் பகுதி பொது மக்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து திசையன்விளை பகுதியிலே இருக்கிற ரேஷன் கடையை இரண்டாகப் பிரிக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இந்த அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திசையன்விளை பகுதி ரேஷன் கடையில் 1,500 குடும்ப அட்டைகள் இருக்கிறதென்று சொல்லியிருக்கிறார்கள். அது பேரூராட்சிப் பகுதியாக இருப்பதனால், பகுதி நேரக் கடையை அமைப்பதற்கான இட வசதியை இலவசமாகக் கொடுக்க வேண்டும். குறிப்பாக, பொது விநியோகத் திட்டம் அரசினுடைய மானியத்தில்தான் செயல்படுத்தப்படுகிறது. சங்கங்களைப் பொறுத்தவரை–lead சங்கங்கள் என்பது, குறைந்த நிதிநிலையைக் கொண்டு செயல்படுவதால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை துறைரீதியாகப் பரிசீலித்து, அந்தப் பகுதி மக்கள் எந்தப் பகுதியில் கடையைப் பிரித்துக் கொடுத்தால் சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறார்களோ, அந்தப் பகுதியில் அரசுத் துறை சார்ந்த வாடகையில்லாக் கட்டடம் அல்லது சமூக நலக் கூடங்கள் இருந்தால், அதிலே அந்தக் கடையை மாற்றிக் கொடுப்பதற்கு நிச்சயமாக துறைரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும். எந்த நேரத்திலும், எந்தச் சூழ்நிலையிலும் பொது விநியோகப் பொருட்கள் மக்களுக்குத் தங்குதடையின்றி கிடைக்க வேண்டும்; அதில் காலதாமதம் ஏற்படக்கூடாது என்றுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கடந்த காலங்களில் நடவடிக்கைகளை எடுத்து வந்திருக்கிறது. எனவே, மாண்புமிகு

[2017 ஜனவரி 30

உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை துறையின் மூலமாக விரைவாக பரிசீலித்து, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி அவர்கள்.

**திரு. சு. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மதுராந்தகம் தொகுதி, மதுராந்தகம் நகராட்சிக்குட்பட்ட காந்திநகர் பகுதியிலும், கருங்குழி பேரூராட்சியில் துரைக்குளம் என்கிற பகுதியிலும், அதே கருங்குழி பேரூராட்சியில் மேலவலம்பேட்டை என்கிற பகுதியிலும் கடந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் கட்டப்பட்ட நியாய விலைக் கடைகள் இதுவரை திறக்கப்படவில்லை. மேலும், அச்சரப்பாக்கம் ஒன்றியம், வேடந்தாங்கல் ஊராட்சிக்குட்பட்ட வளையப்புத்தூர் என்ற ஊரில் 2 ரேஷன் கடைகள் கட்டப்பட்டிருக்கின்றன. வளையப்புத்தூர் பகுதிக்கு ஒரு ரேஷன் கடையும், மற்றொன்று வேடந்தாங்கல் பகுதிக்கு கட்ட வேண்டிய ரேஷன் கடையை வளையப்புத்தூர் பகுதியிலும் கட்டியிருக்கிறார்கள். வேடந்தாங்கலில் 3,000 மக்களுக்கு மேல் வசிக்கிறார்கள். வேடந்தாங்கலிலிருந்து வளையப்புத்தூருக்கு 2 கிலோ மீட்டர் தூரம் சென்று மக்கள் ரேஷன் பொருட்களை வாங்கிக் கொண்டு வருகிறார்கள். இருந்தாலும், வேடந்தாங்கல் பகுதிக்கு என்று கட்டப்பட்ட ரேஷன் கடை இதுவரை திறக்கப்படவில்லை. ஆகவே, எனது மதுராந்தகம் தொகுதி, மதுராந்தகம் நகராட்சி, காந்திநகரில் கருங்குழி பேரூராட்சியில் துரைக்குளம் மற்றும் மேலவலம்பேட்டையிலும், அச்சரப்பாக்கம் ஒன்றியம், வேடந்தாங்கலில் வளையப்புத்தூர் பகுதியிலும் இதுவரை கட்டி முடிக்கப்பட்ட ரேஷன் கடைகள் திறக்கப்படாமலே இருக்கின்றன. அதைத் திறப்பதற்கான நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10–40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.



2017 ஜனவரி 30]

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். இந்த அரசு, அந்த அரசு கொண்டு வந்தது என்றெல்லாம் ஒன்று கிடையாது; மக்களுக்கு சேவையாற்ற வேண்டும். அதிலே, கூட்டுறவுத் துறையின் பங்கு அதிக அளவில் இருக்கிறது. தங்கள் பகுதியில் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்ற அந்தக் கடைகள் திறக்கப்படாமல் இருப்பதற்கான காரணம்– கூட்டுறவுத் துறை அந்தச் சங்கத்திற்கு முறையாக ஒதுக்கீடு செய்து வழங்க வேண்டும். முறையாக ஒதுக்கீடு செய்வதிலே ஏதேனும் காலதாமதம் இருக்கலாம் அல்லது அந்தப் பகுதி மக்கள் அதை ஏற்றுக்கொள்ளாமல் இருக்கலாம் அல்லது மின் இணைப்பு இல்லாமல் இருக்கலாம். இதுபோன்ற காரணங்களாகத்தான் இருக்குமேதவிர, மாண்புமிகு உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினராகப் பதவியேற்ற பிறகு, அதில் கவனம் செலுத்தி, எதனால் அந்தக் கடைகள் திறக்கப்படாமல் இருக்கின்றன என்பதை ஆய்வு செய்து, எங்களுக்குத் தகவல் மட்டும் கொடுத்தால் போதுமானதாக இருக்கும். நீங்கள் இன்றைக்குப் பேசியதை வைத்தே, துறை அதிகாரிகளை உடனடியாக அனுப்பி, அந்தக் கடைகள் எதனால் இன்னும் திறக்கப்படாமல் இருக்கின்றன என்பதை அறிந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேபோல், அந்தக் கடைகள் எந்த இடத்தில் அமைந்திருந்தாலும், அனைத்து வகையான நிதியிலிருந்தும்தான் கட்டப்படுகிறது. கடந்த ஆட்சியாக இருந்தாலும் சரி, இந்த ஆட்சியாக இருந்தாலும் சரி; நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுடைய நிதி, ஊராட்சி முகமை நிதி, மாவட்ட ஆட்சித் தலைவரின் சிறப்புத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிதி ஆகியவை மூலமாகக் கட்டப்படுகின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இதுபோன்ற சந்தேகங்கள் இருக்குமேயானால், அந்தக் கடைகள் எந்தக் காரணங்களுக்காகத் திறக்கப்படவில்லை என்பதை நீங்களே உங்கள் பகுதி மக்களிடம் கேட்டீர்கள் என்றால் தெரியும். எனவே, அதனை அறிந்து சொன்னால், நிச்சயமாக உரிய நடவடிக்கை உறுதியாக எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு

மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**13—**

## புதிய கட்டடம்

***125—திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரியில் உள்ள மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரியிலே மின் வாரியத்தின் சார்பாக முதன்மை அலுவலகமான மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்காக மாண்புமிகு அம்மா அவர்களால் ஏற்கெனவே 4 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது; ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டத்திலே மின் வாரியப் பணிகளைச் செவ்வனே நடத்திடவும், பொது மக்கள் நலன் கருதியும், S.E. அலுவலகம் ஒன்றும், D.E. அலுவலகங்கள் மூன்றும், A.D. அலுவலகங்கள் 13–ம், A.E. அலுவலகங்கள் 60–க்கும் மேலும், Section அலுவலகங்கள் 100–க்கும் மேலும், அதற்கும்மேல், C.A.D.I., M.R.T. என பல்வேறு அலுவலகங்களும் இயங்கி வருகின்றன.





இவற்றிலே S.E. அலுவலகங்கள் வாடகைக் கட்டடத்திலும், D.E. அலுவலகங்களிலே 3–ல் 2 வாடகைக் கட்டடங்களிலும், A.E. அலுவலகங்கள் கிட்டத்தட்ட 80% வாடகைக் கட்டடங்களிலும், Section அலுவலகங்கள் கிட்டத்தட்ட 60%–க்கு மேல் வாடகைக் கட்டடங்களிலும் செயல்பட்டு வருவதால், பொது மக்கள் மிகவும் சிரமப்படுவதோடு, மின் வாரிய அலுவலர்களும் இடவசதியின்றி மிகவும் சிரமப்படுகிறார்கள். இதன் காரணமாக பணிகளும் செவ்வனே நடைபெற முடியாத சூழ்நிலை உள்ளது. இதற்காக மாதா மாதம் பல இலட்சக்கணக்கான ரூபாய் மின் வாரியத்திடமிருந்து வாடகையாகச் செலுத்த வேண்டிய நிலை ஏற்படுகிறது. வாடகையாகச் செலுத்தும் பணத்தைக் கொண்டே ஆண்டிற்கு இரண்டு, மூன்று சொந்தக் கட்டடங்களைக் கட்டிவிடலாம். ஆக, முதற்கட்டமாக, கிருஷ்ணகிரியிலே வாடகைக் கட்டடத்திலே செயல்பட்டுவரும் S.E. அலுவலகம் மற்றும் D.E. அலுவலகங்கங்களுக்கு சொந்தக் கட்டடங்களைக் கட்டித்தரும் திட்ட செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் மூலமாகக் கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, S.E. அலுவலகம் கட்டுகின்றபோதே அதனுடன் சேர்த்தே D.E. அலுவலகம் அமைக்கப்பட்டுவிடும். அதற்காகத்தான் நான்கு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், Section அலுவலகத்தைப் பொறுத்தவரையில் 60%–க்கு மேல் வாடகைக் கட்டடத்திலும், A.E. அலுவலகங்கள் 80% வாடகைக் கட்டடத்திலும் இயங்குவதாகச் சொல்லியிருக்கிறார்கள். உறுப்பினருக்கு யாரோ தவறான தகவல்களைக் கொடுத்திருக்கிறார்கள். அங்கு மொத்தமுள்ள 731 மின் வாரிய அலுவலகக் கட்டடங்களில், 587 கட்டடங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்கிவரும் நிலையில், 144 மட்டும்தான் வாடகைக் கட்டடங்களில் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மீதமுள்ள வினாக்கள் நாளை எடுத்துக்கொள்ளப்பெறும். வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.

*[2017 ஜனவரி 30*

## 3. அறிவிப்பு

### தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி நிகழ்ச்சியில் பங்கேற்க பேரவையை ஒத்திவைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தியாகிகள் தினத்தையொட்டி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று, 30–1–2017 காலை 11–00 மணிக்குத் தலைமைச் செயலகப் பிரதானக் கட்டடத்திற்கு அருகில் உள்ள இராணுவ அணி வகுப்பு மைதானத்தில் 'தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி' செய்துவைக்க உள்ளார்கள். அந்நிகழ்ச்சியில் பேரவை உறுப்பினர்கள் அனைவரும் பங்கேற்கும் வகையில், பேரவை தற்போது ஒத்திவைக்கப்பெற்று, மீண்டும், முற்பகல் 11–15 மணிக்குக் கூடும்.*

*பின்னர், பேரவை முற்பகல் 10–44 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

*முற்பகல் 11–15 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

## 4. தகவல் கோரல்

### (அ) சென்னை மாநகரில் ஜல்லிக்கட்டு போராட்டத்தைத் தொடர்ந்து நடைபெற்ற சட்டம்–ஒழுங்குப் பிரச்சினை குறித்து தொலைக்காட்சியில் மயிலாப்பூர் துணை ஆணையர் பேட்டி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 27 ஆம் தேதி நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே சில விளக்கங்களை*



*2017 ஜனவரி 30]* [திரு. மு.க. ஸ்டாலின்]

*எடுத்துச் சொல்லியிருந்தார்கள். குறிப்பாக, சென்னை மாநகரத்தில் நடைபெற்ற சட்டம்–ஒழுங்குப் பிரச்சினைக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அந்தச் செய்தியை இங்கே அவர்கள் பதிவு செய்திருக்கிறார்கள். அன்று மாலை, மீனவர்கள் குடியிருக்கும் அந்தப் பகுதிக்கு நானும், அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. ஜெ. அன்பழகன் அவர்களும் நேரடியாகச் சென்று பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய பகுதியைப் பார்த்து, அங்கு பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய மக்களுக்கு ஆறுதல் சொல்லி, "உரிய நிவாரணம் நிச்சயமாக அரசின் சார்பில் வழங்குவதற்கு சட்டமன்றத்தில் நாங்கள் குரல் கொடுப்போம். இல்லை என்று சொன்னால், நாங்கள் உங்களோடு சேர்ந்து போராடக்கூட தயாராக இருக்கின்றோம்" என்று சொல்லிவிட்டு வந்தோம்.*

*அதைத் தொடர்ந்து நம்முடைய மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களும் அந்தப் பகுதிக்குச் சென்று, அவர்களுக்கு ஆறுதல் சொல்லிவிட்டு வந்திருக்கிறார்கள். இந்த நிலையில் மயிலாப்பூர் காவல் துறையினுடைய துணை ஆணையர் அவர்கள் சில ஊடகங்களில், சில செய்திகளை எடுத்து வைத்திருக்கிறார். குறிப்பாக, மீன் மார்க்கெட்டை அவர்களே கொளுத்திக் கொண்டார்கள் என்று சொல்லியிருக்கிறார். ஆனால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே விளக்கம் சொல்கிறபோது, காவல் துறையினர் 23 ஆம் தேதி காலையில், அவர்களை கலைந்து போகச் சொல்லி அறிவுறுத்தியதாக இங்கே அறிக்கையில் படித்துக் காட்டினார்கள். ஆனால், தொலைக்காட்சியில் மயிலாப்பூர் துணை ஆணையர் அவர்கள், விவாத மேடையில் கலந்துகொண்டு பேட்டி தருகின்றபோது, 21 ஆம் தேதி அன்றே கலையச் சொல்லி நாங்கள் கோரிக்கை வைத்தோம் என்று சொல்லியிருக்கிறார். அதுமட்டுமல்ல; மாண்புமிகு முதல்வர் அவர்கள் தன்னுடைய விளக்கத்தை இங்கே பதிவு செய்கின்றபோது, "குடியரசு தின விழாவை சீர்குலைக்க திட்டமிட்ட காரணத்தினால், இந்தச் சம்பவம் நடந்திருக்கின்றது, அவர்களைக் கலைக்கின்ற முயற்சியில் காவல் துறையினர் ஈடுபட்டிருக்கின்றார்கள்" என்று பதிவு செய்திருக்கிறார்கள். ஆனால், துணை ஆணையர் அவர்கள், "குடியரசு தின விழாவை சீர்குலைக்கும் எண்ணம் அவர்களுக்கு இருந்ததா, இல்லையா என்பது எங்களுக்குத் தெரியாது" என்று சொல்லியிருக்கிறார். எது உண்மை என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். எனவே,*

[திரு. மு.க. ஸ்டாலின்] [2017 ஜனவரி 30

நடைபெற்றுள்ள சட்டம்—ஒழுங்குப் பிரச்சினை குறித்து விசாரணை நடத்துவோம் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் உறுதிமொழி தந்திருக்கிறார்கள். ஆனால் விசாரணை முடிவடைவதற்குள்ளாகவே, காவல் துறையினுடைய துணை ஆணையர் அவர்கள், ஒரு முடிவுக்கு வந்து, அவர் சில செய்திகளை எல்லாம் சொல்லியிருப்பது என்ன நியாயம் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, குறிப்பாக நான் சொல்ல வேண்டுமென்று சொன்னால், தமிழகத்தில் **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அதெல்லாம் வேண்டியதில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றது. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. ** (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கின்றபோது, நீங்கள் இதுபோன்று பேசுவது சரியில்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் அதற்கு விளக்கம் கேட்டீர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நான் விளக்கம் கேட்கிறேன். நீங்கள் அப்படியெல்லாம் பேசக்கூடாது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்தான் பேசிக் கொண்டிருக்கிறார். நீங்கள் எல்லாம் எழுந்து நின்று தனியாகப் பேசிக்கொண்டிருந்தால் எப்படி? (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்து வைத்த கருத்திற்கு எதிர்மறையாக ஊடகத்திலே, காவல் துறை அதிகாரியாக இருக்கும் ஒருவர், காவல் துறை உடையோடு பேட்டி தருகின்ற செய்தியைப் பார்த்திருக்கின்றோம். அவர், ஊடகத்தில் விவாத மேடை நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கிறார். அவர் எப்படி அதில் பங்கேற்கலாம்? எந்த விதிமுறையில் அது இடம் பெற்றிருக்கிறது. அவர் அனுமதி பெற்றிருக்கிறாரா? அதுவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன கருத்திற்கு எதிர்மறையான கருத்துகளைச் சொல்கிறார் என்று சொன்னால், இதற்கு எங்கே நியாயம் கிடைக்கும்? ஆகவே, தயவு செய்து அதற்குரிய நடவடிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2017 ஜனவரி 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சரி. சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடுகள்) இருங்கள். எங்களுக்குத் தெரியும். (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லாம் ஏன் எழுந்து பேசுகிறீர்கள்? நான்தான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைப் பேச அனுமதித்திருக்கிறேன். அவரை முடிக்கச் சொல்லியிருக்கிறேன். அதன்பிறகு, நீங்கள் எல்லாம் பேசிக் கொண்டிருந்தால் எப்படி? (குறுக்கீடு) நீங்கள் சீக்கிரம் முடியுங்கள்.*

*முற்பகல் 11–20*

**திரு. மு.க. ஸ்டாலின்:** அதுமட்டுமல்ல; ஆசியாவிலேயே இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கின்ற கடற்கரை, நம்முடைய சென்னை மெரினா கடற்கரையாகும். அங்கு 144 தடை உத்தரவு போடப்பட்டிருக்கின்றது. அங்கு, ஆயிரக்கணக்கான மக்கள் மாலையிலே தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்து வந்து, பொழுதுபோக்கும் ஒரு கடற்கரையாக அது விளங்கிக் கொண்டிருக்கிறது. எனவே, அங்கு 144 தடை உத்தரவை உடனடியாக நீக்கிட வேண்டுமென்று நான் உங்கள்மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நடைபெற்ற ஜல்லிக்கட்டு பிரச்சினையில், அதன் தொடர்ச்சியாக எழுப்பப்பட்ட பல பிரச்சினைகளை இங்கே சபையினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர் சில அதிகாரிகள் சில பிரச்சினைகள் குறித்துச் சொல்லியதாக, பேசியதாக, பேட்டி கொடுத்ததாக கருத்துகளை இங்கே பதிய வைத்திருக்கிறார்கள். அதிகாரப்பூர்வமாக அவருடைய அறிக்கையினைப் பெற்று—அதுதொடர்பாக ஏற்கெனவே விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இருதரப்பிலும் பாதிக்கப்பட்டவர்களைப் பற்றியும், தவறிழைத்தவர்கள் பற்றியும் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன பிரச்சினை குறித்தும், அதிகாரப்பூர்வமாக என்ன பேட்டி அளித்தார் என்ற தகவல் அரசிற்கு

வரப்பெற்றவுடன், உரிய விசாரணையின்போது, அதுகுறித்தும் விசாரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

## (ஆ) வேலூர் மாவட்டம், குடியாத்தத்தில் பறவைக் காய்ச்சலால் ஏற்பட்டுள்ள பாதிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். (குறுக்கீடுகள்) இப்போதுதான் உங்கள் தலைவருக்கு வாய்ப்புக் கொடுத்தேன். நீண்ட விளக்கம் கேட்டார். மாண்புமிகு முதலமைச்சர் பதில் சொல்லியிருக்கிறார். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன், சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தத்தில் பறவைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு 25 பேர் அட்மிட் ஆகியிருக்கிறார்கள். ** அதுகுறித்து அரசின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சற்றுப் பொறுங்கள். அதைப்பற்றியெல்லாம் ஆதாரமில்லாமல் நீங்கள் சொல்லக்கூடாது. ** என்று சொல்கிறீர்கள். அப்படியெல்லாம் சொல்லக்கூடாது. துறையின்மூலமாக இதுகுறித்து அறிக்கை வெளியிடப்பட்டு, அதை துறை ஒப்புக்கொண்டிருந்தால், அதற்குப்பிறகு நீங்கள் இதுமாதிரியெல்லாம் சொன்னால் பரவாயில்லை. அந்தக் கருத்து அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) நீங்கள் மக்களிடம் பீதியைக் கிளப்புகிறமாதிரி பேசாதீர்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் அதுகுறித்து விளக்கம் கேளுங்கள். (குறுக்கீடு) நீங்கள் விளக்கம் கேளுங்கள். அந்த விளக்கத்திற்கு வேண்டுமென்றால், நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் பதில் இருந்தால் சொல்லச் சொல்கிறேன். (குறுக்கீடு) ஆகவே, நீங்களாகவே அது பறவைக் காய்ச்சல்தான் என்று எப்படி முடிவு செய்கிறீர்கள்? அதைப்பற்றித் துறைதான் சொல்ல வேண்டும். அதனால் அந்தக் கருத்தை அவைக்குறிப்பில் பதிவு செய்ய முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடு) ** என்று சொல்கிறார், இல்லையா? மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக பருவ காலக்கட்டத்தில் தொற்றுநோய்கள் வருவதற்குண்டான வாய்ப்புகள் இருக்கின்றபட்சத்திலே, அனைத்துத் தொற்று நோய்களையும், டெங்கு, பன்றிக் காய்ச்சல் போன்ற தொற்று நோய்களைக் கட்டுப்படுத்துகின்ற நடவடிக்கைகளை, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு வேகமாக எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பறவைக் காய்ச்சல் என்று குறிப்பிட்டார்; அது H1N1. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இந்த H1N1 என்ற பன்றிக் காய்ச்சலைத் தடுப்பதற்கு வேகமான நடவடிக்கைகளை விரைவாக எடுத்து வருகிறது. வேலூர் மாவட்டத்திலே அவர் சொல்கின்ற பகுதியிலே, ஒருவருக்கு H1N1 நோய்க்கான அறிகுறி பாசிட்டிவாக வந்திருக்கின்றது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) நீங்கள் பேசிக் கொண்டிருந்தால் எப்படி? அதெல்லாம் அவைக்குறிப்பிற்கு வராது.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** அதுபோல, ஏற்கெனவே, திருவள்ளூர் மாவட்டத்திலே புதுகும்மிடிப்பூண்டி பகுதியிலே அதுபோன்ற H1N1 பாசிட்டிவ் என்பதை அறிந்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுத்த நடவடிக்கையின் காரணமாக நானும், துறைச் செயலாளர் அவர்களும் நேரடியாக அங்கே சென்று, முழுமையாக அந்தப் பணிகளை எல்லாம் முடுக்கிவிட்டு, அங்கே இந்த நோயினுடைய அறிகுறியே இல்லாத அளவுக்கு, மிக விரைவாக அந்தப் பணிகளை முடித்து இருக்கிறோம். அதேபோல, வேலூர் மாவட்டத்தில் எங்கெல்லாம் இதுபோன்று காய்ச்சல் தொற்று இருக்கிறதோ, அங்கெல்லாம் rapid response team–விரைவுக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. எங்கேனும், ஏதேனும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவருக்கு cluster of fever என்று வந்தாலே, உடனடியாக அரசினுடைய கவனத்திற்கு எடுத்து வர வேண்டும்; அவர்களுக்கு என்ன நோய் என்பதைக் கண்டறிய வேண்டும்; விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசினுடைய சார்பிலே அனைத்து துணை இயக்குநர்களுக்கும், இணை இயக்குநர்களுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. நிலைமை

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [2017 ஜனவரி 30

கட்டுக்குள் இருக்கிறது. வேகமான நடவடிக்கை துறைரீதியாக முடுக்கி விடப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11–25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுசம்பந்தமாக அவ்வளவுதான், உட்காருங்கள். அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். (குறுக்கீடுகள்) 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, உட்காருங்கள். நான் அனுமதி அளிக்கவில்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்துவிட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார். (குறுக்கீடுகள்) இல்லை, உட்காருங்கள். அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) இல்லை, உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் என்னிடம் நோட்டீஸ் கொடுக்கவில்லை. நீங்கள் Zero hour–ல் இதுகுறித்து தகவல் கோர வாய்ப்புக் கேட்டீர்கள்; நான் வாய்ப்புக் கொடுத்தேன். அந்த வாய்ப்பில் நீங்கள் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பதில் வழங்கிவிட்டார்கள்; அவ்வளவுதான். அதற்குமேல் விவாதம் இல்லை. (குறுக்கீடுகள்) நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், என்ன, சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வதைப் பதிவு செய்துகொள்ளுங்கள். நான் என்ன சொன்னேன் என்றால், குடியாத்தத்தில் பறவைக் காய்ச்சலால் சுமார் 25 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்; ** அதிலே எங்கள் கட்சியைச் சேர்ந்த முக்கிய பிரமுகருடைய மனைவியும், மருமகளும் ** எங்களுடைய மாவட்டச் செயலாளர் திரு. நந்தகுமார் அவர்கள் ** எனவே, அதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தகவல் வந்ததா, நடவடிக்கை எடுத்தார்களா என்பதுதான் கேள்வி.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2017 ஜனவரி 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்குதான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டாரே. (குறுக்கீடு) மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர், என்ன சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தத்திலிருந்து 25 பேர் கேரள மாநிலத்திற்கு சுற்றுப்பயணம் சென்றார்கள். சுற்றுப்பயணம் சென்ற இடத்தில் ** எனவே, தமிழகத்தில் ** என்று சொல்லப்படுகின்ற வதந்தி தவறானது. கேரள மாநிலத்திற்கு 25 பேர் கொண்ட குழு சுற்றுப்பயணம் சென்றது. அந்தக் குழுவிலே இடம்பெற்றவர்கள்தான் அந்த இருவரும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே விளக்கமாகப் பதில் சொல்லிவிட்டார்கள். அதுவே போதுமானது. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. துரைமுருகன், பொறுங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் பறவைக் காய்ச்சல் என்று சொன்னீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எழுப்பிய சந்தேகமான வினாக்களுக்கு உரிய முறையில் முழுமையான விசாரணை செய்யப்பட்டு, அறிக்கை சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2017

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? (குறுக்கீடு) எதிர்க்கிறீர்களா? (குறுக்கீடு) சொல்லுங்கள், record செய்துகொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற சட்டமுன்வடிவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே ஆரம்ப நிலையிலேயே எதிர்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற சட்டமுன்வடிவை காங்கிரஸ் கட்சியின் சார்பாக எதிர்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற சட்டமுன்வடிவை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாகவும் ஆரம்ப நிலையிலேயே எதிர்க்கிறோம்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (ஆ) தமிழ்நாடு நகராட்சிய சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2017

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிய சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிய சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.

[2017 ஜனவரி 30

**திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த சட்டமுன்வடிவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஆரம்ப நிலையிலேயே எதிர்க்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற சட்டமுன்வடிவை காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஆரம்ப நிலையிலேயே எதிர்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

*முற்பகல் 11–30*

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய இந்தச் சட்டமுன்வடிவை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் சார்பாக ஆரம்ப நிலையிலேயே எதிர்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.



2017 ஜனவரி 30]

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (இ) சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2017

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2017 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2017 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்.

**திரு. மா. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஆரம்ப நிலையிலேயே எதிர்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

[பேரவைத் தலைவர்] [2017 ஜனவரி 30

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (ஈ) தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டு (திருத்தம்) சட்டமுன்வடிவு, 2017

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டு (திருத்தம்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டு (திருத்தம்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.



2017 ஜனவரி 30]

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (உ) தமிழ்நாடு பாரம்பரிய ஆணைய (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2017

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு பாரம்பரிய ஆணைய (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு பாரம்பரிய ஆணைய (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

[2017 ஜனவரி 30

## 6. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது மேலும் விவாதம். மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள்.

**திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேசுவதற்கு நல்ல வாய்ப்பை வழங்கியிருக்கின்ற எங்களுடைய கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர் மரியாதைக்குரிய சின்னம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னை சட்டப் பேரவை உறுப்பினராகவும், இதே அவையில் அமைச்சராகவும் ஆக்கி, இரண்டாவது முறையாக சட்டப் பேரவை உறுப்பினராகப் பணியாற்றிட வாய்ப்பை வழங்கி, மண்ணைவிட்டு மறைந்தாலும் மக்கள் உள்ளத்தைவிட்டு மறையாமல் இருக்கின்ற, மறைந்தும் மறையாமல் மக்கள் நெஞ்சங்களிலே வாழ்ந்துகொண்டிருக்கின்ற தங்கத் தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்களை இந்த நேரத்திலே நினைத்துப் பார்க்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அலெக்சாண்டரைப்போல வீரமும், ஏசுவைப் போல அன்பையும், புத்தரைப் போன்று ஞானத்தையும், காந்தியைப் போன்று சமூக மனித நேய ஒற்றுமையையும் ஒருங்கே அமையப்பெற்றவர் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11–35*

மடங்கா வீரமும், அடங்கா ஆற்றலும் ஒருங்கே அமையப் பெற்ற அம்மா அவர்கள் இன்றைக்கு நம்மிடத்திலே இல்லை. சட்டமன்றத்திலும், மக்கள் மன்றத்திலும் உலகத் தமிழர்களுக்காக ஓங்கி உரிமைக் குரல் எழுப்பிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு நம்மிடத்திலே இல்லை. அழுவதற்கு எங்கள் கண்களிலே நீரும் இல்லை. காலத்தை வென்றவர், காவியம் ஆனவர், வேதனை தீர்த்தவர், தமிழக மக்களுடைய விழிகளிலெல்லாம் நிறைந்தவர் எங்கள் புரட்சித் தலைவி அம்மா



2017 ஜனவரி 30] [திரு. என்.டி. வெங்கடாச்சலம்]

அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வாழையை போல தன்னை ஈன்று, தமிழகத்திற்கு தன்னையே உரித்தாக்கிக்கொண்டிருந்த தமிழகத்தை வாழ வைத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மெழுகுவர்த்தியைப்போல தன்னையே உருக்கிக்கொண்டு இந்தத் தமிழகத்திற்காக, தமிழக மக்களுக்காக உரிமைக் குரல் எழுப்பியவர் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு அறைக்கு ஒரு விளக்கு எப்படி வெளிச்சத்தைத் தருகிறதோ, அந்த விளக்கிலிருந்து வெளிப்படுகிற தன்னுடைய நிழலை மறைப்பதற்குண்டான சக்தி அந்த விளக்கிற்கு இல்லை. அதைப்போலத்தான், மாண்புமிகு முதலமைச்சராக இருந்து தமிழ்நாட்டிற்குப் பல்வேறு திட்டங்களைக் கொடுத்து, இந்தியாவினுடைய முன்னோடி மாநிலமாக இன்றைக்குத் தமிழகத்தை உயர்த்திக் காட்டியிருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நீண்ட ஆயுளோடு வாழ்வதற்கு எங்கள் இறைவன் அருளவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், உலகத் தமிழர்களை இன்னல்களிலிருந்து மீட்க உதவிய காக்கும் கரங்கள்; மாணவ–மாணவிகளுக்கு வழிகாட்டிய ஒளிவிளக்கு; கழகத்தை கண்ணை இமை காப்பதுபோல் காத்திட்ட ரத்தத்தின் ரத்தம்; மணப் பெண்களுக்கு தாலிக்குத் தங்கம் தந்த குல தெய்வம்; காவேரி உரிமையை மீட்டெடுத்து, தஞ்சை தரணியைக் காத்த எங்கள் குல விளக்கு; மிக்ஸி, கிரைண்டர், மின்விசிறி வழங்கி பெண்களுக்கு உதவிய எங்கள் வீட்டு மகாலட்சுமி; சூரிய மின் வசதியுடன் பசுமை வீடுகள் தந்த சூரியகாந்தி; ஏழைகள் வயிறார உண்ண அம்மா உணவகங்கள் தந்த அன்னமிட்ட கை எங்கள் அம்மா; விரிவுபடுத்தப்பட்ட மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் தந்த வாழ வைத்த தெய்வம்; அனைத்து மதங்களையும் அரவணைத்து, அமைதி ஒளிபரப்பச் செய்த ஆலய மணி; உலகத் தலைவர்களின் மதிப்பைப் பெற்ற வானம்பாடி; தமிழகக் கடலோரங்களில் படகுகளை ஓட்டி வாழும் மக்களின் மீனவ நண்பன்; விலையில்லா ஆடு, மாடுகள் வழங்கி கிராமப் பொருளாதாரத்தை உயர்த்திய தெய்வத் தாய்; மின் பற்றாக்குறையைப் போக்கி, தமிழ்நாட்டை சவாலே சமாளி என்று மின் மிகை மாநிலமாக மாற்றியதில் நினைத்ததை முடிப்பவர் எங்கள் அம்மா; தொட்டில் குழந்தைகள் திட்டத்தைக் கொண்டு வந்த பேசும் தெய்வம்; முல்லைப்

[திரு. என்.டி. வெங்கடாச்சலம்] [*2017 ஜனவரி 30*

*பெரியாரின் உரிமையை நிலை நாட்டிய மகராசி; என்.எல்.சி.—யைக் கொள்ளை போகாமல் தடுத்தது அம்மாவினுடைய முகராசி; விவசாயிகளுக்கு வரலாற்றுச் சாதனையாக நிவாரணம் அளித்த பாக்கியலட்சுமி; தர்மம் தலைகாக்கும் என்று துயர் உற்றவர்களுக்கு ஓடி உதவிடும் தனிப் பிறவி; சித்திரைத் திங்களை தமிழ்ப் புத்தாண்டாக அறிவித்த சந்திரோதயம்; பால்வாடி குழந்தைகளுக்கு பலவகை ஊட்டச்சத்து மிக்க உணவளித்த காவியத் தலைவி; விளையாட்டு கலைமகளுக்கு ஊக்கம் அளித்த இதய வீணை; எதிரிகளை வென்றெடுத்த சக்கரவர்த்தி திருமகள்; இந்தியாவே வியந்து பாராட்டிப் பின்பற்றும் வரலாற்று சாதனைகளுடைய மணிமகுடம்; அம்மா அவர்களின் கைராசி தொட்டது துலங்கியது; அம்மா அவர்களின் முகத்தைப் பார்த்தால் பசி தீரும்; அம்மா அவர்களின் கண் பட்டால் கல்லும் கனியாகும்; நாளை நமதே என எங்களுக்கு ஊக்கம் அளித்த வாழவைத்த தெய்வம்; மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புகழ் பூமி உள்ளளவும்; (மேசையைத் தட்டும் ஒலி) இன்றுபோல என்றும் வாழ்க என இந்த நேரத்திலே அம்மா அவர்களை வணங்குகிறேன். அம்மா அவர்கள் ஒரு நீண்ட நெடிய பாதையை எங்களுக்கு வகுத்துத் தந்திருக்கிறார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு நீண்ட நெடிய பாதையை வகுத்துச் சென்றிருக்கிறார்கள். அம்மா அவர்கள் வகுத்த இந்தப் பாதையிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தொடர்ந்து பயணிக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் பதிய வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2017 ஆம் ஆண்டிலே முதல் நிகழ்வாக தென் மாவட்ட மக்களுடைய கோரிக்கை, மாணவ சமுதாயத்தினுடைய கோரிக்கை ஜல்லிக்கட்டுக்கு கடந்த காலத்திலே விதிக்கப்பட்ட தடையை நீக்கி, மீண்டும் தமிழ்நாட்டிலே ஜல்லிக்கட்டு நடத்த வேண்டுமென்கிற கோரிக்கை. அதனை மிக நேர்த்தியாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கையாண்டு, ஜல்லிக்கட்டை வைத்து மல்லுக்கட்டலாம் என்று பலர் நினைத்த போதும், இந்த ஜல்லிக்கட்டுப் பிரச்சினையிலே மிகப் பெரிய வெற்றியைக் கொடுத்து, (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்றத்திலே தீர்மானம் நிறைவேற்றி, இனிமேல் தமிழ்நாட்டிலே ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு எந்தவிதமான தடையும்*



*2017 ஜனவரி 30*] [திரு. என்.டி. வெங்கடாச்சலம்]

*இல்லையென்று மாணவர்களுக்கு பரிசு அளித்த அரசு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11–40*

*தமிழகத்தினுடைய ஜீவாதார உரிமைகளை வென்றெடுத்ததிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் தமிழக வரலாற்றிலே மிகப் பெரிய இடத்தைப் பெற்றிருக்கிறது. கர்நாடகத்திலே இருந்து வரக்கூடிய காவேரி நீரை நம்பித்தான் டெல்டா மாவட்ட விவசாயப் பெருமக்கள் இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறார்கள். கடந்த ஆட்சியாளர்களால் தீர்க்க முடியாத பிரச்சினையாக இருந்தது காவேரி நீர்ப் பிரச்சினை. (குறுக்கீடு) கர்நாடகத்திலே இருக்கிற காவேரி நீர்ப் பிரச்சினையை சட்டப் போராட்டம் நடத்தி, உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று, தமிழகத்திற்கு கர்நாடகம் காவேரி நீரை திறந்துவிட வேண்டுமென்ற சரித்திரச் சிறப்புமிக்க தீர்ப்பைப் பெற்றுத் தந்தது எங்கள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தீர்ப்பு எதிர்காலத்திலும் நமக்கு அச்சாணியாக இருக்க வேண்டுமென்று சொல்லி, உச்ச நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பை (குறுக்கீடு) மத்திய அரசிதழிலே,* Gazette*–லே, வெளியிட வேண்டுமென்று சொல்லி, அதற்கும் உச்ச நீதிமன்றம் வரை சென்று, போராடி,* Gazette*–லே, வெளியிட்ட பெருமை. . . (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் இல்லை; திரு. செங்குட்டுவன், உட்காருங்கள்.*

**திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** *மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசை சாரும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்தில் நான் உறுதிப்படத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள், திரு. செங்குட்டுவன். (குறுக்கீடு) ஒன்றுமில்லை, உட்காருங்கள்.*

**திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** *ஆகவேதான், இன்றைக்குக் காவேரி நீர்ப் பிரச்சினையில் மாண்புமிகு அம்மா அவர்கள் வென்று*

காட்டிய காரணத்தினாலேதான், தஞ்சை மாவட்ட விவசாயப் பெருமக்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குப் பாராட்டு விழா நடத்தி, 'பொன்னியின் செல்வி' என்கின்ற பட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, நீண்டகாலமாக தென் மாவட்ட மக்களுடைய பிரச்சினையாக இருப்பது முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினை. முல்லைப் பெரியாறு அணையினுடைய நீர்மட்டத்தினை 136 அடியிலிருந்து 152 அடியாக உயர்த்த வேண்டுமென்பது அந்த மாவட்ட மக்களின் நீண்டகால கோரிக்கை. கடந்த கால அரசினால் அதை வென்று காட்ட முடியவில்லை. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். '152 அடி என்பது என்னுடைய இலட்சியம், 142 அடி நிச்சயம் உங்களுக்குக் கிடைக்கும்' என்று நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தீர்ப்பைச் சாதகமாகப் பெற்றார்கள். 142 அடி வரை அணையினுடைய நீர்மட்டத்தை உயர்த்திக்கொள்ளலாம் என்று உத்தரவைப் பெற்று, 142 அடிவரை அந்த அணையினுடைய நீர்மட்டத்தினை உயர்த்தி, நீரை நிறுத்தி, சாதித்துக் காட்டியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இலங்கையிலே போர் நிகழ்ந்தபோது, இலங்கைத் தமிழர்களுக்காக யார் ஓங்கி குரல் கொடுக்கின்றார்கள் என்று எல்லோரும் எண்ணிப் பார்த்திருந்த வேளையிலே, இலங்கையில் வாழக்கூடிய மக்களுக்காக, இதே சட்டப் பேரவையில், தனித் தீர்மானம் கொண்டுவந்து, அவர்களையெல்லாம் மீண்டும் மீள்குடியமர்த்த வேண்டும்; இலங்கையிலே நடந்திட்ட போர்க் குற்றங்களைத் தடுத்து நிறுத்துவதற்கு விசாரணைக் கமிஷன் அமைக்க வேண்டுமென்று சொல்லி, இலங்கைத் தமிழர்கள் பக்கம் என்றைக்கும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (மேசையைத் தட்டும் ஒலி) இருக்கும் என்கிற அளவில் சாதனையை எட்டி, சாதித்து சென்றிருக்கிற முதலமைச்சர் எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

இன்றைக்கு மீனவர்களுடைய வாழ்வாதாரப் பிரச்சினை கச்சத் தீவு பிரச்சினை. கச்சத் தீவிலே மீன் பிடிக்கின்றபோது, மீனவர்கள் துன்புறுத்தப்படக்கூடிய நிலை வரக்கூடாது என்று சொல்லி, கோட்டையிலே "கச்சத் தீவை மீட்டே தீருவேன்" என்று





சூளுரைத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கும் சட்டப் போராட்டம் நடைபெற்று வருகிறது. "என்றைக்காவது ஒருநாள் கச்சத் தீவை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு மீட்டெடுத்தே தீரும்" (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்தில், இந்த ஆளுநர் உரையின்மீதான விவாதத்திலே இங்கு பதிவு செய்வதில் நான் பெருமைப்படுகிறேன். ஆக, இப்படி தமிழர்களுடைய ஜீவாதாரப் பிரச்சினைகளிலெல்லாம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு மாபெரும் வெற்றிபெற்ற காரணத்தினாலேதான், மீண்டும் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றிருக்கிறது. 1991–லே மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி; 1996–லே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி; 2001–லே மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி; 2006–லே தி.மு.க.வினுடைய ஆட்சி; 2011–லே மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி. இந்த முறை ஆட்சிக்கு வருவோம் என்று கனவு கண்டார்கள். ஆனால், ஆளுகின்ற கட்சியே 32 ஆண்டுகளுக்குப்பிறகு, தமிழ்நாட்டில் மீண்டும் ஆட்சியைப் பிடித்தது என்கின்ற சாதனையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கிக் காட்டினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு தமிழ்நாட்டினுடைய ஜீவாதாரப் பிரச்சினைகளில் மாண்புமிகு அம்மா அவர்கள் பெற்ற வெற்றியே காரணம்; மக்களுடைய அன்பைப் பெற்றதன் காரணத்தினாலேதான் மீண்டும் ஆட்சியை எங்களிடத்திலே மக்கள் ஒப்படைத்திருக்கிறார்கள்.

அதைப்போலத்தான், இன்றைக்கு ஒவ்வொரு ஜீவாதாரப் பிரச்சினையிலும் இந்த அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுத்து, மக்களைக் காக்கின்ற அரசாக தொடர்ந்துகொண்டிருக்கிறது. நடைபெற்ற சட்டப் பேரவைத் தேர்தலிலே, "அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எந்தவிதமான கூட்டணியும் இல்லாமல், தன்னந்தனியாக களத்திலே நின்று, 234 தொகுதிகளிலும், (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 'இரட்டை இலைச் சின்னத்தில்' போட்டியிடும்" என்று அறிவித்து, மீண்டும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆட்சிக் கட்டிலிலே ஏற்றிய பெருமை, எங்களுடைய முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. என்.டி. வெங்கடாச்சலம்] [2017 ஜனவரி 30 முற்பகல் 11–45

அதைப்போலத்தான், சமீபத்திலே ஏற்பட்ட 'வர்தா' புயல். வானிலை மையம் 100 கிலோ மீட்டர் வேகத்திலே 'வர்தா' புயல் காற்று வீசும் என்று கணித்தது. ஆனால், 200 கிலோ மீட்டர் வேகத்திலே அந்தக் காற்று வீசியது. இரவோடு இரவாக ஆயிரக்கணக்கான மரங்கள் விழுந்தன. மின் கம்பங்கள் எல்லாம் வில்லாக வளைந்தன. சென்னையை மீண்டும் பழைய நிலைக்கு மீட்டெடுப்பதற்கு ஆறு மாத காலம் ஆகும் என்று கணித்தார்கள். அமெரிக்காவிலே புயல் வந்தபொழுதுகூட, அந்தப் புயல் சேதங்களிலிருந்து உடனடியாக எப்படி மீட்டெடுப்பது என்பதில் வல்லரசு நாடான அமெரிக்காகூட அதிலே வெற்றி அடையாமல் தோல்வி அடைந்தது. ஆனால், வீசிய வர்தா புயலினால் ஏற்பட்ட தாக்கத்தை சீர்செய்திட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் நேரடியாகக் களத்திற்குச் சென்று பணிகளை முடுக்கிவிட்டதன் காரணமாக, இரவோடு இரவாக வீழ்ந்து கிடந்த மரங்கள் அகற்றப்பட்டன. கிட்டத்தட்ட 25 ஆயிரம் மின் கம்பங்கள் உடனடியாக அகற்றப்பட்டு, புதிய மின் கம்பங்கள் நடப்பட்டன. 50–க்கும் மேற்பட்ட மின்தூக்கிகள்; 500–க்கும் மேற்பட்ட மின்மாற்றிகள் மாற்றப்பட்டன. போர்க்கால அடிப்படையிலே நடவடிக்கை எடுக்கப்பட்ட காரணத்தினாலே ஒரு வார காலத்திலேயே சென்னை மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்பியது. இதற்குக் காரணம் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பல்வேறு மரங்கள், ஆயிரக்கணக்கான மரங்கள் வீழ்ந்து விட்டாலும்கூட, இந்த சென்னை மாநகரை மீண்டும் பசுமை நகராக மாற்றிக் காட்ட வேண்டும் என்கிற அடிப்படையில், வருகிற பிப்ரவரி 24 ஆம் தேதி புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பிறந்த நாள் அன்று இலட்சக்கணக்கான மரங்கள் வனத் துறையின் மூலமாக நடப்படும் என்கிற ஓர் அருமையான அறிவிப்பும் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு ஆளுநர் உரையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் மகிழ்ச்சியோடு இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு திரைப்படத்திலே, 'இருந்திடலாம் நாட்டில் பல வண்ணக் கொடி, எத்தனையோ கட்சிகளின்



2017 ஜனவரி 30] [திரு. என்.டி. வெங்கடாச்சலம்]

எண்ணப்படி, பறக்க வேண்டும் எங்கும் ஒரே சின்னக் கொடி, அது பஞ்சம் இல்லை என்னும் அன்னக்கொடி' என்று பாடினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, பஞ்சம் இல்லாத அன்னக்கொடி எந்த நாட்டிலே பறக்கிறதோ, அந்த நாடு மக்களுடைய அன்பைப் பெற்ற நாடாக விளங்கும் என்கிற அடிப்படையிலே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பாடினார்கள்.

பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அதை விரிவுபடுத்தி அனைத்து மாணவர்களுக்கும் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனைத்து மாணவர்களுக்கும் கலவை சாதம் வழங்கக்கூடிய திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, மாணவர்கள் மட்டுமல்ல; தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய 1 கோடியே 90 இலட்சம் குடும்பங்களும் இரவு நேரத்திலே பசியோடு யாரும் உறங்கச் செல்லக்கூடாது என்று சொல்லி, நான் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் 20 கிலோ விலையில்லாத அரிசித் திட்டத்தைக் கொண்டு வந்து செயல்படுத்துவேன் என்று கடந்த தேர்தலின்போது அறிவித்த முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 20 கிலோ அரிசித் திட்டத்தை செயல்படுத்தினார், நல்ல அரிசியாக வழங்கினார். இதற்கிடையில் கடந்த ஆட்சிக் காலத்திலே மத்தியிலே இருந்த காங்கிரஸ் அரசாங்கம் உணவுப் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உரையை சீக்கிரம் முடியுங்கள். இன்னும் 10 பேர் பேச வேண்டும்.

**திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** ஆக, வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளவர்களுக்கு நாங்கள் இந்த அரிசியைத் தர முடியாது என்று சொன்னார்கள். அம்மா அவர்கள் சொன்னார்கள்; "வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கும், வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளவர்களுக்கும் நான் உள்ளவரை, அண்ணா தி.மு.க. உள்ளவரை 20 கிலோ விலையில்லாத அரிசியை கட்டாயம் வழங்குவேன்" என்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றுவரை 20 கிலோ விலையில்லாத அரிசித் திட்டத்தின் மூலமாக உணவை வழங்கக்கூடிய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஆக, அதுமட்டுமல்ல; மத்திய அரசாங்கம்

[திரு. என்.டி. வெங்கடாச்சலம்] [2017 ஜனவரி 30

இன்றைக்கு ஒரு கிலோ அரிசியினுடைய விலை 23 ரூபாயாக நிர்ணயம் செய்தாலும்கூட, 23 ரூபாய் விலை கொடுத்து வாங்கி, தமிழ்நாட்டிலே இருக்கிற மக்களுக்கு விலையில்லாமல் அரிசி வழங்குகிற முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே அன்போடு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, அதுமட்டுமல்ல; இன்றைக்கு உணவைப் பொறுத்தவரையில், இது சொன்ன வாக்குறுதி. சொல்லாத வாக்குறுதி, அனைத்து மாநகரப் பகுதிகளிலும், அனைத்து நகராட்சிப் பகுதிகளிலும் அம்மா உணவகங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்தார்கள். அதிலே ஒரு ரூபாய்க்கு இட்லி வழங்கப்படுகிறது. ஏழைத் தொழிலாளர்கள், ஏழையெளிய மக்களுக்கு ஒரு ரூபாய்க்கு இட்லி வழங்கக்கூடிய மாநிலம் தமிழகம் என்கிற பெருமையை இன்றைக்கு அம்மா அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு விமான நிலையத்திற்குச் சென்றால், ஒரு இட்லி 50 ரூபாய்க்கு விற்கப்படுகின்ற சூழ்நிலையில், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திட்டத்தினால் தமிழ்நாட்டிலே ஒரு ரூபாய்க்கு இட்லி கொடுக்கப்படுகிறது.

ஆக, அதுமட்டுமல்ல; தமிழகத்திலே இருக்கக்கூடிய பாரம்பரியமான 'தை பொங்கல்' திருநாளை எல்லோரும் கொண்டாட வேண்டும். ஏழையெளிய மக்களும் வறுமை காரணமாக விட்டுவிடக் கூடாது என்று சொல்லி, தை பொங்கல் திருநாளில் ஒரு கிலோ பச்சரிசியும், சர்க்கரையும், கரும்பும், வெல்லமும், முந்திரியும், திராட்சையும் வழங்கிய ஒரே அரசு, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே அன்போடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உரையை சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடு) பொங்கலுக்குக் கரும்பும், சர்க்கரையும் கொடுத்தார்கள் என்று சொல்கிறார், அதில் என்ன point of order இருக்கிறது? உட்காருங்கள்.

முற்பகல் 11–50

**திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரப் பிரச்சினை. மின்சாரத்தைப் பொறுத்தவரையிலே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள்



2017 ஜனவரி 30] [திரு. என்.டி. வெங்கடாச்சலம்]

2011 ஆம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்பேற்கிறபோது தமிழ்நாட்டிலே மின்சாரம் கிடையாது. கஜானாவிலே நிதியும் கிடையாது. தமிழகத்திலே தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டார்கள்; விவசாயிகள் பாதிக்கப்பட்டார்கள்; நெசவாளர்கள் பாதிக்கப்பட்டார்கள்; மீனவர்கள் பாதிக்கப்பட்டார்கள். யாராலும் தீர்க்க முடியாமல் இருந்த மின்சார பிரச்சினையைத் தீர்த்து, இரண்டே ஆண்டுகளில் மீண்டும் மீட்டெடுத்து, தமிழ்நாட்டை மின் மிகை மாநிலமாக்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அண்டை மாநிலங்களுக்கு மின்சாரம் விற்கக்கூடிய சூழலை உருவாக்கினார்கள்.

இந்தச் சட்டமன்றப் பேரவையிலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஓர் உறுப்பினர் பேசுகிறபோது, "இந்த ஆண்டின் உணவு தானிய உற்பத்தி இலக்கு 100 இலட்சம் மெட்ரிக் டன்னாக இருக்கும் என்று சொல்லியிருக்கின்றீர்களே; கடுமையான வறட்சி இருக்கிறதே, எப்படி 100 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி சாத்தியமாகும்?" என்ற ஒரு வினாவை எழுப்பினார். இதற்கு அடிப்படைக் காரணம், மின்சாரத் தட்டுப்பாட்டை நீக்கியதுதான். இன்றைக்கு ஆறுகளில் தண்ணீர் இல்லை; அணைகளிலும் தண்ணீர் இல்லை. ஆறுகளிலும், அணைகளிலும் தண்ணீர் இல்லாவிட்டாலும்கூட, ஆழ்குழாய்க் கிணறு மற்றும் வெளிவட்டக் கிணறுகள்மூலமாக மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்த தடையில்லா மின்சாரத்தைப் பயன்படுத்தி, விவசாயிகள் விவசாயம் செய்த காரணத்தினால்தான் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு விவசாய உற்பத்தி 100 இலட்சம் மெட்ரிக் டன் என்ற அடிப்படையில் இந்த அரசு மிகப் பெரிய சாதனையை எட்டியிருக்கிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள்.

**திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மகாபாரத இதிகாசத்திலே, அர்ச்சுனர் பாரதப் போரில் பீஷ்மர், துரோணர் உள்ளிட்ட பெரும் வில்லாளிகளை வீழ்த்தியதைப் போலவும், கிரேக்க இதிகாசம் 'இலியட்'டில் 'அக்கிலிஸ்' என்ற மாவீரன் பெற்ற வெற்றியைப் போலவும், உலக வரலாற்றில் நெப்போலியன் எதிரிகளை விரட்டி ஐரோப்பாவை வீழ்த்தியதைப் போலவும், வீரமங்கை வேலுநாச்சியார் ஆங்கிலேயரை விரட்டி கோட்டையைப் பிடித்து ராணியாக இறுதிவரை ஆட்சி செய்ததைப் போலவும், எங்கள்

[திரு. என்.டி. வெங்கடாச்சலம்] [2017 ஜனவரி 30

ஈரோடு மாவட்டத்தில் தீரன் சின்னமலை ஆங்கிலேயரை விரட்டியதைப் போலவும், அதற்கொப்பாக இறுதிவரை அனைத்துக் கட்சிகளுக்கும் சிம்மசொப்பனமாக வாழ்ந்தவர் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, "எனக்குப் பின்னரும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நூறு ஆண்டுக் காலம் தமிழகத்தை ஆட்சி செய்யும்" என்று இதே அவையில் மாண்புமிகு அம்மா அவர்கள் சூளுரைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதை மெய்ப்பிக்கும் வகையில், இந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு என்றைக்கும் தொடர்ந்து ஆட்சிப் பொறுப்பிலிருந்து மக்களுக்கு சேவை செய்யும். எதிர்வரும் உள்ளாட்சித் தேர்தலிலும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மாபெரும் வெற்றியைப் பெறும். (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அம்மா அவர்களின் நினைவுகளோடு சந்தித்து, நாடாளுமன்றத் தேர்தலில் 40 தொகுதிகளிலும் மீண்டும் நாங்கள் வெற்றி பெறுவோம் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்தில் பணிவோடு சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடாச்சலம் அவர்கள் கூறியதில் ஒரு சிறிய திருத்தத்தைச் சொல்ல விரும்புகிறேன். வர்தா புயலின் காரணமாக சென்னை மாநகராட்சியில் ஒரு வார காலத்திற்குள் மின் இணைப்பு கொடுக்கப்பட்டது என்று குறிப்பிட்டார்கள். வர்தா புயல் 12 ஆம் தேதியன்று சுமார் 1–00 மணிக்கு ஆரம்பித்து 6–00 மணியளவில் முடிந்ததற்குப் பின்னர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களையெல்லாம் அழைத்து, அறிவுரை வழங்கி, மாநகராட்சிக்கு உடனடியாக மின்சாரம் வழங்க வேண்டுமென்று ஆணையிட்டார்கள். அதன்படி அன்று இரவே 10–00 மணியளவில் அரசு மருத்துவமனை, கோயம்பேடு பேருந்து நிலையம், விமான நிலையம் போன்ற இடங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுவிட்டது. 13 ஆம் தேதியன்று 60 சதவீத மின் இணைப்பும், 14 ஆம் தேதியன்று 100 சதவீத மின் இணைப்பும்



2017 ஜனவரி 30] [திரு. பி. தங்கமணி]

சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் வழங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்).....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ரங்கநாதன், உங்கள் இருக்கை எங்கிருக்கிறது? நீங்கள் எங்கு வந்து நிற்கின்றீர்கள்? (குறுக்கீடுகள்) உங்கள் இடத்திற்குப் போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மின்சாரம் உடனடியாக வழங்கப்பட்டது என்றுதான் சொல்லியிருக்கிறேன். இதில் மாற்றுக் கருத்து எதுவும் கிடையாது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சாமி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது இப்படி எழுந்து நின்று பேசுவது முறையல்ல. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான் கூறியதில் ஏதேனும் தவறு இருந்தால் விளக்கம் கேட்கட்டும். நான் பதில் சொல்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எவ்வளவு கடுமையான நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதைத்தான் சொன்னேன். அவ்வாறு சொன்னதைப்பற்றி அவர்கள் புரிந்துகொள்ளாமல் பேசுகிறார்கள். "சென்னை மாநகராட்சிப் பகுதிகளைப் பொறுத்தவரையில்" என்றுதான் நான் சொன்னேன். உறுப்பினர் அவர்கள் சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் ஒரு வார காலத்தில் மின்சாரம் வழங்கப்பட்டது என்று சொன்னார்கள். 3 நாட்களில் கொடுக்கப்பட்டுவிட்டது என்று சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி) புறநகர்ப் பகுதிகளில் வேண்டுமானால் மின்சாரம் வழங்க ஒரு வாரம் ஆகியிருக்கலாம். அதுவும் குறிப்பிட்ட சில இடங்களில் மட்டும்தான் ஒரு வார காலம்

[திரு. பி. தங்கமணி] [2017 ஜனவரி 30

ஆகியிருக்கும். அதுபற்றிய விவரங்கள் இருக்கின்றன. “இன்றைக்கு இன்னும் 10 பேர் பேச வேண்டியிருப்பதால், தற்போது நேரமில்லை” என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோ அல்லது நானோ வேறு ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்திலே இதுகுறித்து முழுமையான பதிலைச் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) திரு. சாமி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் துணைத் தலைவரே உங்களை உட்காரச் சொல்கிறார். அவருடைய பேச்சைக்கூட கேட்கமாட்டேன் என்கிறீர்களே! (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

*முற்பகல் 11–55*

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மூத்த அமைச்சர்கள் மற்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் எல்லாம் இந்த அவையிலே வர்தா புயல் சம்பந்தமாக விவரமாக, விளக்கமாகக் கூறி இருந்தாலும், வேளாண்மைத் துறை சார்பில் எனக்குத் தெரிந்த ஒரு கருத்தைச் சொல்வதற்கு ஒரே ஒரு நிமிடம் மட்டும் அனுமதி வழங்கக் கேட்டுக்கொள்கிறேன்.

அன்று மாலை புயல் ஓய்ந்தது 5 மணிக்கு. மாண்புமிகு முதல்வர் அவர்கள் கோட்டையில் அமர்ந்து மூத்த I.A.S. அதிகாரிகளையும், எங்கள் அமைச்சர்களையும் அழைத்து ஆலோசனை நடத்தி, பின்னர் 6 மணிக்கெல்லாம் எந்தெந்தப் பகுதிகளுக்குச் செல்ல வேண்டுமென்று குறிப்பிட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் பல்வேறு இடங்களுக்கு எங்களை அனுப்பி வைத்தார்கள். அதேபோன்று, சென்னை மாநகராட்சியில் ஒவ்வொரு பகுதிக்கும் அனுப்பி வைத்ததன் காரணமாக, தலைமைச் செயலகத்திலிருந்து மூத்த I.A.S. அதிகாரிகள், முதல்வர், மற்ற அமைச்சர்கள் அனைவரும் 7.15 மணிக்கே சென்று அந்த நிவாரணப் பணிகளை மேற்கொண்டோம். நேற்று 8.15 மணிக்குச் சென்றோம் என்று தவறாகச் சொன்னேன். நாங்களும் மற்ற அமைச்சர்களும் அன்றைக்கு 7.15–மணிக்கே சென்றோம். அதனடிப்படையில், காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று, உரிய நிவாரணப் பணிகளை மேற்கொண்டோம். இங்கே இருக்கின்ற, பேசுகின்ற



2017 ஜனவரி 30] [திரு. இரா. துரைக்கண்ணு]

யாரும் தலை காட்டக்கூட இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு மட்டுமல்ல; இறுதியாக ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். (குறுக்கீடு) நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். (குறுக்கீடு) 3 இலட்சம் என்று சொன்னார்கள். உண்மையில் ஒன்றைச் சொல்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பிரமணியன், உட்காருங்கள். அமைச்சர், நீங்கள் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய உயரிய நோக்கம், தமிழகத்தை தன்னிகரில்லா மாநிலமாக ஆக்க வேண்டும் என்பது. அந்த ஒரே குறிக்கோளுடன், கடந்த 2015–2016–ல். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. ரங்கநாதன், உட்காருங்கள். நேரமாகிறது; உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள் நீங்கள்.

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** உணவு உற்பத்தியில் 1 கோடியே 33 இலட்சம் மெட்ரிக் டன் அளவிற்கு தன்னிறைவு அடைந்து, தமிழகத்தை தலை நிமிரச் செய்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். எனவே, 100 இலட்சம் மெட்ரிக் டன்னையும் தாண்டி இலக்கை அடைய வேண்டும் என்பதற்காகத்தான் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வேளாண்மைத் துறைக்கு நிதியினை வாரி வாரி வழங்கினார்கள் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி அவர்கள்.

**திரு. பி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின்மீது எனக்குப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கும், விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை, 2006 ஆம் ஆண்டு சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினராகவும், 2016 ஆம் ஆண்டு மதுரை கிழக்கு தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராகவும், 4 முறை எங்கள்

[திரு. பி. மூர்த்தி] [2017 ஜனவரி 30

கழகத்தினுடைய மாவட்டச் செயலாளராகவும் பணி செய்வதற்கு வாய்ப்பளித்த தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய, இளைஞர்களுடைய நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கின்ற, போற்றுதலுக்குரிய எங்கள் செயல் தலைவரும், மாண்புமிகு சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணன் தளபதி அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, எங்கள் கழகத்தினுடைய துணைப் பொதுச் செயலாளர் அண்ணன் I.P. அவர்களுக்கும் இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரை கிழக்கு தொகுதியிலே 32,772 வாக்குகள் வித்தியாசத்திலே வெற்றி பெறச் செய்த மதுரை கிழக்கு தொகுதி மக்களுக்கும், எனது வெற்றிக்கு அல்லும் பகலும் அயராது உழைத்திட்ட கழகத் தோழர்களுக்கும், கூட்டணிக் கட்சி நண்பர்கள் அனைவருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களுடைய தளபதியார் அவர்கள், 20–9–2015 அன்று கன்னியாகுமரியிலே 'நமக்கு நாமே' பயணத்தைத் தொடங்கி மாணவர்கள், இளைஞர்கள், பொது மக்கள், வியாபாரிகள், தொழிலதிபர்கள் மற்றும் அந்தந்தப் பகுதிகளில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களையும் சந்தித்து, அவர்களுடைய பிரச்சினைகளை எல்லாம் கேட்டு வந்தார்கள். மதுரை மாவட்டத்தில், அலங்காநல்லூரில் 25–9–2015–ல் பொது மக்களைச் சந்தித்தார். அப்பொழுது அவர்கள் ஜல்லிக்கட்டு நடத்த வேண்டுமென்று கோரிக்கை மனுவை அளித்தனர். அதைப் பெற்றுக்கொண்ட தளபதி அவர்கள், "2016–லே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமையும்பட்சத்தில், ஜல்லிக்கட்டு உறுதியாக நடத்தப்படும் என்றும், ஜல்லிக்கட்டு நடக்காதபட்சத்தில் நானே முன்னின்று அலங்காநல்லூரில் என்னுடைய தலைமையில் மாபெரும் போராட்டத்தை நடத்துவேன்" என்றும் கூறினார். அதனடிப்படையில், 2016–ல் ஜல்லிக்கட்டு நடத்த வேண்டி மாபெரும் உண்ணாவிரதப் போராட்டத்திற்கும் அழைப்பு விடுத்தார்.

நண்பகல் 12–00

இதற்கிடையில் தமிழகத்தைச் சேர்ந்த மத்திய இணை அமைச்சர் மாண்புமிகு திரு. பொன். இராதாகிருஷ்ணன் அவர்கள்



2017 ஜனவரி 30] [திரு. பி. மூர்த்தி]

ஜல்லிக்கட்டு நடத்த மத்திய அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது என்றும், உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறும் கேட்டுக்கொண்டார். அவரது கோரிக்கையை ஏற்று, உண்ணாவிரதம் கைவிடப்பட்டது. ஆனால், ஜல்லிக்கட்டு நடைபெறவில்லை. அதேபோன்று, இந்த ஆண்டு எங்கள் செயல் தலைவர் அவர்கள் 3–1–2017 அன்று அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தி (மேசையைத் தட்டும் ஒலி) மாபெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்யச் சொல்லி எனக்கு உத்தரவிட்டார். மேலும், அங்கு நடைபெற்ற மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் பொது மக்கள், மாணவர்கள், இளைஞர்கள், அனைத்துக் கட்சியினுடைய நண்பர்கள் கலந்துகொள்ள வேண்டுமென்று அழைப்பு விடுத்தார்கள். அதனை ஏற்று, எப்போதும் இல்லாத அளவிற்குப் பெருந்திரளாக இளைஞர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பல்லாயிரக்கணக்கானவர்கள் அந்த ஆர்ப்பாட்டத்திலே கலந்து கொண்டார்கள் என்பதனைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன். அதற்குப் பின்னால், தமிழகத்திலே மாணவர்கள் எப்படி மொழிக்காக எழுச்சிமிகு போராட்டத்தை நடத்தி வெற்றி பெற்றார்களோ, அதைப்போல தமிழர்களுடைய பாரம்பரிய வீர விளையாட்டான ஜல்லிக்கட்டை நடத்திட வேண்டுமென்று மாணவர்கள் தலைமையேற்று நடத்திய போராட்டத்தில் இளைஞர்கள், பெண்கள், பொது மக்கள், தமிழ் ஆர்வலர்கள் மற்றும் எங்கெங்கோ வாழ்கின்ற தமிழர்கள் கலந்துகொண்டார்கள். அவர்கள் அனைவரின் ஆதரவோடும் மிகப் பெரிய வெற்றி கிடைத்தது. அந்த வெற்றியைப் பெற்றுத் தந்த அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேநேரத்திலே, அந்தப் போராட்டம் வெற்றி பெற காரணமாக இருந்த அந்த மாணவர்கள்மீது தொடுக்கப்பட்ட வழக்குகளை இந்த நேரத்திலே அரசு வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில் ஜல்லிக்கட்டைப் பற்றி சில நிகழ்வுகளைக் கூறுவது எனது கடமையாகக் கருதுகிறேன். 21–9–2005–ல் தேசிய விலங்குகள் நல ஆணையம் அனுப்பி வைத்த வேண்டுகோள் கடிதத்தின்படி, அன்றைய தமிழக காவல் துறை இயக்குநர் அவர்கள் 15–1–2006 ஆம் தேதி ஒரு சுற்றறிக்கையினை அனைத்து மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைத்ததன் காரணமாக, ரேக்ளா ரேஸ் பந்தயத்திற்கு அனுமதி

வழங்கக்கூடாது என உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதன் காரணமாக தொடரப்பட்ட வழக்கில், சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் நீதியரசர் பானுமதி அம்மையார் அவர்கள் 29–3–2006 அன்று ஓர் உத்தரவு பிறப்பித்தார். அதன் காரணமாக ரேக்ளா ரேஸ், ஜல்லிக்கட்டு மற்றும் மஞ்சு விரட்டுப் போட்டிகளை நடத்த தடை விதிக்கப்பட்டது. அப்போது தமிழகத்திலே அ.தி.மு.க. ஆட்சிதான் இருந்தது என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, ஜல்லிக்கட்டுக்கு தடை விதிக்கப்பட்டது முதன்முதலில் அ.தி.மு.க. ஆட்சியில்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதைத் தொடர்ந்து உச்ச நீதிமன்றத்தின் ஆணை, கடந்த 2007 ஆம் ஆண்டு. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி அவர்கள் மிகவும் விவரமாக ஒரு குறிப்பை வைத்துப் படித்துக்கொண்டிருக்கிறார். தடை விதித்தது அ.தி.மு.க. ஆட்சி அல்ல; தடை விதித்தது நீதிமன்றம். (மேசையைத் தட்டும் ஒலி) நன்றாகத் தெரிந்து கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) அவசரப்படாதீர்கள். (குறுக்கீடுகள்) அவசரப்படாதீர்கள். (குறுக்கீடுகள்) திரு. ஆஸ்டின், அவசரப்படாதீர்கள், உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆஸ்டின், இது என்ன பழக்கம்? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக் கொண்டிருக்கும்போது, நீங்கள் எழுந்து குறுக்கிட்டுப் பேசினால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) அதெல்லாம் record ஆகாது. (குறுக்கீடுகள்) அதெல்லாம் பதிவாகாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) திரு. ஆஸ்டின், நீங்கள் செய்வதெல்லாம் முறையல்ல.

*பிற்பகல் 12–05*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து ஏற்கெனவே நான் விளக்கமாக என்னுடைய பதிலைச் சொல்லியிருக்கிறேன். நீங்கள் திரும்பி அதே பிரச்சினையை எழுப்பினால், இங்கேயே பதில் இருக்கிறது. நான் இப்போது படிக்கவில்லை. ஏனென்றால் காலதாமதமாகிவிடும்.



இங்கே திரு. எ.வ. வேலு அவர்கள் வேண்டாம், வேண்டாமென்று சொல்கிறார். நீங்கள் அதை வாங்கிப் படித்துப் பாருங்கள். அதாவது நீதிமன்றம் தடை விதித்தது. ஏன் தடை விதித்தது என்றால், நீங்கள் 2009 ஆம் ஆண்டு ஒரு சட்டம் போட்டீர்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) திரு. மூர்த்தி, 2006–ல் போட்ட அந்தச் சட்டம், 1960–ல் இயற்றப்பட்ட சட்டம். 1960–ல் அந்தச் சட்டம் இயற்றப்பட்டுவிட்டது. ஆனால் நாம் ஜல்லிக்கட்டை நடத்திக்கொண்டு வந்திருக்கிறோம். அதை யாரோ கண்டுபிடித்து கொண்டுபோய் சேர்த்ததினால், 1960–ல் அந்தச் சட்டத்திற்குத் திரும்ப amendment போட்டதை திரும்ப எடுத்து வந்து பின்னர் 2006–ல் தடை வாங்குகிறார்கள். யார் தடை வாங்குவது? பிராணிகள் வதை தடுப்புச் சட்டத்தை ஆதரிக்கின்றவர்கள்; பிராணிகளை வதை செய்யக்கூடாது என்று சொல்கின்ற அந்த அமைப்பு. அந்த அமைப்புதான் போய் தடை வாங்குகிறது. அதற்குப் பின்னால்தான் 2006–லிருந்து என்ன சரித்திரம் நடைபெற்றது என்பதை நான் விளக்கமாகச் சொன்னேன். நீங்கள் ஆட்சியிலிருக்கும்போது ஒரு சட்டம் கொண்டு வந்தீர்கள். அந்தச் சட்டம் குறித்து நான் ஏற்கெனவே ஒரு விளக்கம் சொன்னேன். சில இனங்கள் மத்திய அரசினுடைய தனிக் கட்டுப்பாட்டில் இருக்கிறது. அவர்கள்தான் சட்டம் இயற்ற முடியும். அதை அவர்கள்தான் நடைமுறைப்படுத்த முடியும். சில இனங்கள் மாநிலங்களினுடைய பட்டியலில் இருக்கிறது. நாம் சட்டம் இயற்றிக்கொள்ளலாம். அந்தந்த மாநிலங்களில் இருப்பதற்கு, அந்தந்த மாநிலங்கள் சட்டம் இயற்றிக்கொள்ளலாம். மத்திய அரசும் மாநில அரசுகளும் இயற்றுகின்ற சட்டம் Concurrent List–ல் வரும். அப்படி வருகின்றபொழுது மத்திய அரசும் ஒரு பொருள் குறித்து சட்டம் கொண்டு வரலாம்; மாநில அரசும் சட்டம் கொண்டு வரலாம். ஆனால், மத்திய அரசினுடைய சட்டத்திற்குத் திருத்தம் நாம் கொண்டு வரும்பொழுது மத்திய அரசினுடைய ஒப்புதல் பெறவேண்டும். சம்பந்தப்பட்ட துறைகளிடமிருந்து ஒப்புதல் பெற்று, இந்திய குடியரசுத் தலைவருடைய ஒப்புதலையும் பெற வேண்டும். அப்போதுதான் அது சட்டமாக்கப்படும். முழுமையான சட்டமாக்கப்படும்; நிரந்தரமான சட்டமாக்கப்படும். நீங்கள் செய்தது என்ன? உங்கள் ஆட்சியில் நீங்கள் சட்டம் இயற்றிவிட்டீர்கள். Concurrent List–ல் இருப்பதால் சட்டம் இயற்றிவிட்டீர்கள். ஆனால், அதற்கு குடியரசுத் தலைவரிடம் நீங்கள் ஒப்புதல் பெறவில்லை. அதனால் அந்தச் சட்டம் செல்லாது என்று நீதிமன்றத்தால் தடை

விதிக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் வழக்கு. மாண்புமிகு உறுப்பினர் திரு. மூர்த்தி அவர்களுக்கு சட்டம் தெரியும். ஏனென்றால் அவருடைய வீட்டில் சட்ட வல்லுநர் இருக்கிறார். அதனால் அவர் அவ்வப்போது அவரிடம் போய் கேட்டுத் தெரிந்துகொள்வார். இதையும் போய் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். (குறுக்கீடு) எனவே, தவறான தகவலை இங்கே பதிய வைக்கக்கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்குப் பின்னால் நடந்ததையெல்லாம் நான் இங்கே விளக்கமாக ஏற்கெனவே சொல்லிவிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், பேசுங்கள்.

**திரு. பி. மூர்த்தி:** மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே விளக்கம் தந்திருக்கிறார்கள். அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நீதிமன்றத்தில் ரேக்ளா ரேஸ்–க்கு அனுமதி மறுக்கப்பட்டதனுடைய விளைவாகத்தான் மதுரை உயர் நீதிமன்றக் கிளையில் ரேக்ளா ரேஸ்–க்கு மட்டுமல்ல; ஜல்லிக்கட்டுக்கும் தடை விதிக்கப்பட்டது. அந்த ஜல்லிக்கட்டுக்குத் தடை விதிக்கப்பட்டதை எதிர்த்து அரசு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–ல் ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு நீதிமன்றம் தடை விதித்துவிட்டது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தபோது இந்தப் பிரச்சினை குறித்து நம் நாட்டினுடைய பாரதப் பிரதமர் அவர்களுக்குத் தொடர்ந்து கடிதம் எழுதிக்கொண்டிருந்தார்கள்; நேரில் சந்தித்தபோதும் நாட்டினுடைய வளர்ச்சியைப்பற்றி, மாநிலத்தினுடைய வளர்ச்சியைப்பற்றி மாண்புமிகு பாரதப் பிரதமருக்குச் சொல்லுகின்றபொழுதெல்லாம், மாண்புமிகு அம்மா அவர்கள், “ஜல்லிக்கட்டு தமிழகத்தினுடைய உரிமை; ஜீவாதார உரிமை; (மேசையைத் தட்டும் ஒலி) அது பாரம்பரியமான உரிமை; அது நடத்தப்பட வேண்டும்” என்று தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். அப்படி வலியுறுத்தி வந்ததன் காரணமாக, ஒரு படி மேலே போய், இந்திய வனம் மற்றும் சுற்றுச்சூழல்





அமைச்சகத்திடம் அம்மா அவர்கள் ஓர் உத்தரவு வாங்குகிறார்கள்; ஒரு direction வாங்குகிறார்கள். என்ன direction என்றால், ஜல்லிக்கட்டு நடத்திக்கொள்ளலாம் என்று direction வாங்குகிறார்கள்; 7–1–2016–ல் அதை வாங்குகிறார்கள். 2016–ல் ஜல்லிக்கட்டு நடத்துவதற்குரிய பணியைச் செய்கிறபோது, அம்மா அவர்கள் இந்த direction–ஐ வாங்குகிறார்கள். இந்தப் பிரச்சினை குறித்து Supreme Court–ல் வழக்கு இருப்பதால், மீண்டும் தடை பெறப்படுகிறது. Supreme Court–ல் வழக்கு இருப்பதால் தடைபெற்ற ஒரு வழக்கை—நம் நாட்டினுடைய மாண்புமிகு பாரதப் பிரதமரை நான் சந்தித்தபொழுது, “நாங்கள் போட்ட சட்டத்தை Supreme Court–தடை செய்திருக்கிறது. அந்த வழக்கு முடிவு பெறாத நிலையில், நாங்கள் மறுபடியும் அந்தச் சட்டத்திலே எதுவும் செய்யமுடியாது” என்றும், “மாநில அளவில் இந்தச் சட்டத்திற்குத் திருத்தச் சட்டம் கொண்டு வந்தால், மத்திய அரசு அதற்கு உறுதுணையாக இருக்கும்” என்றும் அவர் சொன்னதன் அடிப்படையில்தான், நாம் இப்பொழுது இதற்கு முழு வடிவான நிரந்தரச் சட்டத்தைக் கொண்டு வந்து, இப்பொழுது ஜல்லிக்கட்டு வெற்றிகரமாக தமிழகம் முழுவதும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுகுறித்து ஏற்கெனவே இதே அவையிலே நீண்ட விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். இப்பொழுதும் அதையொட்டி விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். நான் கேட்கிற ஒரு கேள்வி, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, தடை வந்த நேரத்திலும், அதையும் தாண்டி நாம் ஜல்லிக்கட்டை நடத்தியிருக்கிறோம்; இடைவிடாமல், தடைபடாமல் நடத்தியிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் இப்போது ஒன்றைச் சொல்கிறார். ஜனாதிபதியினுடைய ஒப்புதலைப் பெறாத காரணத்தினால்தான் இப்போது நடத்தமுடியாத ஒரு சூழ்நிலை வந்தது என்று சுட்டிக்காட்டுகிறார். நான் அப்பொழுதே சொன்னேன். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், இப்பொழுது தொடர்ந்து 3 ஆண்டுக் காலமாக இந்தப் பிரச்சினை இருந்துகொண்டிருக்கிறது.

[திரு. மு.க. ஸ்டாலின்] [*2017 ஜனவரி 30*

*மூன்றாண்டுக் காலமாக நாங்களும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம் என்பதையும் இங்கே வெளிப்படுத்தி இருக்கிறார். நான் கேட்கிற கேள்வி. இப்போது மூன்றே நாட்களில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்று, அங்கேயே தங்கி, அதற்காக பல சிரமங்களையெல்லாம் ஏற்றுக்கொண்டு, ஜல்லிக்கட்டை நடத்துவதற்கான முயற்சியிலே ஈடுபட்டு, அவசர சட்டத்தைக் கொண்டுவந்து, மூன்றே நாட்களில் அந்த அவசர சட்டத்தை சட்டமன்றத்திலும் கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கிறார். ஆனால், மூன்றே நாட்களில் நிறைவேற்றக்கூடிய இந்த அவசர சட்டத்தை, ஏன் மூன்றாண்டுகளில் நிறைவேற்றவில்லை என்பதுதான் என்னுடைய கேள்வி. (மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12—10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. ஆட்சியில் ஏற்பட்ட அந்தத் தடை, (குறுக்கீடுகள்) நீதிமன்றத்தால் தி.மு.க. ஆட்சியில் ஏற்பட்ட அந்தத் தடை. . . (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது நீங்கள் குறுக்கிட்டுப் பேசுவது என்ன முறை?*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *தொடர்ந்து 2012 வரைக்கும் நடக்கிறது. அதன்பிறகு, மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக வந்தபிறகு, இந்தப் பிரச்சினையை, நாட்டினுடைய பிரதமர் அவர்களிடம் எடுத்துச் செல்கிறார்; கோரிக்கை மனு கொடுக்கிறார். அந்த வழக்கு விசாரணையிலே இருக்கின்றது. இந்த வழக்கு விசாரணையிலே இருக்கின்றபோதே, மாண்புமிகு அம்மா அவர்கள் மத்திய அரசினுடைய சுற்றுச்சூழல் வனத் துறை அமைச்சகத்திற்கு தங்களுடைய பரிந்துரையை அளிக்கின்ற நேரத்தில், அவர்களும் ஜல்லிக்கட்டை நடத்திக்கொள்ளலாம் என்ற ஒரு* direction—*ஐக் கொடுக்கிறார்கள்; அம்மா அவர்களும்* direction—*ஐ வாங்கிவிடுகிறார்கள். அதையும் உச்ச நீதிமன்றம் தடை செய்தது. தொடர் முயற்சியாக 2011—லிருந்து 2016 வரைக்கும் மாண்புமிகு*



*2017 ஜனவரி 30*] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

*அம்மா அவர்கள் ஜல்லிக்கட்டு நடத்துவதற்கு சட்டப்பூர்வமான நடவடிக்கையை தொடர்ந்து எடுத்துக்கொண்டு வந்திருந்தார்கள் என்பதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையில்தான், இது நம்முடைய பாரம்பரியமான உரிமை. இதைத் தடை செய்யக்கூடாது என்பதற்காகத்தான், இந்தப் பிரச்சினையை நாம் இப்போது கையிலே எடுத்துக்கொண்டு தீர்வு கண்டிருக்கிறோம். நாம் இப்போது எடுத்த நடவடிக்கை மிகப்பெரிய வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியைப் பெற்றுத் தந்திருக்கிறது என்பதனை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மூர்த்தி, இந்தப் பிரச்சினையை விட்டுவிட்டு, வேறு பிரச்சினைக்குச் செல்லுங்கள்.*

**திரு. பி. மூர்த்தி:** *உச்ச நீதிமன்றத்தில். . . (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006—லே எங்களுடைய ஆட்சி இருக்கும்போதுதான் உயர் நீதிமன்றத்திலே தடை வழங்கப்பட்டது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். அன்றைக்கு, 2006—லே தனி நீதிபதி அவர்களால் மதுரை நீதிமன்றத்திலே ஒரு தடையாணை வழங்கப்பட்டது. ஆனால், அதற்குப்பிறகு மேல்முறையீடு செய்யவில்லை என்று ஒரு தவறான கருத்தைச் சொல்கிறார். தமிழ்நாடு அரசு மேல்முறையீடு செய்ததன் காரணமாகத்தான், இரண்டு நீதிபதிகள் கொண்ட அமர்வு, தனி நீதிபதி கொடுத்த அந்தத் தீர்ப்புக்கு தடை வழங்கி, "ஜல்லிக்கட்டை நடத்தலாம்" என்று தீர்ப்பு வழங்கியது. (குறுக்கீடு) உங்களுடைய ஆட்சியிலே, உச்ச நீதிமன்றத்திலே, விலங்குகள் நல வாரியம்* Appeal *செய்து, அந்த இரண்டு நீதிபதிகள் கொண்ட அமர்வு வழங்கிய தீர்ப்பிற்குத் தடையாணை பெற்றது. எனவே, உங்களுடைய ஆட்சியில்தான் ஜல்லிக்கட்டுக்கு உச்ச நீதிமன்றம் தடை வழங்கியது. அதைத் தொடர்ந்துதான் நீங்கள் 2009—லே அந்தச் சட்டத்தை இயற்றினீர்கள். நீங்கள் கொண்டுவந்த அந்தச் சட்டம் செல்லாது என்று சொல்லி, தடை மட்டுமல்ல; அந்தச் சட்டமே செல்லாது என்று உச்ச நீதிமன்றம் 2016—லே*

தீர்ப்பளித்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியதைப்போல, எதற்கு செல்லாது என்று சொன்னார்கள் என்று சொன்னால், நீங்கள் 2009–ல் கொண்டுவந்த அந்தச் சட்டத்திற்கு ஜனாதிபதியின் ஒப்புதலைப் பெறவில்லை என்ற ஒரு முக்கியமான கருத்து அந்தத் தீர்ப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், நீங்கள், இந்தச் சட்டத்தைப் போடுகின்றமாதிரி போட்டுவிட்டு, 2011–ல் மத்தியில் ஆட்சியில் இருந்தபோது, நீங்கள்தான் ஜல்லிக்கட்டு காளைகளை காட்சிப்படுத்தக்கூடிய பட்டியலிலே சேர்த்தீர்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மூர்த்தி, நீங்கள் பேசுங்கள். வேறு சப்ஜெக்ட்டுக்குச் செல்லுங்கள். (குறுக்கீடு) இந்தப் பிரச்சினை சம்பந்தமாக நீண்ட நேரம் விளக்கமாகப் பேசியாகிவிட்டது. (குறுக்கீடு) அது சட்டமாக வந்துவிட்டது. அதற்குமேல் இதில் ஒன்றும் பேச வேண்டாம். (குறுக்கீடு) நீங்கள் வேறு சப்ஜெக்ட்டைப்பற்றிப் பேசுங்கள்.

**திரு. பி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–லே ஏற்பட்ட தடையை, 2007–ல் தி.மு.க. அரசுதான் நீக்கி ஜல்லிக்கட்டை நடத்தியது. மீண்டும், 2008–ல் உச்ச நீதிமன்றத்தில் வன விலங்கு வாரியம் மேல்முறையீடு செய்தபோது, உச்ச நீதிமன்றத்தினுடைய நீதியரசர் மரியாதைக்குரிய திரு. பாலகிருஷ்ணன் அவர்களும், நீதியரசர் ரவீந்திரநாத் தாகூர் அவர்களும், “தமிழகத்திலே இனிமேல் ஜல்லிக்கட்டை நடத்த முடியாது” என்று தடை விதித்தார்கள். தடை விதித்த 24 மணி நேரத்தில் மீண்டும், அந்தத் தடையை நீக்கி, தமிழகத்தில் சில நிபந்தனைகளோடு, ஜல்லிக்கட்டை நடத்திக் காட்டியவர் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால், 2011–ல் மட்டுமல்ல; 2012, 2013, 2014 ஆகிய ஆண்டுகளிலும் ஜல்லிக்கட்டு நடந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர்கள் தப்புக் கணக்குப் போட்டுப் போட்டே பழக்கமானவர்கள். (குறுக்கீடுகள்) 2009–லே தப்பான ஒரு சட்டத்தை இயற்றி, நீங்கள் ஜல்லிக்கட்டை நடத்தினீர்கள்;





இல்லையென்று சொல்லவில்லை. அதை எதிர்த்துத்தான் பிராணிகள் வதைத் தடுப்பைச் சார்ந்த அமைப்பு உச்ச நீதிமன்றம் சென்று, தடை வாங்கியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி, இந்தப் பிரச்சினையை விட்டுவிடுங்கள். வேறு சப்ஜெக்ட்டைப்பற்றிப் பேசுங்கள்.

பிற்பகல் 12–15

**திரு. பி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் ஜல்லிக்கட்டு நடத்தப்படும் கிராமங்களில் கிராம மக்களே அவர்களது சொந்தச் செலவில் மரக் கம்புகளைக் கொண்டு ஈரடுக்குப் பாதுகாப்பு தடுப்பு அமைத்துக்கொள்ள வேண்டும் என்பதும், ஜல்லிக்கட்டு நடைபெறுகின்றபோது மாடுபிடி வீரருக்கோ, ஜல்லிக்கட்டு காளைகளுக்கோ ஏதாவது விபத்து ஏற்பட்டால், அதற்கு நிவாரணமாக மாவட்ட ஆட்சித் தலைவர் பெயரில் ரூபாய் 2 இலட்சத்தை வைப்புத் தொகையாகக் கட்ட வேண்டும் என்பதும் தற்போதுவரை நடைமுறையில் இருக்கிறது. இனி வருங்காலத்திலே இச்செலவுகள் அனைத்தையும் அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்திலே வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த ஜல்லிக்கட்டை நடத்துவதற்கு வெற்றியைப் பெற்றுத் தந்த மாணவர்கள், தேசிய வங்கிகளில் பெற்ற கல்விக் கடனை, இப்போது இருக்கக்கூடிய கடுமையான வறட்சி காரணமாகவும், படித்து முடித்து அரசுத் துறை மற்றும் தனியார் துறையில் வேலைவாய்ப்பு கிடைக்காத காரணத்தினாலும், முழுமையாக அதனை அரசு இரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், கிராமப்புற மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு மருத்துவப் படிப்பில் சேர ‘நீட்’ தேர்வை இரத்து செய்திட இந்தக் கூட்டத் தொடரிலேயே தீர்மானம் நிறைவேற்றிட வேண்டும் என (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் போற்றுதலுக்குரிய செயல் தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, ஏக மனதாகத் தீர்மானத்தை நிறைவேற்றிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில், 140 ஆண்டுகளுக்கு முன்பு நிலவியதுபோல் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளதாக அரசே அறிவித்துள்ளது. இந்த வறட்சியின் விளைவாக விவசாயம் பாதிப்படைந்துள்ளது.

[திரு. பி. மூர்த்தி] [*2017 ஜனவரி 30*

*விவசாயம் சார்ந்த தொழில்கள் மட்டுமின்றி, சிறுதொழில்களும் பாதிப்பு அடைந்துள்ளன. கடும் வறட்சியின் காரணமாக விவசாயிகள் அனைவருக்கும் பெருத்த நஷ்டம் ஏற்பட்டுள்ள இந்தச் சூழ்நிலையில், அரசு அறிவித்துள்ள நிவாரணத் தொகை மிகவும் குறைவாக உள்ளது. "உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக் கூட மிஞ்சாது" என்பது பழமொழி. இந்தச் சபையில் உள்ள சட்டப் பேரவை உறுப்பினர்கள் பலர் விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள். உங்கள் அனைவருக்கும் இந்த நிவாரணத் தொகை மிகவும் குறைவானது என்பது தெரியும். எனவே, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஏக்கர் ஒன்றிற்கு ரூ.25,000/– வழங்கிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அனைத்து விவசாயிகளும் நவம்பர்–டிசம்பர் மாதம் வரையிலும் பெற்ற பயிர்க் கடனில் ரூ.650 கோடி அளவிற்கான வட்டியை மத்திய அரசு தள்ளுபடி செய்தது. தமிழக அரசும் விவசாயிகளின் அனைத்துக் கூட்டுறவுக் கடன்களையும் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் பெற்ற கடன்கள் அனைத்தையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று நானும் ஒரு விவசாயி என்ற முறையில் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சரி, உரையை முடியுங்கள். உங்கள் கட்சியின் சார்பில் இன்னோர் உறுப்பினர் பேச இருக்கின்றார். மொத்தம் 10 உறுப்பினர்கள் இன்றைக்குப் பேச வேண்டியிருக்கிறது.*

**திரு. பி. மூர்த்தி:** *தமிழகத்தில் வறட்சியின் காரணமாக ஆழ்துளைக் கிணறுகளில்கூட நீர்மட்டம் அதிகமான அளவு குறைந்துள்ளது. அனைத்துக் கிராமங்களிலும், நகரங்களிலும் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு நிலவுகிறது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், மாவட்டந்தோறும் சென்று, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் மக்கள் பிரதிநிதிகளையும், அதிகாரிகளையும் அழைத்துப் பேசி போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் எடுத்து, நடந்துகொண்டிருக்கக்கூடிய குடிநீர்த் திட்டப் பணிகளை விரைந்து முடித்து, மக்கள் பயன்பாட்டிற்கு உடனடியாகக் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.*

*2016–ல் உங்களுடைய தேர்தல் அறிக்கையில் அரசு நில வழிகாட்டி மதிப்பு குறைக்கப்படும் என்று கூறினீர்கள். தற்போது வீட்டுமனைகள், காலி இடங்கள், நூறு ஆண்டுகளாகக் குடியிருந்து*



*2017 ஜனவரி 30*] [திரு. பி. மூர்த்தி]

*வருபவர்களின் வீட்டுமனைகள் என 5 சென்ட், 10 சென்ட் நிலங்களைக்கூட சார்–பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்திட இயலவில்லை. இதனால் அரசுக்குப் பத்திரப் பதிவைப் பொறுத்தளவில் பெரிய வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. அதே நேரத்தில், மாணவர்களின் படிப்பு, திருமண விழாக்கள், மருத்துவச் செலவுகள் போன்றவற்றிற்கெல்லாம் பணம் தேவைப்படும்போது, உடனடியாக விவசாய இடத்தையோ, வீட்டையோ விற்க முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது. எனவே, நீதிமன்றத்திலே வழக்கு இருப்பதால். . .*

*பிற்பகல் 12–20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. மூர்த்தி, உரையை முடியுங்கள். (குறுக்கீடு)*

**திரு. பி. மூர்த்தி:** *இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை, உரையை முடியுங்கள். இன்னும் நிறைய உறுப்பினர்கள் பேசவேண்டும்.*

**திரு. பி. மூர்த்தி:** *இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வாய்ப்பு இல்லை. சீக்கிரம் முடியுங்கள். நேரமாகிவிட்டது.*

**திரு. பி. மூர்த்தி:** *நீதிமன்றத்திலே வழக்கு இருப்பதால், அரசு அதனை விரைவுபடுத்தி, வழக்கினை முடித்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், நிலம் வாங்கும், விற்கும் தொழிலை முறைப்படுத்தி, குழு அமைத்து, மக்களுக்குப் பயனுள்ளதாகவும், அரசுக்கு வரக்கூடிய வருமானம் இழப்பு இல்லாமலும் உடனடியாக தமிழகம் முழுவதும் பத்திரப் பதிவு செய்திட அரசு ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.*

*சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் நீதியரசர்கள் திரு. செல்வம், திரு. கலையரசன் ஆகியோர் 20–12–2016 அன்று தமிழகத்தின் தென் மாவட்டங்களில் 13 மாவட்டத் தலைநகரங்களிலுள்ள சீமைக் கருவேல முட்செடிகளை அகற்ற வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்துள்ளார்கள். எனவே, சம்பந்தப்பட்ட துறையின் மாண்புமிகு அமைச்சர்கள் தமிழகம் முழுவதுமுள்ள கண்மாய்கள், சாலை ஓரங்கள், நீர்நிலைப் பகுதி மற்றும் காலியிடங்களிலுள்ள சீமைக் கருவேல முட்செடிகளை*

[திரு. பி. மூர்த்தி] [2017 ஜனவரி 30

அகற்றி, நிலத்தடி நீரை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், உட்காருங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி, உட்காருங்கள்.

**திரு. பி. மூர்த்தி:** மாண்புமிகு முதல்வர் அவர்களின் குறுக்கீடு இருந்தது. அதனால் கொஞ்சம் நேரம் கொடுங்கள்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் இல்லை. திரு. சக்கரபாணி, நீங்கள் கேட்கிறீர்கள். இன்றைக்கு வாய்ப்பு குறைவாக இருக்கிறது. இன்றைக்குப் பேச வேண்டிய பத்து உறுப்பினர்களில் இன்னும் எட்டு உறுப்பினர்கள் பேசவேண்டும். (குறுக்கீடு) உங்கள் கட்சியில் இன்னோர் உறுப்பினர் பேசவிருக்கிறார். அவர் பேசும்போது, மீதமுள்ளவற்றைப் பேசட்டும். நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன் அவர்கள். (குறுக்கீடு) சரி, நன்றி சொல்லிவிட்டு உட்காருங்கள்.

***திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஜெயந்தி பத்மநாபன், ஒரு நிமிடம் பொறுங்கள். மாண்புமிகு உறுப்பினர் நீங்கள் நன்றி சொல்லிவிட்டு உட்கார வேண்டும். வேறு சப்ஜெக்ட் குறித்துப் பேசினால், வாய்ப்பு இல்லை. (குறுக்கீடு) வேறு புது சப்ஜெக்ட்டிற்குப் போகாதீர்கள். நன்றி சொல்லுங்கள். (குறுக்கீடு)

**திரு. எஸ். ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆஸ்டின், நீங்கள் உட்காருங்கள். உங்கள் சார்பாக கொறடா பேசுகிறார் அல்லவா? மாண்புமிகு உறுப்பினர் திரு. மூர்த்தி, நன்றி சொல்லுங்கள்.

**திரு. பி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி சம்பந்தமான கோரிக்கைகளை முன் வைக்கிறேன். மதுரை மாவட்டத்தில் 28 வார்டுகள் புதிதாக மாநகராட்சியோடு இணைக்கப்பட்டு 5 ஆண்டுகள் ஆகின்றன.



2017 ஜனவரி 30] [திரு. பி. மூர்த்தி]

அதிலே மதுரை கிழக்குத் தொகுதியில் 11 வார்டுகளும், கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுடைய தொகுதியிலே 2 வார்டுகளும், மதுரை வடக்குத் தொகுதியிலே 2 வார்டுகளும், திருப்பரங்குன்றத்தில் 13 வார்டுகளும் சேர்த்து, 28 வார்டுகளுக்கு 5 ஆண்டுகளாகியும் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. எனவே, உடனடியாக பாதாள சாக்கடைத் திட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜெயந்தி பத்மநாபன், பேசுங்கள். (குறுக்கீடு) போதும். மீதி ஏதேனும் கோரிக்கைகள் இருந்தால், எழுதிக் கொடுங்கள். நான் பதிவு செய்துகொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜெயந்தி பத்மநாபன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. மூர்த்தி, உட்காருங்கள். மீதியை எழுதிக் கொடுங்கள், நான் பதிவு செய்துகொள்கிறேன். அதனை சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு அனுப்பலாம். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜெயந்தி பத்மநாபன், நீங்கள் பேசுங்கள்.

**திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மூர்த்தி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) என்ன? நன்றி சொல்கிறீர்களா? நன்றி சொல்வதென்றால், அனுமதிக்கிறேன். வேறு புது சப்ஜெக்ட் எதையும் பேச முடியாது. (குறுக்கீடு) சரி, நன்றி சொல்லுங்கள்.

**திரு. பி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், மதுரை மாநகரில் மக்கள் தொகை அதிகமாகப் பெருகி வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, மதுரை சுற்றுச்சாலையுடன் உத்தங்குடி முதல் தனிச்சியம் வரையுள்ள சாலையையும் இணைத்து, போக்குவரத்து நெரிசலைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மீதமுள்ள என்னுடைய தொகுதிக் கோரிக்கைகளை சட்டப் பேரவைத் தலைவரிடம் கொடுத்துவிடுகிறேன். நிறைய கோரிக்கைகள் இருக்கின்றன. அவற்றை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு, நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**தொகுதிக் கோரிக்கைகள்:**

*ஊராட்சி ஒன்றியத்திற்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்த வேண்டுமென்ற இலக்கில், மதுரை மேற்கு ஒன்றியத்திலுள்ள காஞ்சரம்பேட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்டதாகத் தரம் உயர்த்திட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை–திண்டுக்கல் சாலை மற்றும் மேலூர்–மதுரை சாலை ஆகிய இரு சாலைகளும் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்த இரு சாலைகளையும் இணைக்க வேண்டுமென்றால், ஒத்தக்கடை–சமயநல்லூர் சாலை புதிதாக அமைக்கப்பட வேண்டும். இதற்கான நடவடிக்கை மாநில அரசின் தேசிய நெடுஞ்சாலை அலகுமூலம் எடுக்கப்பட்டு வருகிறது. மத்திய அரசுக்கு தகுந்த முன்மொழிவு அனுப்பி, ஒப்புதல் பெறப்பட்டபின் பணி தொடங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட 17 உள்ளாட்சி அமைப்புகளுக்கு பாதாள சாக்கடைத் திட்டம் அமைப்பதற்கு 514 கோடி ரூபாய் மதிப்பில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*பிற்பகல் 12–25*

*அதேபோல, குடிநீர்ப் பிரச்சினை குறித்து நான் நேற்றைக்குப் பேசும்பொழுதே பதில் சொல்லியிருந்தேன். கிட்டத்தட்ட 142*





*வருடங்களுக்குப் பின்னால் இவ்வளவு பெரிய வறட்சி ஏற்பட்டுள்ளது. துறை அமைச்சர் என்ற முறையிலே, அதனை ஆய்வு செய்து, அந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலும் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டு, அறிவுரைகள் வழங்கப்பட்டன. அதேபோல, துறையின் அமைச்சர் என்ற முறையில் நானும், 25–11–2016, 3–1–2017, 6–1–2017 மற்றும் 24–1–2017 ஆகிய நாட்களில் நடைபெற்ற கூட்டங்களில் மதுரை மாநகராட்சியின் ஆணையர், மதுரை மாநகராட்சியினுடைய திட்ட அலுவலர் போன்ற அதிகாரிகள் அனைவரையும் அழைத்து, ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, தேவையான அளவிற்கு மதுரை மாவட்டத்திற்கு நிதி வழங்கப்பட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க போர்க்கால அடிப்படையில் இன்றைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், நேரமில்லாததால் தாங்கள் சுருக்கமாகப் பதிலை அளிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.*

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் சுருக்கமாகப் பேசி முடித்துவிடுகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசானது, தமிழகத்தில் எப்போதெல்லாம் வறட்சி வந்திருக்கிறதோ, அப்போதெல்லாம் உரிய நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. வறட்சி, புயல், மழை போன்றவற்றால் மக்கள் பாதிக்கப்படும்போது, பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் உரிய நிவாரணத்தை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு வழங்கியிருக்கிறது; தேவையான உதவிகளைச் செய்து வந்திருக்கிறது. தற்போதும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அதைத்தான் செய்து கொண்டிருக்கிறது.*

*தேசிய வங்கிகளில் வாங்கிய கடன்களை இரத்து செய்ய வேண்டுமென்று இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. மூர்த்தி அவர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே அவர் சார்ந்திருக்கும் கட்சிதான் ஐந்து முறை தமிழகத்தில் ஆட்சியில் இருந்திருக்கிறது. மத்திய அரசிலும் அவரது கட்சியைச் சார்ந்தவர்கள் அமைச்சர்களாக இருந்திருக்கிறார்கள். (குறுக்கீடு) உங்கள் ஆட்சிக் காலத்திலும் நீங்கள் தள்ளுபடி செய்திருக்கிறீர்கள்.*

[திரு. செல்லூர் கா. ராஜு] [2017 ஜனவரி 30

ஆனால், இதுபோன்று அப்போது நீங்கள் செய்திருக்கிறீர்களா? அதுபோன்று தேசிய வங்கிகளில் வாங்கிய கடன்களைத் தள்ளுபடி செய்ய முடியுமா? மாநில அரசுக்கு அந்த உரிமை இருக்கிறதா? அதுபோன்று செய்ய முடியுமா? முடியாது. எனவே, அது மத்திய சர்க்கார் எடுக்க வேண்டிய நடவடிக்கை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கோரிக்கையை மாற்றிக்கொள்ள வேண்டும். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எல்லா நேரங்களிலும் தேவையான உதவிகளைச் செய்திருக்கிறது. இந்திய வரலாற்றில் வறட்சிக்கு நிவாரணம் வழங்கிய ஒரே முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் தவிர வேறு யாருமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் ஆட்சியில்கூட அவ்வாறு கொடுத்தது கிடையாது; யாரும் அதுபோன்று கொடுத்தது கிடையாது. மேலும், 'உழுபவன் கணக்குப் பார்த்தால், உழக்குகூட மிஞ்சாது' என்று அவர் சொன்னார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர், சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** அதற்காகத்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் நிறைய திட்டங்களைக் கொடுத்திருக்கிறார்கள். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளைக் காக்கின்ற அரசாகவும், அவர்களுடைய காவல் தெய்வமாகவும் இருக்கின்ற அரசு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு வறட்சி பாதித்த பகுதிகளிலுள்ள மக்களிடமிருந்து கோரிக்கை வந்தவுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அமைச்சர்களையும், மூத்த அதிகாரிகளையும் அழைத்து, வறட்சியால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டு, உடனடியாக அறிக்கையை வாங்கி, உடனே தமிழகத்தை வறட்சி மாநிலமாக அறிவித்தார். வறட்சி மாநிலமாக அறிவித்ததோடு மட்டுமல்லாமல், நிவாரணத் தொகையும் அளித்துள்ளார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புதிய பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், 410 கோடி ரூபாய்க்கு அந்த பயிர் காப்பீட்டுத் திட்டத்திற்கு நிதியை



2017 ஜனவரி 30] [திரு. இரா. துரைக்கண்ணு]

அளித்துள்ளார்கள். அதையும் சேர்த்து, நீங்கள் கோரியிருக்கிற, 25,000 ரூபாய்க்கும் அதிகமாகவே நிவாரணம் கிடைக்க வாய்ப்புள்ளது. எனவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு என்றைக்கும் விவசாயிகளின் காவல் தெய்வமாக இருக்கும் அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன் அவர்கள்.

**திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் இருக்கும் நாமெல்லாம் வரலாறு படித்தவர்கள். புரட்சித் தலைவி அம்மாவோ வரலாறு படைத்தவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களே! தமிழ்நாட்டின் தேசிய கீதம் நீர்! அதனால்தான் நீங்கள் வந்ததும் நாங்கள் எழுந்து நின்றோம். தமிழக அரசியல் அதிகாரம் என்னும் கடிகாரத்தில் பேரறிஞர் அவர்கள் பெரிய முள்; மக்கள் திலகம் சிறிய முள்; தமிழக மக்களுக்காகவே நொடிக்கு நொடி உழைத்து மறைந்த வினாடி முள் அம்மா அவர்கள் மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு நாளில் A.M. உண்டு, P.M. உண்டு; A.M. பார்க்காமல், P.M. பார்க்காமல் மக்களுக்காகவே உழைத்த ஒரே C.M. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழரை கோடி தமிழ் மக்களுக்கும், உலகமெங்கும் வாழும் 20 கோடி தமிழ் மக்களுக்கும் அரணாய், தங்கத் தாரகையாய், உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தெய்வமாய், நல்லாட்சிக்கு இலக்கணமாய்த் திகழ்ந்து இன்று நம்மையெல்லாம் விண்ணுலகத்திலிருந்து காத்துவரும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்ற கர்ஜனைக் குரலின் ரீங்காரம் இன்றும் இந்த அவையின் நாற்புறமும் ஒலித்துக்கொண்டிருக்கும் வேளையில், இந்த அவையின் எளிய உறுப்பினரான எனக்கு மேதகு ஆளுநர் அவர்கள் இந்த அவையில் ஆற்றிய உரைமீது

[திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்] [2017 ஜனவரி 30

பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஜல்லிக்கட்டு, தமிழக மக்களின் பாரம்பரிய உரிமை என்பதை உணர்த்தும்வகையில், ஜல்லிக்கட்டுக்காக மல்லுக்கட்டிய எங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மாவின் வடிவில், அம்மாவின் உருவாய், அம்மாவின் நிழலாய், அம்மாவைப் போன்ற அன்பைப் பெற்றவராய், அறிவைப் பெற்றவராய், துணிவைப் பெற்றவராய், ஆற்றலைப் பெற்றவராய், இனிமை குணத்தைப் பெற்றவராய், ஈகை குணத்தைப் பெற்றவராய், உண்மையாய், உழைப்பாளியாய் எங்களையெல்லாம் வழிநடத்தும் தாயாய், பாசமிகு தாயாய், நேசமிகு தாயாய், ஒன்றரை கோடி தொண்டர்களுக்கெல்லாம் காவல் தெய்வமாய், கழகத்துக்குப் பாதுகாவலராய், அரசுக்கு பீஷ்மராய், எதிரிகளுக்கு சிம்ம சொப்பனமாய், எங்களின் இதயங்களில் வீற்றிருக்கும் மதிப்பிற்குரிய சின்னம்மா அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) எனது குடியாத்தம் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டின் ஒப்பற்றத் தலைவராக 30 ஆண்டுகளுக்கும் மேலாக, மாநில மக்களின் தமிழ் இனத்தின் உரிமைகளுக்குப் போராடிய துணிவும், அயராத உழைப்பும் பெற்ற மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள், மண்ணைவிட்டு மறைந்தாலும் மக்கள் மனங்களைவிட்டு மறையாத அவர்களின் கனவை நனவாக்க தொடர்ந்து இந்த அரசு பாடுபடும் என்ற மேதகு ஆளுநர் அவர்களின் உரை வரலாற்றுச் சிறப்புமிக்கதாக அமைந்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை இழந்து, நாம் தாய் இல்லாத பிள்ளைகளாக மீளாத் துயரில் தவித்துக் கொண்டிருந்த வேளையில், மக்களின் துயர்துடைக்க மாண்புமிகு அம்மாவின் வழியில் செயல்படும் இந்த அரசு, மாண்புமிகு அம்மா அவர்களால் துவங்கப்பட்ட மாநில அளவிலான 5 இயக்கங்களையும், 11 சிறப்பு நோக்கு பெருந்திட்டங்களையும் செயல்படுத்தி அதே பாதையில் தொடர்ந்து



2017 ஜனவரி 30] [திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்]

பயணித்து மாநிலத்தின் மேம்பாட்டிற்கு வழிவகுக்கும் என்று மேதகு ஆளுநர் உரைத்துள்ளது மக்களின் வரவேற்பைப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டிசம்பர் 6 இந்திய வரலாற்றில் ஒரு கருப்பு தினமாக உள்ளது. தற்போது டிசம்பர் 5–ம் மாண்புமிகு அம்மா அவர்களை நம்மிடமிருந்து பிரித்து உலக வரலாற்றில் ஒரு கருப்பு தினமாக மாறியுள்ளது. "தனக்காகவே வாழ்பவர், தன் குடும்பத்திற்காகவே வாழ்பவர் மத்தியில், மக்களுக்காகவே வாழ்ந்து அனுதினமும் மக்களின் நலன்களுக்காகவே (மேசையைத் தட்டும் ஒலி) புதிய திட்டங்களைத் தீட்டி தன் வாழ்நாள் முழுவதும் சாதனைகளைப் படைத்து மண்ணுலகை ஆண்டதுபோதும் என்று விண்ணுலகை ஆளச் சென்றீரோ?" என்று ஒட்டுமொத்த தமிழக மக்களும் கண்ணீர் வடித்து அழுது புலம்பி, தன் வீட்டில் ஒரு அப்பா, அம்மா, சகோதரன், சகோதரி, பிள்ளை மரணித்தால் எந்த ஒரு மனநிலையில் இருப்போமோ, அதே மனநிலையில் ஒவ்வொரு தமிழனும், இந்தியனும், ஏன்; அரசியல் எதிரிகள்கூட பகைமையை மறந்து இரங்கற் பா பாடினர். அப்போது ஒரு கவிஞரின் ஆத்மாவின் பாடல் என்ற வரிகளில்

ஜனனமும் பூமியில் புதியது இல்லை;
மரணத்தை போலொரு பழையது இல்லை;
இரண்டும் இல்லாவிடில் இயற்கையும் இல்லை;
இயற்கையின் ஆணைதான் ஞானத்தின் எல்லை;
பாசம் உலாவிய கண்களும் எங்கே?
பாய்ந்துத் துழாவிய கைகளும் எங்கே?
தேசம் அளாவிய கால்களும் எங்கே?
தீ உண்ட தென்றது சாம்பலும் எங்கே?
கண்ணில் தெரிந்தது காற்றுடன் போக;
மண்ணில் பிறந்தது மண்ணுடன் சேர்க;
எலும்பு சதை கொண்ட உருவங்கள் போக;
எச்சங்களால் அந்த இன்னுயிர் வாழ்க;
கடல் தொடும் ஆறுகள் கலங்குவதில்லை;
தரை தொடும் தாரைகள் அழுவதும் இல்லை;

நதி மழை போன்றதே விதியென்று கண்டும்;
மதி கொண்ட மானுடர் மயங்குவதென்ன?
வேதம் சொல்லாததை மரணங்கள் கூறும்;
விதை ஒன்று வீழ்ந்திடில் செடி வந்து சேரும்;
பூமிக்கு யாம் ஒரு யாத்திரை வந்தோம்;
யாத்திரை தீருமுன் நித்திரை கொண்டோம்;
நித்திரை போவது நியதி என்றாலும்;
யாத்திரை என்பது தொடர்கதையாகும்;
மாண்டவர் சுவாசங்கள் காற்றுடன் சேர்க;
தூயவர்க் கண்ணொளி சூரியன் சேர்க;
பூதங்கள் ஐந்திலும் பொன்னுடல் சேர்க;
போனவர் புண்ணியம் எம்முடன் சேர்க;"

என்ற வரிகளை நினைவில் நிறுத்தி நமக்கு ஆறுதல் கூறிக்கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் கட்டளைகளை சிரம் ஏற்று மக்கட் பணியாற்ற சூளுரைத்துப் பணியாற்றும் இந்த அரசு என்பது மேதகு ஆளுநர் அவர்களின் உரையில் நாம் அறிகிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் பாரம்பரியம் ஜல்லிக்கட்டு. தமிழ்நாட்டில் பாரம்பரிய மாடுகள் பல உண்டு. அவை மீ கொங்கா என்றும், தற்போது காங்கேயம் காளை என்றும் அழைக்கப்படுகின்ற மேக்காட்டு மாடு; மா கொங்கா என்றும், தற்போது திருச்செங்கோடு காளை என்றும் அழைக்கப்படுகின்ற கீழ்க்காட்டு மாடு; செம்மரை என்றும் தற்போது பர்கூர் காளை என்றும் அழைக்கப்படுகின்ற மலையான் மாடு; பாலமலை மாடு என்று அழைக்கப்படுகின்ற மலையாள கவுண்டன் காளை; அலம்பாடி என்று அழைக்கப்படுகின்ற மேல காவேரி காளை; கொல்லிமலையில் காணப்படுகின்ற கொங்கா (சின்ன காங்கேயம்) காளைகள்; வடகரை காளை என்று அழைக்கப்படுகின்ற சோழிய வடகரை மாடுகள்; கோனாடன் என்று அழைக்கப்படுகின்ற மணப்பாறை காளைகள்; தஞ்சாவூர் மொட்டை காளை என்று அழைக்கப்படுகின்ற உம்பளச்சேரி காளை; சிவகங்கை காளை என்று அழைக்கப்படுகின்ற இருச்சாளி காளை; கோணார் காளைகள் என்று அழைக்கப்படுகின்ற புள்ளிகுளம் ஜல்லிக்கட்டு





காளைகள்; தேவாரு அவு என்று அழைக்கப்படுகின்ற கப்பிலிய கவுண்டர்களின் தம்பிரான் மாடு; தென்பாண்டி சிங்கத் தமிழர்களின் தென்பாண்டி காளை மற்றும் திருநெல்வேலி மலை மாடு; வன்னிய குல க்ஷத்திரியர்களின் தொண்டைநாடு காளை; துரிஞ்சி தழைகளை மட்டுமே ஊட்டி வளர்த்த துரிஞ்சி தழை காளை, புங்கனூர் காளை என்று அழைக்கப்படும் சித்தூர் காளை; நாட்டான் காளை என்று அழைக்கப்படும் பெரம்பலூர் மொட்டை மாடு; இன்னும் பெயர் மறந்து, பெயர் மருவிப் போன பல பாரம்பரிய நாட்டு மாடுகளை பாதுகாக்க வேண்டும் என்பதே ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்தின் குரலாகும்.

மேதகு ஆளுநர் அவர்கள் தனது உரையில் ஜல்லிக்கட்டு மற்றும் அதன் மாண்பைத் தெரிவித்ததும், அதன் தொடர்ச்சியாக ஜல்லிக்கட்டை நிரந்தரமாகத் தமிழ்நாட்டில் விளையாட வகை செய்யும் சட்டமுன்வடிவு இந்த அவையில் தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் இருந்திருந்தால், எந்த நடவடிக்கை எடுத்திருப்பாரோ, அதுபோன்ற ஒரு நடவடிக்கையை (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக அரசின் சார்பாக காலத்தில் எடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அரசுக்குத் துணையாக இருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் மதிப்பிற்குரிய சின்னம்மா அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) எடுத்ததன்பேரில் அதற்கு ஆதாரமாக களம் இறங்கி அறப்போராட்டம் மேற்கொண்ட இளைஞர் சமுதாயம், மாணவர் சமுதாயம், தாய்மார்கள், உலகத் தமிழர்கள் அனைவருக்கும் இந்தத் தமிழ்நாடே நன்றி பாராட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் *12–35*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் தலைமையிலான கடந்த ஐக்கிய முற்போக்கு அரசில் பங்கு கொண்டு Prevention of Cruelty to Animals Act–ல் ஜல்லிக்கட்டுக்கு எதிரான சட்டத் திருத்தம் செய்யும்போது அதற்கு ஆதரவு அளித்து, பின்னர் தற்போது அரசு சட்டத் திருத்தம் மேற்கொள்ளும்போது முதலைக் கண்ணீர் வடிப்பவர்களை இந்த தமிழ்ச் சமூகம் அடையாளம் கண்டுகொண்டுவிட்டது. (குறுக்கீடு) (மேசையைத் தட்டும் ஒலி)

[2017 ஜனவரி 30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள், மாண்புமிகு உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார்.

**திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்:** ஜல்லிக்கட்டு என்பதை வெறும் பொழுதுபோக்கு விளையாட்டாக மட்டும் பாராமல், நமது தமிழ்ச் சமூகத்தின் ஒரு பாரம்பரிய அங்கமாய்ப் போற்றி. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள்; உறுப்பினர் உரையை முடிக்கட்டும். பேசலாம்.

**திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்:** அம்மாவின் அரசு எடுத்த நடவடிக்கையை, வழக்கம்போல் பிற மாநில அரசுகளும் பின்பற்றி, அவர்களது கலாச்சாரத்தைப் பாதுகாக்கத் துவங்கியுள்ளனர் என்பது. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் பேசி முடித்தவுடன் பேசலாம்; உட்காருங்கள்.

**திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்:** அம்மா அவர்களின் ஆட்சியின் சட்டத்தின் மற்றொரு வெற்றியாகும். (மேசையைத் தட்டும் ஒலி). . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் உரையைப் பேசி முடித்தவுடன் பேசலாம்; உட்காருங்கள்.

**திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் தனது உரையில், "மத்திய அரசின், குறிப்பிட்ட ரூபாய் நோட்டுக்கள் செல்லாது என எடுத்த முடிவு இந்தியப் பொருளாதாரத்தில் நீண்ட காலப் பலனை ஏற்படுத்தினாலும், விவசாயிகள், சிறு வியாபாரிகள் உள்ளிட்ட அமைப்பு சாராத் தொழில்களில் இதன் பாதிப்பு எதிர்ப்பார்த்ததைவிட நீடித்து இருக்க வாய்ப்புள்ளது, இந்த முடிவால் மாநிலங்களின் வரி வருவாய் வளர்ச்சி விகிதம் கடந்த சில மாதங்களில் குறைந்து, அதனைச் சமாளிக்க அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு Central Government's subsidised திட்டங்களுக்கு மத்திய அரசின் பங்கினை 60% முதல் 90% ஆக உயர்த்தக் கோரியுள்ளது" என்றும் குறிப்பிட்டுள்ளார். இது தமிழகம் பிற மாநிலங்களுக்கு முன்னோடி என்பதைப் பறைசாற்றுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)



2017 ஜனவரி 30] [திருமதி சி.ஜெயந்தி பத்மநாபன்]

சரக்கு மற்றும் சேவை வரி என்பதை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மிகவும் கவனத்தோடு கையாண்டு வருகிறது. GST—ன் தேவையை உணர்ந்துகொள்ளும் அதே வேளையில், மாநிலங்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பு மற்றும் மாநிலத்தைப் பாதிக்கக்கூடிய பிற முக்கிய கருத்துகளையும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொடர்ந்து மத்திய அரசிடம் வலியுறுத்தியதன் விளைவாக, தற்போது நமது கருத்துகளை ஏற்றுக்கொண்டு GST—ல் சில மாற்றங்களைச் செய்திருப்பது நமது மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய முயற்சிக்குக் கிடைத்த வெற்றி என்பதை இந்த அவையில் பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளேன். மேலும், மேதகு ஆளுநர் அவர்களின் உரையில், GST செயல்முறையில் வரும்பொழுது மாநில அரசுகளுக்கு ஏற்படும் இழப்பினை, 2015—2016 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு, ஆண்டிற்கு 14% வளர்ச்சியைக் கணக்கிட்டு, அதன் அடிப்படையில் 5 ஆண்டுகளுக்கு முழுமையாக ஈடு செய்ய உறுதியளிப்பு; GST நிருவாகத்தில் மாநில அரசுகளுக்கு சம உரிமை ஆகிய மத்திய அரசின் உத்தரவாதங்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய முயற்சிக்குக் கிடைத்த வெற்றிக்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கு வாழ்த்துப் பாடல் பாட வேண்டிய நாம், இன்று இரங்கற் பா பாட வேண்டிய கடினமான சூழ்நிலை.

"ஆயிரம் ஆயிரம் ஆடவர் கூட்டம் அலை அலையார் சூழினும், தனியொரு தலைவியாய் தலை நிமிர்ந்த வீர நடை! ஆணாதிக்க அரசியலில் பெண் சிங்கமாய்ப் பவனி வந்தாய்! எதிரணியில் இருப்போரையும் உன் செல்வாக்கைக் கண்டு ஏங்கச் செய்தாய்! மலை போன்ற கூட்டணிகளை மக்கள் துணை கொண்டு எதிர்க்கும் உன் திறம் கண்டு, "அம்மான்னா கெத்து" என்று சொல்லாத ஒரு தமிழனும் இங்கில்லை, (மேசையைத் தட்டும் ஒலி) சொல்லாதவன் தமிழனே இல்லை; தமிழகத்தின் தனிச் செருக்கே, இன்று தன்னந்தனியே சென்றதெங்கே? தமிழகத்தின் தனிச் செருக்கே, இன்று தன்னந்தனியாக சென்றதெங்கே?" "தமிழின் தலைமகளே! உன் தலை சாய்ந்ததோ! தமிழ்ப் பேசும் சிங்கமே! இனி உன் கர்ஜனையை எங்கு கேட்போம்! முகம் மலர்ந்து கையசைத்து நீ வீசும் பச்சிளம் புன்சிரிப்பை இனி எங்கு காண்போம்? உன் கண்கள் பனித்த கடைசி மணித்துளியில், மார்பணைக்கத் தாயில்லை; தலைக்கோத தந்தை இல்லை; கன்னம் வருட மகளில்லை; தோள் சாய மகனில்லை என்று ஒரு வேளை

[திருமதி சி.ஜெயந்தி பத்மநாபன்] [2017 ஜனவரி 30

எண்ணியிருப்பீரோ? நீர் தனி மரம் இல்லை, அம்மா! நின் வியர்வைத் துளிகள் உதிர்த்த இடமெங்கும் உன் பிள்ளைகள் பூத்துக் குலுங்குவதைப் பார்; உன் வலிகளை உள்வாங்கி உன்னை இழந்து புழுவாய்த் துடிக்கும் உன் மக்களைப் பார்; உன் இடம் இனி நிரப்பப்படப்போவதில்லை. உன் நினைவு எங்களை விட்டு விலகப்போவதும் இல்லை. நீர் எங்கள் சரித்திரம். தமிழனின் தாரக மந்திரம். "உம் உயிர் பிரியலாம்; உம் திட்டங்கள் மக்களை விட்டுப் பிரியாது" என்ற ஒரு கவிஞரின் வரியை நினைவில் நிறுத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) GST—ல் மத்திய அரசு அளித்துள்ள உத்ரவாதம் என்பது தமிழகத்திற்கு மட்டும் அல்ல; அனைத்து மாநிலங்களுக்கும் மாண்புமிகு அம்மா அவர்களால் கிடைத்த பெருமை என்பதை இந்த சபையில் பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் உரிமைகளைக் காப்பாற்ற தொடர் சட்டப் போராட்டம் கண்டு, முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை முதற்கட்டமாக 142 அடியாக உயர்த்திய பெருமை, நமது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) அன்னையின் வழியில் தொடர்ந்து இந்த அரசு பயணித்து, அதன் முழுக் கொள்ளளவான 152 அடி நீர்மட்டத்தை மேலும் உயர்த்தத் தேவையான முயற்சிகளை மேற்கொள்ளும் என அறிவித்துள்ளது, தென் தமிழக விவசாயிகளின் வயிற்றில் பால் வார்த்தது போல் உள்ளது. மேலும் காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை, மத்திய அரசிதழில் அறிவிக்கச் செய்து, காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நதிநீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை மத்திய அரசு அமைக்க வேண்டும் என்றும், உச்ச நீதிமன்றத்தில் ஆணையைப் பெற்று தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டிய பெருமை, காவேரி நீரைப் பெற்று தந்த வெற்றித் தாய், மாண்புமிகு அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் இந்த அரசும் அதே அழுத்தத்தை மத்திய அரசுக்குக் கொடுத்து காவேரி நீரை விரைவில் நிரந்தரமாகப் பெற்றுத் தரும் என்ற நம்பிக்கையை ஆளுநர் உரை அளிக்கின்றது.

பிற்பகல் 12—40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'எத்தனைக் காலம் மனிதன் வாழ்ந்தான் என்பது கேள்வி இல்லை;



2017 ஜனவரி 30] [திருமதி சி.ஜெயந்தி பத்மநாபன்]

அவன் எப்படி வாழ்ந்தான் என்பதை உணர்ந்தால் வாழ்க்கையில் தோல்வியில்லை' என்ற வைர வரிகளை நெஞ்சில் நிறுத்தி, அனுதினமும் மக்களுக்காகவே திட்டங்களைத் தீட்டி, நாட்டிலேயே முதன்மை மாநிலமாகத் தமிழகம் திகழ வேண்டுமென்று எண்ணியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவரின் இந்த இலட்சியக் கனவை நனவாக்க, உன்னத இலட்சிய நோக்கங்களையும், இலக்குகளையும் உள்ளடக்கிய "தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023 – VISION 2023" ஆவணத்தை அவர் வகுத்துத் தந்துள்ளார். அந்த உன்னத இலக்கை அடைய தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம், தமிழ்நாடு உட்கட்டமைப்பு நிதி மேலாண்மைக் கழகத்தை நமக்காக உருவாக்கித் தந்துவிட்டு, தரணியாள அவதரித்த அந்த அற்புதப் பழம் இன்று அமர உலகின் அவதார விருட்சமாய் மறைந்து, தன் திட்டங்களால் ஆயிரமாண்டுகள் கழிந்தாலும், அழியாத மூவெழுத்து மந்திரமாய் வாழ்ந்துவரும் அம்மா அவர்களின் இந்த அரசு, அம்மா அவர்களுடைய இலக்கை சீரிய முறையில் அடையும் என்ற நம்பிக்கையை மேதகு ஆளுநரின் உரை நமக்கு உரைக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன், உரையை முடியுங்கள்.

**திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்:** மேலும் வரலாறு காணாத பெரு மழையானாலும் சரி, 'வர்தா' போன்ற பெரும் புயலானாலும் சரி; 'Disaster Management'—ல் இந்த அரசுக்கு நிகர் இந்த வையகத்தில் இல்லை என்பதை அனைவரும் அறிவர். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மிகவும் உள்ளம் கவர்ந்த பணியான மரம் நடுதல், பசுமைப் போர்வை அதிகரித்தல் போன்றவை அடங்கிய 'மரம் நடும் பெருந்திட்டத்தை' மாண்புமிகு அம்மா அவர்களின் 69—வது பிறந்த நாளான 24—2—2017 அன்று துவக்கப்படும் என்று அறிவித்துள்ளது, 'கூற்றாண்டு வென்ற மார்கண்டேயன் போல, பல நூற்றாண்டு வென்று வாழும் குறள் நூல் போல', அம்மா அவர்களுடைய புகழ் அவனி உள்ளவரை நிலைத்திருக்கும் என்று இவ்வுலகிற்கு உரைப்பதுபோல உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னொரு சந்தர்ப்பத்தில் பேசலாம். நீங்கள் நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெள்ள நிவாரணமாக இருந்தாலும், வறட்சி நிவாரணமாக இருந்தாலும் முதலில் மக்களைச் சந்தித்து குறைகளைத் தீர்ப்பது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி மட்டுமே. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாணவர்கள் தங்களது பெயருக்கு முன் தாய், தந்தை ஆகிய இருவரின் பெயரைத் தலைப்பெழுத்தாகப் போடலாம் என்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவிப்பு; உலக அரங்கில் தமிழ்த் தாயைத் தலை நிமிரச் செய்தது என்பதை இந்த அவையில் பதிய நான் கடமைப்பட்டுள்ளேன். மேலும், தங்கள் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குக் கீழ்க்கண்ட கோரிக்கைகளை வைக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

மறைந்தும், மறையாமல் மக்கள் மனதில் வாழ்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பிறந்த தினமான பிப்ரவரி 24 ஆம் தேதியை 'வளரிளம் பெண்கள் தினமாக' அறிவிக்க வேண்டும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருப்பெயரை, அவர் வாழ்ந்து வந்த 'வேதா இல்லம்' அமைந்திருக்கும் போயஸ் சாலைக்குச் சூட்ட வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை அரசு பன்னோக்கு மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரிக்கு (Government Multi Super Speciality Hospital & Medical College, Chennai) மற்றும் சென்னை பல்கலைக்கழகத்திற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பெயரை வைக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை பல்கலைக்கழகத்தில் உள்ள Women Studies Department–ல் மாண்புமிகு அம்மா அவர்களின் வாழ்க்கை வரலாற்றை ஆராய்ச்சிப் பாடமாக சேர்க்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் வாழ்க்கை வரலாற்றை நமது அரசு பாடத் திட்டத்தில் மட்டுமல்லாமல், அனைத்திந்திய பாடத் திட்டத்திலும் பாடமாகச் சேர்க்க வேண்டும்.





அம்மா அவர்களின் வாழ்க்கையைத் திரைப்படமாக தமிழக அரசே உருவாக்கி வெளியிட வேண்டும். மறைந்த முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் துவங்கப்பட்ட தமிழ்நாடு விளையாட்டுப் பல்கலைக்கழகத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் பெயரை சூட்டி, அந்தப் பல்கலைக்கழகத்தில் தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகளான (மேசையைத் தட்டும் ஒலி) ஜல்லிக்கட்டு, ரேக்ளா, சேவல் சண்டை, சிலம்பு மற்றும் கம்பு சண்டை போன்ற தமிழர் வீர விளையாட்டுகளைப் பாடத் திட்டமாகச் சேர்க்கக் கோருகிறேன். தமிழர் பாரம்பரிய விளையாட்டுக்கென தனி அரசுத் துறையை ஏற்படுத்த கோருகிறேன். தமிழர் பாரம்பரிய விளையாட்டு வீரர்களை அரசு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளித்து. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உரையை முடியுங்கள்.

**திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்:** அவர்களை அரசுப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் நியமித்து, மாணவ, மாணவியர்களுக்குத் தமிழர் பாரம்பரிய விளையாட்டுகளைப் பயிற்றுவிக்க சிறப்பு வகுப்புகள் நடத்திட கோருகிறேன்.

பிற்பகல் 12–45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அம்மா இன்று நம்மிடையே இல்லை என்று யார் சொன்னது? அம்மா நமது கழகமாக இருக்கிறார்; அம்மா நமது அரசாக இருக்கிறார்; அம்மா தமிழகத்தின் திட்டங்களாக இருக்கிறார்; அம்மா தமிழக மக்களின் இதயங்களில் இருக்கிறார்; மாண்புமிகு அம்மா அவர்களின் வாழ்க்கை தமிழகப் பெண்களுக்கு மட்டுமல்ல; இந்தியப் பெண்களுக்கு மட்டுமல்ல; உலகப் பெண்களுக்கே ஒரு பாடம்; ஒரு வரலாறு; ஒரு தூண்டுகோல்; ஒரு ஆதர்சம்; ஒரு எடுத்துக்காட்டு; ஒரு வழிகாட்டி; ஒரு திசைகாட்டி; அம்மா ஒரு துருவ நட்சத்திரம்; அம்மா ஒரு வெற்றி பாதை; அம்மா ஒரு கல்வெட்டு என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

குடியாத்தத்தில் பன்றிக் காய்ச்சலால், பறவைக் காய்ச்சலால் ** என்று மாண்புமிகு தி.மு.க. உறுப்பினர் கூறியதுபோல் பாதிப்பில்லை.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்த விவரங்கள் வேண்டாம். நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மருத்துவ முகாமை அமைத்து, அங்கு இருக்கக்கூடிய மக்களுக்கு மிகப் பெரிய பாதுகாப்பையும், சுகாதாரத்தையும் உடனிருந்து வழங்கி நேரடியாக 2 நாட்களும் அங்கேயே இருந்து பார்த்ததன் காரணமாக, நான் இந்த அவையிலே பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளேன். மக்களுக்காக இயங்குகிற ஆட்சிதான், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அம்மாவினுடைய ஆட்சி. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் அந்தத் தொகுதியைச் சார்ந்த உறுப்பினர்; நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்; நீங்கள் உட்காருங்கள்.

**திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்:** அதிலே தி.மு.க. என்றோ, மற்ற கட்சிகள் என்றோ வேற்றுமைப்படுத்தி பிரித்துப் பார்க்கும் ஆட்சி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி கிடையாது. அனைவரும் பாதுகாப்பாக இருக்கக்கூடிய ஆட்சி. இவர்கள் சொல்வது போன்று 23 பேர்களும் மருத்துவமனையில் அனுமதிக்கப்படவில்லை. ஏனென்றால், ** (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் பேசுகிறார். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்:** அனைவரும் பாதுகாப்பாக இருக்கிறார்கள் என்பதைப் பதிவு செய்து வாய்ப்புக்கு நன்றி கூறி, அமர்கின்றேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர், அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள். (குறுக்கீடுகள்) நீங்களெல்லாம் வழி காட்டக் கூடாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. எச். வசந்தகுமார், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) அதெல்லாம் நான் சொல்கிறேன். உட்காருங்கள். நீங்கள் உங்கள்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) திரு. எச். வசந்தகுமார், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. எச். வசந்தகுமார், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரையில், பெருந்தலைவர் காமராஜரின் தொண்டனான எனக்கு இந்த அவையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த நாங்குநேரி தொகுதி மக்களுக்கும், அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், இளந்தலைவர் ராகுல் காந்தி அவர்களுக்கும் எனது இதயம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீர் இல்லையேல் உலகமே இல்லை; வான் இல்லையேல் மழையே இல்லை. நீர்தான் இப்போது பிரச்சினை நமக்கு. அதற்கு, நமது தமிழக முதலமைச்சர் அவர்கள் இன்று ஒரு செய்தியை அறிவித்திருக்கின்றார்கள். குடிநீர்ப் பிரச்சினையை உடனடியாக கவனிக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்ததோடு, அதிகாரிகளும் ஒத்துழைக்க வேண்டும்; இல்லையேல் என்ற ஒரு சொல்லும் இருக்கின்றது. எங்கள் மாவட்டத்தில், நாங்குநேரி தொகுதியைப் பொறுத்த வரையில் தமிழக அரசு அதிக நிதி அங்கே ஒதுக்கினால், எங்கள் பகுதி அதிகாரிகள் உடனடியாக செய்து கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். இந்த நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொது மக்களின் பங்களிப்புடன் நீர் ஆதார மேலாண்மையை மேற்கொள்வதுடன், குடிமராமத்துத் திட்டத்தை இந்த அரசு விரைவில் தொடங்கவிருப்பது பாராட்டுதற்குரியது. அந்தந்தப் பகுதியில் இருக்கின்ற பண வசதி படைத்தவர்களும் தமிழக அரசிற்கு ஒரு பகுதியைக் கட்டி, குடிநீரை அங்கே தேவைக்கேற்ப எடுக்கின்ற ஒரு வாய்ப்பினைத் தருகின்ற நல்ல திட்டம்; அதை நான் பாராட்டுகிறேன்.

அதற்கும்மேலாக, நாங்குநேரி தொகுதி, கீழநத்தம் ஊராட்சி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக இடத்தில் உலகத் தரம் வாய்ந்த விளையாட்டு கிராமம் அமைத்திட தமிழக அரசு 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்திருப்பதாக, இப்பேரவையில் மாண்புமிகு பள்ளிக் கல்வித்

துறை அமைச்சர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள் கடந்த 27–1–2017 அன்று அறிவித்தார்கள். அதற்காக நெஞ்சார்ந்த நன்றியினை தொகுதி மக்களின் சார்பாகவும், இளைஞர்கள் சார்பாகவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திலிருந்து அந்த proposal வந்திருக்கிறது. அதை மாநில அரசாங்கம் Khelo India திட்டத்தின்கீழ் பரிந்துரை செய்திருக்கிறது. இதைச் செய்ய வேண்டியது மத்திய அரசாங்கம். அது கிடைப்பதற்கு தமிழக அரசாங்கம் முழுமனதோடு உழைக்கும். மத்திய அரசாங்கத்திலிருந்து முடிவு வரவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், வேறு சப்ஜெக்டில் பேசுங்கள்.

பிற்பகல் 12–50

**திரு. எச். வசந்தகுமார்:** மாநில அரசாங்கத்திற்கும் அதிலே கடமை இருக்கிறது. தமிழ்நாட்டு மக்கள் இந்த மாநில அரசாங்கத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். எனவே, அவர்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும், கடமையையும் உங்களுக்கு இருக்கிறது. உங்கள் முயற்சிக்கு நன்றி. அதற்கும் மேலாக—திருநெல்வேலியில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் சேர்ந்து நபர் ஒருவருக்கு பத்து இலட்சம் ரூபாய் என போட்டு, பாளையங்கோட்டையில், ஓர் உள் விளையாட்டு அரங்கம் கட்டி, அது தயாராக இருக்கின்றது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இதற்காக நிதி ஒதுக்கப்பட்டு, கட்டப்பட்டது; இடையில் ஐந்தாண்டுகளாகி விட்டது. இன்னும் திறக்கப்படாமல் இருக்கின்றது. எனவே, நமது மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அதை உடனடியாகத் திறந்து, இளைஞர்கள் விளையாட, ஒரு நல்ல வாய்ப்பினைக் கொடுக்க வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன்.

தாமிரபரணி, கருமேனி ஆறு, பச்சை ஆறு இணைப்புத் திட்டத்திற்காக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 369 கோடி





ரூபாயை நிதியாக ஒதுக்கியிருந்தார்கள். இப்போது இருக்கின்ற அரசு, 863 கோடி ரூபாயை நிதியாக ஒதுக்கியிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அந்த 863 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்ட பிறகும், அங்கு எந்தவிதமான வேலைகளும் நடக்கவில்லை. நிலம் கொடுத்தவர்களுக்கும் பணம் கொடுக்கப்படவில்லை; பணமும் இங்கு வரவில்லை. எந்த வேலையும் நடக்கவில்லை. அந்தப் பணம் ஒதுக்கப்பட்டிருந்தால், தண்ணீர் இல்லாத இந்த நேரத்தில், நெல்லை, தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள மக்கள் மிகவும் சந்தோஷமாக இருந்திருப்பார்கள். இந்த நிலையை நாம் சமாளித்திருக்கலாம் என்பதற்காகத்தான் உங்களிடம் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாமிரபரணி–நம்பியாறு திட்டத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருந்தார்கள். தாமிரபரணி–நம்பியாறு திட்டம், நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, முதல் இரண்டு பகுதி, தாமிரபரணியிலிருந்து கருமேனி ஆறு வரை 90 சதவிகிதப் பணிகள் நிறைவு பெற்றிருக்கின்றன. பத்து சதவிகித பணிகள்தான் இன்னும் நிறைவடையாமல் இருக்கின்றன. நில எடுப்புப் பிரச்சினைகள் இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பணிகளை மேற்கொள்ள முடியாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கின்றது. அதுமட்டுமல்ல; இந்தத் திட்டத்திற்காக 369 கோடி ரூபாய்க்கு நிருவாக ஒப்புதல் பெறப்பட்டு, அந்தப் பணி துவங்கப்பட்டது. நில எடுப்புப் பிரச்சினை போன்ற பல்வேறு காரணங்களினால் காலதாமதம் ஏற்பட்டு, இப்போது ரூ.872.45 கோடிக்கு திருத்திய நில மதிப்பீடு செய்து, மத்திய அரசிடமிருந்து அதற்கு ஒப்புதல் பெறப்பட்டு, இப்போது பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. நில எடுப்பு பணி என்பது மிகவும் முக்கியம். இதில் 1322.50.7 ஹெக்டர் பரப்பளவு நிலம் இந்தத் திட்டத்திற்காக கையகப்படுத்தப்பட வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, ஏற்கெனவே, ஒப்புதல் கடிதம் பெறப்பட்டு, பணிகள் துவங்கி, தாமிரபரணியிலிருந்து கருமேனி ஆறு வரை அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதிலும்கூட, survey செய்யாத காரணத்தினால்–ஏற்கெனவே

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2017 ஜனவரி 30

ஒப்புதல் பெறப்பட்டிருக்கிறது. இப்போது இழப்பீட்டுத் தொகை வழங்குகின்றபோது, அங்கிருக்கும் விவசாயிகள், புதிய வழிகாட்டுதலின்படி தங்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும் என்று கூறிக்கொண்டிருக்கின்ற காரணத்தினால்தான், அந்தப் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல; கருமேனி ஆறிலிருந்து நம்பியாறு வரை 3 மற்றும் 4—வது திட்டத்திற்கு நிலம் கையகப்படுத்தப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டத்தின்கீழ், 75 கிலோ மீட்டர் தூரத்திற்கு கால்வாய் வெட்ட வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அதனால்தான் காலதாமதம் ஏற்படுகின்றது; அரசால் அல்ல. ஆகவே, நிலத்தை உடனடியாக விவசாயிகளிடமிருந்து நாம் எடுத்துக்கொள்ள முடியாது. அதற்கென்று சில சட்டங்கள், விதிமுறைகள் இருக்கின்றன. விதிமுறைகளுக்கு உட்பட்டுத்தான் விவசாயிகளிடமிருந்து நிலத்தைப் பெற்று, அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், விவசாயிகள் எந்தவிதத்திலும் பாதிக்காத அளவிற்கு, அரசு கவனமாக கையாண்டு, இந்தத் திட்டத்தை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகத்தான், கிட்டத்தட்ட, நான் கூறியதைப்போல மத்திய அரசாங்கத்திலிருந்து திருத்திய மதிப்பீடாக, 872.45 கோடி ரூபாயை இன்றைக்குப் பெற்றிருக்கின்றது. இதில் பாதியளவு மாநில அரசு செலவு செய்ய வேண்டும். அப்படி செலவு செய்தபிறகுதான் மீதித் தொகையை மத்திய அரசு மாநில அரசிற்கு வழங்கும். இதில் இவ்வளவு பிரச்சினைகள் இருக்கின்றன. ஆகவே, அரசுத் தரப்பில் எந்தவித சுணக்கமும் இல்லை. ஆகவே, விரைந்து இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அனைத்து நடவடிக்கைகளையும் அம்மா அவர்களுடைய அரசு எடுத்திருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. நமது மாவட்ட ஆட்சியர் அவர்கள் அங்கே சிறப்பாகச் செயல்பட்டு கொண்டிருக்கிறார். அங்கு நிலம் எடுப்பதில் பிரச்சினை இருக்கிறது என்று சொன்னால், அவரிடம் சொல்லி, நாங்களும் அவருடன் இணைந்து, யார், யார் நில



2017 ஜனவரி 30] [திரு. எச். வசந்தகுமார்]

உரிமையாளர்களோ, அவர்களிடம் சென்று கேட்டு நிலத்தை நாங்கள் வாங்கிக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு ஆரம்பத்தில் போடப்பட்ட மின் மோட்டார்களே பயன்பாட்டில் உள்ளன. தற்போது, அதில் 75 சதவிகித மோட்டார்கள் வலுவிழந்து செயல் திறனற்றுள்ளதாக இருக்கின்றன. அனைத்து மின் மோட்டார்களையும் நீங்கள் புதுப்பித்து, புதிய மோட்டார்களை அங்கே பொருத்தினால், எங்கள் தொகுதி மட்டுமல்ல; சுற்றி இருக்கின்ற எல்லாத் தொகுதிகளிலும் குடிதண்ணீர் பிரச்சினை தீரும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12—55

பேருந்துகள்; கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரின்போது மாண்புமிகு அமைச்சரிடம் பேருந்து பிரச்சினையைப் பற்றி அதிகமாக நான் தெரிவித்துள்ளேன். மாண்புமிகு அமைச்சர் பெருமக்களிடமும் பேருந்து வசதி கோரி மனுக்கள் கொடுத்திருக்கிறேன். ஏதோ ஒன்றிரண்டு கோரிக்கைகளை நிறைவேற்றியிருக்கிறார்கள். அதில் நாச்சான்குளம் என்ற ஊரில் உள்ளவர்கள் அந்த ஊரில் பேருந்தினை இதுவரை பார்க்கவில்லை என்று சட்டமன்றத்தில் தெரிவித்தேன். அதேபோன்று, பற்பநாதபுரம் கிராமத்திலும் பேருந்தையே பார்க்கவில்லை என்றார்கள். அந்த இரண்டு இடங்களிலும் இன்னும் பேருந்துகள் விடவில்லை. இன்னும் பேருந்து வசதி கோரி நிறைய கோரிக்கைகள் இருக்கின்றன. வள்ளியூரிலிருந்து பரப்பாடி, காரியாண்டி, சோமநாதபேரி, சவேரியார்குளம், நாசரேத், வனதிருப்பதி, குரும்பூர் வழியாக ஏரல் வரை செல்லும் புதிய வழித்தடம் உருவாக்கி, அந்த மக்களையெல்லாம் நீங்கள் மகிழ்ச்சியில் ஆழ்த்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வள்ளியூரிலிருந்து தளபதி சமுத்திரம், சிறுமளஞ்சி, ஏர்வாடி வழியாக நாங்குநேரிக்கு புதிய வழித்தடத்தில் அரசுப் பேருந்து இயக்க வேண்டும். அதன்மூலம் பல கிராமங்கள் போக்குவரத்து வசதி பெறும். மங்கம்மா சாலை; கடந்த முறையும் நான் சொல்லியிருக்கின்றேன். மங்கம்மா சாலை; அங்கு சாலை வசதி செய்திட இப்போது தமிழக அரசால் அந்த நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். மார்ச் 3 ஆம் தேதி அதற்கு டெண்டர் விடப்படுவதாகக் கேள்விப்பட்டேன். அது நடந்தால் மக்கள் மட்டற்ற மகிழ்ச்சியடைவார்கள். அதற்கும்

[திரு. எச். வசந்தகுமார்] [2017 ஜனவரி 30

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கு நான் நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். மேலும், சிதம்பராபுரம்–S.N. பள்ளிவாசல் தெரு போன்ற இடங்களிலும் ஏறத்தாழ 40, 50 ஆண்டுகளாக சாலை வசதி இல்லாமல் மிகவும் பிரச்சினையாக இருக்கிறது. அதனால் அங்கும் சாலை அமைத்துத் தர வேண்டும்.

நாங்குநேரி சட்டமன்றத் தொகுதியில் ஏர்வாடி, திருக்குறுங்குடி, இட்டமொழி ஆகிய ஊர்களில் நூலகக் கட்டடங்கள் இருக்கின்றன. ஆனால், அவை மிகவும் பழைய கட்டடங்கள். அவை இடிந்து விழுகின்ற சூழ்நிலையிலே இருக்கின்றன. எனவே, தமிழக அரசு அந்தக் கட்டடங்களையெல்லாம் இடித்துவிட்டு, புதிய கட்டடங்களைக் கட்டிக் கொடுத்தால், அங்கே இருக்கின்றவர்கள் அறிவுப்பயன் பெறுவதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும். எங்கள் தொகுதியில் அரசுக் கலைக் கல்லூரி மற்றும் தொழிற்கல்லூரியில் உயர் கல்வி பயிலுவதற்காக கிராமத்து இளைஞர்கள் தொலைதூரம் செல்ல வேண்டிய சூழ்நிலையில் உள்ளார்கள். கல்வி என்பது கிராமங்களுக்கு எட்டாக்கனியாக இருக்கக்கூடாது. எனவே, நாங்குநேரி, களக்காடு ஆகிய பகுதிகளில் அரசு கலைக் கல்லூரி அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

களக்காடு பகுதியில் வாழைத் தொழில் அதிகமாக நடந்து கொண்டிருக்கிறது. எனவே, அங்கு அதற்கென ஒரு பயிற்சிக் கல்லூரி அமைக்க வேண்டும். பள்ளிக்கூடங்களைப் பொறுத்தவரையில், இப்போது நாங்குநேரி அரசு மகளிர் உயர் நிலைப் பள்ளி, கரந்தாநேரி அரசு உயர்நிலைப் பள்ளி, வடக்கு விஜயநாராயணம் அரசு உயர்நிலைப் பள்ளி. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** நான் இன்னும் 5 நிமிடங்கள்கூடப் பேசவில்லை. (குறுக்கீடு) ஆளுங்கட்சிக்கு ஒன்று; சாதாரண கட்சியான எங்களுக்கு ஒன்றா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேச ஆரம்பித்து 11 நிமிடங்கள் ஆகின்றன. நீங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** நாங்களும் ஒரு நாளைக்கு ஆள வருவோம். நிச்சயமாக காங்கிரசும் ஒரு நாளைக்கு ஆட்சிக்கு வரும். எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது.



2017 ஜனவரி 30]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** நம்பிக்கையோடுதான் நாங்கள் வாழ்க்கையில் ஓடிக்கொண்டிருக்கிறோம். நிச்சயமாக ஒருநாள் காங்கிரசும் இந்தச் சபையிலே ஆட்சியிலே இருக்கும். அதுவரையிலும் விடமாட்டோம். அதனால் எங்களுக்கு போதுமான வாய்ப்பைக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்போது நீங்கள் நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** காரியாண்டி அரசு உயர்நிலைப் பள்ளி, தருவை அரசு உயர்நிலைப் பள்ளி, சீவலப்பேரி அரசு உயர்நிலைப் பள்ளி, திருவேங்கடநாதபுரம் அரசு உயர்நிலைப் பள்ளி, சிறுமளஞ்சி உயர்நிலைப் பள்ளி உள்ளிட்ட 7 உயர்நிலைப் பள்ளிகளைத் தரமுயர்த்தி, உரிய கட்டமைப்பு வசதிகளைக் கொடுத்து மேல்நிலைப் பள்ளிகளாக தரமுயர்த்திட வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, பாலம்; பச்சையாற்றில் ஒரு பாலம் வருகிறது. நாங்குநேரி தொகுதியில் மேல் வடகரை, கீழ்வடகரை, வண்டிக்காரத் தெரு, காமராஜபுரம், மஞ்சுவிளை, பத்தை, கருவேலங்குடி ஆகிய ஊர்களில் உள்ள பொது மக்கள், பள்ளிக் குழந்தைகள், கல்லூரி மாணவ மாணவியர்கள் அத்தனை பேரும் அந்த பச்சையாற்றினைக் கடந்து செல்ல வேண்டியிருக்கிறது. அந்தப் பச்சையாற்றில் ஒரு பாலத்தைக் கட்டிக் கொடுத்தால், எல்லோரும் உங்களை வாழ்த்துவார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களை வாழ்த்துவார்கள்; ஆளுகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வாழ்த்துவார்கள். இன்னொரு முறை சொல்கிறேன். கண்டிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வாழ்த்துவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழாக்குறிச்சி கிராமத்தில் பச்சையாற்றின் குறுக்கே பாலம் வேண்டுமென்று மாண்புமிகு

உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார். அது அரசினுடைய ஆய்விலே இருக்கின்றது. அந்த ஆய்வுகள் முடிந்தபிறகு, நிதிநிலைக்கேற்ப அரசால் பாலம் கட்டப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்து, பின்னர் எல்லா அதிகாரிகளும் நிதியிருந்தால் செயல்படுவார்கள் என்ற விவரத்தைச் சொன்னார்கள். நான் நேற்றைக்குப் பேசும்போது தமிழகத்தில் இருக்கக்கூடிய 32 மாவட்டங்களிலும் இருக்கக்கூடிய மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிப் பகுதிகள் என அனைத்துப் பகுதிகளுக்கும் தேவையான நிதி வழங்கப்பட்டிருக்கிறது என்று கூறினேன். தற்போது செயல்படுத்திக்கொண்டிருக்கின்ற திட்டங்கள் தவிர, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின்பேரிலே, தமிழகத்திலே சென்னை குடிநீர் வாரியம், தமிழ்நாடு குடிநீர் வாரியம் உட்பட மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிப் பகுதிகளில் ஏற்படும் கோடைக்கால குடிநீர்த் தேவையை சமாளிக்க சுமார் ரூபாய் 1125.83 கோடி மதிப்பீட்டில் புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல், பழைய ஆழ்துளைக் கிணறுகளைப் புதுப்பித்தல், லாரிகள்மூலம் குடிநீர் வழங்குதல், பழுதடைந்த மோட்டார்கள் மாற்றுதல், மின்னாக்கிகள் வாடகைக்கும், புதிதாகவும் வாங்குதல், கைப்பம்புகள் நிறுவுதல், பழுதடைந்த குடிநீர்க் குழாய்களைப் புதுப்பித்தல் உள்ளிட்ட பணிகளைப் போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகிறது. எங்கே தேவை இருந்தாலும், இன்னும் பொது நிதியிலிருந்தும், தேவையான நிதியை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உடனடியாக வழங்கும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, நிதியைப் பொறுத்தவரையிலும் எந்தப் பிரச்சினையும் கிடையாது.





பிற்பகல் 1–00

அதேபோல, நாங்குநேரி சட்டமன்றத் தொகுதியில் களக்காடு, ஏர்வாடி, மூலக்கரைப்பட்டி, நாங்குநேரி, திருக்குறுங்குடி ஆகிய 5 பேரூராட்சிகள் உள்ளன. நாங்குநேரி, களக்காடு, பாளையங்கோட்டை ஆகிய 3 ஒன்றியங்களில் 624 ஊரகக் குடியிருப்புகள் உள்ளன. இத்தொகுதியில் 5 பேரூராட்சிகளுக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டருக்குமேல் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. நாங்குநேரி, களக்காடு மற்றும் பாளையங்கோட்டை ஒன்றியங்களைச் சேர்ந்த 624 ஊரகக் குடியிருப்புகளில், 449 குடியிருப்புகளுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாகப் பராமரிக்கப்படும் பனங்குடி வடக்கு–வள்ளியூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், நாங்குநேரி–திசையன்விளை கூட்டுக் குடிநீர்த் திட்டம்; 185 குடியிருப்புகள் கூட்டுக் குடிநீர்த் திட்டம், பர்கிட் மாநகர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், பொன்னாங்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் மூலக்கரை கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் மீதமுள்ள 175 குடியிருப்புகளுக்கு தனி மின்விசைத் திட்டம் மூலமாக நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. Borewell–ல் தண்ணீர் உடனடியாகத் தீர்ந்தாலும், இனி வருங்காலங்களிலும், இன்னும் இரண்டு மாதங்களில் வறட்சியான சூழ்நிலை வந்தாலும், அப்போது தண்ணீர் தீர்ந்தாலும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதற்கும் நடவடிக்கை எடுப்பதற்கு நிதி ஒதுக்கியிருக்கிறது; உடனடியாக தேவையான நிதி ஒதுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல பதிலைச் சொல்லியிருக்கிறார்; நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, அமைச்சர் பெருமக்களுக்கு நன்றியை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** களக்காட்டில் காமராஜர் சிலை ஆறரை அடி உயர்த்தில் ‘ஜம்’ என்று நிற்கிறது. அந்த காமராஜர் சிலை அருகில் பிரிட்டிஷ் காலத்தில் கல் அடுக்கி கட்டப்பட்ட பாலம்

ஒன்று இருக்கிறது. அந்தப் பாலம் குறுகியதாக இருப்பதால், போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. அப்பாலத்திற்குப் பதிலாக புதிய பாலம் கட்டிக் கொடுத்தால், அங்குள்ள மக்களெல்லாம் உங்களை மனதார வாழ்த்துவார்கள்.

அதேபோல, நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சிங்கிக்குளம் சாலையில் பச்சையாறில் உள்ள தரைமட்டப் பாலத்தை உயர்மட்டப் பாலமாக மாற்றிக் கட்டித்தர வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் எழுதிக் கொடுத்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எனக்கு சைகையிலே 'சரி' என்று சொன்னார்கள். அதை செயலில் காட்டி, உயர்மட்டப் பாலம் கட்டித் தந்தால் இன்னும் மட்டற்ற மகிழ்ச்சியடைவேன். நான் சொல்வதற்கு இன்னும் ஏராளமான பிரச்சினைகள் உள்ளன; கால்வாய்கள் தூர்வாரப்பட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உரையை முடித்தால், நான் மகிழ்ச்சியடைவேன். உரையை முடியுங்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** கால்வாய்களை வெகுகாலத்திற்கு முன்பு தூர்வாரினார்கள். இதில், ஒரேயொரு குறையை மட்டும் சொல்ல விரும்புகிறேன். தனியாக நாங்கள் காசு கொடுத்து, 1 கிலோ மீட்டர் தூரத்திற்கு கால்வாயைத் தூர்வாரினால், 65,000 ரூபாய்தான் செலவாகிறது. ஆனால், அதையே estimate போட்டு செய்தால், 3 இலட்சம், 3½ இலட்சம் ரூபாய் வரை செலவு ஆகிறது. அதனால், எங்கள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி அதிகமாக வீணாகிறது. எனவே, இதை Estimate Committee கொஞ்சம் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நிலைமைக்கேற்ப, சரியான அளவில் estimate போட்டால், எங்கள் தொகுதி மேம்பாட்டு நிதியான 2 கோடி ரூபாய் நிதியைக் கொண்டு நாங்கள் அதிகமான மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாங்குநேரி, மூலக்கரைப்பட்டி ஆகிய அரசு மருத்துவமனைகளில் போதிய மருத்துவர்கள் இல்லாமல் மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். 9 மருத்துவர்கள் பணிபுரிய வேண்டிய மருத்துவமனையில் 6 மருத்துவர்கள்தான் பணிபுரிகிறார்கள். சுதந்திரம் அடைவதற்கு முன்பே பெல்ஜியம் நாட்டிலிருந்து வந்து அமைக்கப்பட்ட களக்காடு (பெல்ஜியம்) அரசு மருத்துவமனையில்





ஒரேயொரு மருத்துவர் மட்டுமே பணியில் உள்ளார். அவர் நல்ல மருத்துவர். அவர் காலையிலிருந்து, இரவு 7 மணி வரை பணிபுரிகிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடியுங்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி மருத்துவமனை 52 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை. அங்கே 11 மருத்துவர்கள் பணிபுரிய வேண்டும். தற்போது, 10 மருத்துவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட களக்காடு மருத்துவமனை 2 மருத்துவர்கள் பணிபுரியக்கூடிய இடம். அங்கு 2 மருத்துவர்கள் பணிபுரிகிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தயவுசெய்து அவைக்குத் தவறான தகவலைத் தர வேண்டாம் என்றும் கேட்டுக்கொள்கிறேன். மீதமுள்ள 1 மருத்துவப் பணியிடத்திற்கு 12 ஆம் தேதி தேர்வு நடைபெறவிருக்கிறது; எந்த ஒரு மருத்துவரும் அப்போது நியமிக்கப்படுவார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** இரண்டு நிமிடங்களில் உரையை முடித்துவிடுகிறேன். அடுத்து, சுற்றுலாப் பயணிகள்; நெல்லை மாவட்டத்திற்கு வேறு எந்த வருமானமும் கிடையாது. நாங்குநேரி, திருநெல்வேலி தொகுதிகளெல்லாம் மிகவும் கஷ்டப்படுகின்ற தொகுதி. அதனால் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள குற்றாலம், காரையாறு, சேர்வலாறு, பாபநாசம், மணிமுத்தாறு, முண்டந்துறை, மாஞ்சோலை எஸ்டேட், களக்காடு புலிகள் சரணாலயம், திருக்குறுங்குடி பெருமாள் கோயில், நாங்குநேரி வானமாமலைக் கோயில், கூந்தன்குளம் பறவைகள் சரணாலயம், நெல்லையப்பர் கோயில், நந்தி கோயில், கிருஷ்ணாபுரம் கோயில் ஆகிய ஊர்களின் சிறப்புகளை சுற்றுலாப் பயணிகள் அறிந்துகொள்ளும் வகையில், சிறப்பு போக்குவரத்து வசதிகளையும், தங்கும் வசதிகளையும் ஏற்படுத்தித் தர வேண்டும்.

[திரு. எச். வசந்தகுமார்] [*2017 ஜனவரி 30*

*கிருஷ்ணாபுரம் கோயில் உலகப் பிரசித்திபெற்றது. எங்கள் தலைவர் ராஜிவ் காந்தி அவர்களும், சோனியா காந்தி அவர்களும் அந்தக் கோயிலுக்கு வந்து, ஏறத்தாழ இரண்டு மணி நேரம் அங்குள்ள சிலைகளைப் பார்த்து, பிரமித்து நின்று, "உலகமே போற்றுகின்ற சிலைகள் இங்கேதான் இருக்கின்றன" என்று பாராட்டிய அந்த ஊருக்கு நீங்கள் கொஞ்சம் உதவி செய்ய வேண்டும்; நிறைய செலவு செய்ய வேண்டும். இக்கோயிலுக்கு ஒரு தேர் செய்து கொடுத்தால், இன்னும் மக்கள் அதிகமாக வந்து பாராட்டுவார்கள். அதை நமது அரசு செய்து கொடுக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *உறுப்பினர் உரையை முடியுங்கள்.*

**திரு. எச். வசந்தகுமார்:** *தமிழகத்தில் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்கள், அரசு உதவிபெறும் தனியார் பள்ளிகளிலும் பணிபுரிகிறார்கள்;* Christian Institute–*களிலும் பணிபுரிகிறார்கள். அப்பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கை விகிதம் குறையும் நேரத்தில், அந்த ஆசிரியர்களை* transfer *செய்கிறார்கள். ஆசிரியர்களை மற்றொரு தனியார் பள்ளிக்கு* transfer *செய்யும்போது, அப்பள்ளிகள் அந்த ஆசிரியர்களைப் பணியில் சேர்க்க மறுக்கின்றன. அந்த ஆசிரியர்களை ஏற்றுக்கொள்வதில்லை. ஆகவே, அரசுப் பள்ளிக்கூடத்திற்கே அவர்களை* transfer *செய்தால், அவர்களுக்கு சிரமம் இல்லாமல் இருக்கும். அதோடுமட்டுமல்ல; . . .*

*பிற்பகல் 1–05*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

**திரு. எச். வசந்தகுமார்:** *நான் பிறந்தது கன்னியாகுமரி மாவட்டம். என்னைத் தேர்ந்தெடுத்திருப்பது நாங்குநேரி தொகுதி, திருநெல்வேலி மாவட்டம். அங்கே கிள்ளியூர் பகுதியிலே கடல்நீர் உள்ளே வருவதால், பருத்திக்கடவு, மங்காடு பகுதிகளில் நல்ல தண்ணீர் உப்பு நீராக மாறுகிறது. அதனால் அங்கு ஒரு தடுப்பணை கட்டி நல்ல குடிநீரை நீங்கள் மக்களுக்குக் கொடுத்தால் நமது. . .*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) போதும், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*



*2017 ஜனவரி 30*]

**திரு. எச். வசந்தகுமார்:** *எனவே, தடுப்பணை ஒன்று அதில் கட்டி, அந்த மக்களையும் காப்பாற்ற வேண்டும். பொதுவாக, நாங்குநேரி தொகுதி இப்போது அரசு அதிகாரிகளும், அரசும் உதவி புரிவதால் ஓரளவு வளமாக இருக்கிறது. இன்னும் வளமாக மாறுவதற்கு நீங்கள் தயவு செய்து கருணை காட்ட வேண்டுமென்று துணை சபாநாயகர்மூலம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் வேண்டி விரும்பி கேட்டு அமைகின்றேன். நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது தூர் வாருவதைப் பற்றிச் சொன்னார்கள். 2015–2016 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால், தூர் வாருவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பல்வேறு பணிகள் நிறைவேற்றப்பட்டன. அதேபோல, 2016–2017 ஆம் ஆண்டிற்கும் தேவையான அளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. 2016–ல் கிட்டத்தட்ட 1,416 பணிகளுக்கு 4,089 கிலோ மீட்டருக்கு 62.33 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தூர் வாரப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டிற்கும் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தனியாகத் தூர் வாரினால் ஒரு கிலோ மீட்டருக்கு 65 ரூபாய்தான் செலவு ஆகிறது என்று சொன்னார்கள். ஆனால்,* estimate *அதிகமாக போடப்படுவதால் செலவு அதிகமாக செய்யப்பட்டு தூர் வாரப்படுகிறது என்று சொல்கிறார்கள்.* Estimate–*ன்படிதான் நிதி ஒதுக்கீடு செய்ய முடியும். நீங்கள் சொல்வதைப் போல குறைத்தோ அல்லது அதிகமாகவோ மதிப்பீடு செய்ய முடியாது. ஒரு கிலோ மீட்டருக்கு தூர் வாருவதற்கு எவ்வளவு செலவாகும் என்பதைக் கணக்கிட்டுதான், நிதிநிலைக்குத் தகுந்தவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2017 ஜனவரி 30

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்பொழுதெல்லாம் பேருந்துகளைப்பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அவருடைய நாங்குநேரி தொகுதியிலே தேவையான அளவுக்கு அரசுப் பேருந்துகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, அந்தப் பகுதியிலே பயணிகளுடைய அடர்வுக்கு ஏற்ப பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கிறது. எந்த வழித்தடத்தில் பேருந்துகள் வேண்டுமென்று குறிப்பிட்டுச் சொன்னால், புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய அரசு அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய, இயங்கக்கூடிய பேருந்துகளை அதிலே பயணம் செய்யக்கூடிய பயணிகளின் அடர்வுக்கு ஏற்ப, ஆய்வு செய்து, தேவையிருக்குமாயின் அதைக் கருத்தில்கொண்டு பேருந்துகள் இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருநெல்வேலி—திசையன்விளை வழித்தடத்தின் வழியாக 19 அரசுப் பேருந்துகளும், 11 தனியார்ப் பேருந்துகளும், ஆக மொத்தம் 30 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. திருநெல்வேலி—சாத்தான்குளம் வழியாக 20 அரசுப் பேருந்துகளும், 3 தனியார்ப் பேருந்துகளும் அந்த வழித்தடத்திலே இயக்கப்படுகின்றன. அதுமட்டுமல்லாமல், மதுரை—நாகர்கோவில் வழித்தடத்திலே நாங்குநேரி வழியாக 52 அரசுப் பேருந்துகளும், 23 தனியார்ப் பேருந்துகளும் இயக்கப்படுகின்றன. எனவே, அந்தப் பகுதியில் எந்த வழித்தடத்தில் பேருந்து வசதி இல்லை என்று குறிப்பிட்டுச் சொன்னால், அதை ஆய்வு செய்து, அதற்குண்டான நடவடிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மேற்கொள்ளும் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B பரமசிவம் அவர்கள். (குறுக்கீடு) திரு. எச். வசந்தகுமார், நீங்கள் கேட்டதற்கு அவர் சொல்லிவிட்டார். உட்காருங்கள். நீங்கள் பேசுங்கள்.

***டாக்டர் V.P.B. பரமசிவம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த பதினைந்தாவது சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தில் பேச எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என் முதல் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2017 ஜனவரி 30] [டாக்டர் V.P.B. பரமசிவம்]

தாய்மையின் மறு உருவாய், தமிழ்நாட்டின் வரைபடமாய், புரட்சியின் புகழிடமாய், தனி மனித ராணுவமாய் இருந்து தன்னிகரில்லாத ஆட்சியை தமிழகத்திற்குத் தந்தீர்களே அம்மா. தலைமீது கல்லாக உம் பிரிவு ஏன் வந்தது? துயரத்தைச் சொல்வதற்கு வார்த்தைகள் இல்லை. இந்நேரம் கண்ணீருக்கு நான் தத்துப் பிள்ளை. சிங்கம் போல் வாழ்ந்தவரே, நின் புகழ் என்றும் ஓங்கும்; உன் அன்பு முகம் எப்படி எம் நெஞ்சைவிட்டு நீங்கும். இதயம்தான் செயலிழந்து துடித்திங்கு ஏங்கும்; உன் பிரிவை எம் மனது எப்படித்தான் தாங்கும்? அம்மா! மருத்துவனாக இருந்த என்னை, மக்கள் பணியாற்ற பணித்து, இம்மாமன்றத்திலே உரையாற்ற வைத்தீர்கள். கர்வத்தோடு உங்கள் புகழ் பாடி உரை நிகழ்த்திய நான், இன்று கனத்த இதயத்தோடு காலனின் தீர்ப்பை காலத்தின் கட்டாயம் என ஏற்றுக்கொண்டு, இந்த மாமன்றத்தில் நீங்கள் இருப்பதாகவே எண்ணி, என் நன்றி மலர்களை உங்கள் பொற்பாதங்களில் காணிக்கையாக்குகின்றேன்.

பிற்பகல் 1–10

33 ஆண்டுக் காலம் இல்லறம் துறந்து, தன்னலம் மறந்து, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இன்பத்திலும், இன்னல்களிலும் இணைபிரியாதிருந்து இன்று அன்னை வழியில் அறம் செய்து கொண்டிருக்கின்ற மன்னை தந்த மாணிக்கம் எங்கள் மதிப்பிற்குரிய சின்னம்மா அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், மாண்புமிகு அம்மா அவர்கள் காட்டிய வழியிலே அடிபிறழாமல் அற்புதமான ஆட்சி நடத்துகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியினை இந்த வேளையிலே உரித்தாக்கிக்கொள்கிறேன். "இருந்தாலும் மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும்; இவர்போல யார் என்று ஊர்சொல்ல வேண்டும்" என்ற புரட்சித் தலைவரின் வைர வரிகளை மெய்ப்பிக்கும் விதமாக, கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்நாட்டு தலைவர்களுக்கெல்லாம் விடிவெள்ளியாக விளங்கியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

பொருளாதார வளர்ச்சியில் நாட்டிலே முதன்மை மாநிலம் என்ற இடத்தை தமிழ்நாடு பெறவேண்டும் என்று தன் கனவை நனவாக்க உயரிய நோக்கங்களையும், இலட்சிய இலக்குகளையும் உள்ளடக்கிய "விஷன் 2023" என்ற ஆவணத்தை வகுத்துச் செயல்படுத்தினார். அப்படி உருவாக்கிய அந்த ஆவணத்தைத்

தொடர்ந்து செயல்படுத்திட, அவர் நம்மோடு இன்று இல்லாவிட்டாலும், அவர் வகுத்துத் தந்த வழியிலே தொடர்ந்து பீடு நடைபோடுகின்ற இந்த அரசு, தமிழக மக்களின் வாழ்வாதாரத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்துவதற்காகச் செயல்படுத்துகின்ற அத்துணை வளர்ச்சித் திட்டங்களுக்கும், வருங்காலக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களுக்கும் இந்த ஆவணத்தையே வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டுள்ளது என்பதைத்தான் இந்த ஆளுநர் உரை நமக்கு உரக்கச் சொல்லியிருக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது.

நிதிப் பகிர்வில் பற்றாக்குறை குறித்து நம்முடைய ஆளுநர் உரையிலே சொல்லியிருப்பதைப் பார்த்தோமேயானால், 14—வது நிதிக் குழுவிற்கு மத்திய வரிகளில் மாநிலங்களுக்கான பங்கு 32 சதவீதத்திலிருந்து 42 சதவீதமாக உயர்ந்திருந்தபோதிலும், தமிழ்நாட்டிற்கு முன்பு கொடுத்த நிதிப் பகிர்வைவிட 19.04 சதவீதம் குறைவாகக் கொடுத்துள்ளது. இன்னும் குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால், இந்த நிதிக் குழு காலத்தில் முதலாம் ஆண்டான 2015—2016 ஆம் ஆண்டில் 2.98 சதவீதம் மட்டுமே மத்திய வரி வருவாயில் தமிழ்நாடு கூடுதலாகப் பெற்றுள்ளது. ஆனால், மற்ற மாநிலங்கள் இதே ஆண்டில் குறைந்தபட்சம் 30 சதவீதம் அளவிற்குக் கூடுதல் நிதியைப் பெற்று பயனடைந்துள்ளன. 14 மானியக் குழுவின் பரிந்துரைமூலம் கூடுதல் நிதி ஆதாரம் ஏதும் தமிழ்நாட்டிற்குக் கிடைக்காத இந்தச் சூழ்நிலையில், மத்திய அரசின் உதவிபெறும் திட்டங்களில் மாநில அரசினுடைய பங்கும் இங்கே உயர்த்தப்பட்டுள்ளது. இவை அனைத்தும் தமிழ்நாட்டின் நிதிநிலைமையை மேலும் பாதித்துள்ளது. மத்திய வரிப் பகிர்வில் ஏற்பட்ட இந்த பாதிப்பினை சரிசெய்ய ரூபாய் இரண்டாயிரம் கோடி அளவிலான நிதி உதவியை இந்த நிதிக் குழு காலத்தில் ஆண்டுதோறும் நமக்கு வழங்க வேண்டும் என்றும், அடுத்த 2 ஆண்டுகளுக்கு மத்திய அரசின் உதவிபெறும் திட்டங்களுக்கு மத்திய அரசின் பங்கினை 60 சதவீதத்திலிருந்து 90 சதவீதம் உயர்த்த வேண்டும் என்றும் ஆளுநர் உரையில் வலியுறுத்தப்பட்டிருப்பது உள்ளபடியே மகிழ்ச்சியளிக்கின்றது.

தொடர்ச்சியான இயற்கைச் சீற்றங்கள், இயற்கைப் பேரிடர்கள்; அதிலும் குறிப்பாக, டிசம்பர் பெருமழை மற்றும் 'வர்தா' புயலால் பாதித்த தமிழகத்திற்கு தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.1,972.89 கோடியும், நிரந்தரக் கட்டுமானப் பணிகளுக்காக





ரூ.20,600.37 கோடியும் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் விடுத்துள்ள கோரிக்கையை உடனடியாக ஏற்று, நிதியினை ஒதுக்கிட வேண்டுமென்று மத்திய அரசை இந்த ஆளுநர் உரை நிர்பந்தித்திருப்பது வரவேற்கத்தக்கது. நேற்றையதினம் நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசும்போதுகூடச் சொன்னார்கள்; "நிறைய நிதியைக் கேட்டிருக்கிறீர்கள்; எப்படி அதையெல்லாம் பெறப்போகிறீர்கள்" என்று ஆதங்கப்பட்டிருக்கிறார்கள். ஒன்றை மட்டும் இந்த நேரத்தில் பணிவோடு சொல்ல நான் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய இந்த அரசுக்கு கனிவோடு கடிதம் எழுதவும் தெரியும்; புறக்கணிப்புகள் தொடர்ந்தால், கட்டுக்குள் கொண்டுவர கண்டிப்போடு போராடவும் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னையில் 'வர்தா' புயலின் காரணமாக அரசு மற்றும் தனியார் நிலங்களிலிருந்த பல இலட்சம் மரங்கள் வேரோடு சாய்ந்தன. இதனால் ஏற்பட்ட பாதிப்பினைச் சரிசெய்யும் விதமாக, தமிழகத்தின் பசுமைப் பரப்பினை அதிகரிக்க, தன்னுடைய ஆட்சிக் காலத்தில் பல இலட்சம் மரங்களை நட்டு, வானுக்கும் மழை பெய்ய வாய்ப்பளித்த வள்ளலாகத் திகழ்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியைப் பின்பற்றி நம்முடைய அரசு, ஒரு மாபெரும் மரம் நடும் பெருந்திட்டம் (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களுடைய 69—வது பிறந்த நாளான 24—2—2017 அன்று துவங்கப்படும் என்ற அறிவிப்பினை ஆளுநர் உரை வாயிலாக அறிவித்திப்பது சமூக ஆர்வலர்களுக்கும், சென்னையிலுள்ள பொது மக்களுக்கும் மட்டற்ற மகிழ்ச்சியை அளித்திருக்கின்றது.

வர்தா புயலில் பொதுவாக அதிகமாக விழுந்தவை அழகிற்காக வளர்க்கப்பட்ட வெளிநாட்டு மரங்கள். வெளிநாட்டு மரங்கள் பொதுவாக பூமியிலே செங்குத்தாக ஒரேயொரு வேரை செலுத்தக்கூடியவை. அதிகமான பிடிப்பில்லாமல் இருக்கும். இரண்டாவது பக்கவாட்டிலே அதிக கிளைகள்கூட இருக்காது. ஆகவே, எந்தவகையான இம்மரங்களில் பறவையினங்கள்கூட கூடு கட்டத் தயங்கும். ஆனால், நமது நாட்டு மரங்கள் பக்கவாட்டிலே அதிகமான வேர்களை விடுத்து, மண்ணில் அதிக பிடிமானத்துடன் வளரும். மேலும், அதிகமான கிளைகளையும், இலைகளையும் தந்து, பறவைகள் சரணாலயமாகத் திகழக்கூடிய தன்மை உடையவை. எனவே, வருகின்ற காலங்களிலே இந்த மரம் நடும் திட்டத்தில் நமது நாட்டு மரங்களான ஆலமரம், புளிய மரம், அரச மரம்,

[டாக்டர் V.P.B. பரமசிவம்] [*2017 ஜனவரி 30*

புங்க மரம், கொன்றை, வேம்பு, வாகை, பனை, மகிழம், பூவரசு, புன்னை, இலுப்பை, மருது, நாவல் உள்ளிட்ட நாட்டு மரங்களை நட அரசு ஆவன செய்ய வேண்டும் என்று தாழ்மையோடு இந்த மாமன்றத்திலே பதிவு செய்துகொள்கிறேன். மரம் வளர்ப்பதிலே நிச்சயமாக இரண்டு இலாபம் உண்டு. ஒன்று, உலகில் வாழும் ஜீவராசிகளுக்கெல்லாம் உயிர் மூச்சாகவும், மற்றொன்று மழை ஈர்ப்பு மையமாகவும் இம்மரங்கள் செயல்படும் என்பதால், இத்திட்டம் வருங்கால தலைமுறைக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்பதிலே ஐயமில்லை.

பிற்பகல் 1–15

இன்றையதினம், தமிழகத்தில் வடகிழக்கு மற்றும் தென்மேற்கு பருவமழை சராசரி அளவைக் காட்டிலும் 62 சதவிகிதம் குறைவாகப் பெய்துள்ளது. அதனால், கடுமையான வறட்சியை நம் மாநிலம் எதிர்கொண்டு வருகிறது. குடிநீருக்கும், கால்நடைகளுக்கான தீவனத்திற்கும்கூட கடுமையான தட்டுப்பாடுகள் ஏற்படுகின்ற ஒரு சூழல் இருக்கின்றது. 140 ஆண்டுகளுக்குப்பின் இதுபோன்றதொரு வறட்சியை தமிழகம் சந்தித்துக்கொண்டிருக்கிறது. 140 ஆண்டுகளுக்கு முன்பு என்று சொன்னால், தாது வருடம். தாது வருடத்திலே இத்தகைய பஞ்சம் தமிழ்நாட்டில் இருந்திருக்கிறது. அதைத்தான் 'தாது வருட பஞ்சம்' என்று நாட்டார் பாடல்களிலும், உள்ளூர் இலக்கியங்களிலும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

'எறும்பு வளைகளை வெட்டி அதனில்
இருக்கும் தானியம் தான் எடுத்து
முறத்தால் கொழித்துக் குத்திச் சமைத்து
உண்ணுகிறார் சிலர் பாருங்கடி;
குடிக்கத் தண்ணீரும் இல்லாமல் பணம்
கொண்டு திரிந்தாலும் கிட்டாமல்
இடிக்குப் பயந்த பாம்புகள் போலே
ஏங்குகிறார் சிலர் கேளுங்கடி'

என்று அந்த வறட்சியை அவர்கள் வர்ணித்திருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட வறட்சியின் கோரப்பிடியிலே தமிழ்நாட்டு மக்கள்



*2017 ஜனவரி 30*] [டாக்டர் V.P.B. பரமசிவம்]

சிக்கிவிடக் கூடாது என்பதற்காக, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு இதை கடும் வறட்சி என அறிவித்து, பயிரிழப்பு மற்றும் இதர நிவாரணப் பணிகளுக்கு நிதி உதவி அளித்துள்ளது போற்றுதலுக்குரிய செயலாகும். மேலும், தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 39,565 கோடி ரூபாயை வழங்க மத்திய அரசை இவ்வுரையின்மூலமாக கோரியிருப்பது உள்ளபடியே வரவேற்கத்தக்கது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இந்த வேளையிலே மாண்புமிகு அம்மா அவர்களின் முற்போக்கு சிந்தனையில் உதித்த மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை நான் நினைவுகூர விரும்புகிறேன். 15 ஆண்டுகளுக்கு முன்பாகவே வறட்சியைத் தவிர்ப்பதற்காக தீர்க்கதரிசனத்தோடு அம்மா அவர்கள் தந்த இந்தத் திட்டத்திற்கு மக்களுடைய ஆத்மார்த்தமான பங்களிப்பு இருந்திருந்தால், நம்முடைய நிலத்தடி நீர்மட்டம் இத்தனை அதலபாதாளத்திற்கு நிச்சயமாகச் சென்றிருக்காது. இன்றையதினம் மாண்புமிகு அம்மா அவர்களின் வழியிலே நடக்கின்ற இந்த அரசு, நம்முடைய வருங்கால சந்ததிகளின் நலன் கருதி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய Massive Tree Plantation, Rain Water Harvesting, IAMWARM Phase–II திட்டங்களோடு, அற்புதமான 'குடிமராமத்து' என்ற திட்டத்தையும் செயல்படுத்த இருக்கிறது என்பதனை இவ்வுரை வாயிலாக அறிந்து மகிழ்கிறேன்.

கிழக்கிந்திய கம்பெனியினர் இந்தியாவில் காலூன்றுவதற்குமுன் வரை அனைத்து நீர்நிலைகளும் மக்களின் நிருவாகத்தால் செம்மைபெற்றுத் திகழ்ந்தன. ஆண்டுக்கு ஒருமுறை ஊர்கூடி புனரமைப்பு செய்யும் 'குடிமராமத்து' அங்கே நடக்கும். ஆனால், ஆங்கிலேயரின் வருகைக்குப் பின் இது மறைந்துபோனது. நீர்நிலைகளுக்கும், மக்களுக்கும் இருந்த தொப்புள்கொடி உறவு அறுந்துபோய் அதைப் பராமரிக்கும் பணி அரசிடம் சென்றுவிட்டது. அந்தத் தொப்புள்கொடி உறவை மீண்டும் உயிர்ப்பிக்கும் விதமாக, மக்கள் பங்களிப்புடன் நீர் ஆதார மேலாண்மையை மேற்கொள்ள 'குடிமராமத்து' என்கின்ற திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தொடங்கவுள்ளதை ஒரு விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவன் என்ற முறையிலே எண்ணி, எண்ணி பெருமைகொள்கிறேன்.

[டாக்டர் V.P.B. பரமசிவம்] [*2017 ஜனவரி 30*

மாநிலங்களுக்கிடையிலான நதிநீர்ப் பிரச்சினையில் தமிழ்நாட்டின் உரிமைகளை நிலைநாட்ட மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளை யாரும் மறக்கவோ, மறுக்கவோ இயலாது. முல்லைப்பெரியாறு என்றவுடன் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வரலாற்றுப் பதிப்புதான் என் நினைவுக்கு வருகிறது. சிலப்பதிகாரத்தில் காட்சிக் காதையில் சேர மன்னன் மலை வளம் காணச் செல்லும்போது, மலையின் அழகான தோற்றத்தைப் பற்றி இளங்கோவடிகள் கூறுகிறார். "நெடியோன் மார்பில் ஆரம் போன்று பெருமலை விளங்கிய பேரியாறு" என்று திருமாலின் ஆரம்போன்று அம்மலையில் பேரிரைச்சலோடு பேரியாறு ஓடியது என்று அர்த்தம். பேரியாறு என்பதை ஆங்கிலேயர்கள் அன்றையதினம் PERIYAR என்றெழுதப்போக, ஆங்கிலம் வழியாக நாம் நம்மை அறியும் பழக்கம் உள்ளவர்கள் என்பதால், அதை அப்படியே பெரியார் என்று எடுத்துக்கொண்டோம். ஆகவே, அப்பெயர் நமது 'பெரியார்' அவர்களையோ அல்லது வயதில் பெரியவர்களையோ குறிப்பிடுவதில்லை. மாறாக பேரிரைச்சலோடு மலைகளுக்கு நடுவே பாய்கின்ற ஆறு என்ற பொருள் கொண்டு பேரியாறு என்று அழைக்கப்பட்டது. முடிந்தால், இதை இனிவரும் காலங்களிலே முல்லைப் பெரியாறை, நம்முடைய தமிழ் அறிஞர்களோடு கலந்து இந்தப் பெயர் குறித்து நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் உறுதியான சட்டப் போராட்டத்தின் காரணமாக இன்று இந்த முல்லைப் பேரியாறு அணையின் நீர்மட்டம் முதற்கட்டமாக 142 அடி அளவிற்கு உயர்த்தப்பட்டு, கம்பம் பள்ளத்தாக்கு பகுதி விவசாயிகளின் வயிற்றில் பால்வார்க்கப்பட்டது. அவர்கள் காட்டிய சட்டப் பாதையினைப் பின்பற்றி மாண்புமிகு அம்மா அவர்களின் வழிநடக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்த அணையின் முழுக் கொள்ளளவான 152 அடி வரை நீர்மட்டத்தை உயர்த்தி, தென் தமிழ்நாட்டிற்கு தேவையான தண்ணீரைத் தருவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள இருப்பது மிகுந்த மகிழ்ச்சியளிக்கின்றது.

ஜல்லிக்கட்டைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அது நம்முடைய பாரம்பரியம். சங்க இலக்கியங்கள் பலவற்றில் ஜல்லிக்கட்டின் தரவுகளை நாம் காண முடிகிறது. 'கொல்லேற்றுக் கோடு அஞ்சுவானை மறுமையும் புல்லாளே



*2017 ஜனவரி 30*] [டாக்டர் V.P.B. பரமசிவம்]

ஆயமகள்' என்று கலித்தொகை கூறுகிறது. ஆயர்மகள் தனது காதலன் ஏறு தழுவும் வீரியம் உடையவனாக இருக்க வேண்டும். அப்படி இல்லையெனில், மறுபிறப்பில்கூட அவனை நான் காதலனாக ஏற்றுக்கொள்ளமாட்டேன் என்று கூறுகிறது. இத்தகைய தொன்மைமிக்க ஜல்லிக்கட்டின்மீதான தடையை நீக்க வேண்டும் என்ற தமிழக மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சமூக ஊடகங்களில் வந்த விமர்சனங்களையெல்லாம் புறந்தள்ளி, உடனடியாக டெல்லிக்கு விரைந்து அவசரச் சட்டம் இயற்றி, ஜனாதிபதி மற்றும் ஆளுநர் அவர்களின் ஒப்புதலைப் பெற்றார். அதை நிரந்தரச் சட்டமாக மாற்ற 6 மாத காலம் அவகாசம் இருந்தாலும், அடுத்த நாளே நிரந்தரச் சட்டமாக சட்டமன்றத்தில் நிறைவேற்றி, தமிழர்களின் உணர்விற்கு எப்போதும் உறுதுணையாக இருக்கும் அரசு (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு என்பதை உணர்த்திக்காட்டியுள்ளார்.

*பிற்பகல் 1–20*

சுகாதாரத் துறையைப்பற்றிப் பார்த்தோமேயானால், மாண்புமிகு அம்மா அவர்களின் 'முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டம்' ஏழையெளிய மக்களுக்கு உயர்தர மருத்துவ வசதிகளை பெற்றுத்தருவதில் சிறப்பான பங்காற்றி வருகிறது. குறிப்பாக, உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மற்றும் இருதய அறுவை சிகிச்சைகள் இந்தத் திட்டத்தின் சிறப்பு அம்சமாக விளங்குகிறது. இறந்தவர்களின் உடல் உறுப்பை தானம் செய்யும் திட்டத்தில் நாட்டிலேயே முதல் மாநிலமாகத் திகழ்ந்து இரண்டாவது முறையாக மத்திய அரசின் தேசிய விருதைப் பெற்றுள்ளது. இதற்கு முக்கியக் காரணம், சுகாதாரத் துறையின் தொடர்ச்சியான விழிப்புணர்வுப் பிரச்சாரம். இதன்மூலம் உடல் உறுப்பை தானம் செய்வதில் மக்களுக்கு உள்ள பல்வேறு மனத் தடங்கல்களையும், மதத் தடங்கல்களையும் இது தகர்த்தெறிந்துள்ளது என்றே சொல்ல வேண்டும். மேலும், இத்திட்டம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலே சிறப்பான முறையில் செயல்பட இருப்பது ஏழை நோயாளிகளுக்கு வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது. அதோடு, இன்று அம்மா அவர்களின் நினைவைப் போற்றும் அற்புதத் திட்டங்களாகத் திகழ்கின்ற அம்மா குழந்தை நல பரிசுப் பெட்டகம், அம்மா ஆரோக்கிய திட்டம், அம்மா மகப்பேறு சஞ்சீவி, சானிட்டரி நாப்கின் வழங்கும் திட்டம், அம்மா தாய்ப்பால் வங்கி போன்ற திட்டங்கள் தொடர்ந்து தடையின்றி

*செயல்படுத்தப்படும் என்ற நற்செய்தியும் இவ் உரையின்மூலம் நமக்குக் கிடைத்திருக்கின்றது.*

*மேலும், சில முக்கிய கருத்துகளைச் சொல்லி நேரத்தின் அருமை கருதி, உரையை முடித்துவிடுகிறேன். புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் இருந்தால் எப்படி ஏழையெளிய மக்களுக்கான நல்லாட்சி நடந்திருக்குமோ, அதில் சிறிதளவும் குறையில்லாமல் தமிழகத்தை முதன்மை மாநிலமாக உயர்த்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், சட்டமன்ற உறுப்பினர்கள் அத்துணை பேரும் மாண்புமிகு அம்மா அவர்கள் காட்டிய வழியிலே அயராது உழைப்போம் என்ற உறுதியினை இந்த மாமன்றத்திலே வைக்கின்றோம்.*

*மாண்டியாவின் மேல் கோட்டையிலே பிறந்து, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலே தன் அரசியல் வாழ்வை நிறைவு செய்து, வங்கக் கடலோரம் சந்தனப் பேழையிலே மீளாத் துயில் கொண்டிருக்கும் தமிழகம் காத்த அன்னையே, இனி சுனாமிகளும் கரை தாண்ட அஞ்சும்; நின் கல்லறை என்றும் காவலாய் எமை காக்கும். மக்கள் தருகின்ற மகத்தான ஆதரவு, தக்கதொரு ஆதரவால் தமிழ்நாட்டில் நல்லாட்சி; ஆயிரமாய் பகைவர்கள்தான் ஆட்டி வைக்கப் பார்த்தாலும் ஆயுள்காலம் முழுவதும் இனி மாண்புமிகு அம்மாவின் வழியிலேயே ஆட்சி, ஆட்சி என்று கூறி, என்னுடைய தொகுதியினுடைய குறைகளை இரண்டு நிமிடங்களிலே முடித்துக்கொள்ள விழைகிறேன்.*

*எனது வேடசந்தூர் தொகுதியின் கிழக்குப் பகுதியிலே 22 கிலோ மீட்டர் நீளத்திற்கு தொப்பையசாமி மலை அமைந்துள்ளது. குஜிலியம்பாறை ஒன்றியத்திலே இருக்கின்ற அந்த மலையினுடைய அடிவாரத்திலே ஒரு பெரிய அணையினைக் கட்டி நீரினைத் தேக்குகின்றபொழுதுதான், அந்த ஒன்றியத்தில் இருக்கின்ற 200—க்கும் மேற்பட்ட கிராமங்களினுடைய நிலத்தடி நீராதாரம் உயருகின்ற ஒரு சூழல் ஏற்படும். நம்முடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு 1980, 1984—களிலேயே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய துணையோடு இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முனைந்தபோது, அங்கு இருக்கின்ற மக்களுடைய அறியாமை காரணமாக அந்தத் திட்டம் கைவிடப்பட்டுவிட்டது. வறட்சி நிலவுகின்ற இந்த வேளையிலே என்னுடைய தொகுதியில் இருக்கின்ற குஜிலியம்பாறை மற்றும் வடமதுரை ஒன்றியத்தைச் சார்ந்த மக்களுடைய கோரிக்கையை*





*முன்வைக்க விரும்புகிறேன். குடிநீர்ப் பிரச்சினைக்கு மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கின்ற அவர்களுடைய பிரதிநிதியான நான் இங்கே என்னுடைய தாழ்மையான வேண்டுகோளாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்தக் கோரிக்கையை முன்வைக்கின்றேன். எப்படியாவது அந்த தொப்பையசாமி மலையின் அடிவாரத்திலே ஒரு நீர்த்தேக்கத்தினை அமைப்பதற்கு அரசு முயற்சி எடுத்து, அதை விரைவிலே ஆவன செய்யவேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.*

*வடமதுரை பேரூராட்சியிலே இரயில் நிலையம் அருகிலுள்ள லெவல்கிராசிங் எண் 301, அங்கே ஒரு மேம்பாலம் அமைத்திட ஆவன செய்திட வேண்டும். வறட்சியால் மிகவும் பாதித்துள்ள எனது தொகுதியிலுள்ள கிராமங்களின் நீராதாரத்தினைப் பெருக்குவதற்கு போதுமான அளவிலே நிதி ஒதுக்கி ஆவன செய்திடுமாய் வேண்டுகிறேன். குஜிலியம்பாறை ஒன்றியத்திலே மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டிருக்கின்ற சிப்காட் தொழிற்பேட்டை தொடங்குவதற்கும் துரிதமான நடவடிக்கை எடுத்திட வேண்டுமாய் தாழ்மையோடு இங்கே கேட்டுக்கொள்கிறேன். வடமதுரை பேரூராட்சியிலே மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக இருக்கின்ற பேருந்து நிலையம் அமைந்திட விரைந்து நடவடிக்கை எடுத்திடுமாறு இந்த அரசை நான் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.*

*வேடசந்தூர் அரசு கலைக் கல்லூரியினுடைய புதிய கட்டடப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதை அரசு விரைந்து முடித்திட நிதியுதவி அளித்து மாணவ, மாணவியர்கள் எதிர்வரும் கல்வியாண்டிலேயே புதிய கட்டடத்திற்குச் சென்று பயில்வதற்கான ஒரு சூழலை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக்கொண்டு, வழங்கிய இந்த நல்வாய்ப்பிற்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார் அவர்கள்.*

*பிற்பகல் 1—25*

**திரு. ஏ.பி. நந்தகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழர்களின் ஒப்பற்ற ஒரே தலைவர், அன்புத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும்*

ஒலி) வேலூர் அருகில் உள்ள லத்தேரி என்னும் கிராமத்தில் ஸ்ரீமதி கண்ணம்மாள்—பெருமாள் ஆகிய தம்பதியருக்கு மகனாகப் பிறந்த என்னை, கே.வி. குப்பம் ஒன்றிய மாணவர்களுடைய அமைப்பாளராகவும், மாவட்ட மாணவர்களினுடைய துணை அமைப்பாளராகவும், மாவட்ட இளைஞரணியினுடைய துணை அமைப்பாளராகவும், மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றத்தினுடைய உறுப்பினராகவும், 2001—லே லத்தேரி ஊராட்சி மன்றத் தலைவராகவும், 2006—லே மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினராகவும், தற்போது வேலூர் மத்திய மாவட்டத்தினுடைய மாவட்டக் கழகத்தினுடைய செயலாளராகவும், 2016 சட்டமன்றத் தேர்தலில் அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி வேட்பாளராக அறிவித்து, நான் வெற்றி பெறுவதற்கு தேர்தலின்போது தொகுதிக்கு வந்து, தேர்தல் பிரச்சாரம் செய்து, என்னை வெற்றிபெறச் செய்து, இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேசும் வாய்ப்பினை வழங்கிய, இந்தப் புத்தாண்டு தொடக்கத்தில் தி.மு.க. செயல் தலைவராகப் பொறுப்பேற்று, (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் நடேசனார், சர் பிட்டி தியாகராயர், டி.எம். நாயர், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், அறிவுலக மாமேதை பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் அன்புத் தலைவர், கலைஞர் அவர்களின் வழியில் திராவிட இயக்கக் கொள்கைகளையும், திராவிட முன்னேற்றக் கழகத்தையும், என்னையும் வழி நடத்திச் செல்லும் சட்டமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர், (மேசையைத் தட்டும் ஒலி) ஓய்வுக்கே ஓய்வு கொடுத்து, கடிகார முட்களைப்போல் தொடர்ந்து சுழன்று, தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, அனைத்துத் தரப்பு மக்களையும் வழிநடத்திச் செல்லக்கூடிய எங்கள் அன்புத் தலைவர், இளைய கலைஞர் அண்ணன் தளபதி அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அண்ணன் துரைமுருகன் அவர்களுக்கும், ராணிப்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் ஆர். காந்தி அவர்களுக்கும், எனது வெற்றிக்காக பாடுபட்ட ஒன்றிய, நகர, பகுதி கழகச் செயலாளர்கள், நிருவாகிகள், தொண்டர்கள், கூட்டணிக் கட்சியைச் சார்ந்த நிருவாகிகள், நண்பர்கள் மற்றும் உறவினர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில், வெற்றிச் சின்னமாம்



உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து, என்னை வெற்றிபெறச் செய்த அணைக்கட்டு தொகுதி மக்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கன்னிப் பேச்சு பேசுகிறேன். முதலில் எனது தொகுதி சம்பந்தமான கோரிக்கைகளை மட்டும் வைக்கின்றபொழுது, கூட்டத் தொடரில் எங்களுக்கு அளிக்கின்ற வாய்ப்பைத் தயவு செய்து யாரும் தட்டிப் பறிக்காமல், குறுக்கீடு செய்ய வேண்டாம் என்று தங்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி சற்றேறக்குறைய 60, 70 கிராமங்களை உள்ளடக்கிய தொகுதியாகும். வேலூர் போன்ற நகரங்களுக்குச் செல்ல வேண்டுமானால், அணைக்கட்டிலிருந்து அதற்கான பேருந்து வசதி இல்லை. ஆகவே, தயவுசெய்து அணைக்கட்டு தொகுதியில் ஒரு பேருந்து நிலையத்தினை அமைத்துத் தர வேண்டும் என இந்த அரசை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்களுக்கு சென்னை—பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையிலிருந்து பிரிந்து செல்லக்கூடிய பள்ளிகொண்டா—குடியாத்தம் சாலை மிகவும் குறுகிய சாலையாக இருக்கின்றது. மிகவும் குறுகலான அந்தச் சாலையினால் மக்கள் தினம், தினம் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, என்னுடைய கோரிக்கையான பள்ளிகொண்டா பேரூராட்சிக்கு ஒரு வட்டச் சாலை அமைத்து உடனடியாக இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு ஏற்படுத்தித் தரும்படி தங்களை நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அணைக்கட்டு தொகுதியில் மலைவாழ் மக்கள் வாழ்கின்ற பீஞ்சமந்தை, ஜார்தான்கொல்லை மற்றும் பாலம்பட்டு ஆகிய ஊராட்சிகளில் ஏறத்தாழ 20,000 மக்கள் வசிக்கின்றார்கள். அங்குள்ள மக்களுக்கு ஏதாவது இன்னல் ஏற்பட்டாலோ, நோய்வாய்ப்பட்டாலோ, அங்கிருந்து அணைக்கட்டு மற்றும் வேலூர் அரசு மருத்துவமனைக்கு அவர்களைக் கொண்டு செல்ல வேண்டுமானால், சாலைகளே இல்லாத ஓர் அவல நிலை இருந்துவருகிறது. ஆகவே, தயவுகூர்ந்து அந்தச் சாலையை அரசு உடனடியாக அமைத்துத் தர வேண்டும் என நான்

[திரு. ஏ.பி. நந்தகுமார்] [2017 ஜனவரி 30

கேட்டுக்கொள்கின்றேன். மேலும், பீஞ்சமந்தை ஊராட்சியில் மலைவாழ் மக்களின் பிள்ளைகள் படிப்பதற்கு மாணவர் தங்கும் விடுதி வசதி அமைத்துத் தரும்படி நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட வேலூர் குருமலை ஊராட்சியில் சற்றேறக்குறைய 2,000 மலைவாழ் மக்கள் வாழ்கிறார்கள். அந்தப் பகுதிக்கும் தார்ச் சாலை வசதி ஏற்படுத்தித் தர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** அணையே இல்லாத ஊருக்கு அணைக்கட்டு என்று உள்ள அந்தப் பெயரை மாற்றும் வகையில், தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் கோயில்மலையாறு திட்டம், அதாவது மேலஅரசம்பட்டு அணைக்கட்டினைக் கட்டுவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணிகள் துவங்கப்படும் வேளையில், ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரிக்குச் சொந்தமான நிலம் அந்தப் பகுதியில் இருக்கின்ற காரணத்தினால், அவர் நீதிமன்றம் சென்று தடையாணை பெற்றதால், அந்தப் பணி நின்றுபோனது. சற்றேறக்குறைய 8, 9 ஆண்டுக் காலமாக அந்தப் பணி நிலுவையில் இருக்கின்றது. தயவுசெய்து, நீதிமன்றத் தடையாணையை நீக்க வேண்டும் என்றும், விவசாயப் பெருங்குடி மக்கள் பயன்பெறும் வகையில் இந்தத் திட்டத்தை விரைந்து செயல்படுத்திட வேண்டுமெனவும் நான் இந்த அரசை மிகவும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன். காரணம், இந்த அணையைக் கட்டுவோமேயானால், மேல் அரசம்பட்டு ஏரி, வேப்பம்குப்பம் ஏரி, அகரம் ஏரி, முகம்மதுபுரம் ஏரி, பெரிய ஏரி, சக்கராகுட்டை ஏரி, கருங்காலி ஏரி, கீழ்கிருஷ்ணாபுரம் ஏரி, கொல்லமங்கலம் போன்ற எண்ணற்ற பல ஏரிகள் நிறைந்து, அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயப் பெருங்குடிமக்கள் நல்ல முறையில் விவசாயம் செய்திட வழிவகை ஏற்படும். அதற்கு இந்த அரசு உடனடியாக ஆவன செய்ய வேண்டுமென நான் கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1–30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நாடே வறட்சியின் பிடியில் சிக்கித் தவிக்கின்ற ஒரு நிலைபே, வேலூர்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2017 ஜனவரி 30] [திரு. ஏ.பி. நந்தகுமார்]

மாவட்டம், வெயில் ஊர் என்று பெயர் பெற்றது. வெயில் ஊர் என்ற பெயர் பெற்ற அந்த மாவட்டத்தில் பாலாறு என்ற வறண்ட பாலைவன ஆறு ஒன்று இருக்கின்றது. இப்பாலாற்றுக்கு நீர் வரத்து ஆதாரமாக விளங்குவது ஆந்திராவின் புல்லூர் மற்றும் கர்நாடக மாநிலத்தினுடைய பேத்தமங்களா ஏரி. இந்த இரண்டு பெரும் நீர் வரத்தினால் மட்டுமே பாலாற்றில் தண்ணீர் வரும் நிலை மாறி, சற்றேறக்குறைய 10 வருட காலமாக அந்தப் பாலாற்றிலே தண்ணீர் வரவில்லை. கடந்த ஆண்டு பெய்த மழையினால் மலைகள் சூழ்ந்த இந்த மேல் அரசம்பட்டு வழியாக வரக்கூடிய அந்த அகரம் ஆற்றில் கரை புரண்டு ஓடிய வெள்ளத்தினால் பாலாற்றில் நீர் பெருக்கெடுத்து ஓடியது. வேலூர் மாநகர மக்களின் தாகத்தை தணிக்கும் வகையிலே, எதிர்காலத்தில் அந்த மக்களின் குடிநீர்த் தேவையை சமாளிக்கக்கூடிய நிலையில், அந்த மேல் அரசம்பட்டு அணையைக் கட்டினால் மட்டுமே தீர்வு காண முடியும் என்ற தீர்க்கமான எண்ணத்தோடு, மீண்டும் ஒரு முறை கேட்டுக்கொள்கின்றேன். எனவே, தயவு கூர்ந்து அந்தத் திட்டத்தை இந்த அரசு உடனடியாக செயல்படுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென நான் கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடு) தயவு கூர்ந்து நான் கோரிக்கையாக வைக்கின்றேன். ஏனென்றால், இடையிலே நான் மறுபடியும் பேச முடியாது. அமைச்சர் அவர்கள் தயவு செய்து. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பதில்தான் சொல்கிறார். (குறுக்கீடு) அவர் பதில்தான் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** அணைக்கட்டுத் தொகுதி, கருங்காலி கிராமம் அருகே அகரம் ஆற்றின் குறுக்கே தடுப்பணை ஒன்றைக் கட்ட வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்திருக்கின்றார். அதற்கான கருத்துரு ரூ. 4.62 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2017 ஜனவரி 30

அதேபோல, சாலைகள் எல்லாம் மோசமாக இருக்கின்றன என்று குறிப்பிட்டார். கடந்த 5 ஆண்டுக் கால அம்மா அவர்களுடைய ஆட்சியில், அணைக்கட்டு தொகுதியில், தேசிய நெடுஞ்சாலை நீங்கலாக, நம்முடைய நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்படுகின்ற சாலைகளின் நீளம் 111 கி.மீ. இதில் கிட்டத்தட்ட 110 கி.மீ. அளவிற்கு சாலைகள் மேம்படுத்தப்பட்டு உள்ளன என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக அம்மா அவர்களுடைய அரசால் 54.96 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கின்றது என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆகவே, நெடுஞ்சாலைத் துறைக்கு சம்பந்தப்பட்ட சாலைகள் அனைத்தும் சீரமைக்கப்பட்டுள்ளன என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. ஏ.பி. நந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அந்த சாலையைச் சீரமைக்க வேண்டுமென்று சொல்லவில்லை. அங்கே சாலையே கிடையாது. அந்த மலைவாழ் மக்களுக்கு சாலையே கிடையாது. சாலை இருந்தால்தானே, அதைச் சீர்படுத்தி தரமுடியும். அந்தச் சாலையை நீங்கள் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். எந்த ஊரிலிருந்து, எந்தப் பகுதிக்கு அந்தச் சாலை வருகின்றது. அந்தச் சாலை நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமானதா, உள்ளாட்சித் துறைக்குச் சொந்தமானதா அல்லது வனத் துறைக்குச் சொந்தமானதா என்பதைப் பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெளிவாகச் சொன்னால்தான், அதற்கு நாங்கள் தேவையான நடவடிக்கையை மேற்கொள்ள முடியும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) அது மலையாக இருப்பதால், வனப் பகுதியில் வரும். வனப் பகுதியாக இருந்தால், மத்திய



2017 ஜனவரி 30] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

அரசிடமிருந்து அனுமதி பெற்றுத்தான், அந்தப் பகுதியிலே சாலை அமைக்க முடியும் என்பதையும் தங்கள் வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ.பி. நந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலில் குறிப்பிட்டதைப்போன்று, பீஞ்சமந்தை, பாலாம்பட்டு போன்ற கிராமங்களில் மலைவாழ் மக்கள் வாழ்கின்றார்கள். அந்த ஊர்களுக்கு சாலை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவை வனத் துறை சம்பந்தமான சாலைகள். ஆகவே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்து, அந்த மக்கள் பயன்பெறும் வகையில் சாலை அமைத்துத் தர வேண்டும். காரணம், நான் ஓட்டு கேட்பதற்காக அந்தக் கிராமங்களுக்குச் சென்றேன். (குறுக்கீடு) ஐயா, ஐயா, தயவுசெய்து கொஞ்சம் பேச அனுமதியுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற வனப் பாதை தமிழ்நாடு அரசுக்குச் சம்பந்தமில்லாதது என்று தெரிகிறது. மத்திய வனத் துறைக்குச் சொந்தமானது. இருந்தாலும், அதைப் பரிசீலனை செய்து, அந்தப் பாதைகளைச் செப்பனிடுவதற்குரிய சூழ்நிலையை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ.பி. நந்தகுமார்:** தேர்தலின்போது அந்த மக்கள் என்னிடத்தில் வைத்த கோரிக்கையை தயவு செய்து புரிந்துகொள்ள வேண்டும். என்ன சொன்னார்கள் என்றால், "ஐயா, மலைவாழ் மக்களாகிய நாங்கள், 20,000 பேர் இந்தப் பகுதியில் வசித்து கொண்டிருக்கின்றோம். நாங்கள் சென்று பெண் கேட்டால், பக்கத்தில் இருக்கிற மலைக்காரன்கூட எங்கள் வீட்டுக்குப் பெண் கொடுக்கமாட்டேன் என்கிறான்" என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட ஓர் அவல நிலை இன்று இருந்து கொண்டிருக்கின்றது. அதுவும் தமிழ்நாட்டில் இருந்து கொண்டிருக்கின்றது. காரணம், அதற்கு சாலை வசதி இல்லை என்கின்ற ஒரே நிலைதான். மத்திய அரசின் வனத் துறையின்கீழ் இருந்தாலும், தயவு செய்து, வனத் துறை அமைச்சர் அதற்கு

[திரு. ஏ.பி. நந்தகுமார்] [2017 ஜனவரி 30

உரிய நடவடிக்கை எடுத்து, அந்த மக்களுடைய குறையைப் போக்கி என்னுடைய மாவட்டத்தில் இருக்கின்ற அந்த பீஞ்சமந்தை, பாலாம்பட்டு கிராமங்களுக்கு சாலையை ஏற்படுத்தித் தர வேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1–35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டு தொகுதியில் ஒரு மாணவனோ, மாணவியோ 12 ஆம் வகுப்பு படித்து முடித்தபின் மேல் படிப்புக்குச் செல்ல வேண்டுமென்றால், வேலூருக்குத்தான் செல்ல வேண்டும். சற்றேறக்குறைய 60, 70 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள வேலூருக்குச் செல்ல வேண்டும். அணைக்கட்டு தொகுதியில் அவர்களுக்கு எந்தவொரு கல்லூரியும் இல்லை. ஆகவே, தயவு செய்து என்னுடைய அணைக்கட்டு தொகுதியில் ஓர் அரசு மகளிர் கலைக் கல்லூரியை ஏற்படுத்தித் தர வேண்டுமென நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய அணைக்கட்டு தொகுதியிலுள்ள அரியூர் ஸ்ரீபுரத்தில் புகழ்வாய்ந்த Golden Temple என்ற பொற்கோயில் இருக்கின்றது. அந்தப் பொற்கோயிலுக்குச் செல்கின்ற வழியில் கந்தனேரி என்கின்ற பகுதியில் தேசிய நெடுஞ்சாலையிலே மக்கள் கடந்து செல்கின்றபோது, விபத்துகள் ஏற்பட்டு கிட்டத்தட்ட 50 பேர் இறக்கக்கூடிய ஓர் அவல நிலை இருக்கிறது. தயவு செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறுக்கிடாமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாநில நெடுஞ்சாலைத் துறையிடம் permission–ஐ வாங்கி, உடனடியாக அந்த இடத்திலே ஒரு பாலத்தை அமைத்துத் தர வேண்டுமென என்னுடைய பகுதி மக்களின் சார்பிலே நான் கேட்டுக்கொள்கின்றேன். அதேபோன்று, நாளுக்கு நாள் பெருகிவரும் போக்குவரத்து நெரிசலை சீராக்கிடும்வகையிலே கந்தனேரி தேசிய நெடுஞ்சாலை முதல் பொற்கோயில் வரை நான்கு வழிச் சாலை அமைத்துத் தர வேண்டுமென நான் கேட்டுக்கொள்கின்றேன்.

என்னுடைய அணைக்கட்டு தொகுதி தனி வட்டமாக அறிவிக்கப்பட்ட நிலையில் வட்ட நீதிமன்றம், தீயணைப்பு நிலையம், துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் இயங்கி வருகின்றன. தற்போதுள்ள அரசு மருத்துவமனை வட்டார மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. மருத்துவமனை



2017 ஜனவரி 30] [திரு. ஏ.பி. நந்தகுமார்]

தரம் உயர்த்தப்பட்டுள்ளதேயொழிய, அதற்குண்டான அந்த உபகரணங்களை இதுவரை அந்த மருத்துவமனைக்குத் தரவில்லை. ஆகவே, உடனடியாக இந்த அரசு அதை செய்து தர வேண்டுமென உங்களை நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய வேலூர் மார்க்கெட்டில் விற்கப்படும் கொய்யாக் கனியானது மிகவும் ருசியானது. என்னுடைய அணைக்கட்டு தொகுதியிலே, ஒடுகத்தூர் பகுதியிலே மிகவும் அதிகமான அளவில் கொய்யா கனி விளைச்சல் இருக்கின்றது. இவற்றினைப் பாதுகாத்திடவும், என்னுடைய தொகுதியில் பயிரிடப்படுகின்ற அந்தக் காய்கறிகள் கெட்டுவிடாதவண்ணம் பாதுகாத்திடவும், அந்தப் பகுதியில் குளிர்பதனக் கிடங்கு ஒன்றை அமைத்துத் தர வேண்டுமென இந்த அரசை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைய துணை முதல்வரும், இன்றைய எதிர்க்கட்சித் தலைவருமான மாண்புமிகு தளபதி அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு கொண்டுவரப்பட்ட திட்டம் ஒகேனக்கல் மேட்டூர் கூட்டுக் குடிநீர் திட்டம். வேலூர் மாவட்ட மக்கள் கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டபோது, அவர்களுடைய குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும்வகையில், இந்தத் திட்டத்தை எங்கள் அண்ணன் தளபதி அவர்கள் கொண்டு வந்ததற்காக, எங்கள் மாவட்ட மக்களின் சார்பிலே நான் முதலிலே அவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனுடைய விரிவாக்கத் திட்டமான அந்த மேட்டூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை என்னுடைய அணைக்கட்டு தொகுதிக்கும் விரிவாக்கம் செய்து, அந்த மக்களின் தாகத்தைத் தீர்க்கின்றவகையிலே நீங்கள் வழிவகை செய்ய வேண்டுமென்று உங்களை நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்ட இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் பயன்பெறும்வகையிலே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட ஊசூரில் அமையவிருக்கும் மாவட்ட விளையாட்டு மையம் அமைப்பதற்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதை விரைந்து செய்திட வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன்.

[திரு. ஏ.பி. நந்தகுமார்] [2017 ஜனவரி 30

வேலூர் மாநகராட்சி மிகப் பெரிய ஒரு மாநகராட்சி. வேலூர் மாநகராட்சிப் பகுதிகளிலிருந்து குப்பைகளை எடுத்து வந்து பக்கத்தில் இருக்கின்ற என்னுடைய அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட சதுப்பேரியிலே கொட்டுகின்றார்கள். இதை நீதிமன்றமே கண்டித்திருக்கின்றது. அந்த மாநகராட்சியின் Commissioner–ஐ "அந்தக் குப்பைக் கிடங்கு எங்கு அமைந்திருக்கின்றதோ, அதன் பக்கத்தில் வீடு கட்டி வாழ முடியுமா?" என்று நீதிமன்றமே கண்டித்திருக்கின்றது. ஆகவே, தயவு செய்து அந்தக் குப்பைகளை என்னுடைய தொகுதியிலே கொட்டாதவண்ணம், அந்தக் குப்பைக் கிடங்கை உடனடியாக மாற்றி, நவீன முறையிலே அதற்கென்று ஒரு compost yard–ஐ அமைத்து, குப்பைகளை அங்குக் கொட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பக்கத்துத் தொகுதியில் பொழுதுபோக்கு இடமாக விளங்கும் அமிர்தி வனப் பகுதிக்குச் செல்ல வேண்டுமானால், என்னுடைய தொகுதியிலே அமைந்திருக்கின்ற நாகநதியிலே ஒரு மேம்பாலம் தேவைப்படுகின்றது. மழை வருகின்ற காலத்திலே tourists அந்தப் பகுதிக்குச் செல்ல முடியவில்லை. எனவே, நாகநதியிலே ஒரு மேம்பாலத்தைக் கட்டித் தர வேண்டுமென நான் கேட்டுக்கொள்கின்றேன்.

கடந்த திராவிட முன்னேற்றக் கழக தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் வேலூர் பகுதியிலே வாகன நெரிசல் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அதைச் சீர்செய்ய திட்டம் தீட்டப்பட்டது. வேலூரிலே புகழ்பெற்ற தங்கக் கோயில் இருக்கிறது; C.M.C. போன்ற எண்ணற்ற பல கல்லூரிகளும் இருக்கின்றன. இதன் காரணமாக, வேலூர் பகுதியில் நிலவும் வாகன நெரிசலைக் குறைப்பதற்காக, சற்றேறக்குறைய 45 இலட்சம் ரூபாய் அளவிலே தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே அதற்கென ஒரு திட்டத்தைத் தீட்டி, நிதியையும் ஒதுக்கினார்கள். நீங்கள் ஆட்சிக்கு வந்து 6 வருட காலமாகியும், அந்தத் திட்டத்தை இதுவரை செயல்படுத்தவில்லை. எனவே, மக்களின் சிரமத்தைப் போக்கிட, அந்தத் திட்டத்தை நீங்கள் விரைந்து செயல்படுத்திட வேண்டுமென நான் உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.



2017 ஜனவரி 30] [திரு. ஏ.பி. நந்தகுமார்]

பிற்பகல் 1–40

அடுத்து, மிக முக்கியமான ஒரு பிரச்சினை; வியாதிகளைப் பரப்புகின்ற ஒரு பிரச்சினை குறித்து மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன். என்னுடைய தொகுதியில் அமையப் பெற்றிருக்கின்ற வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையிலிருந்து கழிவு நீரை கால்வாயில் விடுகின்றார்கள். அங்கு ஒரு கால்வாய் இருக்கின்றது. மழை நீர் செல்வதற்காக அமைக்கப்பட்டிருக்கின்ற அந்தக் கால்வாயிலே, அந்த மருத்துவமனை கழிவுநீரை விடுகின்றார்கள். இதனால் மக்கள் எண்ணற்ற பல வியாதிகளுக்கும், இன்னல்களுக்கும் ஆளாகி, மிகவும் துன்பப்படுகின்றார்கள். எனவே, தயவுசெய்து அதற்கென்று ஒரு treatment plant–ஐ அமைக்க வேண்டுமென்றும், அந்தத் தண்ணீரை அந்தக் கால்வாயிலே கண்டிப்பாக விட வேண்டாமென்றும் உங்களை நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரையில் பக்கம் 10, 11–ல் மரக்கன்றுகள் நடுவதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றீர்கள். கடந்த டிசம்பர் 2016–ல் ஏற்பட்ட புயல் மழையால் இலட்சக்கணக்கான மரங்கள் வேரொடு சாய்ந்தன. அதற்கு மாற்றாக, அரசு சார்பில் வருகிற பிப்ரவரி மாதம், முன்னாள் முதல்வர் அம்மையார் அவர்களுடைய பிறந்தநாளின்பொழுது மரம் நடுவதாகச் சொல்லியிருக்கின்றீர்கள். இத்திட்டத்தை நாங்கள் வரவேற்கிறோம். இத்திட்டத்திற்கு முன்னோடியாக, 2015 ஆம் ஆண்டு, எங்கள் செயல் தலைவரும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருமான அண்ணன் தளபதி அவர்கள், தி.மு.க. இளைஞரணியின் சார்பாக மாநிலம் முழுவதும் 93 இலட்சம் நாட்டு மரங்களை (மேசையைத் தட்டும் ஒலி) அன்புத் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளையொட்டி நடச்சொன்னார்கள். கடந்த புயல் மழையின்போது எத்தனையோ மரங்கள் சாய்ந்திருக்கின்றன. சல்லி வேர்த் தன்மை கொண்ட அயல் நாட்டு மரங்கள் வேரோடு சாய்ந்தன. அந்த மரங்கள் சாயாதவண்ணம் நாட்டு மரங்களை நடவேண்டும். நம் நாட்டு வகை மரங்களான அரசன், பூவரசன், வேம்பு, மகிழம், புங்கன் மரம், புளியமரம், நாவல் மரம், மாமரம் போன்றவை ஆணி வேர்த் தன்மை கொண்ட காரணத்தினால், அதிக அளவில் புயலையும், மழையையும் தாங்க வைத்து நிலைத்து நின்றன.

*எனவே, புயல் மழையினால் மரங்கள் சாயாத வண்ணம், எங்களுடைய தளபதி அவர்கள் அறிவித்து, 93 இலட்சம் நாட்டு மரக் கன்றுகளை எப்படி நாங்கள் நட்டோமோ, அதேபோன்று நாட்டு மரங்களை நீங்கள் நடவேண்டுமென்று உங்களிடத்திலே ஒரு கோரிக்கையாக நாங்கள் வைக்கின்றோம்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்கம் 33–லே ஒருங்கிணைந்த சாலைகள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ்* CRIDP *திட்டத்தின்கீழ் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பொதுவாக,* CRIDP *திட்டத்தின்மூலம் சாலைகளை அமைத்துத் தருவதற்கு தமிழக அரசின் மூலமாக செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் டெண்டர் விடுவார்கள். ஆனால், அரசினுடைய நிதி நிலைமை காரணமாக இதுவரை அந்தத் திட்டங்கள் அறிவிக்கப்படாமல் இருக்கின்றன. ஆகவே, செப்டம்பரில் அறிவிக்கப்பட வேண்டிய அந்தத் திட்டங்களை உடனடியாக அறிவித்து, மக்களுக்குத் தேவையான சாலைகளை ஏற்படுத்தித் தரவேண்டுமென நான் கேட்டுக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைத் தருகிறார்.* CRIDP *திட்டத்தின்மூலமாக டெண்டர் விடப்பட்டது. மார்ச் மாதம் ஒப்பந்தப்புள்ளி கோரப்படவிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் ஒரு பெரிய ஒப்பந்ததாரர். அதனால்தான் இங்கே அதுகுறித்துப் பேசிக்கொண்டிருக்கின்றார். வருகின்ற மார்ச் மாதம் இதற்கு டெண்டர் விடப்பட்டு,* CRIDP *திட்டத்தின் மூலமாக பணிகளெல்லாம் துவங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. நந்தகுமார் அவர்கள்.*

**திரு. ஏ.பி. நந்தகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் இந்தத் துறையினுடைய அமைச்சர். பொதுவாக, செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் டெண்டர் விடுவார்கள்.*





*ஜனவரி, பிப்ரவரி மாதம் வந்தும் இதுவரை அந்த டெண்டர் விடவில்லை; ஏன் விடவில்லை என்றுதான் கேட்டோம். அரசிடம் நிதியில்லை என்று சொன்னார்கள். பல* Contractor–*களுக்கு இன்னும் செய்து முடித்த பணிகளுக்குரிய* Bill–*க்குப் பணம் வரவில்லை என்று சொன்னார்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடர் தாமதமாகத்தான் நடைபெற்றது. ஆகவே, மானியக் கோரிக்கை மீதான விவாதம் எல்லாம் பின்னாலேதான் நடைபெற்றது. அதற்கு நிதி ஒதுக்கீடும் பின்னாலேதான் செய்தார்கள். அதனால்தான் காலதாமதமேயொழிய, நிதி ஒன்றும் பிரச்சினை இல்லை. அனைத்து நிதியும் குறிப்பிட்ட காலத்தில் ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. ஒப்பந்தப் பணி முடிந்தவுடனே, அவர்களுக்குச் சேர வேண்டிய அந்தத் தொகை இன்றையவரையில் உரிய முறையில் அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறதென்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. நந்தகுமார் அவர்கள்.*

**திரு. ஏ.பி. நந்தகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசுக்கு ஒரு சிறிய கோரிக்கையை வைக்கின்றேன். நானும் ஒரு ஒப்பந்ததாரராக இருந்து, இன்று ஒரு சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்றேன். இன்றைக்கும் பார்த்தீர்களென்றால், புதிய ஒப்பந்ததாரர்களைப் பதிவு செய்வதை நிறுத்தி வைத்திருக்கின்றார்கள். எனவே, அந்த முறையை உடனடியாக மாற்றி, புதிய ஒப்பந்ததாரர்களைப் பதிவு செய்ய வேண்டும். அப்படி இருந்தால்தான், சுகாதாரமாக அனைவரும் டெண்டரில் பங்கேற்க முடியும்;* Single tender System *இல்லாமல் போகும். உடனடியாக அதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்து, யார் வேண்டுமானாலும் சென்று பதிவு செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்)*

[2017 ஜனவரி 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1—45

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருப்பம் உள்ளவர்கள் யாரும் solvency எடுத்து, ஒப்பந்தப் பதிவு செய்து கொண்டு வந்தால், நாங்கள் ஒப்பந்தம் செய்கின்றோம். ஆனால், ஒப்பந்தம் எடுத்தவுடனேயே, பெரிய ஒப்பந்தப் பணிகளைச் செய்ய முடியாது. அந்தந்தப் பணிக்கு ஏற்றவாறு, நிதிக்கு ஏற்றவாறுதான், அந்தந்த category—க்கு ஏற்றவாறுதான், அந்த ஒப்பந்தத்தை எடுக்க முடியும். ஆகவே, இன்றைக்கு 5—வது நிலை, 4—வது நிலை, 3—வது நிலை, 2—வது நிலை, முதல் நிலை என்று அவர்கள் படிப்படியாக அந்த ஒப்பந்தப் பணிகளை எடுத்து செய்தால்தான், அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளிலும் அவர்கள் கலந்துகொள்ள முடியும். எனவே, அரசைப் பொறுத்தவரைக்கும், அனைவருக்கும் டெண்டர் கொடுத்துக்கொண்டுதான் இருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர்களும் அதுபோன்ற பணிகளை செய்து கொண்டுதான் இருக்கிறார்கள் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார் அவர்கள்.

**திரு. ஏ.பி. நந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படிப்படியாகத்தான் அந்த ஒப்பந்ததாரர்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். அதுபோன்று இனி பதிவு செய்கிறார்களா, இல்லையா என்பதைப் பார்த்து, மீண்டும் எனக்கு இந்தச் சபையிலே பேசுகின்ற வாய்ப்புக் கிடைக்கும்போது அதுகுறித்து நான் பேசுகின்றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.



2017 ஜனவரி 30]

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதிவு செய்த அனைவரும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டு, வேலைகளை எடுத்து செய்துவிட முடியாது. ஏனென்றால், அது கட்டப் பஞ்சாயத்துமாதிரி ஆகிவிடும். ஆகவே, உண்மையானவர்கள், தகுதியானவர்கள், அந்த வேலையிலே அனுபவம் இருக்கக்கூடியவர்களாக இருந்தால்தான் அந்தப் பணியைச் செய்ய முடியும். பொதுவாக பார்த்தீர்களென்றால், எல்லாருமே ஒப்பந்தம் பதிவு செய்துகொண்டிருந்தாலும், ஒப்பந்தம் எடுப்பவர்களைப் பார்த்தால், ஒன்றிரண்டு பேர்தான் பணிகளை எடுப்பார்கள். பதிவு செய்தவர்களில் மீதமுள்ளவர்கள், 15, 20 பேர் போய்விடுகின்றார்கள். அது ஒரு கட்டப் பஞ்சாயத்துமாதிரி ஏற்பட்டுவிடுகிறது. ஆகவே, தகுதியானவர்களுக்கு நிச்சயமாக ஒப்பந்தம் பதிவு செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார் அவர்கள்.

**திரு. ஏ.பி. நந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்கம் 43—லே, மதுரை, தூத்துக்குடி தொழில் வழித்தட மேம்பாட்டு நிறுவனம் என்ற சிறப்பு நோக்கு நிறுவனம் அமைக்கப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளீர்கள். இதே கருத்து பல ஆண்டுகளாகத் தெரிவிக்கப்பட்டு வருகிறது. தொழில் துறை மானியத்திலும், வரவு—செலவுத் திட்டத்திலும் இந்தக் கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இந்த நிறுவனம் மதுரையில் எங்குள்ளது? எத்தனைபேர் பணிபுரிகிறார்கள்? யார் தலைமையில் இயங்கி வருகிறது? இதுவரையில் என்னென்ன பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன? எவ்வளவு தொகை செலவிடப்பட்டுள்ளது? எத்தனை தொழில் அமைப்புகள் இதில் கலந்துகொண்டுள்ளன என்பதைத் தெரிவிக்க வேண்டும். காரணம், தென் மாவட்டங்களில் நிலங்கள் கையகப்படுத்தும் பணிகளை வருவாய்த் துறையினர் மேற்கொண்டு வருகிறார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிவிப்பு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Madurai–Tuticorin Industrial Corridor Road–ஐப் பற்றி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். அதற்குண்டான Special Officers நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள்; துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அரசின்மூலமாக ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. மேலும், அந்தப் பகுதியில் Industries Development ஆக வேண்டும் என்று சொல்லி, கிட்டத்தட்ட 25,000 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட உள்ளது. தற்சமயம் 6,000 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார் அவர்கள்.

**திரு. ஏ.பி. நந்தகுமார்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையிலே பக்கம் 40, 41–ல், மீண்டும் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தப்படும் என்று அறிவித்திருக்கின்றீர்கள். கடந்த ஆண்டுகளில் மூன்று முறை முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தப்படும் என்று அறிவித்த பிறகும், கடந்த வருடம் அந்த மாநாடு நடத்தப்பட்டது. சற்றேறக்குறைய, 96 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்மூலம் 2 இலட்சத்து 42 ஆயிரத்து 162 கோடி ரூபாய் முதலீடு செய்யப்படுகிறது என்று தெரிவித்திருக்கிறீர்கள். அதில், 62 திட்டங்கள் பல்வேறு நிலைகளில் செயலாக்கத்தில் உள்ளன என்று பக்கம் 41–ல் அறிவிக்கப்பட்டுள்ளது. மீதி 36 திட்டங்களின் நிலை என்ன? முழு விவரங்கள் தேவை. அரசு எத்தனை நிறுவனங்களுக்கு தேவையான நிலங்களை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 98 நிறுவனங்களின்மூலம் 2.42 இலட்சம் கோடி ரூபாய் முதலீடு செய்யப்படவுள்ளது. 62 நிறுவனங்களுக்கு உண்டான ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. தற்சமயம், last year மட்டும் 25,020 கோடி ரூபாய் நிறுவனங்களின்மூலமாக வரபெற்றுள்ளன. தற்சமயம், இரண்டு மிகப் பெரிய Oil Refinery Unit இருக்கின்றது. Al Kharafi Industries தூத்துக்குடியில் இருக்கின்றது. அந்த நிறுவனம்மூலம் மட்டும் more than Rs.60 crore முதலீடு





செய்யப்படவுள்ளது. அதற்குண்டான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது 3 முதல் 7 ஆண்டுகள் வரையிலான திட்டம். உடனடியான திட்டம் அல்ல; 3 வருடம் முதல் 7 வருடங்கள் வரையிலான திட்டமாகும். பெரிய நிறுவனங்கள்மூலம் துரித முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிச்சயமாக அது வரப்பெற்று, உடனடியாகத் துவக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார், நீங்கள் பேச ஆரம்பித்து 25 நிமிடங்கள் ஆகிவிட்டன. உரையை முடியுங்கள்.

**திரு. ஏ.பி. நந்தகுமார்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30 சதவிகிதம்கூட புதிய முதலீட்டாளர்களை முழுமையாகப் பெற முடியாமல் இருக்கும் இந்த நிலையில், மற்றொரு மாநாடு அவசியமா என்பதை நான் உங்களிடத்திலே அறிந்துகொள்ள விரும்புகின்றேன். அதேபோன்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு பதிலைச் சொன்னார்கள். ரூபாய் ஆயிரம் கோடி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1–50

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒன்றை நன்கு புரிந்துகொள்ள வேண்டும். உலகத் தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற்றால்தான் அரசினுடைய முழு கவனமும் அதில் இருக்கும். பல்வேறு நிறுவனங்களும், பெரிய, பெரிய நிறுவனங்களும் தொடர்ந்து வருவார்கள். அதற்குரிய மாநாட்டினை நடத்திக் கொண்டே இருக்க வேண்டும். தொழில் தொடங்கிட வரக்கூடிய நிறுவனங்களுக்கும், குறிப்பிட்ட காலக்கெடு இருக்கின்றது; 3 முதல் 7 ஆண்டுகள்வரை காலக்கெடு இருக்கின்றது; Investors–க்கு அளவுகோல் இருக்கிறது. அந்த அளவுகோலுக்குத் தகுந்தாற்போன்று அரசினுடைய கவனம் அதிலே நிச்சயமாக இருக்கிறது. துரிதமான நடவடிக்கைகள் தொடர்ந்து

[திரு. எம்.சி. சம்பத்] [2017 ஜனவரி 30

மேற்கொள்ளப்பட்டு, பல்வேறு நிறுவனங்களைக் கொண்டு தொழிற்சாலைகள் கொண்டு வரப்படும். உலகத் தொழில் முதலீட்டாளர் மாநாட்டை வெகுவிரைவில் நடத்துவதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திலும் இது இருக்கின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார் அவர்கள்.

**திரு. ஏ.பி. நந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1,000 கோடி ரூபாய் முதலீட்டில் கடலூர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் SIMA– South Indian Mills Association–உடைய Textile Processing Industry வரும் என்று கூறப்பட்டுள்ளது. அது வரவே வராது என்று எங்களுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். காரணம், தண்ணீர்ப் பிரச்சினை மற்றும் மாசுக் கட்டுப்பாடு சட்டம் போன்றவற்றால் அதைக் கொண்டு வரமுடியாது என்று தெரிந்தே, அந்தத் திட்டத்தை அங்கே அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 30,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 7,000 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்ற வகையிலே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, SIMA நிறுவனத்தைப் பொறுத்தவரையில், ground water எடுப்பதற்கு அந்தப் பகுதி மக்களால் கொஞ்சம் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. அதனால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் உதவி வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார், உரையைச் சீக்கிரம் முடியுங்கள். நேரம் ஆகிவிட்டது; முடியுங்கள்.



2017 ஜனவரி 30]

**திரு. ஏ.பி. நந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூபாய் 30,000 கோடி செலவில் 7,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையிலே தூத்துக்குடியில் Oil Refinery and Petro–Chemicals தொழிற்சாலை வருமா? வராதா? அண்டை மாநில அரசு அதனைக் கொண்டுசெல்வதற்குரிய சூழ்நிலை இப்போது இருந்துகொண்டிருக்கிறது. அதுகுறித்து தங்கள் வாயிலாக நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் உரையை சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Al Kharafi Refinery நிறுவனம் மிகப்பெரிய நிறுவனம். 3 முதல் 7 வருடம் வரை அவர்களுக்குக் கால அவகாசம் இருக்கிறது. கடந்த வாரம்கூட அவர்களை அணுகிப் பேசியிருக்கிறோம். நிச்சயமாக மற்ற மாநிலத்திற்குப் போகிற வாய்ப்பு சிறிதளவும் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக தூத்துக்குடியில் அது அமையப்பெறும் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நந்தகுமார், உரையைச் சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடு) 25 நிமிடங்கள் ஆகிவிட்டன. நீங்கள் கேட்டது 20 நிமிடங்கள்தான். நான் 25 நிமிடங்கள் பேச அனுமதித்துவிட்டேன்.

**திரு. ஏ.பி. நந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2016 ஆம் ஆண்டு ஆளுநர் உரையிலே, பக்கம் 4–ல் லோக் அயுக்தா அமைப்பை அரசு நிறுவும் என்று அறிவித்துள்ளீர்கள். எப்போது அமைப்பீர்கள் என்று இந்த மாமன்றத்தில் தெரிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி, உட்காருங்கள். (குறுக்கீடு) போதும். நானே நன்றி சொல்லிவிட்டேன்.

[2017 ஜனவரி 30

## 4. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஆ) வேலூர் மாவட்டம், குடியாத்தத்தில் பறவைக் காய்ச்சலால் ஏற்பட்டுள்ள பாதிப்பு—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையிலே நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஒரு பிரச்சினையைக் குறிப்பிட்டார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உங்களுக்குத்தான் பதில் சொல்கிறார்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையிலே நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் தொகுதியிலே இருக்கிற ஒரு பிரச்சினையைக் குறித்து குறிப்பிட்டார்கள். வேலூர் மாவட்டம், குடியாத்தத்திலிருந்து 23 பேர் கொண்ட குழு ஜனவரி மாதம் 17 ஆம் தேதி முதல் ஜனவரி 22 ஆம் தேதி வரை கேரள மாநிலத்திற்கு சுற்றுலா சென்றது. அந்தக் குழுவிலிருந்து திருமதி நாகம்மாள் மற்றும் திருமதி விஜயம்மாள் என்ற நபர்கள் பறவைக் காய்ச்சலால் இறந்ததாக ஒரு தவறான செய்தி வெளியாகியுள்ளது. இதில் திருமதி நாகம்மாள் என்பருக்கு சுற்றுலா சென்று ஊர் திரும்பிய பிறகு, பன்றிக் காய்ச்சல் உறுதி செய்யப்பட்ட நிலையில், சிகிச்சைப் பலனின்றி இறந்ததாகவும், மற்றொரு நபர் திருமதி விஜயம்மாள் என்பவருக்கு எந்த நோய் என்று பரிசோதனை செய்வதற்கு முன்பே இறந்ததாகவும் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. இதற்கான அறிக்கை பின்வருமாறு:

திருமதி நாகம்மாள், வயது 45, கணவர் பெயர் செல்வம். சந்தைப்பேட்டை, குடியாத்தத்திலிருந்து கேரளா சுற்றுலா சென்று திரும்பிய பின், காய்ச்சல் மற்றும் இருமல் இரண்டு நாட்களாக இருந்ததால் தனியார் மருத்துவமனையில் 25 ஆம் தேதி அனுமதிக்கப்பட்டு சிகிச்சை மேற்கொண்டார். இவர் 27 ஆம் தேதி இரவு 11 மணியளவிலே அந்த தனியார் மருத்துவமனையிலிருந்து வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குப் பரிந்துரைக்கப்பட்டார். ஆனால், வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு வரும் வழியில் அவர் இறந்ததாகத் தெரியவந்தது. இவரின் நோய் என்ன என்று வேலூர் சி.எம்.சி. மருத்துவமனையில் பரிசோதனை செய்ததில், H1N1, அதாவது பன்றிக் காய்ச்சல் என்று உறுதி செய்யப்பட்டுள்ளது.



திருமதி நாகம்மாள் என்பவருக்கு உயர் இரத்த அழுத்தமும், சர்க்கரை நோயும் இருந்ததாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. இது தவிர, அவரோடு பக்கத்து தெருவில் வசித்த திருமதி விஜயம்மாள், வயது 58, கணவர் பெயர் குமார், சிவகாமியம்மன் 2–வது தெரு, சந்தைப்பேட்டை, குடியாத்தம் இவரும் தனியார் மருத்துவமனைக்கு காலை 3–00 மணியளவில் 28–1–2017 அன்று அழைத்துச் செல்லப்பட்டார். ஆனால், அவரும் வரும் வழியில் இறந்துவிட்டதாகத் தெரியவந்தது. ஆனால், இவருக்கு நோய் பரிசோதனை செய்யப்படுவதற்கு முன்பே இவர் இறந்துள்ளார். இருவருக்கும் உயர் இரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை நோய் பாதிப்பு இருந்தது. ஆகையால் அந்தப் பகுதியில் பறவைக் காய்ச்சல் என்று சொல்வது முற்றிலும் தவறான செய்தியாகும். மேலும், தமிழகத்திலே எந்தப் பகுதியிலும் பறவைக் காய்ச்சல் பாதிப்பு இல்லை என்பதை இந்த அவையிலே நான் உறுதிபடத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், அண்டை மாநிலத்தில் பறவைக் காய்ச்சல் ஏற்பட்டபொழுதெல்லாம்கூட தமிழ்நாட்டில் கால்நடைத் துறையும், சுகாதாரத் துறையும் இணைந்து வேகமாக பணியாற்றிய காரணத்தினாலே, எல்லைப் பகுதியிலே தீவிர நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொண்ட காரணத்தினாலே, தற்பொழுது தமிழ்நாட்டில் பறவைக் காய்ச்சல் முழுமையாகத் தடுக்கப்பட்டுள்ளது என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

பிற்பகல் 1–55

குடியாத்தம், சந்தைப்பேட்டை பகுதியில் சுற்றுலா சென்று திரும்பி வந்த மீதமுள்ள நபர்களுக்குத் தற்பொழுது காய்ச்சல் மற்றும் இருமலுக்கான பரிசோதனைகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதில், இரண்டு நபர்களுக்கு இதற்கான அறிகுறிகள் காணப்பட்டதால், தேவையான நோய்த் தடுப்பு மருந்துகள் தற்பொழுது வழங்கப்பட்டு வருகின்றன. இந்தப் பகுதியில் பன்றிக் காய்ச்சலைத் தடுப்பதற்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் அரசு வேகமாக எடுத்து வருகின்றது. உலக

[டாக்டர் சி. விஜய பாஸ்கர்] [*2017 ஜனவரி 30*

சுகாதார நிறுவனத்தின் வழிகாட்டுதலின்படி, மீதமுள்ள அனைவருக்குமே நோயைத் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக tamiflu tablets வழங்கப்பட்டுவிட்டன. சுற்றுலா சென்று திரும்பி வந்த அனைவருடைய வீடுகள் அமைந்துள்ள பகுதிகளுக்கும் சுகாதார ஆய்வாளர்கள் நேரடியாகச் சென்று, கிருமி நாசினிகள் தெளிக்கப்பட்டு, நோய் பரவாமலிருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நோயை முற்றிலுமாகத் தடுப்பதற்கு, கை கழுவும் பழக்கம் மிக, மிக முக்கியம் என்கிற காரணத்தினால், அதனைக் கையாள்வதற்கான வழிமுறையும், விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

குடியாத்தத்தைச் சேர்ந்த சிவகாமியம்மன் முதல் தெருவிலே, கிருஷ்ணவேணி, த/பெ. அழகிரி என்ற மேலும் ஒரு நபர் தற்பொழுது Vellore C.M.C.–லே இரத்த அழுத்தம் மற்றும் மூச்சுத் திணறல் நோய்க்கு சிகிச்சை பெற்று வருகிறார். தற்பொழுது இவரது நிலை சீராக உள்ளதாகவும், மருத்துவக் கண்காணிப்பிலே உள்ளதாகவும் கூறியுள்ளார்கள்.

*2009–2010*–லே, “உலக அளவிலே பன்றிக் காய்ச்சல் நோய் ஒரு கொள்ளை நோய்” என உலக சுகாதார நிறுவனம் அறிவித்தது. ஆனால், இதே உலக சுகாதார நிறுவனம்–(W.H.O.) இந்தக் காய்ச்சலை “ஒரு சாதாரண புளூ காய்ச்சல்” என்று *2010*–லே அறிவித்தது. இருந்தாலும்கூட, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இதிலே முழு எச்சரிக்கையோடும், கண்காணிப்போடும் இருந்து வருகிறது. குறிப்பாக, முதியவர்கள், கர்ப்பிணிகள், பச்சிளம் குழந்தைகள், சர்க்கரை நோய் மற்றும் இரத்த அழுத்தம் போன்ற நோய்கள் ஏற்கெனவே இருப்பவர்களுக்கு இந்த நோய் பாதிப்பு ஏற்படக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, யாருக்காவது காய்ச்சலுக்கான அறிகுறி வந்தால், “மருத்துவரிடம் செல்வதைத் தள்ளிப்போடுவதோ அல்லது உடனடியாக மாத்திரை சாப்பிடாமலோ இருக்கக்கூடாது” என்று துறைரீதியாக அறிவுறுத்தப்பட்டு வருகிறது.

மேலும், இந்த நோயைக் கண்டுபிடிக்க *21* ஆய்வு மையங்கள் தொடங்கப்பட்டு, அவை சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. நோயைக் குணப்படுத்துவதற்குத் தேவையான *10* இலட்சம் tamiflu tablets அனைத்து மாவட்டங்களுக்கும் தற்பொழுது அனுப்பி வைக்கப்படுகின்றன. அதுமட்டுமல்லாமல், தனியார்



*2017 ஜனவரி 30*] [டாக்டர் சி. விஜய பாஸ்கர்]

மருத்துவமனைகளுக்கும், தேவைப்பட்டால், அரசின் சார்பில் எந்த விலையும் இல்லாமல் tamiflu tablets மற்றும் குழந்தைகளுக்கு tamiflu syrup கொடுக்கப்பட்டு வருகின்றது. நோயாளிகளைக் கையாளக்கூடியவர்களுக்குத் தேவையான safety kit என்று சொல்லக்கூடிய முகமூடிகளும், கையுறைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. இப்பணியில் ஈடுபட்டுள்ள மருத்துவம் மற்றும் மருத்துவம்சாராப் பணியாளர்களுக்குத் தேவையான vaccine–ம் அரசிடம் போதுமான அளவு கையிருப்பில் இருக்கிறது.

ஆகவே, சுகாதாரத் துறையின் சார்பில் பொது மக்கள் கூடும் இடங்கள் மற்றும் இதர இடங்களுக்குச் சென்று திரும்புபவர்களுக்கு காய்ச்சல் என்ற அறிகுறி ஏற்பட்டால், அவர்கள் உடனடியாக அரசு மருத்துவமனையை அணுக வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றோம். தானாக மருந்து உட்கொள்வதையும், காலதாமதமாக சிகிச்சைக்குச் செல்வதையும் தவிர்க்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இதற்கென *27–1–2017* அன்று அனைத்து மாவட்டங்களிலும் இருக்கக்கூடிய கல்லூரி முதல்வர்கள், துணை இயக்குநர், இணை இயக்குநர் மற்றும் குழந்தை நல மருத்துவர் அனைவரையும் அழைத்து, விரிவான ஆய்வுக் கூட்டத்திற்கு சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டு, அவர்களுக்குத் தேவையான அறிவுரைகள் முழுமையாக அரசின் சார்பிலே வழங்கப்பட்டிருக்கின்றன. தமிழக அரசு அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் முடுக்கிவிட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, காய்ச்சல் மற்றும் இதர வகையான தொற்று நோய்களின் நிலைமையைத் தொடர்ந்து கண்காணித்து வருகிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, பதட்டமோ, பீதியோ அடையத் தேவையில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே விவாதம் வேண்டாம். (குறுக்கீடு) நன்றி சொல்கிறீர்களா? சரி, சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காலையிலே நான் சொன்னதை

[திரு. துரைமுருகன்] [2017 ஜனவரி 30

கவனத்திலே எடுத்துக்கொண்டு, அதற்காகக் கஷ்டப்பட்டு, உடனடியாக அதிகாரிகளைச் சந்தித்து, தன்னுடைய கருத்தை, பதிலைச் சொன்னதற்காக அவருடைய கடமை உணர்வை நான் பாராட்டுகிறேன். ஆனால் ஒன்று, நான் பறவைக் காய்ச்சல் என்று சொன்னால், அவர் பன்றிக் காய்ச்சல் என்று சொல்கிறார். ஆக, ஏதோ ஒரு காய்ச்சல். நான் சொல்வதும் correct; அவர் சொல்வதும் correct.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது எப்படி? இரண்டுக்கும் வித்தியாசம் இருக்கிறது. நீங்கள், ** பீதியைக் கிளப்பினீர்கள். அதுமாதிரியெல்லாம் கிடையாது.

## 6. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. நந்தகுமார் அவர்கள் இங்கே தொடக்கத்திலே பேசுகிறபோது, அணைக்கட்டுக்கு காரணமில்லாமல் அந்தப் பெயர் அமைந்திருக்கிறது; அணைக்கட்டே இல்லை என்பதோடு அவர் சொல்லி நிறுத்தாமல், அதற்கு சில உதாரணங்களை இங்கே எடுத்துச் சொன்னார். ** என்று குறிப்பிட்ட அந்த வார்த்தை என்பது அவைக் குறிப்பிலே இடம்பெறக்கூடாது. அது நிச்சயமாக மாற்றுத்திறனாளிகளைப் புண்படுத்தக்கூடிய வகையில் அமைந்துவிடும். எனவே, திரு. நந்தகுமார் சொன்னதையும், அதை இங்கே சுட்டிக்காட்டி அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று நான் சொன்னதையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2017 ஜனவரி 30]

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்பொழுது சதுப்பேரி குப்பைக் கிடங்கைப்பற்றிப் பேசினார்கள். வேலூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு அருகிலுள்ள நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகள் இணைந்து, கசம் அருகில், ரூ.155 கோடி மதிப்பில் கூட்டு திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினைச் செயல்படுத்த, சுமார் 40 ஏக்கர் அளவில் இடம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

பிற்பகல் 2–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** வேலூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட உள்ளாட்சிகளில் பயன்படுத்தப்பட்டு வந்த திடக்கழிவு மேலாண்மை வளாகம் மற்றும் மறுசுழற்சி முறையில் குப்பைகளைப் பிரித்தெடுக்கும் புதிய மையம் Solid Waste Management shed and Resource Recovery Centre பழுதுபார்க்கப்பட்டு, பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. தற்போது சதுப்பேரி குப்பைக் கிடங்கினைச் சரி செய்ய சிறப்பு திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் ரூபாய் 13.45 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, நிதியாதாரம் இறுதி செய்யும் நிலையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, வேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பற்றிப் பேசினார்கள். அவர் பேசிய திட்டம் குறித்து எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கும், எதிர்க்கட்சித் தலைவருக்கும் தெரியும். வேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மதிப்பீடு ரூ.1,295 கோடி. அதை அவர்கள் அறிவித்ததோடு சரி. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் டெண்டர் விடப்பட்டு, அதற்கான நிதியாதாரம் இறுதி செய்யப்பட்டு, அந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டது. அந்த நேரத்தில் எட்டு கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்தார்கள். அந்த எட்டு கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கும் நிதியாதாரம் இறுதி செய்யப்பட்டு, 3,276 கோடியே 62 இலட்சம் ரூபாய் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் நிதியொதுக்கப்பட்டது. சேலம், விருதுநகர், வேலூர்,

[திரு. எஸ்.பி. வேலுமணி] [2017 ஜனவரி 30

மதுரை, சிவகங்கை, கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்களை உள்ளடக்கிய ஆறு பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் இன்றைக்கு முடிவடைந்து, 60.79 இலட்சம் மக்கள் பயன்பெறும்வகையில், நாளொன்றுக்கு 341.31 மில்லியன் லிட்டர் குடிநீர் மாண்புமிகு அம்மா அவர்களின் திட்டங்களின்மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

அதேபோல, எஞ்சிய நாகப்பட்டினம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் பெரிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் விரைவாக நிறைவேற்றப்பட உள்ளன என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, தொழில் துறை மாநாடு குறித்து ஒரு கருத்தைச் சொன்னார்கள். Al Kharafi Oil Industries என்ற நிறுவனம் வேறு மாநிலத்திற்குச் செல்வதாக இருக்கின்றது என்ற ஒரு செய்தியையும் அவர் சொல்லியிருக்கின்றார்கள். அன்றையதினம் நான் தொழில் துறை அமைச்சராக இருந்த காரணத்தினால், இந்த அவைக்கு ஒரு உண்மையைத் தெரியபடுத்த விரும்புகின்றேன். ஆந்திர மாநில அரசோடு அந்த நிறுவனத்தால் ஏற்கெனவே புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டு, பின்னர் மாண்புமிகு அம்மா அவர்களால் இங்கு கொண்டுவரப்பட்ட அந்த நிறுவனம், இங்கே தொழில் தொடங்க இருக்கிறது என்பதைத்தான் நான் சொல்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இங்கிருந்து எந்த நிறுவனமும் வேறு மாநிலத்திற்குச் செல்லவில்லை என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த தூத்துக்குடி–மதுரை corridor குறித்தும் கேட்டார்கள். அந்தப் பணிக்கு இப்போதுதான் DPR தயாரிக்கும் பணி முடிந்திருக்கிறது. DPR தயாரிக்கும் பணி முடிந்த பிறகுதான் நிறுவனங்கள் தொழில் தொடங்க முன்வருவார்கள். அறிவித்தவுடனே எத்தனை பேர் வேலை செய்கிறார்கள்? அந்த நிறுவனம் உருவாகிவிட்டதா என்ற கேள்விக்கெல்லாம் பதில்



2017 ஜனவரி 30] [திரு. பி. தங்கமணி]

சொல்லமுடியாது. எங்கே, எப்படிச் செயல்படுத்தவேண்டும் என்றெல்லாம் முடிவு செய்து, DPR தயாரிக்கப்பட்டதற்குப் பிறகுதான் ஒரு நிறுவனம் உருவாக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீதான. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவரை சீக்கிரம் உரையை முடிக்கச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) சீக்கிரம் உரையை முடிக்கச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) பேசுவதற்கு இரண்டு நிமிடங்களெல்லாம் வாய்ப்புத் தரமுடியாது. (குறுக்கீடுகள்) நன்றி சொல்வதாக இருந்தால், நான் அவரைப் பேச அனுமதிக்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், ஒரு நிமிடம் உட்காருங்கள். திரு. நந்தகுமார், நீங்கள் நன்றி சொல்வதாக இருந்தால், நான் பேச அனுமதியளிக்கிறேன். புது Subject பேசினால், நான் முஹம்மது அபூபக்கர் அவர்களைப் பேச அழைத்துவிடுவேன். நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

**திரு. ஏ.பி. நந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நன்றி சொல்லி உரையை முடிப்பதற்கு முன்பாக, என்னுடைய வேலூர் மாவட்டம் குறித்து, ஒரே ஒரு சிறிய விஷயத்தைப் பதிவு செய்ய விரும்புகிறேன். நான் புகார் எதுவும் சொல்லவில்லை. எங்கள் மாவட்டத்தில், காட்பாடி தொகுதியில் முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களால் கொண்டுவரப்பட்ட TEL வெடிமருந்து தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு கடந்த ஆறு மாத காலமாக ஊதியம் வழங்கப்படாமல் இருக்கின்றது. ஆகவே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுகுறித்து ஏற்கெனவே உறுப்பினர்கள் பேசி, அன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலும் சொல்லிவிட்டார். நீங்கள் அதையே திரும்பத் திரும்ப அவையில் வலியுறுத்திக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) உட்காருங்கள் நீங்கள். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

[2017 ஜனவரி 30

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனவரி 27 ஆம் தேதியன்று எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இதுகுறித்து கேள்வி கேட்டார். தற்சமயம் TANCEM மூலமாக இரண்டு மாதங்களுக்கான சம்பளம் 161 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு 27 ஆம் தேதி கொடுத்துவிட்டோம். இன்னும் நான்கு மாதங்களுக்கான wages மட்டும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டியுள்ளது; இது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. நிதித் துறையின் மூலமாக அதுகுறித்து கேட்டுள்ளோம். அந்த நான்கு மாதங்களுக்கான சம்பளமும் நிச்சயமாகக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் தொழிற்சாலை குறித்து அரசின் கவனத்திற்கு வந்தவுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில், மூத்த அமைச்சர்களுடன் ஒரு கூட்டம் நடத்தினோம். அங்கு பணிபுரியும் தொழிலாளர்களை TNPL, TANCEM போன்ற அரசுத் துறையின் பல்வேறு நிறுவனங்களுக்கு deputation முறையில் பணியை மாற்றிக் கொடுக்கலாம் என்ற ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நந்தகுமார், அன்றைக்கு உங்கள் துணைத் தலைவர் அவர்கள் இதுகுறித்துப் பேசியபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள். திரும்பத் திரும்ப நீங்கள் அதையே பேசுகிறீர்கள். நன்றி சொல்லி, சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. ஏ.பி. நந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு இந்த அவையிலே பேச வாய்ப்பளித்த வருங்கால தமிழகத்தினுடைய நம்பிக்கை நட்சத்திரம் அண்ணன் தளபதி அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, தங்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 2–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.



2017 ஜனவரி 30]

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை மீதான விவாதத்திலே பங்கேற்றுப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது தொகுதி சம்பந்தப்பட்ட, சமுதாயம் சம்பந்தப்பட்ட கோரிக்கைகளை இங்கே வைப்பதற்கு உரிய நேரத்தை ஒதுக்கி, வாய்ப்பு அளிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையிலே திறன் மேம்பாடு, பொது சுகாதாரம் பற்றி குறிப்பிட்டு, அதற்கு முன்னுரிமை வழங்கப்படும் என அறிவித்ததை நான் மனதார வரவேற்கின்றேன். எனது தொகுதியிலே படித்த பட்டதாரிகள் பல பேர் வேலை இல்லாமல் திண்டாடி வருகின்றார்கள். அவர்களுக்கு ஏதாவது வேலைவாய்ப்பு ஏற்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில், சென்ற மாதம் அங்கே வேலைவாய்ப்பு முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் 38 நிறுவனங்கள் கலந்து கொண்டன; அதிலே 2,450–க்கு மேற்பட்டவர்கள் பங்கேற்று, 724 பேர் தேர்வு செய்யப்பட்டார்கள். அந்த முகாமில் கலந்துகொண்ட வெளி மாநிலங்களைச் சேர்ந்த நிறுவனங்கள், படித்த பட்டதாரிகளாக இருந்தாலும், அவர்களுடைய திறனை வளர்க்கக்கூடிய வகையிலே, ஆங்கில அறிவை வளர்க்கக்கூடிய வகையிலே உரிய பயிற்சிகள் வழங்கிட ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைத்தன. தற்போது நமது ஆளுநர் உரையிலே, அரசு, தனியார், தொழில் துறையினுடைய பங்களிப்போடு, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை நிதியிலிருந்து இதுபோன்ற ஏற்பாடுகள் செய்வதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதுபோன்ற ஓர் ஏற்பாட்டை என்னுடைய தொகுதியிலும் திறன் வளர்ப்பிற்காகச் செய்ய வேண்டும் என்று இங்கே கோரிக்கையாக வைக்கின்றேன்.

பொது சுகாதாரம் பற்றியும் இங்கே தெரிவிக்கப்பட்டுள்ளது. எனது தொகுதியிலே இப்போது மர்ம காய்ச்சல், டெங்கு காய்ச்சல் அபாயம் இருப்பதை அறிந்து, நான் மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களையும், சுகாதாரத் துறையினுடைய முதன்மைச் செயலாளர் அவர்களையும் அணுகியபோது, அவர்கள் விரைவாக நடவடிக்கை எடுத்து, 10 குழுக்களை அங்கே அனுப்பி நடவடிக்கைகள் எல்லாம் மேற்கொண்டார்கள். அதற்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் அந்த அபாயங்கள்

[திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்] [2017 ஜனவரி 30

தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றன. ஏனென்று சொன்னால், அங்கே குழுக்கள் அமைத்தாலும்கூட, அங்குமிங்குமாக அந்த மர்ம காய்ச்சலினுடைய அபாயம் அங்கே தொடர்ந்து இருந்து கொண்டுதான் இருக்கின்றது. மேலும் அங்கே பல நிலைகளில் வெளி ஊர்களுக்குச் சென்றுதான் உரிய சிகிச்சை மேற்கொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலையும் இருக்கின்றது. டெங்கு காய்ச்சல் அங்கு இல்லையென்று அறிவித்தாலும்கூட, சிலர் வெளி மாநிலத்திற்கு செல்லும்போது அந்த நோயினால் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள். திருவனந்தபுரம் போன்ற பகுதிகளுக்குச் சென்று திரும்பிய ஒருவர், அந்த நோயினால் பாதிக்கப்பட்டு அங்கே மரணம் அடைந்தார். திருமணமாகி, ஆறு மாதங்கள் முடிந்த நிலையில், Moideen Fathima என்ற ஒரு பெண் மரணம் அடைந்தார். அவர் டெங்கு காய்ச்சலால்தான் மரணம் அடைந்துள்ளார் என்று Kerala Institute of Medical Science கூறுகின்றது. ஆனால், நமது அதிகாரிகள் அப்படி இல்லையென்று சொல்கிறார்கள். இருந்தபோதிலும், அந்த விவாதத்திற்குள் நான் செல்ல விரும்பவில்லை. மேலும் ஏற்கெனவே நமது சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களையும், முதன்மைச் செயலாளர் அவர்களையும் அணுகி அவர்கள் அங்கே நேரடியாகவே வந்து நடவடிக்கைகளை எடுத்தார்கள். தொடர் நடவடிக்கைகளை உறுதிப்படுத்தும் வகையில் மேல்நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இங்கே நான் வலியுறுத்திக்கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல், அந்தப் பகுதி அதிகமான விபத்துகளைச் சந்திக்கக்கூடிய பகுதியாக இருக்கின்றது. பாதிக்கப்படுகின்றவர்கள் உரிய சிகிச்சைக்குச் செல்ல வேண்டுமென்றால், திருநெல்வேலிக்கு அல்லது திருவனந்தபுரத்திற்குத்தான் செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. எனவே, கடையநல்லூர் மருத்துவமனையைத் தரம் வாய்ந்த மருத்துவமனையாக, Multi Speciality Hospital போன்று தரமுயர்த்த ஒரு உயர்ந்த நிலை மருத்துவமனையாக உயர்த்த வேண்டும் என்பதையும் இங்கே கோரிக்கையாக வைக்க விரும்புகின்றேன். அதேபோன்று, புளியரையில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. 3 ஊராட்சிகள் மற்றும் ஒரு பேரூராட்சியைச் சார்ந்த 25,000—க்கும் மேற்பட்ட மக்கள், மலைவாழ் மக்கள் உட்பட அனைவரும் அங்குதான் சிகிச்சைக்காகச் செல்கின்றார்கள். அங்கே பிரசவ சிகிச்சைக்காக பெண் மருத்துவர்கள் இல்லை. அங்கே உடனடியாக பிரசவம் பார்க்கக்கூடிய பெண் மருத்துவரை நீங்கள் நியமனம் செய்து தர வேண்டும் என்பதையும் இங்கே வேண்டுகோளாக வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



2017 ஜனவரி 30] [திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தொடர்ந்து எங்களுக்கு பாராட்டைத் தெரிவித்தார்கள், அதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடையநல்லூர் பகுதியைப் பொறுத்தவரையில் அங்கே காய்ச்சல் ஏற்பட்டது. அதற்குப் பின்னால் உறுப்பினர் அவர்கள் எல்லாம் தொலைபேசியில் பேசினார்கள். அதன்மீது அரசு வேகமான நடவடிக்கை எடுத்து, தற்போது அது முழு கட்டுப்பாட்டில் இருக்கின்றது. அதை அவரும் நன்கு அறிவார்கள். அந்தக் கருத்தை அவரும் இங்கே பதிய வைத்தார்கள். அதேபோன்று இப்போது மருத்துவர்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். மருத்துவர்கள் நியமனத்திற்கென்றே MRB என்ற Medical Recruitment Board—ஐ, ஒரு புதிய ஆணையத்தை உருவாக்கியவர் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதன் மூலமாக இதுவரை, வரலாற்று நிகழ்வாக, இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, 17,027 மருத்துவர்கள் மற்றும் மருத்துவம் சாரா பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதில் 6,192 மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு, வரலாற்று சாதனை படைக்கப்பட்டிருக்கின்றது. தற்போது காலியாக உள்ள பணியிடங்களுக்கும், இந்த மாதம் 12 ஆம் தேதி தேர்வு நடைபெற இருக்கின்றது. 7,404 பேர் இந்தத் தேர்விற்காக பதிவு செய்திருக்கின்றார்கள். அதிலே தேவைப்படுகின்ற அத்தனை மருத்துவர்களும் நியமிக்கப்பட்டு, தமிழ்நாட்டிலே எந்த மருத்துவமனையிலும் மருத்துவர்கள் பற்றாக்குறை இல்லையென்ற நிலை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் (மேசையைத் தட்டும் ஒலி) உறுதிப்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2—10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.

[2017 ஜனவரி 30

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. எங்களுடைய கோரிக்கையை ஏற்று, நீங்கள் அங்கு வர வேண்டும் என்பதையும் நான் இங்கு வேண்டுகோளாக வைக்கின்றேன்.

'வர்தா' புயல் மீட்புப் பணியின்போது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல்வேறு நிலைகளிலே நடவடிக்கைகளை மேற்கொண்டதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய அரசாங்கத்திலிருந்து உரிய நிதியைப் பெறுவதற்கும், அவர்களிடமிருந்து நாம் பெற வேண்டிய அனைத்துப் பணிகளையும் விரைவாகச் செயல்படுத்திடவும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். தற்போது கடும் வறட்சியால் நமது மாநிலம் பாதிக்கப்பட்டிருக்கிறதென்பது ஆளுநர் உரையிலேயே தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. குடிநீர்த் தட்டுப்பாடு அனைத்துப் பகுதிகளிலும் இருப்பதுபோல், எனது தொகுதியிலும் அந்தப் பிரச்சினை ஏற்கெனவே சென்ற ஆண்டிலிருந்து இருக்கின்றது. எனவே, அரசாங்கம் இப்போது புதிய திட்டங்களுக்கும் அதிக நிதி ஒதுக்கி இருப்பதாகத் தெரிவித்திருக்கின்றது. அதுபோன்ற திட்டங்களை எங்களுடைய தொகுதியிலும் நிறைவேற்றுவதற்குண்டான வழிவகைகளை அரசு செய்ய வேண்டும் என்று இங்கு வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஜல்லிக்கட்டைப் பற்றியும் நமது ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 'ஜல்லிக்கட்டை வென்ற முதல்வர்' என்று சொல்லக்கூடிய அளவிற்கு அவருடைய பணி அமைந்திருக்கின்றது. அதற்கு அவருக்கும், இந்த அரசாங்கத்திற்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்குத் துணை நிற்கக்கூடிய வகையில் திறம்படச் செயலாற்றியிருக்கக்கூடிய கழகத்தின் செயல் தலைவர் மட்டுமல்லாமல், போராட்டத் தலைவர் எனப் பெயர் பெற்றிருக்கக்கூடிய தளபதியார் அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஜல்லிக்கட்டுப் பிரச்சினை தொடர்பாக முழுமையான விசாரணை நடத்தப்படும் என நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இப்பேரவையில் அறிவித்தார்கள். அந்த விசாரணை முழுமையாக இருக்க வேண்டும். இந்த விசாரணையை திசை திருப்பக்கூடிய வகையில், சிலபேர் பேசி வருகின்றார்கள். குறிப்பாக, மத்தியிலே ஆளக்கூடிய ஒரு பொறுப்பான கட்சியிலிருக்கக்கூடிய ஒருவரும்கூட



2017 ஜனவரி 30] [திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்]

இதை பிற பிரச்சினைகளோடு ஒப்பிட்டு, சிறுபான்மை சமூகத்தினர் மத்தியில் ஓர் அச்ச உணர்வை ஏற்படுத்தியிருக்கின்றார். இந்த ஆய்வில் அதனையும் உட்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும் இங்கு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஜல்லிக்கட்டுக்கு நிரந்தரத் தீர்வு ஏற்படக்கூடியவகையில் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்திருப்பதாக அரசு அறிவித்திருக்கின்றது. நிரந்தரத் தீர்வாக அரசே இந்த ஜல்லிக்கட்டு விழாவை நடத்த முடியுமா என்பதையும் ஆய்விற்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதையும் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழ் மொழியை மத்திய அரசின் ஆட்சி மொழியாகக் கொண்டு வர அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்றும் இந்த ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. அந்த முயற்சியைத் தொடர் நடவடிக்கையாக ஏற்படுத்த வேண்டும். அந்தத் தமிழ் மொழிக்காக வேண்டி அரசியல் நிர்ணய சபையில் முழக்கமிட்ட கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களுடைய வாழ்க்கை வரலாறு ஏற்கெனவே அரசினுடைய பாடநூலில் இடம் பெற்றிருந்தது. மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலத்தில் அது இடம் பெற்றிருந்தது. தற்பொழுது இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்தபோது, மீண்டும் அந்த நூல் புதுப்பிக்கப்படக்கூடிய ஒரு சூழ்நிலை இருப்பதாகச் சொன்னார்கள். எனவே, முன்பிருந்ததுபோல், காயிதே மில்லத் அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை மீண்டும் தமிழக அரசின் பாடநூலில் இடம் பெறச் செய்ய வேண்டும் என்பதையும் இங்கே வேண்டுகோளாக வைக்கிறேன்.

ஆளுநர் உரையில் இ–சேவை மையம், Digital India போன்ற திட்டங்களெல்லாம் அற்புதமாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் ஏற்கெனவே இதுகுறித்துச் சொன்னேன். சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் தொலைபேசியில் தொடர்பு கொள்வது என்பது சிரமமாக இருக்கின்றது. காரணம், அங்கு Internet connection இல்லை. எனவே நவீனமயமாக்கப்பட்டிருக்கக்கூடிய இத்திட்டத்தின்மூலமாக அந்த முயற்சிகளை எடுப்பதற்கு நீங்கள் அனைவரும் உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அங்கு உறுப்பினர்கள் தொலைபேசியில், அலைபேசியில் எளிதாகத் தொடர்பு கொள்வதற்கும் Internet வசதிகளை உருவாக்கக்கூடிய ஒரு முயற்சியில் இந்த அரசாங்கம்

[திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்] [*2017 ஜனவரி 30*

விரைவாக ஈடுபட வேண்டும் என்பதையும் இங்கு கோரிக்கையாக வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்––CRIDP திட்டத்தைப் பற்றியும் இதில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. தென்காசி–மதுரை நான்கு வழிச்சாலை, பல நிலைகளிலே கிடப்பிலே இருக்கின்றது. இதன் காரணமாக பொது மக்கள் அங்கு அதிகமான விபத்துகளைச் சந்திக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. சாலை குறுகலாக இருப்பதனாலும், அங்கு குற்றால சீசனுக்கு வருகை புரிபவர்களாலும் பல நிலைகளில் அடிக்கடி விபத்துகள் ஏற்படக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், தென்காசி–மதுரை 4 வழிப்பாதைத் திட்டத்தை இந்த அரசு விரைவாக நடைமுறைப்படுத்த வேண்டும். அதைப்போலவே, தூத்துக்குடி–திருச்செந்தூர் சாலை ஏற்கெனவே கோரிக்கை வைத்ததன் அடிப்படையில் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அங்கும் இங்குமாக நடைபெறக்கூடிய அப்பணியை விரைவாக நிறைவுசெய்து தரவேண்டும் எனவும் இங்கு வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 2–15*

போக்குவரத்து வசதிக்காக பல்வேறு விஷயங்கள் இங்கு தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. என் தொகுதியைப் பொறுத்தவரை, இரயில் நிலையம் அருகிலிருந்து இரயில் வரக்கூடிய நேரத்தில் பேருந்துப் போக்குவரத்து வசதிகள் இல்லை. எனவே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கடையநல்லூர், செங்கோட்டை போன்ற பகுதிகளில் இரயில் நிலையத்தை ஒட்டிப் பேருந்து வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்பதையும் இங்கு வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோல், தற்போது மாவட்டத்தினுடைய தலைநகராக தென்காசி வரவேண்டும் என நானும், தென்காசி தொகுதி உறுப்பினர் மற்றும் வாசுதேவநல்லூர் உறுப்பினர் ஆகிய அனைவரும் வலியுறுத்திவரும் நிலையில், தற்போதைக்கு கடையநல்லூரிலிருந்து திருநெல்வேலிக்கு Point to Point பேருந்துகள் இயக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, கடையநல்லூரிலிருந்து திருவனந்தபுரத்திற்கு போக்குவரத்து வசதியை ஏற்படுத்தித் தர வேண்டுமென்பதையும் இங்கே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனென்றால், அங்கேதான் International Airport இருக்கின்றது. அதேபோல, பல்வேறு ஊர்கள், குறிப்பாக சொக்கம்பட்டி போன்ற



*2017 ஜனவரி 30*] [திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்]

கிராமங்களில் பேருந்துகள் நிற்பதில்லை. வெகுதூரத்திலிருந்து வரக்கூடியவர்கள் நேரிடையாக கடையநல்லூருக்குச் சென்று, அங்கிருந்து ஆட்டோவைப் பிடித்து வரக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. அவற்றையெல்லாம் நான் கோரிக்கையாகத் தருகின்றேன். அதையும் நீங்கள் பரிசீலிக்க வேண்டும். On–line Reservation–க்கும் நீங்கள் உரிய வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்பதையும் இங்கே நான் வலியுறுத்துகின்றேன்.

'தூய்மை காவலர் திட்டம்', கழிவுநீர் வெளியேறும் தொழில்நுட்பம்–Zero Liquid Discharge போன்ற திட்டங்களைப் பற்றியும் நமது ஆளுநர் உரையிலே தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. கடையநல்லூரைப் பொறுத்தவரை, அங்கே சுகாதாரக் கேடு பிரச்சினை, மிகப்பெரிய பிரச்சினையாக இருக்கின்றது. ஏற்கெனவே அங்கே பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்ற கோரிக்கை வலுவாக இருந்து வருகின்றது. ஆங்காங்கே குடிதண்ணீரில் சாக்கடை கலப்பது நோய்க்குக் காரணமாக இருப்பதாக அங்கே உள்ளவர்கள் எல்லாம் தெரிவிக்கின்றார்கள். எனவே, தயவுகூர்ந்து ஒரு இலட்சம் மக்கள்தொகை கொண்ட கடையநல்லூருக்கு பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டும். அதன்மூலம் சுகாதாரக் கேட்டிலிருந்தும் அந்த மக்களை விடுவிப்பதற்கு நீங்கள் துணைபுரிய வேண்டும்.

உயர் கல்விக்கான கட்டமைப்பு வசதிகள் வலுப்படுத்தப்படும் என்றும் ஆளுநர் உரையிலே தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. என்னுடைய தொகுதியில் உள்ள பல்வேறு ஊர்களிலே, உயர் கல்வியைப் பெற வேண்டுமென்ற நோக்கத்தில், பலர் விண்ணப்பித்திருக்கின்றார்கள். அதையும் நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். குறிப்பாக, சீவநல்லூர் அரசு உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த வேண்டும். ஏனென்று சொன்னால், அந்தப் பள்ளிக்கூடத்தில் படித்துவிட்டு இலத்தூர், கணக்குப்பிள்ளைவலசை, குத்துக்கல்வலசை, சீவநல்லூர் போன்ற பகுதிகளிலிருந்து 200–க்கும் மேற்பட்ட மாணவர்கள் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு படிப்பதற்கு வெளியூருக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, அந்தப் பள்ளிக்கூடத்தையும், எனது தொகுதியில் உள்ள பள்ளிக்கூடங்களையும் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவதற்கு உண்டான அனுமதியை இந்த அரசாங்கம் வழங்க வேண்டும்.

[திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்] [2017 ஜனவரி 30

அதேபோல, நீலகிரி மாவட்டம், கூடலூர் பகுதியிலே சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் நடத்தும் அனாதை நிலையமாக இருக்கக்கூடிய GTMO பள்ளிக்கூடமும் அரசின் அனுமதிக்காக விண்ணப்பித்திருக்கிறது. அதற்கும் நீங்கள் அனுமதி வழங்க வேண்டும் என்றும் நான் இங்கே வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே கடையநல்லூர் மற்றும் செங்கோட்டை ஆகிய 2 நகராட்சிகள்தான் இருக்கின்றன. செங்கோட்டை ஏற்கெனவே கேரள சமஸ்தானத்தோடு இருந்த பகுதியாகும். அந்த ஊர் எந்த வருவாயும் இல்லாமல் இருக்கின்றது. அந்த நகராட்சிக்குப் பெரிய அளவிலே வருவாய் இல்லை என்று அங்கு அதிகாரிகளைச் சந்தித்தபோது அவர்களே சொன்னார்கள். எனவே, அங்கே வருவாயை ஏற்படுத்தக்கூடிய வகையிலே உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்போது காமராஜர் அவர்களுடைய பெயரால் இருக்கக்கூடிய கல்யாண மண்டபம் மிகவும் பழுதடைந்த நிலையிலே இருக்கின்றது. அந்த நகராட்சியின் வருவாயைப் பெருக்கக்கூடிய வகையிலே ஒரு வணிக வளாகத்தை அந்தப் பகுதியிலே ஏற்படுத்தித் தந்தால், அந்த நகராட்சிக்கு வருவாய் வரும் என்பதையும் இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல விளையாட்டுத் துறைக்கும், இளைஞர் நலனுக்கும் இங்கே அறிவிப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன. என்னுடைய தொகுதியிலே விளையாட்டு மைதானம் மற்றும் Indoor stadium இல்லாத காரணத்தினாலே இளைஞர்கள் காட்டுக்கும் மற்ற இடங்களுக்கும் சென்று. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. முஹம்மது அபூபக்கர், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** எங்கள் கட்சியில் நான் ஒரேயொரு உறுப்பினர்தான், கொஞ்சம் நேரம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள். 14 நிமிடங்கள் ஆகிவிட்டன. இன்னும் 3 உறுப்பினர்கள் பேச வேண்டும்.

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** எனவே, அங்கே விளையாட்டு மைதானம் ஏற்படுத்தித் தர உரிய நடவடிக்கை



2017 ஜனவரி 30] [திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்]

எடுக்க வேண்டும். கடையநல்லூர், வடகரை, பண்பொழி, புளியரை போன்ற பகுதிகளிலே குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். செங்கோட்டை கண்ணுப்புள்ளிமெட்டு அணைக்கட்டில் தண்ணீர் இருக்கின்றது. அந்தத் தண்ணீரை பைப் மூலமாகக் கொண்டு வந்தால், செங்கோட்டை பகுதியின் தண்ணீர்ப் பிரச்சினையை முழுமையாக தீர்க்க முடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையாற்றியது போதும், உட்காருங்கள். இன்னும் 3 உறுப்பினர்கள் பேச வேண்டும்.

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** எனது சமுதாயம் சம்பந்தப்பட்ட ஒன்றிரண்டு பிரச்சினைகளை மட்டும் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** சிறுபான்மையின சமுதாயம் மற்றும் ஆதி திராவிட மக்களுக்காக பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்று சொல்லியிருக்கின்றார்கள். வக்ஃபு வாரியம் ஒரு வருடத்திற்கும் மேலாக அமைக்கப்படாததன் காரணமாக அனைத்துப் பிரச்சினைகளும் நிலுவையில் இருக்கின்றன. வக்ஃபு வாரியத்தை விரைவாக அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சமச்சீர் கல்வியின் மூலமாக சிறுபான்மை மொழியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது; அதை அரசு ஆவன செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. முஹம்மது அபூபக்கர், உட்காருங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) போதும் உட்காருங்கள். வேறொரு சந்தர்ப்பத்தில் பேசலாம், உட்காருங்கள்.

பிற்பகல் 2—20

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்பொழுது பாதாள சாக்கடைத் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். கடையநல்லூர் நகராட்சியில் பாதாள

[திரு. எஸ்.பி. வேலுமணி] [2017 ஜனவரி 30

சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த 53 கோடியே 6 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. விரைவில் நிதியாதாரங்கள் இறுதி செய்யப்பட்டபின், ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போன்று அங்கே சூழ்நிலை நன்றாக இருக்கிறது. நம்முடைய சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது விரிவாக எடுத்துக் கூறினார்கள். அங்கிருக்கக்கூடிய அனைத்துப் பகுதிகளிலும் மாநகராட்சி துப்புரவுப் பணியாளர்கள் சிறப்பான முறையிலே பணிபுரிந்து வருகின்றார்கள். டெங்கு பிரச்சினையைப்பற்றி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், அந்த நேரத்தில் என்னிடமும் தெரிவித்தார்கள். எங்களுடைய I.A.S. Officer; அதாவது Municipal Commissioner நேரடியாக அந்தப் பகுதிகளுக்குச் சென்று, அந்தப் பணிகளையெல்லாம் மேற்கொண்டார்கள். அது அவருக்கும் தெரியும். நகராட்சியில், துப்புரவு அலுவலர்–I, துப்புரவு அலுவலர்–2 மற்றும் துப்புரவுப் பணியாளர்கள் என 81 பேர் இருக்கின்றார்கள். அதுபோக கூடுதலாக 60 பேர் பணிபுரிகின்றார்கள். அங்கே, தினமும் 30 மெட்ரிக் டன் குப்பைகள் அகற்றப்படுகின்றன. 10–1–2017 முதல் 21–1–2017 வரையிலான காலத்தில் 330 மெட்ரிக் டன் குப்பைகள் அகற்றப்பட்டிருக்கின்றன. அதைப்போல, நம்முடைய சுகாதாரத் துறையோடு இணைந்து நிலவேம்பு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அதேபோன்று புகையடிக்கும் இயந்திரங்கள் 15, பல்ஸ் புகையடிக்கும் இயந்திரங்கள் 12, ராட்சத புகையடிக்கும் இயந்திரங்கள் 4, என மொத்தம் 31 புகையடிக்கும் இயந்திரங்கள்மூலம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வீடுகளுக்கும் Fogging Machines மூலமாக மருந்து தெளிக்கப்படுவதுடன், bleaching powder போடப்பட்டு, தேவையான அளவிற்குத் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

அடுத்து, கூட்டுக் குடிநீர் திட்டம்; தற்போது தண்ணீர்ப் பிரச்சினை தமிழ்நாடு முழுவதும் இருக்கிறது என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். அதைப்போல இங்கே இருக்கக்கூடிய அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தெரியும். மாவட்டங்களிலே மக்கள் பிரதிநிதிகள் கலந்துகொண்ட கூட்டங்களிலே அதிகாரிகளுக்கு அறிவுரைகள் வழங்கியிருக்கிறோம். ஒரு பிரச்சினை வருகிறது என்றால், பொது மக்கள் தெரிவிப்பதற்கு முன்னரே, துறை அதிகாரிகள் நேரடியாக—Pump Operator முதல் ஒரு J.E., A.E.(W), E.E., உட்பட அனைத்து அதிகாரிகளும்



2017 ஜனவரி 30] [திரு. எஸ்.பி. வேலுமணி]

நேரடியாக—spot–க்கே செல்ல வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அறிவுறுத்தியுள்ளது.

உறுப்பினருடைய தொகுதியிலே குடிநீர்ப் பிரச்சினைப் பொறுத்தவரையில், அதைத் தீர்ப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் உத்தரவிடப்பட்டுள்ளது. தனது தொகுதிக்கு நிதி ஒதுக்க வேண்டுமென்று உறுப்பினர் கேட்டிருந்தார். எல்லாத் தொகுதிகளுக்கும் சிறப்பான முறையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவருடைய தொகுதியிலே இரண்டு நகராட்சிகள் இருக்கின்றன. கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக மூன்று கூட்டுக் குடிநீர் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. கடையநல்லூர், செங்கோட்டை நகராட்சிகளில் ஆறு பேரூராட்சிகள் இருக்கின்றன. புளியங்குடி, அச்சன்புதூர், ஆய்க்குடி, பண்பொழி, வடகரை கீழ்பிடாகை, சாம்பவர் வடகரை ஆகிய பேரூராட்சிகள் மற்றும் 72 ஊரகக் குடியிருப்புகளில் இருக்கக்கூடிய 3.50 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையில் நகராட்சிப் பகுதிகளில் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு சராசரியாக 70 முதல் 80 லிட்டர் வீதமும், பேரூராட்சிப் பகுதிகளில் இருக்கக்கூடிய மக்களுக்கு 70 லிட்டர் வீதமும், ஊரகப் பகுதிகளில் இருப்பவர்களுக்கு தலா 40 லிட்டர் வீதமும் வழங்கப்படுகிறது. இந்த மாதிரியான சூழ்நிலையில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில், பேரூராட்சிகளுக்கும், ஊரகப் பகுதிகளுக்கும், நகராட்சிகளுக்கும் தேவையான நிதி வழங்கப்பட்டுள்ளது. (குறுக்கீடு) நான் சுருக்கமாக முடித்துவிடுகிறேன்.

இதுதவிர, ஜெர்மன் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டத்தின்மூலம் 6 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், மொத்தம் 1,371 குடிநீர்க் குழாய் இணைப்புகள் புதிதாகப் பதிக்கப்பட்டு, திட்டப் பணிகள் கூடிய விரைவில் முடியும் தருவாயில் உள்ளன. அதன்பின்னர் அங்குள்ள நகராட்சி, பேரூராட்சிப் பகுதிகளுக்கெல்லாம் சரியான முறையில் குடிநீர் வழங்கப்படும். இப்போது இருக்கக்கூடிய சூழ்நிலையில், எந்த இடத்திலாவது ஏதாவது பிரச்சினை இருந்தால், அதைக் குறிப்பிட்டுச் சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய

அரசு அந்தப் பகுதிகளில் குழாய்கள் மூலமாக அல்லது லாரிகள் மூலமாகக் குடிநீர் வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திரு. அபூபக்கர், அவ்வளவுதான்; உங்களுக்கு வாய்ப்பில்லை. பேசாமல் உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்குத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்.

***மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எழுப்பிய இரண்டு முக்கிய கோரிக்கைகள்; ஒன்று, வேலைவாய்ப்பு முகாம்களில் பங்கேற்கும் இளைஞர்களுக்கு career education training வழங்குவது குறித்து தெரிவித்திருக்கிறார். அதாவது, வாழ்க்கைப் பணிக்கு வழிகாட்டும் பயிற்சிகள் நடத்துவதற்கு ஜப்பான் பன்னாட்டு முகமை உருவாக்கியிருக்கிற Skill Development Centre திருவள்ளூர் மாவட்டத்தில்தான் உள்ளது. அவர்களால் இவர்களுக்கு help பண்ண முடியாது. ஆனால், யார் இவர்களுக்கு பயிற்சி அளிக்க முடியும் என்றால், வேலைவாய்ப்புத் துறை நடத்துகிற வேலைவாய்ப்பு முகாம்களில், நூலகத் துறையில் உள்ள, இளைஞர் நலத் துறையில் உள்ள பயிற்சியாளர்களால் வழங்க முடியும். அவர்களை, நாங்கள் அனுப்ப முடியும்; பல இடங்களில் அதுபோன்று அனுப்பிக் கொண்டிருக்கிறோம். அந்தப் பயிற்சியாளர்கள் career guidance கொடுக்கக்கூடியவர்கள்; அந்த மாதிரி கட்டமைப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது. வேலைவாய்ப்பு முகாம்கள் நடக்கும்போது, ஒவ்வொரு District Central Library–யிலும் நாங்கள் ஒரு career education trainer–ஐப் போட்டிருக்கிறோம். அவர்களை நாங்கள் அனுப்பி வைக்கமுடியும். வேலைவாய்ப்பு முகாம்கள் முழுமையாக வெற்றி பெற இது உறுதுணையாக இருக்கும்.

பிற்பகல் 2–25

இரண்டாவதாக play ground பற்றிக் கேட்டார். மத்திய அரசாங்கத்தினுடைய “கேலோ இந்தியா” திட்டத்தின்கீழ், ஒரு பஞ்சாயத்திற்கு ஒரு play ground என்ற வகையில் பத்து இலட்சம்



ரூபாய் அளவில் செயல்படுத்தப்படுகிறது. இப்போது அதற்குரிய எல்லா data–க்களையும் collect பண்ணிக் கொண்டிருக்கிறோம். கடையநல்லூரில் அந்த இடத்தை மட்டும் தயவுசெய்து அடையாளம் கண்டு எங்களுக்கு கொடுங்கள். அந்தத் திட்டத்தின்கீழ் மாநில அரசாங்கம் அதனைச் செய்திட இயலும். அந்தத் திட்டத்தின் மூலமாகக் குறைந்தது இரண்டு அல்லது மூன்று play ground–ஐ முழுமையாக உருவாக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மூன்றாவதாக, பாடத் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். பாடத் திட்டத்தை மீண்டும் வடிவமைக்கும்பொழுது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கண்ணியமிக்க திரு. காயிதே மில்லத் அவர்களைப்பற்றி பாடத் திட்டத்தில் கண்டிப்பாக mention செய்யப்படும் என்று உறுதி கூறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர், கொஞ்சம் இருங்கள்.

**மாண்புமிகு டாக்டர் எம். மணிகண்டன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்பொழுது, Cell Phone Tower அமைக்கப்பட வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்கள். அதனை தனியார் நிறுவனங்கள்தான் நடத்திக் கொண்டிருக்கின்றன. அதற்குண்டான அறிவுறுத்தல்களையெல்லாம் ஏற்கெனவே அனுப்பியிருக்கிறோம். அவர்களிடத்தில் அறிவுரைகள் வழங்கியிருக்கிறோம். அவர்கள் வேண்டிய டவர்களை நிறுவுவதற்கு நாங்கள் ஆவன செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், internet connection பற்றிச் சொன்னார்கள். Wi–fi connection–ஐப் பொறுத்தவரையில், சென்னையிலே ஒரு Piloting System ஆக, ஒரு முன்னோட்டமாக 50 இடங்களிலே free Wi–fi connection வசதி செய்வதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த ஆண்டு அறிவித்தார்கள். அதைச் செயல்படுத்தும்விதமாக எல்லா வேலைகளும் நடந்து கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2017 ஜனவரி 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

*__மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்பொழுது, வக்ஃபு வாரியம் செயல்படவில்லை என்று கூறினார்கள். வக்ஃபு வாரியம், அரசாணை (2D) எண் 28, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 31–8–2012–ன்படி அமைக்கப்பட்டது. தற்போதைய வாரியத்தின் பதவிக் காலம் 30–8–2017–ல் முடிவடைகிறது. வாரியத் தலைவர் திரு. ஜனாத் தமிழ்மகன் உசேன் அவர்கள், 13–4–2016 ஆம் நாள் தனது பதவியை ராஜினாமா செய்தார். அரசாணை எண் (2D) எண் 25, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 13–4–2016–ன் வாயிலாக அவரது ராஜினாமா ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனவே, தற்போது வாரியத் தலைவர் பதவி 1, முஸ்லிம் சட்டப் பேரவை உறுப்பினர் 2, முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் 1, முஸ்லிம் பார் கவுன்சில் உறுப்பினர்கள் அல்லது மூத்த வழக்கறிஞர் 1 ஆகிய உறுப்பினர்களின் பதவிகள் காலியாக உள்ளன. புதிய உறுப்பினர்களைத் தேர்வு செய்ய அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. மேலும், தற்போது வக்ஃபு வாரியத்தின் day–to–day activities–ஐ நான் கண்காணித்து வருகின்றேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ், பத்து நிமிடத்திற்குள் உரையை முடிக்க வேண்டும். (குறுக்கீடு) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடையநல்லூர் தொகுதியில் உள்ள சில கிராமங்களில் பேருந்துகளை நிறுத்துவது இல்லை என்று சொன்னார்கள். பேருந்து நிறுத்தத்தைப் பொறுத்தவரையில், நகரப் பேருந்துகள் மட்டும்தான் அனைத்துப் பேருந்து நிலையங்களிலும் நின்று செல்லும். LSS, Point to Point, Express பேருந்துகள் எல்லாம் குறிப்பிட்ட பேருந்து நிறுத்தங்களில் மட்டும்தான் நின்று செல்லும். அதற்குத்தான் பேருந்துகளில் LSS, Point to Point, Express என்று போர்டு போட்டு



2017 ஜனவரி 30] [திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்]

இயக்கப்படுகின்றன. உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், நகரப் பேருந்துகள் அந்தப் பேருந்து நிறுத்தத்திலே நிற்கவில்லை என்று சொன்னால், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலே சொல்லி, அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று பேருந்து வசதியைப் பற்றியும் சொன்னார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, தமிழகத்திலே தேவைக்கும் அதிகமாகவே பேருந்து வசதிகளை ஏற்பாடு செய்து கொடுத்திருக்கிறது. குறிப்பாக, ஆயிரம் பேர் வசிக்கக்கூடிய கிராமங்களுக்குத்தான் பேருந்து வசதி செய்யப்படும் என்ற ஒரு விதி இருக்கிறது. ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, 500 பேர் வசிக்கின்ற கிராமங்களுக்கும் பேருந்து வசதி செய்து கொடுத்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். எனினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை பரிசீலனை செய்து, அந்தப் பகுதியில் பேருந்து வசதி தேவைப்படுமாயின், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள்.

பிற்பகல் 2–30

*__திரு. சே. கருணாஸ்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 23–1–2017 அன்று மாண்புமிகு ஆளுநர் அவர்கள் பேரவையில் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுவதற்கு எனக்கு வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர், நடமாடும் விசுவாசம் சின்னம்மா அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி)

“முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும்”

என்கின்ற திருவள்ளுவரின் திருவாக்கிற்கேற்ப, சீர்பணி செய்து கொண்டிருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், எனது

சார்பிலும், நான் சார்ந்திருக்கிற முக்குலத்தோர் புலிப்படை சார்பிலும் முதற்கண் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அரசியலில் ஜமீன்தாரர்களும், பண்ணையாளர்களும், ஆலை அதிபர்களும், மிட்டா மிராசுதாரர்களும் மட்டுமே ஆதிக்கம் செலுத்த முடியும் என்று இருந்த நிலையை மாற்றி, தெரு முனையில் நின்று செயின்ட் ஜார்ஜ் கோட்டையை அன்னார்ந்து பார்த்தவர்களையெல்லாம், செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்குள் சட்டமன்ற உறுப்பினர்களாகவும், மாண்புமிகு அமைச்சர்களாகவும், வரலாற்று நாயகர்களாகவும் உருவாக்கிக் காட்டிய பெருமை, பேரறிஞர் அண்ணா அவர்களின் வழியில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பாதையில், (மேசையைத் தட்டும் ஒலி) நம் நெஞ்சங்களில் எல்லாம் நிறைந்திருக்கின்ற நமது இரத்த நாளங்களில், ஓடும் குருதியில் இரண்டறக் கலந்திருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்து காட்டியிருக்கக்கூடிய அரும் சாதனைகளில் ஒன்றாகும். அந்தத் தாயை இந்த நிமிடமும் நன்றிப் பெருக்கோடு வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திற்கும், நாடாளுமன்றத்திற்கும் ஒரே நேரத்தில் போட்டியிட்டு, தனக்காக வாக்கு சேகரிக்க தொகுதிப் பக்கம் போகாமல் வெற்றி வாகை சூடிய வரலாற்றுக்குச் சொந்தக்காரர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் திருமகன் அவர்கள். பசும்பொன் தேவர் திருமகனாரைப்போல், தேசியத்தையும் தெய்வீகத்தையும் தமது இரு கண்களாகப் போற்றிப் பாதுகாத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். நாடாளுமன்றத்தில் மாண்புமிகு பாரதப் பிரதமர் நேரு அவர்கள் முன்னிலையில் தனக்கே உரித்தான வெண்கல மணியோசை குரலில் சீர்மிகு ஆங்கிலத்தில், “சீனா இந்தியாவுடன் போர் தொடுக்க தயாராகிக் கொண்டிருக்கிறது. இந்தியாவும் விரைந்து போருக்குத் தயாராக வேண்டும்” என்று முதல் எச்சரிக்கை குரலை எழுப்பியவர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அய்யா அவர்கள். அய்யா அவர்களைப் போலவே, “பாகிஸ்தான் தீவிரவாதிகள், எல்லையில் பதுங்குக் குழிகளைத் தயார் செய்திருக்கிறார்கள். ஆயுதங்களைக் கொண்டு வந்து சேர்த்திருக்கிறார்கள். இந்தியாவுடன் போருக்குத் தயாராகிறார்கள்” என்று புதுதில்லியில் பத்திரிகையாளர்கள் சந்திப்பில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வாஜ்பாய் அரசுக்கு எச்சரிக்கை செய்தார்கள். மாண்புமிகு





அம்மா அவர்கள் எச்சரித்தபடி, கார்கில் போர் நடந்தது; போரில் இந்தியா வென்றது. தேவர் அய்யா அவர்களும், மாண்புமிகு அம்மா அவர்களும், பிறப்பால், உருவத்தால் இருவராக இருந்தாலும், எண்ணத்தால், தொலைநோக்குச் சிந்தனையால், இறையாண்மையால் ஒருவரே என்பதை இந்த உலகிற்கு உணர்த்தியது இந்தச் செயல். “ஒன்றே செய்க, நன்றே செய்க, அதுவும் இன்றே செய்க” என்கிற முதுமொழிக்கேற்ப, இது நல்லது என முடிவெடுத்து விட்டால் அதை அறிவிக்க, அமல்படுத்தத் தயங்காதவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பது மட்டுமல்ல; அதற்கு எத்தடை எவரால் வரினும், எங்கிருந்து வரினும் அத்தடைகளை துணிச்சலுடன் நேருக்கு நேர் நின்று எதிர்கொண்டு உடைத்தெறிந்து வெற்றி காண்பதில் மருதுபாண்டியர்களுக்கு நிகராக, வீரமங்கை வேலுநாச்சியாருக்கு இணையாக வீரத்தைப் பெற்றிருந்தவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இரும்புப் பெண்மணி என அழைக்கப்பட்டவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அன்னை சந்தியாவின் மகளாகப் பிறந்து இந்தியாவின் மகளாகப் போற்றப்பட்டவர் மாண்புமிகு அம்மா அவர்கள். ஏழைகளுக்கு கரும்பாய், அள்ளித்தரும் வள்ளலாய், அமுதசுரபியாய், மாணவர்களுக்கு அறிவையும், விளையாட்டின்மூலம் வீரத்தையும், வெற்றியையும், மடிக்கணினிமூலம் விவேகத்தையும், மனித சமுதாயத்திற்கு இமயமலைக்கு ஒப்பாகத் தன்னம்பிக்கையையும் தந்து, முதியோர்களுக்கும், விதவைப் பெண்களுக்கும், மாற்றுத் திறனாளிகளுக்கும், திருநங்கைகளுக்கும் வாழ்வளித்த கண்கண்ட தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை தன்னிகரில்லா மாநிலமாக உயர்த்திட தரணியில் தமிழகம் அனைத்திலும் முதலிடம் பெற்றிட, கண்துஞ்சாது உழைத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். இதனால், தன் உடல் நலத்தையும் மறந்த சுயநலமில்லா ஒரு போராளி மாண்புமிகு அம்மா அவர்கள். அவர் படைத்திட்ட சாதனைகள் ஒன்றா, இரண்டா! எண்ணில் அடங்காதவை. அவர் சொன்னதெல்லாம் வரலாறு; கொடுத்ததெல்லாம் மக்களின் வாழ்வுக்கான மேம்பாடு.

பள்ளியில், திரையுலகில், அரசியலில், சட்டமன்றத்தில், நாடாளுமன்றத்தில், ‘இவருக்கு நிகரானவர் எவருமில்லை’ என்ற வரலாற்றை தம் வாழ்நாளில் படைத்திருக்கின்ற சாதனையாளர்

[திரு. சே. கருணாஸ்] [2017 ஜனவரி 30

மாண்புமிகு அம்மா அவர்கள். பெற்றோர் வேண்டாம் என்கிறார்கள்; உற்றார்களும், பெற்றோர்களும் துணை போகிறார்கள். தாய்ப்பால் தர வேண்டிய தாய், கள்ளிப்பால் கொடுக்கின்றாள். மடியில் வைத்து கொஞ்சவேண்டிய தன் பிள்ளையை குப்பைத் தொட்டியில் வீசுகிறாள்; வாரிசு கிடைக்காதா என்று ஏங்குகிறவர்கள் மத்தியில், பெற்ற வாரிசை கொன்று வீசும் தாய்மையையும், சேயையும் காப்பாற்றிடவும், சேற்றிலே மலர்ந்த அந்த செந்தாமரையை அரசு மடியில் எடுத்து வளர்த்து ஆளாக்கி, உருவாக்கி பேருடனும், புகழுடனும் வளர்த்து, தொட்டில் குழந்தைகளை தான் பெறாத பிள்ளைகளாக, 'பெற்றால்தான் பிள்ளையா' என்ற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வரிகளுக்கு உயிர் கொடுத்து காத்தவர், நம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் *2–35*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியின் பயன் அனைவரையும் சென்றடையும்வகையில், நீர் ஆதார மேலாண்மை, ஏழைகளுக்கான வீட்டு வசதி, வறுமை ஒழிப்பு, திறன் மேம்பாடு மற்றும் பொதுச் சுகாதாரம் ஆகிய மாநில அளவிலான 5 இயக்கங்களையும், 11 சிறப்பு நோக்கு பெருந்திட்டங்களையும் மாண்புமிகு அம்மா அவர்கள் செயல்படுத்தி வந்தார்கள். இந்தப் புதிய அரசும் அதே பாதையில் தொடர்ந்து பயணித்து மாநிலத்தின் மேம்பாட்டிற்கு வழிவகுக்கும் என ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சியளிக்கிறது. மரங்கள் நடுவது மற்றும் பசுமைப் பரப்பை அதிகரிப்பது போன்றவை மாண்புமிகு அம்மா அவர்களின் உள்ளம் கவர்ந்த பணி என்பதால், 'மரம் நடும் பெருந்திட்டம்' மாண்புமிகு அம்மா அவர்களின் 69 ஆவது பிறந்த நாளான, வரும் 24–2–2017 அன்று துவங்கப்படும் என ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது போற்றுதலுக்குரியதாகும்.

இலங்கைத் தமிழர்களின் உரிமையை நிலைநாட்டிடவும், அவர்கள் பொருளாதாரரீதியாகவும், சம உரிமையுடனும், சுயமரியாதையுடனும் வாழ சாதகமான சூழ்நிலையை உருவாக்க இந்த அரசு தொடர்ந்து பாடுபடும் என ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது, இலங்கைத் தமிழர்களின்மீது இந்த அரசு கொண்டுள்ள அக்கறையை நன்கு விளக்கிக் காட்டுகிறது.



2017 ஜனவரி 30] [திரு. சே. கருணாஸ்]

பாக்–வளைகுடாவில் மீன் பிடிக்கும் இந்திய மீனவர்களின் பாரம்பரிய உரிமைகளைப் பாதுகாத்திட, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கச்சத் தீவை மீட்பதற்காக சட்டரீதியாக நடவடிக்கை மேற்கொண்டு வந்தார்கள். இந்த அரசும் கச்சத் தீவை மீட்பதற்கான தொடர் நடவடிக்கையில் ஈடுபடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது மீனவர் சமுதாயத்திற்கு நம்பிக்கையூட்டுவதாக அமைந்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜல்லிக்கட்டு; வீரத் தமிழனின் பரம்பரை விளையாட்டு. இதில் கை வைக்க, தடை செய்ய எவருக்கும் உரிமையில்லை. ஏனெனில், இது தமிழனின் கலாச்சாரம் மற்றும் பண்பாட்டின் அடையாளம். தமிழனின் ஜீவாதார உரிமைகளை அணுவளவும் விட்டுக்கொடுக்காமல் தொடர் சட்டப் போராட்டம் நடத்தி, ஒன்றன்பின் ஒன்றாக காவேரியில், முல்லைப் பெரியாறில் வெற்றி கண்டவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இன்று புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, தியாகத் தலைவி சின்னம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் விரைந்து செயல்பட்டு, ஜல்லிக்கட்டு வேண்டுமென மாணவர்கள் நடத்திய அகிலம் போற்றும் அகிம்சாவழிப் போராட்டத்திற்கு, "தீர்வு வராது; கிடைக்காது; கிடைக்கவே கிடைக்காது; போராட்டம் தொடரட்டும்; இந்த அரசுக்கு அவப்பெயர் கூடட்டும்" என அதன்மூலம் அரசியல் ஆதாயம் தேட முயன்ற எண்ணங்களில் இடி தாக்கியதைப்போன்று, இரண்டே நாட்களில் அவசரச் சட்டம் அமலாக்கம்; இரண்டே நாட்களில் சட்டமன்றத்தில் சட்ட மசோதா நிறைவேற்றம்; மீண்டும் இரண்டே நாட்களில் தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேறிய அந்தச் சட்டம் அமலாக்கத்திற்கு வரப்போகிறது போன்றவை மின்சார வேகத்தையும் மிஞ்சிவிட்டது; சுனாமியின் வேகத்தையும் தாண்டிவிட்டது. மாண்புமிகு அம்மாவின் அரசுக்கு நற்சான்று பெருகிவிட்டது; மாண்புமிகு அம்மாவின் ஆத்மா மகிழ்கிறது. வாடிவாசலில் காளைகள் துள்ளிக் குதிக்கின்றன; இத்துள்ளல் தொடரும். இது வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் அயராத முயற்சியால் காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு மத்திய அரசின் அரசிதழில்

[திரு. சே. கருணாஸ்] [2017 ஜனவரி 30

வெளியிடப்பட்டது. இதன்மூலம் காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி நதி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றை மத்திய அரசு அமைக்க வேண்டும் என்ற உச்ச நீதிமன்ற ஆணையைப் பெற்று, இந்த அரசு தமிழ்நாட்டிற்கு முறையாகக் கிடைக்க வேண்டிய உரிமைகளை நிலைநாட்டியுள்ளது.

முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை முதற்கட்டமாக 142 அடியாக உயர்த்தியது மாண்புமிகு அம்மா அவர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனையாகும். அவர் காட்டிய பாதையைப் பின்பற்றி, இந்த அணையின் முழுக் கொள்ளளவான 152 அடி வரை நீர்மட்டத்தை மேலும் உயர்த்தி, தென்தமிழ்நாட்டிற்குத் தேவையான தண்ணீரைத் தருவதற்கான அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு மேற்கொள்ளும் என்ற அறிவிப்பு தமிழ்நாட்டு மக்களுக்கும், விவசாயிகளுக்கும் மகிழ்ச்சியளிக்கக்கூடியதாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கருணாஸ், இன்று கொஞ்சம் ஒத்துழைப்புத் தாருங்கள். உரையை முடியுங்கள்.

**திரு. சே. கருணாஸ்:** “எனக்குப் பிறகும், இன்னும் நூறு ஆண்டுகள் இந்த இயக்கம் ஆட்சியில் இருந்து மக்களுக்குப் பணியாற்றும்” என்ற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் இறுதியான, உறுதியான வாக்கினை மெய்ப்பிக்கும்வகையில், மாண்புமிகு அம்மா அவர்களின் கொள்கைகளைத் தாங்கி, இலட்சியங்களை நிறைவேற்றப் பாடுபடுவோம் எனவும், அதற்கு நானும், நான் சார்ந்திருக்கும் முக்குலத்தோர் புலிப்படை அமைப்பும் என்றென்றும் உறுதுணையாக இருந்து பணியாற்றுவோம் என்பதையும் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தனியரசு, இன்றைக்கு ஒத்துழைப்புத் தாருங்கள். 10 நிமிடங்களில் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2017 ஆம் ஆண்டிற்கான ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்தில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு



2017 ஜனவரி 30] [திரு. உ. தனியரசு]

நன்றி பாராட்டுகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எந்த நோக்கத்திற்காக நாட்டு மக்களுக்கு எண்ணற்ற நலத் திட்டங்களைத் தந்தார்களோ, அந்த நலத் திட்டங்களெல்லாம் இந்த ஆளுநர் உரையின் எல்லா பக்கங்களிலும் வரிக்கு வரி காணப்படுகின்றன. நாட்டு மக்களை நேசித்த, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அன்பும், ஈரமும் ஆளுநர் உரையின் எல்லாப் பக்கங்களிலும் பொதிந்து கிடக்கின்றன. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டுவந்த சமூக நலத் திட்டங்கள் தொடரும் என்கின்ற நல்ல செய்தி ஆளுநர் உரையில் காணப்படுகிறது.

‘வர்தா’ புயல் 100 கி.மீ. வேகத்தில் அடித்தது என்றால், 110 கி.மீ. வேகத்தில் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தமிழக அரசின் நிருவாகம் (மேசையைத் தட்டும் ஒலி) நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டு, மக்களை மீட்டெடுத்து வரலாறு படைத்திருக்கிறது.

பிற்பகல் 2–40

அதேபோன்று, இலங்கைத் தமிழர்கள் உரிமைகளை நிலைநாட்டிட ஆளுநர் உரையிலே புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கொள்கை நிலைப்பாட்டை உறுதி செய்திருப்பது; போர்க் குற்றங்களின்மீது நடவடிக்கையை வலியுறுத்துவது; தமிழக மீனவர்களுடைய உரிமையை, பாரம்பரிய உரிமையை மீட்டெடுப்பது; தமிழக மீனவர்களுடைய உயிர்களைக் காப்பது; ஜல்லிக்கட்டுக்கு, சட்டப் பாதுகாப்பினை உறுதி செய்ய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எந்தக் கனவைக் கண்டு தொடர்ந்து சட்டப் போராட்டம் நடத்தினார்களோ, அந்தப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்து ஒரே நாளில் 24 மணி நேரத்தில் சட்டமாகக் கொண்டுவந்து, இனிமேல் தமிழ்நாட்டினுடைய பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டின் மீதான உரிமையை எவராலும் தடுத்து விடமுடியாது (மேசையைத் தட்டும் ஒலி) என்கின்ற அந்த உறுதியை, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தச் சட்டமன்றத்திலே சட்டமாகக் கொண்டுவந்து நிறைவேற்றியிருப்பது பாராட்டுக்குரியது.

அதேபோன்று, சென்னை உயர் நீதிமன்றத்திலே வழக்காடும் மொழியாக தாய்மொழியான தமிழை கொண்டுவருவதற்கு மத்திய அரசை வலியுறுத்தி இருப்பது; ஆற்று நீர் உரிமையை மீட்டெடுக்க காவேரியானாலும், முல்லைப் பெரியாறு ஆனாலும், பாலாறு

[திரு. உ. தனியரசு] [*2017 ஜனவரி 30*

ஆனாலும், அமராவதி போன்ற எந்த நீர்த்தேக்கமாக இருந்தாலும், நம்முடைய உரிமை மறுக்கப்படுகின்றபோது, அந்த உரிமையை மீட்டெடுக்கின்ற வகையில் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆற்றல்மிக்க அந்த துணிச்சல், போராட்டம் ஆற்று நீர் உரிமையை மீட்டெடுத்து வரலாற்றைப் பாதுகாத்திருப்பது பாராட்டுக்குரியது.

அதுபோன்று, தடையில்லாத மின்சாரம் தந்து, இருண்டு கிடந்த தமிழ்நாட்டை ஒளிமயமான தமிழ்நாடாக மாற்றிக் காட்டிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எந்தக் கனவை கண்டு வந்தார்களோ, அந்தக் கனவை நனவாக்குகின்ற வகையில் இந்த ஆளுநர் உரை அமைந்திருப்பதை நான் மிகுந்து வரவேற்றுப் பாராட்டுகிறேன்.

உலகில் பசு இனங்களிலேயே மிகவும் அழகான பசு காங்கேயம் பசு. ஒரு பசு மணக்கிறது என்றால், அது காங்கேயம் பசுதான்; காங்கேயம் பசு மாடுதான். மணக்கும் மாடாக இருக்கிறது. அதனுடைய அழகு, கொள்ளை அழகு. எப்படிப்பட்ட உழவுக்கானாலும், சுமையை சுமக்கவும், வண்டியை இழுத்துச் செல்லவும் காங்கேயம் காளை ஆற்றல்மிக்கது. பசு தருகின்ற பால் சுத்தமானது. தாய்ப்பாலைவிட சுத்தமான தாய்ப்பாலாக கருதுகின்ற பாலைத் தருவது பசு. காளை இனத்தைப் போற்றும் வகையில் நம்முடைய காங்கேயம் நகரப் பகுதியிலே, பேருந்து நிலையத்திற்கு அருகில் இருக்கின்ற வட்டச் சாலையில், ரௌண்டானாவில் அழகான அந்தக் காங்கேயம் காளை சிலையை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தமிழ்நாடு அரசு நிறுவிட வேண்டுமென்பதை நான் என்னுடைய தாழ்மையான கோரிக்கையாக வைக்கின்றேன்.

அடுத்து, சித்தா, ஆயுர்வேதா போன்ற பல்வேறு மருத்துவ முறைகள் இருக்கின்றன. அதில் அக்குபஞ்சர் முறையையும் கட்டாயமாக நம்முடைய அரசு அங்கீகரிக்க வேண்டுமென்று, இரண்டு நாட்களுக்கு முன்பு சேலத்திலே அக்குபஞ்சர் மருத்துவ முறையைப் பயன்படுத்துகின்ற மருத்துவர்கள் மாநாடு நடத்தி அரசுக்குக் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதிலே, நானும் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. முஹம்மது அபூபக்கர் அவர்களும் பங்கேற்றோம். அந்தக் கோரிக்கை குறித்து அரசை வலியுறுத்திக் கேட்டிருக்கிறார்கள். பல்வேறு மருத்துவ



*2017 ஜனவரி 30*] [திரு. உ. தனியரசு]

முறைகளோடு அக்குபஞ்சர் மருத்துவ முறையையும் நம்முடைய தமிழ்நாடு அரசு அங்கீகரிக்க வேண்டுமென்கின்ற கோரிக்கையை நான் தாழ்மையாகப் பதிவு செய்கின்றேன்.

அதேபோன்று, தங்களுடைய உணர்ச்சிவசத்தால் குற்றமிழைத்து, நீதிமன்றங்களில் தண்டனை பெற்று, பல்வேறு சிறைகளில் பலர் அடைபட்டிருக்கின்றனர். கருணையும் அன்பும் மிக்க நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, 14 ஆண்டுகளுக்கும் மேல் தமிழ்நாட்டு சிறைச்சாலைகளில் சிறைபட்டு இருக்கின்ற அனைத்து சிறைவாசிகளையும் விடுவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, வெடி பொருள் சட்டம், ஆயுத சட்டம் போன்ற சட்டங்களின்கீழ், கோவை குண்டு வெடிப்பு கலவரத்தின்போது முஸ்லிம் சிறுபான்மை மக்கள் கைது செய்யப்பட்டு வழக்குகள் போடப்பட்டு தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். தண்டிக்கப்பட்ட அனைத்துக் குற்றவாளிகளையும் சாதி கடந்து, மதம் கடந்து, மனித நேயத்தோடு, பாகுபாடு இல்லாமல், இரக்கத்தோடு, எப்படி புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி செய்தார்களோ, அதே வழியில் இரக்கத்தோடு இவர்களையெல்லாம் விடுவிக்க வேண்டும். இப்போது புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பிறந்த நாள் வருகிறது. அவரது பிறந்த நாளிலே நல்ல செய்தியாக கால் நூற்றாண்டு காலமாக, 20 ஆண்டுகளுக்கும் மேலாக சிறைகளிலே முடங்கிக் கிடக்கின்ற கோவை குண்டுவெடிப்பு வழக்கில் மிக முக்கிய குற்றவாளியாக சேர்க்கப்பட்ட பாட்சா அண்ணன் போன்றவர்கள் 75 வயதை நெருங்கி இருக்கின்றார்கள். அவர் மூத்தவர்; பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டிருக்கின்றார். தன்னுடைய அடிப்படைவாத கொள்கைகளிலே ஏற்பட்ட பாகுபாட்டால், தன்னுடைய நலனுக்கு அல்லாமல், தான் நம்பியிருக்கின்ற மார்க்க நிலைகளுக்காக உணர்ச்சிவசப்பட்டு நடந்த அந்த பொதுக் கலவரத்திலே ஏற்பட்ட அந்தச் சம்பவங்களால், கால் நூற்றாண்டுக் காலமாக அவர்களெல்லாம் சிறைகளிலே முடங்கிக் கிடக்கிறார்கள். ஆயிரக்கணக்கான பேர்கள் இப்படிச் சிறைச்சாலைகளிலே இருக்கிறார்கள்; இலட்சக்கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன; அந்தக் குடும்பங்களுடைய கண்ணீரை, துன்பத்தை, துயரத்தைத் துடைத்திடும் வகையில், சிறைச்சாலைகளிலே முடங்கிக் கிடக்கின்ற, அடைபட்டுக் கிடக்கின்ற சிறைவாசிகள் அனைவரையும் பாட்சா அண்ணன் உட்பட, 49 முஸ்லிம் சிறைவாசிகளை உடனடியாக நம்முடைய

[திரு. உ. தனியரசு] [2017 ஜனவரி 30

அரசு மனிதாபிமானத்தோடு, பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2—45

அதேபோன்று, நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கரங்களைப் பற்றி பேரறிவாளனின் தாயார் கோரிக்கை வைத்தார். சாந்தன், முருகன் மற்றும் நளினி உள்ளிட்ட ஏழு பேரை விடுதலை செய்யவேண்டுமென்று நம்முடைய சட்டமன்றத்திலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தீர்மானம் கொண்டுவந்து, மத்திய அரசுக்கு அனுப்பினார்கள். பேரறிவாளனுடைய தாயார் அற்புதம்மாள் சுமார் 20, 25 ஆண்டுகளுக்கும் மேலாக போராடி வருகிறார். தன்னுடைய பால்ய பருவத்திலே, 17, 18 வயதிலே அந்த அன்புக் குழந்தை கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு வீட்டிற்கு ஏதாவது உதவி செய்வான் என்று அவர் நினைத்திருந்த நிலையிலே, பேரறிவாளன் அந்த மோசமான வழக்கினால் பாதிக்கப்பட்டு, 25 ஆண்டுக்காலமாக வேலூர் சிறையிலே அடைபட்டுக் கிடக்கிறான். அவருடைய தாய் கதறுகிறாள்; பல்வேறு இயக்கங்கள் போராடின; பல்வேறு அரசியல் கட்சிகள் போராடின; கண்ணீரோடு சந்தித்த பேரறிவாளனின் தாயாரை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆறுதல்படுத்தினார். புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அந்த ஆறுதலால், தேற்றுதலால், ‘என் மகன் விரைவிலே விடுதலை ஆவான்’ என்ற நம்பிக்கையோடு நாளெல்லாம் அந்தத் தாய் கண்ணீரோடு அழுது புலம்பிக் கொண்டிருக்கிறார். அந்தத் தாயின் கண்ணீரைத் துடைக்கும் வகையில், பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவருடைய நூற்றாண்டினையொட்டி, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பிறந்த நாளினையொட்டி, மனிதாபிமானம் உள்ள, அன்பும், கருணையும் உள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, பல ஆண்டுகளாக சிறைபட்டுக் கிடக்கின்ற இஸ்லாமிய சிறைவாசிகளானாலும், சாதி மதங்களுக்கு அப்பாற்பட்டு, வழக்குகளினுடைய பிரிவுகளைப்பற்றிக் கவலைப்படாமல், அனைத்து சிறைவாசிகளுக்கும் மனிதாபிமானத்தோடு பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய வேண்டுமென்று தாழ்மையோடு நம்முடைய வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் என்னுடைய தாழ்மையான கோரிக்கையை முன்வைக்க விரும்புகிறேன்.



2017 ஜனவரி 30] [திரு. உ. தனியரசு]

வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற பல்வேறு சூழ்நிலைகளிலே நம்முடைய தொகுதிகளிலே, கிராமப்புறங்களிலே அணைகளிலே நீர் இல்லை. குளங்கள், கண்மாய்கள் எல்லாம் வறண்டு கிடக்கின்றன. கிராமப்புறங்களிலே ஆழ்குழாய்க் கிணறுகளில் இருந்துதான் நீர் எடுத்து பொது மக்கள் தங்களுடைய பயன்பாட்டிற்குப் பயன்படுத்தி வருகிறார்கள். கிராமப்புறங்களிலே தற்போது உள்ளாட்சி அமைப்புகள் இல்லாத நிலை இருக்கிறது. கிராமப்புறங்களில் இருக்கிற மக்கள் ஆழ்குழாய்க் கிணறுகளில் இருந்து தண்ணீரை எடுத்து பயன்படுத்தி வந்த நிலையில் சில கிணறுகளும் வற்றியிருக்கின்றன. மேலும், தண்ணீரை உறிஞ்சி எடுப்பதற்கு பயன்படுத்தப்படுகிற மின் மோட்டார்களும் ஆங்காங்கே பழுதடைந்து இருப்பதாக ஒவ்வொரு கிராமத்திலேயும் சொல்கிறார்கள். நம்முடைய ஊராட்சித் துறையினுடைய அமைச்சர் அவர்கள் இதிலே சிறப்புக் கவனம் செலுத்தி, கிராமப்புறங்களில் ஆழ்குழாய்க் கிணறுகளில் பயன்படுத்தப்படுகின்ற நீரேற்று மின்மோட்டார்களை எல்லாம் உடனுக்குடன் சரிசெய்து, குடிநீர்ப் பற்றாக்குறை இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். எத்தனையோ வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டங்களையெல்லாம் கொண்டுவந்து, எல்லா கிராமங்களிலும் அவற்றைச் செயல்படுத்தி, தந்த வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அந்த வகையில் தற்போது நிலவும் கடுமையான வறட்சியினால் ஏற்பட்டிருக்கின்ற குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்கிட உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் தாழ்மையோடு, பணிவோடு, அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மிக முக்கியமான பல்வேறு கோரிக்கைகளை நான் தொடர்ந்து பேரவையிலே பதிவு செய்திருக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இன்றைக்கு அதிகமாகப் பேசவேண்டாம் என்று முன்கூட்டியே சொல்லிவிட்டார்; அந்தக் காரணத்தினாலே, மிக முக்கியமான கோரிக்கைகளை மட்டும் வலியுறுத்தி சொல்லியிருக்கிறேன். புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லரசு, ஏழு கோடி தமிழ் மக்களின், உலகம் முழுக்க பரவி வாழ்கிற ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்தின் காவல் அரணாகத் திகழ்கிறது என்பதற்கான அறைகூவல்தான் 2017 ஆம் ஆண்டிற்கான ஆளுநர் உரை. தமிழ்நாட்டு மக்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின் பக்கம் இருக்கிறார்கள் என்பதற்கு அதுவே நற்சான்று என்று தெரிவித்து, வாய்ப்பிற்கு நன்றி பாராட்டி, எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

[2017 ஜனவரி 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி. மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள். இன்றைக்குக் கொஞ்சம் சீக்கிரம் உரையை முடியுங்கள்; 10 நிமிடத்தில் உரையை முடிக்க வேண்டும்.

***திரு. எம். தமிமுன் அன்சாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 23–1–2017 அன்று இந்தப் பேரவையில் தமிழக ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையை உளமார வரவேற்று நன்றி பாராட்டுகின்றேன். நேரமற்ற ஒரு நிலையிலே அந்த உரையின் பல்வேறு சிறப்பம்சங்களைப் பற்றிப் பேசமுடியாத நிலையிலேயே நிற்கின்றேன். சுருக்கமாக இங்கே நான் ஒன்றைப் பதிவு செய்ய விரும்புகின்றேன். மாண்புமிகு முன்னாள் முதல்வர் அம்மா அவர்களின் எண்ண ஓட்டங்களை வெளிப்படுத்தும் வகையிலே இந்த ஆளுநர் உரை அமைந்திருக்கிறது. இதனை நான் மனதார வரவேற்றுப் பாராட்டுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த 140 ஆண்டுகளிலே மாநிலம் கண்டிராத மோசமான வறட்சி இப்போது தமிழகத்திலே நிலவிக்கொண்டிருக்கிறது. இதை உணர்ந்து, நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களையும் வறட்சி பாதித்த மாவட்டங்களாக அறிவித்துள்ளார்கள். இது பாராட்டுக்குரியது.

பிற்பகல் 2–50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பெரும் மரியாதைக்குரிய பொன்மனச் செம்மல் ஐயா எம்.ஜி.ஆர். அவர்களுடைய நூற்றாண்டு விழாக் காலம். தமிழக அரசு சிறப்பான முறையிலே இந்த நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிக்கொண்டிருக்கிறது. இந்த நேரத்திலே மிகுந்த தாழ்மையோடு ஒரு கோரிக்கையை இந்த அவையிலே நான் முன் வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். எனக்கு முன்பாகப் பேசிய சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. தனியரசு அவர்கள், சிறைச்சாலைகளில் 14 ஆண்டுகளை நிறைவு செய்த ஆயுள் தண்டனை கைதிகளை சாதி, மத, அரசியல் பாரபட்சமின்றி விடுதலை செய்யவேண்டுமென்று வலியுறுத்தினார்கள். அந்தக் கருத்தை நான் ஏற்கெனவே இந்த அவையிலே தெளிவாக வலியுறுத்திருக்கின்றேன். நான் அதை மீண்டும் இப்போது வலியுறுத்துகின்றேன். மாண்புமிகு முன்னாள் முதல்வர் அம்மா அவர்களை, இந்தப் புதிய அவை அமைந்த பிறகு, வெற்றிபெற்ற



2017 ஜனவரி 30] [திரு. எம். தமிமுன் அன்சாரி]

பிறகு, நான்கு முறை நான் சந்தித்திருக்கின்றேன். அதிலே, இரண்டு முறை 14 ஆண்டுகளை நிறைவு செய்த அனைத்து ஆயுள் தண்டனை கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டுமென்று நான் அவர்களிடம் கோரிக்கை வைத்தேன்; நிச்சயமாகப் பரிசீலிப்பதாகச் சொன்னார்கள். கடைசியாக, அவர்கள் இந்த அவையிலே பேசிவிட்டு சென்றபிறகு, அந்த இடத்திலேயே நான் அவர்களைச் சந்தித்தபோது, நான் கொடுத்த மனுவின்மீது, ‘நிச்சயமாக நான் இதைக் கனிவோடு பரிசீலிக்கிறேன்’ என்று சொன்னார்கள். எனவே, மாண்புமிகு அம்மா அவர்கள் “கனிவோடு பரிசீலிக்கிறேன்” என்று சொன்ன இந்த மாபெரும் கோரிக்கையை நீங்கள் பரிசீலிக்க வேண்டுமென்று மீண்டும் மீண்டும் நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம், பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இதிலே மிகுந்த வேதனையிலே துடித்துக்கொண்டிருக்கின்றன. அந்தக் குடும்பங்களை நேரில் சென்று பார்த்தால், தற்கொலை செய்யக்கூடிய மனநிலையில் அவர்கள் இருந்துகொண்டிருக்கின்றனர் என்பது தெரியும். ஒன்று ‘நமது வீட்டு ஆண்களுக்கு விடுதலை வேண்டும்; இல்லாவிட்டால் மரணம் வேண்டும்’ என்ற நிலையை நோக்கி அவர்கள் சென்றுகொண்டிருக்கின்றனர். எனவே, தயவுகூர்ந்து, மனிதாபிமானத்தோடு, உங்கள் அத்தனை பேர்களுடைய இரண்டு கரங்களையும் நான் பற்றி பிடித்துக்கொண்டு, கண்ணீரோடு அழுவதாக எடுத்துக்கொண்டு, 14 ஆண்டுகளை நிறைவு செய்த ஆயுள்தண்டனை கைதிகளை, சாதி, மத பாரபட்சமில்லாமல், அரசியல் பாரபட்சமில்லாமல், கருணையின் அடிப்படையில் ஐயா எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி விடுதலை செய்ய மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கிய இந்த அரசு பரிசீலிக்க வேண்டுமென்று இங்கே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, என்னுடைய தொகுதி கோரிக்கைகளுக்கு நான் நேரடியாக வர விரும்புகின்றேன். என்னுடைய நாகப்பட்டினம் தொகுதிக்கு அருகிலே, புதுச்சேரி மாநிலத்திற்குட்பட்ட காரைக்கால் அமைந்திருக்கிறது. நாகூருக்கும் காரைக்காலுக்கும் இடையிலே MARG என்ற ஒரு தனியார் நிறுவனத்தின் துறைமுகம் இருக்கிறது. அந்தத் தனியார் துறைமுகத்திற்கு இந்தோனேசியாவிலிருந்து நிலக்கரி இறக்குமதி செய்யப்படுகிறது. நிலக்கரி இறக்குமதி செய்யப்படுகின்றபோது, சுட்டிக்காட்டப்பட்டுள்ள எந்த

[திரு. எம். தமிமுன் அன்சாரி] [*2017 ஜனவரி 30*

விதிகளையும் அந்த MARG என்ற தனியார் நிறுவனம் பின்பற்றவில்லை என்பது தெரியும். அந்த நிறுவனம் நிலக்கரி இறக்குமதி செய்கின்றபோது, தூசிகள் பறந்து, நாகூர், பட்டினச்சேரி, மேலவாஞ்சூர் போன்ற பகுதிகளில் வாழக்கூடிய மக்களுக்கு ஒரு மிகப்பெரிய சுகாதாரச் சீர்கேட்டை உருவாக்கிக்கொண்டிருக்கிறது. கொடிகளிலே துணிகளை காயவைத்தால், மாலை நேரத்தில் வந்து பார்க்கின்றபோது, அந்தத் துணிகள் கறுப்பாக இருக்கின்றன. செருப்பில்லாமல் நடந்துசென்றால், கால்கள் கறுப்பாகி விடுகின்றன; தோல் நோய்கள் ஏற்படுகின்றன; நுரையீரல் சுவாசக்கோளாறுகள் ஏற்படுகின்றன. பல சமூக, சுகாதாரச் சிக்கல்களிலே நாகூர் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதி மக்கள் சிக்கித் தவித்துக்கொண்டிருக்கின்றனர். நாகூருக்கு சுற்றுலா வரக்கூடிய மக்களும் இதனால் பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றனர். எனவே, மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கிய இந்த அரசு, இந்த விஷயத்திலே கவனம் செலுத்தி, புதுச்சேரி அரசுடன் பேசவேண்டும். நம்முடைய சுற்றுச்சூழல் துறையின் சார்பிலே உரிய நடவடிக்கையும் எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு நேரமற்ற நிலையிலே, ஒரு சில நிமிடங்கள் எடுத்துக்கொள்ள விரும்புகிறேன். ஜல்லிக்கட்டுக்காக நம்முடைய மாணவர்கள், இளைஞர்கள் நடத்திய ஒரு சிறப்பான போராட்டத்தை நான் மனதார வரவேற்றுப் பாராட்டுகின்றேன். அவர்கள் நடத்திய போராட்டம் ஜல்லிக்கட்டுக்கு ஒரு சிறப்பான சட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிறைவேற்றக்கூடிய ஒரு வாய்ப்பினை ஏற்படுத்தியிருக்கின்றது. அரசியலைவிட்டு ஒதுங்கி, பொது வாழ்வின்மீது அக்கறையில்லாமல் விலகிக் கொண்டிருந்த புதிய தலைமுறையினர் பொது வாழ்வுக்கு நிச்சயமாக இந்த நேரத்திலே வந்திருக்கின்றனர்; அரசியலுக்கு வந்திருக்கின்றனர். துனிசிய புரட்சியை, எகிப்து புரட்சியை “அரபு வசந்தம்” என்று வர்ணித்தார்கள். அதுபோன்று நம்முடைய மாணவர்களும், இளைஞர்களும் நம்முடைய இனம் காக்க, மொழி காக்க, மாநிலத்தின் உரிமைகளைக் காக்க நடத்திய இந்தப் போராட்டத்தை நான் ‘தை புரட்சி’ என்று வாழ்த்துகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது “தமிழர்களுடைய வசந்த காலம்” என்று வாழ்த்துகின்றேன்.

அந்தப் போராட்டத்திலே ஒழுங்குகள் இருந்தன. என்னவென்று சொன்னால், நடிகை நயன்தாரா வந்தார். எந்தவொரு மாணவரும்



*2017 ஜனவரி 30*] [திரு. எம். தமிமுன் அன்சாரி]

அங்கே நயன்தாராவுடன் செல்பி எடுத்துக் கொள்ளவில்லை. இது அந்தப் போராட்டத்தினுடைய ஒரு சிறப்பாக நான் கருதுகிறேன். அங்கே நடிகர்கள் வந்தார்கள். நடிகர்களோடு போட்டிப்போட்டுகொண்டு யாரும் செல்பி எடுத்துக் கொள்ளவில்லை. அப்படிப்பட்ட ஒழுக்கம் அந்தப் போராட்டத்திலே இருந்தது. இரவிலே மாணவிகளும், பெண்களும் மணலிலே படுத்து உறங்கினர். மாணவர்கள் சுற்றி வளைத்து அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்திருக்கின்றனர். ஒரு மாணவன் சாக்குப் பையை எடுத்துக்கொண்டு மெரினாவில் குப்பைகளை சேகரிக்கிறான்; ஒரு முஸ்லிம் மாணவி அங்கிருந்த குப்பைகளை, தாங்கள் சாப்பிட்ட உணவுப் பொட்டலங்களின் கழிவுகளையெல்லாம் அந்தப் பையில் எடுத்து போட்டுக் கொண்டே உடன் செல்கிறார். ஒரு தாழ்த்தப்பட்ட மாணவனும், பிற்படுத்தப்பட்ட மாணவனும் கைகோர்த்து ‘நாங்கள் தமிழன்டா’ என்று முழங்குகின்றனர். சிலுவை அணிந்த ஒரு கிறிஸ்துவ சகோதரன் ஜல்லிக்கட்டு வேண்டுமென்று முழங்குகின்றான். அப்படிப்பட்ட ஒரு சிறப்பான சமய ஒற்றுமை, சாதி நல்லிணக்க ஒற்றுமை அங்கே காணப்பட்டது. அங்கே வெள்ளிக்கிழமை அன்று, முஸ்லிம் மாணவர்கள் தொழுகை நடத்தினர். அவர்களுக்கு பாதுகாப்பாக பிராமண சமுதாய மாணவர்களும், கிறிஸ்துவ சமுதாய மாணவர்களும், பிற சமூக மாணவர்களும் அரணாக நின்று அவர்கள் தொழுகை நடத்துவதற்கு அங்கே வழி ஏற்படுத்திக்கொடுத்தனர். இதை நான் மிகவும் ரசித்தேன்; அதற்காக அவர்களைப் பாராட்டுகிறேன். இந்தப் போராட்டம் நடைபெற்ற காலத்தில் நாம் வாழ்வதற்காக, நாம் பெருமைப்பட வேண்டும். பெரியாருடைய சிந்தனைகள், அண்ணாவுடைய சிந்தனைகள், ஐயா காமராஜருடைய சிந்தனைகளையெல்லாம் ஒரு புதிய தலைமுறை ஏற்றுக்கொண்டு பொது வாழ்விற்கு வந்திருப்பதாகவே நான் கருதுகின்றேன். இந்த நேரத்திலே, சில சக்திகள் அந்த மாணவர்களுடைய போராட்டத்திற்கு சில கரும்புள்ளிகளை ஏற்படுத்திவிட்டன. பொறுப்பற்ற சிலர் அங்கே நுழைந்திருக்கின்றனர்.

*பிற்பகல் 2–55*

இந்த நேரத்தில், மாணவர்கள் ஒன்றைச் செய்திருந்தால் இந்தப் போராட்டம் இன்னும் சிறப்பாக, நாம் எல்லோரும் மகிழ்ச்சியடையக்கூடிய ஒன்றாக அமைந்திருக்கும். என்னவென்று சொன்னால், தங்களுக்கென்று தலைமையற்ற நிலையிலே

[திரு. எம். தமிமுன் அன்சாரி] [2017 ஜனவரி 30

மாணவர்கள் இருந்ததால் சிலர் அங்கே புகுந்து சில குழப்பங்களை, தேவையற்ற முழக்கங்களை எழுப்பியிருக்கின்றனர். நம்முடைய முதலமைச்சரைப் பற்றிக்கூட தவறான முழக்கங்களை எழுப்பினார்கள், அவையெல்லாம் கண்டிக்கத்தக்கது. சிலர் தேவையற்ற முழக்கங்களை எழுப்பியிருக்கிறார்கள். அந்த மாணவக் கண்மணிகள் ஓர் அருமையான போராட்டத்தை முன்னெடுத்தார்கள். அவர்கள் ஒன்றைச் செய்திருக்க வேண்டும். எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சில தலைவர்கள் தமிழ்நாட்டிலே இருக்கிறார்கள். ஐயா நல்லக்கண்ணு அவர்கள், ஐயா பழ நெடுமாறன் அவர்கள், ஐயா நீதிபதி அரி பரந்தாமன் போன்றவர்களை எல்லாம் கொண்டு ஒரு குழுவினை ஏற்படுத்தி, போராட்டத்தினை ஒழுங்குபடுத்தியிருந்தார்கள் என்று சொன்னால், பொறுப்பற்ற சிலர் அங்கே நுழைந்திருக்கமாட்டார்கள் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. இந்த நேரத்திலே தமிழ்நாட்டு மக்கள் சாதி, மத வேறுபாடுகள் கடந்து, அண்ணன் தம்பிகளாக ஜல்லிக்கட்டின் மூலமாக இணைந்திருப்பது நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

இந்த நேரத்திலே மாண்புமிகு முதல்வர் ஐயா அவர்களே, உங்களுக்கு சில பாராட்டுகளைத் தெரிவிக்க விரும்புகிறேன். நீங்கள் ஆந்திராவுக்குச் சென்று கிருஷ்ணா நதிநீரைக் கொண்டுவந்ததற்காக எடுத்த சிறப்பான முயற்சிகளை மனதாரப் பாராட்டுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஜல்லிக்கட்டுக்காக நீங்கள் டெல்லியிலே முகாமிட்டு எடுத்த முயற்சிகளைப் பாராட்டுகிறேன். அந்த நேரத்திலே உங்களை சிலர் கேலி, கிண்டல் செய்தபோது பத்திரிகையாளர்கள் உங்களைக் கேட்கிறார்கள், "இப்படியெல்லாம் கேலி செய்கிறார்களே?" என்று. அப்போது நீங்கள், "பொது வாழ்வுக்கு வந்துவிட்டால் இதையெல்லாம் எதிர்கொள்ளத்தான் வேண்டும்" என்று பக்குவமாக பதிலளித்தீர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காகவும் நான் உங்களைப் பாராட்டுகின்றேன். இந்தப் போராட்டத்திற்கு மதிப்பளித்து சிறப்பான முறையிலே ஒரு சட்டத்தை இயற்றி எங்கள் எல்லோருடைய பாராட்டுகளையும் பெற்றிருக்கிறீர்கள்.

இந்த நேரத்திலே ஒரு சிறிய கருத்தை உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகின்றேன். கடந்த வெள்ளிக்கிழமையன்று நீங்கள் இதுகுறித்து எதிர்க்கட்சித் தலைவருடைய கவன ஈர்ப்புக்குப்



2017 ஜனவரி 30] [திரு. எம். தமிமுன் அன்சாரி]

பதிலளிக்கின்றபொழுது, சிலர் ஒசாமா பின்லேடன் படத்தை அந்த போராட்டக் களத்திலே காட்டினார்கள் என்று நீங்கள் சொன்னீர்கள். (குறுக்கீடு) தயவுசெய்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கொஞ்சம் அமைதியாக இருக்க வேண்டுகிறேன். ஒரு முக்கியமான பிரச்சினை குறித்து பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஓர் உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார்; அமைதியாகக் கேளுங்கள்.

**திரு. எம். தமிமுன் அன்சாரி:** அதாவது, அந்தப் போராட்டக் களத்திலே அப்படி ஒரு படத்தைக் காட்டினார்கள் என்று நீங்கள் சொன்னவுடன், அவை முடிந்தவுடன் உங்களை நேரில் நான் சந்தித்தேன். "ஐயா! அந்தப் படத்தை நான் பார்க்க வேண்டும்" என்று நான் சொன்னேன். நீங்களும் அலுவலர்களிடம் சொல்லி, அந்தப் படத்தைத் தந்தீர்கள். அதை நான் உற்றுப் பார்த்தேன். அதிலே ஒரு விஷயம். சாலையிலே சென்ற ஒரு பைக்கிலே ஒசாமா பின்லேடனுடைய படம் ஒட்டப்பட்டிருந்தது. ஆனால், நீங்கள் கூறியதுபோன்ற அப்படிப்பட்ட எந்தப் பதாகைகளையும் மெரினா போராட்டக் களத்திலே யாரும் காட்டவில்லை என்பதை ஐயா அவர்களின் கனிவான கவனத்திற்கு நான் கொண்டு வருகின்றேன். நீங்கள் இதை வேண்டுமென்று செய்யவில்லை; எனக்குத் தெரியும். நீங்கள் ஒரு மிகச் சிறந்த பண்பாளர், எல்லா சமூக மக்களையும் அண்ணன், தம்பிகளாக மதிக்கக்கூடியவர் என்பது எனக்குத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்திலே நான் இதை ஏன் சுட்டிக்காட்டுகிறேன் என்று சொன்னால், அந்த ஒன்றினால் ஒரு சமூகம் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது. நீங்கள் அதையெல்லாம் விரும்பமாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும், எனவே, உங்களுடைய அன்பான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஒசாமா பின்லேடன் போன்றவர்களை யாரும் தமிழ்நாட்டிலே ஆதரிக்கவில்லை. தமிழ்நாட்டிலே இருக்கிற முஸ்லிம் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் உங்கள் எல்லோரோடும் மாமன் மச்சான்களாக, அண்ணன் தம்பிகளாக, அக்கா தங்கைகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) முஸ்லிம் சமூகம் பொது நீரோட்டத்திலே இணைந்திருக்கிறது என்பதைச் சொல்லிக்கொண்டு எனது உரையை நிறைவு செய்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஜல்லிக்கட்டுப் பிரச்சினைகளுக்கு விளக்கம் அளிக்கின்றபொழுது ஒசாமா பின்லேடன் படத்தைக் காட்டினேன். ஆனால், எந்தவொரு சமூகத்தையோ, எந்த ஒரு சமயத்தையோ அல்லது எந்தவொரு மதத்தையோ நான் குறிப்பிட்டுப் பேசவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள்.

**திரு. எம். தமிமுன் அன்சாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது உண்மை என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். விளக்கத்தைக் கொடுத்தேன், தங்களின் கனிவான பார்வைக்கு. ஏனென்றால், சில அதிகாரிகள் தவறாக சில படங்களைத் தந்துவிடுவார்கள். அந்த அடிப்படையில் நீங்கள் அதை எடுத்துக் காட்டியிருக்கிறீர்கள். அதற்கு நான் விளக்கத்தைத் தந்திருக்கிறேன். உங்களுடைய அன்புக்கும், விளக்கத்திற்கும் நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒசாமா பின்லேடன் படம் ஒட்டப்பட்டிருந்த அந்த ஸ்கூட்டியை ஓட்டிச் சென்றவர் போராட்டக் களத்திலே இருந்தவரா அல்லது வேறு நபரா என்பது குறித்தும் விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. விசாரணை அறிக்கை குறித்து நான் என்னுடைய பதிலுரையில் விளக்கம் தருகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. எம். தமிமுன் அன்சாரி:** மிகுந்த நன்றி, ஐயா.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். தமிமுன் அன்சாரி, உரையை முடியுங்கள். (குறுக்கீடு) முடித்துவிட்டீர்களா? நன்றி.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (31–01–2017) செவ்வாய்க்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–58 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.





# 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

6. 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின்கீழ் சென்னையிலுள்ள தமிழ்நாடு மாநிலச் சட்டப்பணிகள் ஆணையத்திற்குச் சொந்தமான மகிழுந்துக்குச் செலுத்தவேண்டிய ஆயுட்கால வரியிலிருந்து விலக்களித்தது குறித்து உள் (போக்குவரத்து–I) துறையின் 1–4–2015 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 316-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரிவிதிப்பு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

7. 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதாரத்தைப் பாதுகாத்தல், சாலையோர வியாபாரத்தை முறைப்படுத்துதல் மற்றும் உரிமம் வழங்குதல்) திட்டம், 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதாரத்தைப் பாதுகாத்தலும், சாலையோர வியாபாரத்தை முறைப்படுத்தலும்) விதிகள் ஆகியன இயற்றப்பட்டது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.IV) துறையின் 2–11–2015 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 159-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2014 ஆம் ஆண்டு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதாரத்தைப் பாதுகாத்தலும், சாலையோர வியாபாரத்தை முறைப்படுத்தலும்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 7/2014) 36(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

8. சென்னை சோழிங்கநல்லூரில் நுண்ணுயிர் நீக்கி பையகப்படுத்தும் நிலையத்துடன்கூடிய அதி உயர் வெப்பநிலை பால் ஆலை நிறுவுவதற்கான பணியினை திருவாளர் தேசிய பால்பண்ணை மேம்பாட்டு வாரியம்–ஆனந்திற்கு 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் பிரிவு 16(f)–ன் கீழ், வழங்கியது குறித்து நிதி (சம்பளங்கள்)த் துறையின் 20–7–2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 214–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

9. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் திருத்தம் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்(சிஜே1) துறையின் 9–9–2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 110-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

10. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் இருபத்திரெண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

11. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு செய்தித்தாள், காகித நிறுவனத்தின் முப்பத்தாறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

12. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் நாற்பத்தொன்றாவது ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள். [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

13. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் நாற்பத்திரெண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

–ஏதுமில்லை–

– – – – –